# TNPSC தேர்வுப் பெட்டகம்

## நடப்பு நிகழ்வுகள் - மார்ச் 2023

www.tnpscthervupettagam.com





















SHANKAR IAS ACADEMY™
The Best IAS Academy in India
SINCE 2004

Plot No. 1742, I Foor, 18th Main Road,
Anna Nagar, Chennai - 600 040.
Phone - 044-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

# உள்ளடக்கம்

TNPSC துளிகள் ..... 10
தமிழ்நாடு செய்திகள் ..... 19
புதிய புவிசார் குறியீடு ..... 19
ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்புடனான ஒப்பந்தம் ..... 19
இரயில் நிலையத்தில் உலர் மீன் விற்பனை நிலையம் ..... 20
கீழடி அருங்காட்சியகம் ..... 20
புனித அந்தோணியார் திருவிழா ..... 21
ஆசியப் பசிபிக் பிராந்தியத்தின் சிறந்த விமான நிலையம் ..... 22
தோள் சீலைப் போராட்டத்தின் 200வது ஆண்டு நிறைவு ..... 22
மகளிர் தின விருதுகள் 2023 ..... 23
புன்னகை திட்டம் ..... 24
செயற்கை மணல் தொடர்பான கொள்கை ..... 24
மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறப்பு ..... 25
அனைத்து மகளிர் உற்பத்தி அலகு ..... 26
திருப்புகழ் குழு - இறுதி அறிக்கை ..... 26
முதலாவது ஒத்திசைவுக் கணக்கெடுப்பு ..... 26
தமிழ்நாடு இயற்கை வேளாண்மைக் கொள்கை ..... 27
‘Pyre’ புதினம் ..... 28
தமிழ்நாடு நிதிநிலை அறிக்கையின் முக்கிய அம்சங்கள் ..... 28
புதுமைப் பெண் திட்டத்திற்கான RuPay கடன் அட்டை ..... 31
'நவரத்தின' அறிவிப்புகள் ..... 32
தமிழ்நாடு எத்தனால் கலப்புக் கொள்கை ..... 33
தமிழ்நாடு நகர்ப்புற எரிவாயு விநியோகக் கொள்கை 2023 ..... 34
தமிழ்நாடு தளவாடக் கொள்கை மற்றும் ஒருங்கிணைந்த தளவாடத் திட்டம் ..... 35
‘The Elephant Whisperers’ ஆவணப் படக் குழுவினருக்குப் பாராட்டு ..... 35
காசநோய் உயிரிழப்புகளில் சரிவு ..... 36
தமிழகத்தின் 18வது வனவிலங்குச் சரணாலயம் ..... 37
தமிழக வேளாண் நிதிநிலை அறிக்கை ..... 37
இணையவழி விளையாட்டு எதிர்ப்பு மசோதா மீண்டும் ஏற்பு ..... 39
முதல் PM MITRA பூங்கா ..... 40
தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை கொள்கை ..... 40
தேசியச் செய்திகள் ..... 41
இந்தியாவின் 22வது சட்ட ஆணையம் ..... 41
ஜெய்ப்பூர் பிரகடனம் ..... 41
வேலைவாய்ப்பின்மை விகிதம் ..... 41

ஹிந்துஸ்தான் 228 ரக விமானம்.......42
ஆலயச் சடங்குகள் செய்வதற்கு இயந்திர யானை அறிமுகம்.......43
ரைசினா பேச்சுவார்த்தை – 2023.......43
இந்துஸ்தான் சமாச்சார்.......44
இராணுவப் பயிற்சி - டோப்சி.......44
'திரிசக்தி பிரஹார்' - கூட்டு இராணுவப் பயிற்சி.......45
TARKASH பயிற்சி.......46
தீவிரவாதத்தின் நிலை குறித்த அறிக்கைகள் 2021 - இந்தியா.......47
இந்தியத் தேர்தல் ஆணையர் நியமனம் தொடர்பான உச்சநீதிமன்றத் தீர்ப்பு.......47
திபாங் பல்நோக்கு நீர்மின் நிலையம்.......48
வண்ண மீன்கள் வளர்ப்பு.......48
ஷின்யு மைத்ரி பயிற்சி.......49
AIRS புத்தாய்வு மாணவர் அந்தஸ்து திட்டம்.......49
வணிகப் போட்டிச் சட்டத்தின் பொருளாதாரம் குறித்த தேசிய மாநாடு.......50
DUSTLIK 2023.......50
இந்தியத் தேர்தல் ஆணைய நியமனங்கள் குறித்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பு.......51
ஒரே நாடு, ஒரே பணம் செலுத்துச் சீட்டு முன்னெடுப்பு.......52
இணைய சங்கேதப் பணத்திற்கு எதிராக பணமோசடி தடுப்புச் சட்டம்.......52
இலவச சிறு தானிய பரிசுப் பொருள்.......53
மேம்பட்ட இணைப்பு ரக பீரங்கித் துப்பாக்கி அமைப்பு.......54
நுகர்வோர் நீதிமன்றங்களுக்கான வரைமுறைகள்.......55
மூங்கில்களாலான 'உலகின் முதல்' விபத்துத் தடுப்பு.......56
TROPEX 2023.......56
நுண் திரவ DAP உரம்.......57
குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்துறை நிறுவனங்கள் போட்டித் திறன் (LEAN) திட்டம்.......57
4வது தேசிய இளையோர் பாராளுமன்ற விழா.......58
ஸ்வதேஷ் தர்ஷன் 2.0 திட்டத்தில் புதிய நகரங்கள்.......59
இந்தியாவின் நிலச்சரிவு குறித்த தகவல் அறிக்கை.......59
வைபவ் புத்தாய்வு மாணவர் திட்டம்.......60
நீரடி நீர்மூழ்கி எதிர்ப்பு ஏவுகணைகள்.......61
தோட்டக்கலைப் பயிர்களுக்கான புதிய சிறப்பு மையங்கள்.......61
G20 மலர் திருவிழா.......62
ஆஹார் 2023.......62
பாரம்பரிய மருத்துவம் பற்றிய B2B உலக மாநாடு & கண்காட்சி.......63
ATL சார்த்தி.......63
இந்தியா மற்றும் தெற்காசியப் பிராந்தியத்தின் சிறந்த விமான நிலையம்.......63
இந்தியாவில் உள்ள பெண்கள் மற்றும் ஆண்கள் பற்றிய அறிக்கை 2022.......64
கால்நடை வளர்ப்பு பற்றிய அடிப்படைப் புள்ளி விவரங்கள் 2022.......65
இந்தியாவில் எழுத்தறிவு விகிதம்.......66

"நிலத்தடி நீர்: ஒரு மதிப்புமிக்க ஆனால் குறைந்து வரும் வளம்" என்ற அறிக்கை ........ 67
தேசிய மாதிரிக் கணக்கெடுப்பின் 78வது சுற்றறிக்கை ........ 68
பசுமை இழுவைப் படகுப் பரிமாற்றத் திட்டம் ........ 69
சஹ்பகீதா திட்டம் ........ 69
டிஜிகிளைம் தரவுத் தளம் ........ 70
வேதகாலப் பாரம்பரிய இணையதளம் ........ 70
சரக்கு மற்றும் சேவை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் ........ 70
ராகுல் காந்தி பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்துத் தகுதி நீக்கம் ........ 71
கிரித் பரிக் குழு பரிந்துரைகள் ........ 72
சுகாதாரத் துறையில் செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு ........ 72
மனித-வனவிலங்கு மோதலை நிவர்த்தி செய்வதற்கான வழிகாட்டுதல்கள் ........ 73
CBuD செயலி ........ 74
MGNREGA திட்டத்தின் கீழ் ஊதிய உயர்வு ........ 74
இந்தியாவில் 'மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினைகள்' : அமெரிக்க அரசின் அறிக்கை ........ 75
**சர்வதேசச் செய்திகள் ........ 76**
உக்ரைன் போர் மீதான ஐக்கிய நாடுகள் சபையின் வாக்கெடுப்பு ........ 76
உலக வங்கியின் புதியத் தலைவர் ........ 76
உலக நிலையான மேம்பாட்டு உச்சி மாநாடு ........ 77
நிதியியல் நடவடிக்கைப் பணிக் குழுவின் உறுப்பினர் அந்தஸ்து-ரஷ்யா ........ 77
ரஷ்யா மற்றும் START அணுசக்தி ஒப்பந்தம் ........ 78
இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பதப்படுத்தப்பட்ட கடல்சார் உணவுப் பொருட்கள் ........ 79
வின்ட்சார் கட்டமைப்பு ` ........ 79
'Chip 4' கூட்டணியின் விநியோகச் சங்கிலி மேலாண்மை குறித்த பேச்சுவார்த்தை ........ 80
83.7 சதவிகிதம் செறிவுமிக்க யுரேனியம் ........ 80
சுவீடன் சர்வதேச தகவல் பிரச்சாரம் ........ 81
REAIM 2023 ........ 81
இணைய சங்கேதப் பணம் குறித்த ஒன்பது அம்ச செயல் திட்டம் ........ 82
சாதிப் பாகுபாட்டிற்குத் தடை ........ 82
வனுவாட்டு மற்றும் பருவநிலை நீதி ........ 83
கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை ஹுவாசங் 15 ........ 84
முனிச் பாதுகாப்பு மாநாடு ........ 84
உலகப் பாதுகாப்பு முன்னெடுப்பு ........ 85
ஆசிய ஆற்றல் மாற்ற முன்னெடுப்பு (AETI) ........ 86
கோப்ரா வாரியர் பயிற்சி ........ 86
இந்தியா-ஆசியான் எண்ணிமச் செயல்பாட்டுத் திட்டம் 2023 ........ 87
குவாட் நாடுகளின் இணையவெளிப் பாதுகாப்பு சவால் ........ 88
9வது ஆசிய நாடுகளின் எரிசக்தி அமைச்சர்கள் வட்டமேசை (AMER9) மாநாடு ........ 88
5வது சர்வதேச பாதுகாக்கப்பட்ட கடல்சார் பகுதிகள் மாநாடு ........ 89
எரிவாயு மற்றும் டீசல் ஆகிய எரிபொருட்களில் இயங்கும் மகிழுந்துகளின் விற்பனைக்குத் தடை ........ 89

IDEX மற்றும் NAVDEX ........ 90
டெஸர்ட் ஃபிளாக் VIII - பயிற்சி ........ 91
மலபார் பயிற்சி 2023 ........ 91
உலகின் மிக நீளமான சித்திரச் சுவரோவியம் ........ 92
மீன்பிடி மானியம் தொடர்பான புதிய ஒப்பந்தம் ........ 92
ப்ளூஸ்கை ........ 93
தெற்கு-தெற்கு நாடுகள் இடையிலான ஒத்துழைப்பு குறித்த கத்தார் அமைச்சர்கள் கூட்டம் ........ 94
ஐக்கிய நாடுகள் சபையின் தொலைதூரப் பெருங்கடல் பரப்புப் பாதுகாப்பு ஒப்பந்தம் ........ 94
CITES உடன்படிக்கையின் 50வது ஆண்டு நிறைவு ........ 95
ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் புறக்கணிப்பு – அறிக்கை ........ 96
FRINJEX-23 ........ 97
IMX/CE-23 பயிற்சி ........ 97
கடல்சார் கூட்டாண்மைப் பயிற்சி (MPX) ........ 98
குறைவான வளர்ச்சி பெற்ற நாடு நிலை - பூடான் ........ 99
சிலிக்கான் வேலி வங்கியின் வீழ்ச்சி ........ 100
Kill Web உத்தி ........ 101
சீ டிராகன் 23 ........ 101
3வது லா பெரூஸ் பயிற்சி ........ 102
பிரேசில் மற்றும் அர்ஜென்டினா ஆகிய இரு நாடுகளுக்கான பொதுவான பணம் ........ 103
தோஹா அரசியல் பிரகடனம் ........ 103
பாலின சுயநிர்ணயச் சட்டம் ........ 104
ஆஸ்திரேலியா – உரிமைகள் பறிக்கப்பட்ட தலைமுறையினருக்கான தேசிய மன்னிப்பு தினத்தின் ஆண்டு விழா ........ 104
மன்னர் மூன்றாம் சார்லஸ் அஞ்சல் தலை ........ 105
விளாடிமிர் புடினுக்குப் பிடியாணை ........ 105
NZIA மற்றும் CRMA சட்டங்கள் ........ 106
AFINDEX-23 பயிற்சி ........ 107
இந்தியா-வங்காளதேசம் நட்புறவுசார் குழாய் இணைப்புத் திட்டம் ........ 108
**பொருளாதாரச் செய்திகள் ........ 109**
இந்தியாவின் முதல் மாநகராட்சிப் பத்திரக் குறியீடு ........ 109
உலக நாடுகளின் கடன் குறித்த வட்டமேசை மாநாடு ........ 109
இந்தியாவின் உலக வர்த்தக மற்றும் தொழில்நுட்பச் சபை ........ 110
இந்தியாவின் தனிநபர் வருமானம் ........ 111
இந்தியத் துணிகர முதலீடுகள் குறித்த அறிக்கை 2023 ........ 112
இந்தியாவின் சர்க்கரை ஏற்றுமதி ........ 112
**அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ........ 113**
பூமியின் ஆழமான பகுதி ........ 113
ஒரு பரிமாண புழுத்துளை அளவிலான அரிமானம் ........ 114
CE-20 மீக்குளிர்வு எரிபொருள் இயந்திரம் ........ 114

விண்மீன் மண்டல எல்லை ஆய்வுக் கலன் ..... 115
மெகா-ட்ரோபிக்ஸ் 1 செயற்கைக் கோள் செயலிழப்பு ..... 116
NISAR செயற்கைக்கோள் ஒப்படைப்பு ..... 116
இன்ஃப்ளுயென்ஸா வைரஸ் துணை வகை H3N2 ..... 117
சூசின்சான் – அட்லஸ் - C/2023 A3 வால் நட்சத்திரம் ..... 118
SOFIA தொலைநோக்கியின் கண்டுபிடிப்புகள் ..... 118
நட்சத்திர உருவாக்கத்தின் அதிவேகச் செயல்முறை ..... 119
தூசிப் படலங்களுக்கான பல்கோண ஆய்வகம் (MAIA) ..... 119
ChatGPT-4 ..... 120
உலகின் முதல் மணல் மின்கலன் ..... 120
நீர்மூழ்கிக் கப்பல் எதிர்ப்புப் போர்க் கப்பல் ஐஎன்எஸ் ஆந்த்ரோத் ..... 121
வேற்றுகிரகத்தின் வைட்டமின் மாதிரிகள் ..... 122
LVM3 விண்கலம் விண்ணில் ஏவல் ..... 123
**சுற்றுச்சூழல் செய்திகள் ..... 123**
பருவநிலைக்கான வேளாண்மைப் புத்தாக்கத் திட்டம் ..... 123
தரோய் பறவைகள் கணக்கெடுப்பு 2023 ..... 124
உலக மீத்தேன் உமிழ்வு கண்காணிப்பு அறிக்கை ..... 124
மண்ணில் உள்ள கார்பன் குறித்த உலகளாவிய மதிப்பீடு ..... 125
ஜெர்டன்ஸ் கூர்வாய்த் தவளை ..... 126
ENSO புதிய தகவல் ..... 126
'2022 ஆம் ஆண்டில் CO2 உமிழ்வுகள்' அறிக்கை ..... 127
பெரும் பூனை இனங்களுக்கான உலக நாடுகளின் கூட்டமைப்பு ..... 128
யெல்லோஸ்டோன் தேசியப் பூங்காவின் 151வது ஆண்டு நிறைவு விழா ..... 129
மிமியூசெமியா சிலோனிக் ..... 129
"'Don't Choose Extinction" பருவநிலைப் பிரச்சாரம் ..... 130
அண்டார்டிகாவைச் சுற்றியுள்ள கடல் பனிப் பரவல் 2023 ..... 131
ஆசியச் சிங்கங்களின் இடமாற்றம் ..... 131
கணேசய்யாஸ் குள்ள மரப் பல்லி ..... 132
ஆரவல்லி பசுமை மண்டல உருவாக்கத் திட்டம் ..... 132
அஞ்சாலை மீன் ..... 133
**அறிக்கைகள் மற்றும் குறியீடுகள் ..... 134**
அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணியல் கல்வி அறிக்கை ..... 134
சர்வதேச அறிவு சார் சொத்துக் குறியீடு ..... 135
2023 ஆம் ஆண்டில் பெண்கள், வணிகம் மற்றும் சட்டம் என்ற அறிக்கை ..... 135
சொகுசு வீடுகளின் விலை உயர்வு ..... 136
கல்விசார் சுதந்திரக் குறியீடு 2023 ..... 137
உலக உடல் பருமன் குறித்தத் தகவல் தொகுப்பு 2023 ..... 138
வி-டெம் தேர்தல் ஜனநாயக அறிக்கை 2023 ..... 138
உலக மக்களின் மன நிலை குறித்த அறிக்கை ..... 140

சொத்து விவரங்கள் குறித்த அறிக்கை 2023 ..... 141
இந்தியப் பெருந்தகைமை குறித்த அறிக்கை 2023 ..... 141
IPES-உணவு அமைப்பின் சிறப்பு அறிக்கை ..... 142
SIPRI அறிக்கை 2022 ..... 143
பசி நிலையைப் போக்குவதற்கான நிதி வழங்கீட்டில் உள்ள இடைவெளி பற்றிய அறிக்கை 2023 ..... 145
Mind the Gender Gap அறிக்கை ..... 145
உலகின் தலைசிறந்த இடங்கள் 2023 ..... 146
சோடியம் உட்கொள்ளல் குறைப்பு பற்றிய உலகளாவிய அறிக்கை ..... 147
உலக மகிழ்ச்சி அறிக்கை 2023 ..... 148
5வது வருடாந்திர உலகக் காற்றுத் தர அறிக்கை 2022 ..... 149
உலகத் தீவிரவாதக் குறியீடு ..... 150
குழந்தைகளுக்கான சமூகப் பாதுகாப்பு பற்றிய அறிக்கை ..... 151
நகர்ப்புறக் குறியீடு 2023 ..... 152
யுட்டிலிட்டி பிட்டர் நிறுவன காடழிப்பு அறிக்கை ..... 152
ஐக்கிய நாடுகள் சபையின் நீர்வள மேம்பாட்டு அறிக்கை 2023 ..... 153
தண்ணீர் பற்றிய GCEW அறிக்கை ..... 154
தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் பற்றிய அறிக்கை 2023 ..... 155
QS அமைப்பின் உலகப் பல்கலைக் கழகங்களின் தரவரிசை ..... 156
**மாநிலச் செய்திகள் ..... 157**
இந்தியாவின் முதல் சிறுகலத் துறைமுகம் ..... 157
காந்தாரி வகை மிளகாய் அமெரிக்காவிற்கு ஏற்றுமதி ..... 157
நாகாலாந்து மாநிலத்தின் முதல் பெண் சட்டமன்ற உறுப்பினர்கள் ..... 158
சர்வதேச தர்ம தம்ம மாநாடு ..... 158
இந்திய மாநிலங்களின் மின்னாற்றல் மாற்றம் குறித்த அறிக்கை ..... 159
போஜ்பூர் சிறு தானியத் திருவிழா ..... 159
புதிய தங்கச் சுரங்கம் ..... 160
வடகிழக்கு மாநிலங்களின் புதிய முதல்வர்கள் ..... 160
யாவ்ஷாங் திருவிழா ..... 161
உலகின் மிக நீளமான இரயில் நடைமேடை ..... 161
பெங்களூரு-மைசூரு விரைவுச் சாலை ..... 161
லட்லி பஹ்னா திட்டம் ..... 162
வீட்டிலிருந்தபடியே வாக்களித்தல் ..... 162
அதிமதுரம் சாகுபடி ..... 163
இந்தியாவில் முதல் முறையாக இரயில்வே நடை மேடையில் அமைக்கப்பட்டுள்ள 'திருநர் டீக்கடை' 163
மெத்தனால் கலக்கப்பட்ட எரிபொருளில் இயங்கும் முதல் பேருந்துகள் ..... 164
இரவலர்கள் இல்லாத நகரம் ..... 164
அகில இந்திய மகளிர் நாட்டுப்புறக் கலை மாநாடு ..... 164
காசநோய் மருந்து – பெடாகுலின் ..... 165
பீகார் தினம் – மார்ச் 22 ..... 165

சுகாதார உரிமை மசோதா - ராஜஸ்தான் ..... 166
**பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள் ..... 167**
மார்கோனி பரிசு 2023 ..... 167
சர்வதேச எல்லோரா-அஜந்தா திருவிழா 2023 ..... 167
மகளிர் 20 தொடக்கக் கூட்டம் ..... 168
தேசிய மகளிர் ஆணையத்தின் உறுப்பினர் ..... 168
யுனெஸ்கோ அமைப்பின் அமைதி பரிசு - 2022 ..... 169
வுல்ஃப் பரிசு 2023 ..... 169
76வது BAFTA விருதுகள் ..... 170
ஆசியச் சிறப்புச் சதுரங்க விருதுகள் 2023 ..... 171
படைப்பிரிவுத் தலைவர் ஷாலிசா தாமி ..... 171
CBIP விருதுகள் 2022 ..... 172
8வது தேசியப் புகைப்பட விருதுகள் ..... 172
இந்தியாவிற்கான ஆஸ்கார் விருதுகள் ..... 172
ஆஸ்கார் விருதுகள் 2023 ..... 173
தலைமைக் கணக்குக் கட்டுப்பாட்டாளர் ..... 174
32வது வியாஸ் சம்மான் ..... 174
ஸ்வச் சுஜல் சக்தி சம்மான் 2023 ..... 175
WINS விருதுகள் 2023 ..... 175
கோல்டன் சிட்டி கேட் சுற்றுலா விருதுகள் 2023 ..... 176
இராணுவப் படைப்பிரிவின் முதல் பெண் தலைமை அதிகாரி ..... 176
PEN/நபோகோவ் வாழ்நாள் சாதனையாளர் விருது ..... 177
பிரிட்ஸ்கர் கட்டிடக் கலை பரிசு 2023 ..... 177
பாக் நீர்ச்சந்தியை அதிவேகமாக நீந்திக் கடந்த இந்தியர் ..... 178
2023 ஏபெல் பரிசு ..... 178
ராம்நாத் கோயங்கா விருதுகள் ..... 179
ககன்யான் விண்வெளித் திட்டத்தின் விண்வெளி வீரர்கள் ..... 179
குழந்தைகளுக்கான சாம்பியன் விருது 2023 ..... 180
**விளையாட்டுச் செய்திகள் ..... 180**
சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் 25,000 ரன்கள் ..... 180
மூன்று வகை போட்டிகளிலும் முதலிடம் ..... 180
FIFA விருதுகள் 2023 ..... 181
ஆடவருக்கான நீளம் தாண்டுதல் போட்டியில் சாதனை ..... 182
ஹைதராபாத் பார்முலா E-சாம்பியன்ஷிப் போட்டி ..... 182
2026 ஆம் ஆண்டு FIFA உலகக் கோப்பைப் போட்டி ..... 182
ISSF உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டி ..... 183
இந்தியாவிலேயே அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய மூன்றாவது வீரர் ..... 184
**முக்கிய தினங்கள் ..... 185**

பாகுபாடின்மை தினம் - மார்ச் 01 ..... 185
உலக குடிமைப் பாதுகாப்பு தினம் - மார்ச் 01 ..... 185
உலக கடற்புல் தினம் - மார்ச் 01 ..... 185
உலக வனஉயிரினங்கள் தினம் - மார்ச் 03 ..... 186
உலக செவித் திறன் தினம் - மார்ச் 03 ..... 187
தேசியப் பாதுகாப்பு தினம் - மார்ச் 04 ..... 187
தேசியப் பணியிடப் பாதுகாப்பு தினம் - மார்ச் 04 ..... 188
உலக உடல் பருமன் தினம் - மார்ச் 04 ..... 188
பாலியல் சுரண்டலுக்கு எதிரான போராட்டத்திற்கான உலக தினம் - மார்ச் 04 ..... 189
சர்வதேச ஆயுதக் குறைப்பு மற்றும் ஆயுதப் பரவல் தடுப்பு விழிப்புணர்வு தினம் - மார்ச் 05 ..... 189
5வது ஜன் ஔஷதி திவாஸ் - மார்ச் 07 ..... 190
சர்வதேச மகளிர் தினம் - மார்ச் 08 ..... 190
தேசிய மருந்தியல் கல்வி தினம் - மார்ச் 06 ..... 191
புகைபிடித்தல் தடை நாள் - மார்ச் 08 ..... 192
உலக சிறுநீரக தினம் - மார்ச் 09 ..... 192
மத்தியத் தொழில்துறைப் பாதுகாப்புப் படையின் 54வது உருவாக்கத் தினம் - மார்ச் 10 ..... 193
சர்வதேச பெண் நீதிபதிகள் தினம் - மார்ச் 10 ..... 193
உலக ரோட்டராக்ட் தினம் - மார்ச் 13 ..... 194
நதிகளுக்கான சர்வதேச நடவடிக்கை தினம் - மார்ச் 14 ..... 194
சர்வதேச கணித தினம் அல்லது பை தினம் - மார்ச் 14 ..... 195
உலக நுகர்வோர் உரிமைகள் தினம் - மார்ச் 15 ..... 195
இஸ்லாமோஃபோபியாவை எதிர்த்துப் போராடுவதற்கான சர்வதேச தினம் - மார்ச் 15 ..... 196
தேசிய நோய்த்தடுப்பு தினம் - மார்ச் 16 ..... 196
உலக தூக்க தினம் - மார்ச் 17 ..... 197
உலக மறுசுழற்சி தினம் - மார்ச் 18 ..... 197
இந்திய ஆயுதத் தொழிற்சாலைகள் தினம் - மார்ச் 18 ..... 198
சர்வதேச மகிழ்ச்சி தினம் - மார்ச் 20 ..... 198
உலக சிட்டுக்குருவி தினம் - மார்ச் 20 ..... 198
உலக வாய்வழி சுகாதார தினம் - மார்ச் 20 ..... 199
வசந்தகால சம இரவு பகல் நாள் - மார்ச் 21 ..... 199
உலக மன நலிவு நோய் தினம் - மார்ச் 21 ..... 200
உலக கவிதை தினம் - மார்ச் 21 ..... 200
சர்வதேச காடுகள் தினம் - மார்ச் 21 ..... 200
சர்வதேச இனப் பாகுபாடு ஒழிப்பு தினம் - மார்ச் 21 ..... 201
உலகப் பொம்மலாட்டத் தினம் - மார்ச் 21 ..... 201
சர்வதேச நவ்ரூஸ் தினம் - மார்ச் 21 ..... 201
உலகத் தண்ணீர் தினம் - மார்ச் 22 ..... 202
உலக வானிலை அமைப்பு நாள் - மார்ச் 23 ..... 202
உலக காசநோய் தினம் - மார்ச் 24 ..... 203

அடிமைத்தனம் மற்றும் அட்லாண்டிக் நாடுகளுக்கிடையேயான அடிமை வர்த்தகத்தால் பாதிக்கப் பட்டவர்களின் சர்வதேச நினைவு தினம் - மார்ச் 25 .......... 203
கைது செய்யப்பட்ட மற்றும் காணாமல் போன பணியாளர்களுக்கான சர்வதேச ஒன்றிணைவு தினம் - மார்ச் 25 .......... 204
கருவில் உள்ள சிசுக்களுக்கான சர்வதேச தினம் - மார்ச் 25 .......... 204
உலக நாடக தினம் - மார்ச் 27 .......... 205
புவி நேரம் 2023 - மார்ச் 25 .......... 205
அசாம் ரைபிள்ஸ் படைப் பிரிவின் 188வது எழுச்சி தினம் - மார்ச் 24 .......... 206
சர்வதேச வலிப்பு நோய் விழிப்புணர்வு தினம் அல்லது ஊதா தினம் - மார்ச் 26 .......... 206
சர்வதேச திருநர்களின் கட்புலன் நிலை தினம் - மார்ச் 31 .......... 206
உலகக் காப்புப் பிரதி தினம் - மார்ச் 31 .......... 207
இதரச் செய்திகள் .......... 207
ஆபத்தில் உள்ள உலகப் பாரம்பரியத் தளம் .......... 207
1,300 ஆண்டுகள் பழமையான புத்த சமய ஸ்தூபி .......... 208
வலுவான தொலைத்தொடர்புச் சேவை வழங்கீட்டு நிறுவனம் .......... 208
தனிப்பட்ட ஹால்மார்க் அடையாள எண் .......... 209
வணிக ரீதியிலான விமானங்களில் பணிபுரியும் அதிக எண்ணிக்கையிலான பெண் விமானிகள் .. 210

# TNPSC துளிகள்

- ❖ இந்தியக் கடற்படையின் கிலோ வகுப்பு வகையினைச் சேர்ந்த, வழக்கமான டீசல் ஜெனெரேட்டர்கள் மூலம் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பலான ஐஎன்எஸ் சிந்துகேசரி, இந்தோனேசியாவின் ஜகார்த்தாவில் முதல் முறையாக நிறுத்தப்பட்டது.
- ❖ மும்பையில் உள்ள சர்ச்கேட் இரயில் நிலையமானது, இந்திய ரிசர்வ் வங்கியின் முதல் ஆளுநர் 'சிந்தாமன்ராவ் தேஷ்முக்' அவர்களின் நினைவாக விரைவில் பெயர் மாற்றப் பட உள்ளது.
- ❖ பிரச்சாரம் மற்றும் தணிக்கை ஆகியவற்றினைக் காரணம் காட்டி, சீன அரசானது அந்த நாட்டில் chatGPT என்ற உரையாடு மென்பொருளினை முடக்க முடிவு செய்து உள்ளது.
- ❖ மொராக்கோவில் நடைபெற்ற FIFA கிளப் உலகக் கோப்பைப் போட்டியில் சவூதி அரேபியாவின் அல் ஹிலால் அணியினை வீழ்த்தி ரியல் மாட்ரிட் அணி இறுதிக் கோப்பையினைக் கைப்பற்றியது.
- ❖ ஆஸ்திரேலியா அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் அடித்த தனது முதல் சதத்தின் மூலமாக மூன்று வகைப் போட்டிகளிலும் சதம் அடித்த முதல் இந்திய அணித் தலைவர் மற்றும் உலகின் நான்காவது வீரர் என்ற பெருமையை ரோஹித் சர்மா பெற்றுள்ளார்.
- ❖ G20 அமைப்பிற்கான இந்தியாவின் தலைமைத்துவத்தின் ஒரு பகுதியாக, 2023 ஆம் ஆண்டு இளையோர் 20 இந்தியா உச்சி மாநாடானது குஜராத்தில் உள்ள பரோடாவின் மகாராஜா சாயாஜிராவ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.
- ❖ கர்நாடகாவில் அமைக்கப்பட்டுள்ள சிவமோகா விமான நிலையத்தை பிரதமர் திறந்து வைத்தார்.
    - ○ இது கர்நாடகாவின் 9வது உள்நாட்டு விமான நிலையமாகும்.
- ❖ சிக்கிம் மாநிலம் காங்டாக்கில் நடைபெற்ற காமன்வெல்த் பாராளுமன்றச் சங்கத்தின் இந்தியாவிற்கான 3வது மண்டல மாநாட்டின் 19வது பதிப்பினை மக்களவைச் சபாநாயகர் ஓம் பிர்லா அவர்கள் தொடங்கி வைத்தார்.
- ❖ ஆஸ்திரேலிய அணியானது, தென்னாப்பிரிக்காவில் நடைபெற்ற மகளிர் டி20 உலகக் கோப்பைப் போட்டியின் 8வது பதிப்பில் தென்னாப்பிரிக்க அணியினை வீழ்த்தி ஆறாவது முறையாக உலகக் கோப்பையினை வென்றுள்ளது.
- ❖ பின்லாந்து நாட்டின் நோக்கியா நிறுவனமானது, கடந்த 60 ஆண்டுகளில் முதல் முறையாக தனது தயாரிப்பின் அடையாளச் சின்னத்தை மாற்றியுள்ளது.
- ❖ ஆந்திரப் பிரதேசத்தின் காக்கிநாடாவில் நடைபெற்ற 13வது ஹாக்கி இந்தியா மூத்த நிலை மகளிருக்கான தேசிய சாம்பியன்ஷிப் (2023) போட்டியில் மத்தியப் பிரதேச அணி வெற்றி பெற்றது.
- ❖ 31வது புது டெல்லி உலகப் புத்தகக் கண்காட்சியானது (NDWBF), புது டெல்லியில் உள்ள பிரகதி மைதானத்தில் தொடங்கியது.
- ❖ சோனாபூரில் உள்ள டோமோரா பத்தர் எனுமிடத்தில் அமைக்கப்பட உள்ள வடகிழக்கு இந்தியாவின் முதல் அழுத்தப்பட்ட (கார்பன் டை ஆக்சைடு மற்றும் ஹைட்ரஜன் சல்ஃபைடு ஆகியவை நீக்கப்பட்ட) உயிரி எரிவாயு உற்பத்தி ஆலைக்கு அசாம் முதல்வர் ஹிமாந்தா பிஸ்வாஸ் சர்மா அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

- இந்தியா டுடே இதழின் சுற்றுலாக் கணக்கெடுப்பானது 'குல்மார்க்' நகரினை சர்வதேச அளவில் புகழ்பெற்ற ஒரு சாகசச் சுற்றுலாத் தளமாக மேம்படுத்தச் செய்வதற்கான முன்னெடுப்புகளுக்காக ஜம்மு & காஷ்மீர் சுற்றுலாத் துறையினை சிறந்த சாகச சுற்றுலா விருதிற்குத் தேர்வு செய்துள்ளது.
- தீவிரமான மாதவிடாய் வலியால் அவதிப்படும் பெண்களுக்கு ஊதியத்துடன் கூடிய மருத்துவ விடுப்பு வழங்கும் ஒரு சட்டத்திற்கு ஸ்பெயின் நாட்டு அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது.
  - இது எந்த ஒரு ஐரோப்பிய நாடாலும் ஏற்படுத்தப் படும் முதல் சட்டமாகும்.
- இந்தியாவில் 'தேசியப் புரத தினம்' ஆனது 2020 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி 27 ஆம் தேதியன்று கொண்டாடப்படுகிறது.
- உள்ளோங்காங் மற்றும் டியாக்கின் ஆகிய இரண்டு ஆஸ்திரேலியப் பல்கலைக் கழகங்கள் குஜராத்தின் GIFT நகரில் தங்களது கல்லூரி வளாகங்களை அமைக்க உள்ளன.
  - இந்தியாவில் தங்களது வளாகங்களை அமைத்த முதலாவது வெளிநாட்டுக் கல்வி நிறுவனங்கள் இவையே ஆகும்.
- இந்திய விமானப்படையின் கிழக்குப் படைப் பிரிவானது, பூர்வி ஆகாஷ் எனப்படும் அதன் வருடாந்திரப் படைப் பிரிவு அளவிலான போர்க்காலத் தயார்நிலைப் பயிற்சியினை நாட்டின் வடகிழக்குப் பகுதியில் தொடங்கியுள்ளது.
  - இந்தப் பயிற்சியானது ஷில்லாங்கைத் தலைமையிடமாகக் கொண்ட கிழக்குப் படைப் பிரிவால் மேற்கொள்ளப் பட்டது
- நடை ஓட்டப் பந்தய வீரர்களான பிரியங்கா கோஸ்வாமி மற்றும் அக்ஸ்தீப் சிங் தேசிய நடை ஓட்டப் பந்தய சாம்பியன்ஷிப் போட்டியில் வெற்றி பெற்று, 2023 ஆம் ஆண்டு உலகத் தடகளச் சாம்பியன்ஷிப் போட்டி மற்றும் 2024 ஆம் ஆண்டு பாரீஸ் ஒலிம்பிக் போட்டி ஆகியவற்றிற்குத் தகுதி பெற்றுள்ளனர்.
- மகாராஷ்டிர மாநில அரசானது, ஔரங்காபாத் மற்றும் ஒஸ்மானாபாத் ஆகிய நகரங்களின் பெயர்களை முறையே சத்ரபதி சாம்பாஜி நகர் மற்றும் தாராஷிவ் என மாற்றுவதற்கு முடிவு செய்துள்ளது.
- இந்திய அரசானது, BIMSTEC எரிசக்தி மையத்தின் நிர்வாகக் குழுவிற்கான முதலாவது கூட்டத்தினைப் பெங்களூரு நகரில் நடத்தியது.
- GSM சங்கம் (GSMA) ஆனது, தொலைத்தொடர்பு கொள்கை மற்றும் ஒழுங்குமுறை ஆகியவற்றிற்கான சிறந்த நடைமுறைகளை செயல்படுத்தியதற்காக 2023 ஆம் ஆண்டிற்கான அரசுத் தலைமை விருதினை இந்திய அரசிற்கு வழங்கியுள்ளது.
- ஹிண்டன்பர்க் ரிசர்ச் என்ற அமெரிக்க நிறுவனத்தின் அதானி குழுமத்திற்கு எதிரான மோசடியான பங்கு விற்பனை குறித்த ஒரு அறிக்கையைத் தொடர்ந்து உருவான சர்ச்சையை ஆய்வு செய்வதற்காக நீதிபதி அபய் மனோகர் சாப்ரே தலைமையிலான குழு ஒன்றினை உச்ச நீதிமன்றம் அமைத்துள்ளது.
- COVID-19 பெருந்தொற்றினை எதிர்த்து வெற்றிகரமாகப் போராடியதற்காக வேண்டி இந்தியாவின் மத்திய சுகாதார அமைச்சகத்திற்கு 2023 ஆம் ஆண்டிற்கான போர்ட்டர் பரிசு வழங்கப் பட்டு உள்ளது.

- NTPC நிறுவனமானது கழிவின் அளவினைக் கட்டுப்படுத்துதல், அதன் மறு உபயோகம் மற்றும் அதன் மறுசுழற்சி மூலம் நீர் வளங்காப்பிற்கான அதன் உறுதிப்பாட்டை பறை சாற்றும் வகையில் இந்தியாவில் முதல் முறையாக காற்று மூலம் குளிரூட்டப்படும் நீராவி குளிர்விப்பான் நிறுவப்பட்ட அதி வெப்பநிலை மற்றும் அழுத்தத்தில் இயங்கும் ஆலையை ஜார்க்கண்ட்டின் வடக்கு கரன்புராவில் நிறுவியுள்ளது.
- கேப்ரியல் என்பது ஒரு கடுமையான வெப்பமண்டலச் சூறாவளியாகும்.
  - நியூசிலாந்தின் வடக்குத் தீவினையும் வனுவாட்டு மற்றும் ஆஸ்திரேலியாவின் சில பகுதிகளையும் இது கடுமையாகப் பாதித்துள்ளது.
- இந்தியாவிற்கும் ஜப்பானுக்கும் இடையிலான “தர்மா கார்டியன்” எனப்படும் 4வது கூட்டு இராணுவப் பயிற்சியானது, ஜப்பானின் ஷிகா மாகாணத்தில் உள்ள இமாசு முகாமில் நடைபெற்றது.
- புசா கிருஷி விஜியான் மேளாவானது, ‘பெருவகை தானியங்கள் மூலமாக ஊட்டச்சத்து, உணவுத் தானியங்கள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு’ என்ற கருத்துருவின் கீழ் புது டெல்லியில் நடைபெற்றது.
- குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள், ‘குடிநீர் வளங்களின் நிலைத் தன்மை’ என்ற கருத்துருவின் கீழ் மேற்கொள்ளப் படும் ஜல் சக்தி அபியான் - மழை நீர் சேமிப்பு 2023 என்ற பிரச்சாரத்தினைத் தொடங்கி வைத்தார்.
- நாகாலாந்தின் முதல் பெண் அமைச்சராகப் பதவியேற்று சல்ஹூதுவோனுவோ க்ரூஸ் வரலாறு படைத்துள்ளார்.
  - சமீபத்தில் சல்ஹூதுவோனுவோ மற்றும் ஹெகானி ஜகாலு ஆகியோர் அந்த மாநிலத்தின் முதல் பெண் சட்டமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டு உள்ளனர்.
- உலகின் மிகப் பெரிய ஒப்பந்த உற்பத்தி நிறுவனமான ஃபாக்ஸ்கான் குழுமம் ஆனது, கிட்டத்தட்ட 1 பில்லியன் டாலர் மதிப்பிலான முதலீட்டில், மின்னணுப் பொருட்கள் உற்பத்தி மற்றும் தொகுப்பு அலகினைப் பெங்களூரு அருகே நிறுவ உள்ளது.
- ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையின்படி, ஆப்கானிஸ்தான் நாடானது பெண்கள் மற்றும் சிறுமிகளின் அடிப்படை உரிமைகள் பலவற்றைப் பறித்து 2023 ஆம் ஆண்டில் உலகிலேயே மிக அதிகளவில் அவர்களை அடக்குமுறைக்கு உட்படுத்துகின்ற நாடாக திகழ்கிறது.
- சவுராஷ்டிரா கிரிக்கெட் அணியானது, வங்காள அணியை வீழ்த்தி, இரண்டாவது முறையாக ரஞ்சிக் கோப்பையைக் கைப்பற்றியுள்ளது.
  - இந்தப் பருவத்தில் முதல் முறையாக சிக்கிம் ரஞ்சிப் போட்டிகளை நடத்தியது.
- சாவ்லான் நிறுவனமானது, தனது ஸ்வஸ்த் இந்தியா திட்டத்திற்கான உலகின் முதல் ‘கைத் தூய்மைக்கான விளம்பரத் தூதராக’ சச்சின் டெண்டுல்கரை மக்களைக் கை கழுவச் செய்வதை ஊக்குவிக்க நியமித்துள்ளது.
- 23வது காமன்வெல்த் சட்ட மாநாடு கோவாவில் நடைபெற்றது.
- இரண்டு நாட்கள் அளவிலான G20 அமைப்பு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டம் ஆனது இந்தியாவின் தலைமையில் புது டெல்லியில் நடைபெற்றது.

- மகளிருக்கான பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியின் கோப்பைக்கான ஆதரவு வழங்கும் நிறுவனத்திற்கான உரிமையை டாடா குழுமம் பெற்றுள்ளது.
    - ஏற்கனவே, டாடா குழுமம் ஆனது இந்தியன் பிரீமியர் லீக் போட்டியின் உரிமையையும் பெற்றுள்ளது.
- சமீபத்தில் பஹ்ரைனில் உள்ள மனாமா நகரில் நடைபெற்ற 33வது AFC மாநாட்டின் போது 2027 ஆம் ஆண்டு ஆசியக் கோப்பைக் கால்பந்துப் போட்டியினை நடத்தச் செய்வதற்காக சவுதி அரேபியா நாடு தேர்வு செய்யப் பட்டுள்ளது.
- இந்தியத் தேர்தல் ஆணையம் ஆனது, ‘உள்ளார்ந்தத் தேர்தல்கள் மற்றும் தேர்தல் ஒருமைப்பாடு’ என்ற ஒரு கருத்துருவின் கீழ் தனது 3வது சர்வதேச மாநாட்டினை காணொளி வாயிலாக நடத்தியது.
- உச்ச நீதிமன்ற நீதிபதி V. இராமசுப்ரமணியன் அவர்கள் இந்தியாவின் சுதந்திரப் போராட்டம் - காந்திய சகாப்தம் (India’s Struggle for Independence – Gandhian Era) என்ற புத்தகத்தினை வெளியிட்டார்.
- முதலாவது கடற்படைத் தளபதிகள் மாநாடானது (2023) உள்நாட்டிலேயே தயாரிக்கப் பட்ட இந்தியாவின் முதல் விமானம் தாங்கி கப்பலான ஐஎன்எஸ் விக்ராந்தில் நடைபெற்றது.
    - இராணுவ உத்திசார்ந்த நிலைகளில் உள்ள முக்கியமான பாதுகாப்புப் பிரச்சினைகளைப் பற்றி விவாதிக்கவும், மூத்த அரசாங்க அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளவும் இது ஒரு தளமாக அமையும்.
- கர்நாடகாவின் தார்வாட் நகரில் அமைக்கப்பட்டுள்ள இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் நிரந்தர வளாகத்தினைப் பிரதமர் அவர்கள் திறந்து வைத்தார்.
    - இந்த வளாகம் ஆனது நாட்டின் முதல் திறன்மிகு மற்றும் பசுமைமிகு இந்தியத் தொழில் நுட்பக் கல்விக் கழக வளாகமாகும்.
- இந்தியச் சுரங்க ஆணையரகமானது மார்ச் 01 ஆம் தேதியன்று தனது 75வது ஸ்தாபன தினத்தினைக் கொண்டாடியது.
    - இது தேசியக் கனிமக் கொள்கை மாநாட்டின் பரிந்துரைகளின் அடிப்படையில் 1948 ஆம் ஆண்டு மார்ச் 01 ஆம் தேதியன்று நிறுவப்பட்டது.
- சர்வதேச விமான நிலையச் சபையானது டெல்லி விமான நிலையத்தினை ஆசியப் பசிபிக் பிராந்தியத்தின் தூய்மையான விமான நிலையமாக அறிவித்துள்ளது.
- பளு தூக்கும் வீராங்கனை மீராபாய் சானு, தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக BBC நிறுவனத்தின் 2022 ஆம் ஆண்டிற்கான சிறந்த இந்திய விளையாட்டு வீராங்கனை என்ற விருதினை வென்றுள்ளார்.
- முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கரண் சிங் எழுதிய ‘Mundaka Upanishad: The Gateway to Eternity’ என்ற புத்தகமானது சமீபத்தில் வெளியானது.
    - இதே பெயரிலான மற்றொருப் புத்தகமானது 1987 ஆம் ஆண்டில் பாரதிய வித்யா பவன் அமைப்பினால் வெளியிடப்பட்டது.
- தாய் மற்றும் தந்தையர் ஆகிய இருவருக்கும் ஒரே மாதிரியான பெற்றோர் விடுப்பு வழங்கிய உலகின் முதல் நாடு ஸ்பெயின் ஆகும்.

  - 16 வாரங்கள் வழங்கப்படும் இந்த விடுப்பானது பரிமாற்ற முடியாதது மற்றும் முழு ஊதியத்துடன் கூடிய ஒரு விடுப்பாகும்.

- 2023 ஆம் ஆண்டு உலகப் புத்தகக் கண்காட்சியில், சஜ்ஜன் சிங் யாதவ் எழுதிய 'India's Vaccine Growth Story - From Cowpox to Vaccine Maitri' என்ற புத்தகத்தினை மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் வெளியிட்டார்.

- சவுதி அரேபியாவில் நடைபெற்றப் போட்டியில் மேகாலயா அணியினை வீழ்த்தி கர்நாடகா அணி தனது முதல் சந்தோஷ் கோப்பை தேசியக் கால்பந்து சாம்பியன்ஷிப் பட்டத்தினை வென்றது.

  - முன்னதாக, கர்நாடகா மாநிலம் 1968-69 ஆம் ஆண்டில் மைசூர் சமஸ்தானமாக இருந்த போது கடைசியாக நான்கு முறை பெற்ற வெற்றியினை அடுத்து, 54 ஆண்டு கால இடைவெளிக்குப் பிறகு தற்போது இந்த வெற்றியினை கர்நாடகா பெற்று உள்ளது.

- தீபிகா படுகோனே 2023 ஆம் ஆண்டின் 95வது ஆஸ்கார் அகாடமி விருது விழாவில் மூன்றாவது இந்தியத் தொகுப்பாளர் என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.

  - இதற்கு முன்னதாக இவ்விழாவின் தொகுப்பாளர்களாக இடம் பெற்ற இந்தியர்கள் பெர்சிஸ் கம்பட்டா (1980) மற்றும் பிரியங்கா சோப்ரா (2016) ஆகியோர் ஆவர்.

- மத்தியப் புலனாய்வுத் துறை ஆனது கடந்த ஓராண்டில் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டுத் தப்பியோடிய 33 நபர்களைத் தனது 'திரிசூல் நடவடிக்கை' மூலம் அந்தந்த அதிகார வரம்பின் பகுதிகளுக்கு அனுப்பியுள்ளது.

- இந்திய ரிசர்வ் வங்கியானது (RBI), இந்தியப் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு முகமைக்கு (IREDA) 'உள்கட்டமைப்பு நிதி நிறுவனம்' (IFC) என்ற அந்தஸ்தினை வழங்கி உள்ளது.

- ஆசியாவின் முதல் பெண் இரயில் எஞ்சின் ஓட்டுநர் ஆன சுரேகா யாதவ், மித அதிவேக வந்தே பாரத் விரைவு இரயிலை இயக்கிய முதல் பெண்மணி என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.

- இந்தியத் தலைமை நீதிபதி D.Y.சந்திரசூட் தலைமையிலான ஒரு அமர்வானது, தன் பாலினத்தவருக்கு இடையேயான திருமணங்களைச் சட்டப் பூர்வமாக அங்கீகரிக்க வேண்டும் என்று கோரி விண்ணப்பிக்கப்பட்ட மனுக்களை உச்ச நீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகள் கொண்ட ஒரு அரசியல் சாசன அமர்விடம் அனுப்பியுள்ளார்.

- BSE மற்றும் UN Women India ஆகிய அமைப்புகள் இணைந்து மும்பை பங்குச் சந்தையில் (BSE) 'FinEMPOWER' என்ற புதிய திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளன.

  - இது நிதிப் பாதுகாப்பில் பெண்களின் நிலையை மேம்படுத்துவதற்கான ஓராண்டு அளவிலான ஒரு கூட்டுத் திறன் மேம்பாட்டுத் திட்டமாகும்.

- நேபாளத்தின் மூன்றாவது குடியரசுத் தலைவராக நேபாளக் காங்கிரசின் மூத்தத் தலைவர் ராம் சந்திர பௌடல் பதவியேற்றுள்ளார்.

- அரியலூர் அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள ஒரு அரங்கத்திற்கு, மருத்துவக் கல்வி நோக்கிய இலட்சியவாதி S. அனிதாவின் பெயர் சூட்டப் பட்டுள்ளது.

  - இவரது மரணமானது 2017 ஆம் ஆண்டில் நீட் தேர்வு எதிர்ப்புப் போராட்டத்திற்கு வழி வகுத்தது.

- இந்தியாவில் உள்ள நான்கு மாநிலங்களில் 781 கிலோமீட்டர் தொலைவிலான தேசிய நெடுஞ்சாலை வழித்தடங்களை அமைப்பதற்கான கடன் வழங்கீட்டு ஒப்பந்தத்தில் இந்தியா மற்றும் உலக வங்கி ஆகியவை கையெழுத்திட்டுள்ளன.
    - அந்த மாநிலங்கள் இமாச்சலப் பிரதேசம், ராஜஸ்தான், உத்தரப் பிரதேசம் மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகியனவாகும்.
- சென்னையைச் சேர்ந்த BVK பிரியாணி நிறுவனமானது, இந்தியாவிலேயே முதல் முறையாக 'பணியாட்கள் இல்லாத உணவு பெறும்' சேவையினைத் தனது கொளத்தூர் கிளையில் அறிமுகப் படுத்தியுள்ளது.
- தேசியப் பேரிடர் அபாயக் குறைப்புக்கானத் தளத்தின் (NPDRR) 3வது கலந்துரையாடல் ஆனது புது டெல்லியில் நடைபெற்றது.
- மும்பையைத் தலைமையிடமாகக் கொண்ட மத்திய இரயில்வே நிர்வாகமானது, தனது முழு நீள (3,825 கிமீ) அகலப்பாதை வலையமைப்பையும் 100 சதவீதம் மின் மயமாக்கி, தனது செயல்பாட்டில் ஒரு குறிப்பிடத் தக்க மைல்கல்லை எட்டியுள்ளது.
- பெங்களூரு நகரில் தேர்தல் செயல்முறை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதற்காக, இந்தியத் தேர்தல் ஆணையத்தின் தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் பிற உறுப்பினர்கள் இணைந்து வாக்களிப்பு விழா 2023 என்ற ஒரு பிரச்சாரத்தினைத் தொடங்கி வைத்தனர்.
- G20 அமைப்பிற்கான இந்தியாவின் தலைமைத்துவத்தின் கீழ் B20 (தொழில்கள்20) மாநாடு ஆனது சிக்கிம் தலைநகர் காங்டாக்கில் நடைபெற்றது.
- ஜியானி இன்ஃபான்டினோ FIFA கூட்டமைப்பின் நான்கு ஆண்டுகாலத் தலைவர் பதவிக்கு மீண்டும் தேர்ந்தெடுக்க ப்பட்டுள்ளார்.
- G20 அமைப்பிற்கான இந்தியாவின் தலைமைத்துவத்தின் கீழ் உலக நிதி உள்ளடக்கக் கூட்டாண்மையின் (GPFI) இரண்டாவது கூட்டமானது ஹைதராபாத்தில் நடைபெற்றது.
- 146வது பாராளுமன்றங்களுக்கிடையிலான சர்வதேச ஒன்றிய அமைப்பின் சபை அமர்வானதுசவூதி அரேபியாவின் பஹ்ரைனில் நடைபெற்றது.
    - இந்த நிகழ்விற்கான கருத்துரு, "அமைதியான சகவாழ்வு மற்றும் உள்ளார்ந்தச் சமூகங்களை ஊக்குவித்தல்: சகிப்பின்மையை எதிர்த்துப் போராடுதல்" என்பது ஆகும்.
- இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர் சக்தி காந்த தாஸ், சர்வதேசப் பத்திரிக்கையான மத்திய வங்கிகள் என்ற பொருளாதார ஆய்வுப் பத்திரிகையின் 2023 ஆம் ஆண்டிற்கான 'ஆண்டின் சிறந்த ஆளுநர்' என்ற விருதினைப் பெற்றுள்ளார்.
    - 2015 ஆம் ஆண்டில், முன்னாள் ஆளுநர் இரகுராம் ராஜன் முதன்முதலில் இந்தப் பட்டத்தினைப் பெற்ற முதல் இந்தியர் என்ற பெருமையினைப் பெற்றார்.
- இந்திய இரயில்வே நிர்வாகமானது 2030 ஆம் ஆண்டிற்குள், 'நிகர சுழியக் கார்பன் உமிழ்வினைக் கொண்ட நிறுவனம்' என்று மாறுவதற்கான இலக்கினை நிர்ணயித்து உள்ளது.
- டாடா ஆலோசனை சேவை வழங்கீட்டு நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாக கிருத்தி கீர்த்திவாசன் நியமிக்கப்பட்டுள்ளார்.

- சென்னை சிதம்பரம் மைதானத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 'கலைஞர் கருணாநிதி காட்சி மேடை' கட்டிடத்தினை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.
- தேசியக் கடல்சார் தொழில்நுட்ப நிறுவனமானது, லட்சத்தீவில் பசுமையான, சுய ஆற்றலில் இயங்கும் கடல்நீர் சுத்திகரிப்பு ஆலையினை நிறுவ உள்ளது.
    - இது குறை வெப்பநிலை வெப்ப ஆற்றலைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் கடல்நீர் சுத்திகரிப்பு (LTTD) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி லட்சத்தீவின் ஆறு தீவுகளுக்குக் குடிநீரை வழங்கும்.
- பொது இடங்களில் புகைபிடிப்பதைக் குறைப்பதற்கும், அதன் மூலம் உருவாகும் தொற்றுநோய் சாராத நோய் உருவாக்கத்தின் அதிகரிப்பினை கணிசமான அளவில் குறைப்பதற்கும் மேற்கொண்ட பல்வேறு முயற்சிகளுக்காக பெங்களூரு நகரத்திற்கு 'ஆரோக்கியமான நகரங்களுக்கான கூட்டாண்மை விருது' ஆனது வழங்கப்பட்டது.
- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO) முதல் சுற்றுலா மற்றும் கலாச்சாரம் சார்ந்த தலைநகரமாக 'காசி' (வாரணாசி) அறிவிக்கப்பட்டுள்ளது.
- ரெஸ்ட் ஆஃப் இந்தியா அணியானது, மத்தியப் பிரதேச அணியை வீழ்த்தி, தனது 30வது இரானி கிரிக்கெட் கோப்பையினை வென்றது.
- பட்டு வளர்ப்பு விவசாயிகளைப் பாதுகாப்பதற்காக ரேஷம் கீத் பீமா என்ற காப்பீட்டுத் திட்டத்தைத் தொடங்கிய இந்தியாவின் முதல் மாநிலமாக உத்தரகாண்ட் மாநிலம் மாறியுள்ளது.
- ஸ்ரீநகரில் அமைக்கப்பட்டுள்ள ஆசியாவின் மிகப்பெரிய துலிப் மலர்த் தோட்டமான இந்திரா காந்தி நினைவு துலிப் மலர் தோட்டம் சமீபத்தில் திறக்கப்பட்டது.
    - இந்த தோட்டம் 1.5 மில்லியன் (15 லட்சம்) வகை மற்றும் வண்ண துலிப் மலர்களைக் கொண்டுள்ளது.
- புதுடெல்லியில் நடைபெற்ற உலக சிறு தானியங்கள் (ஸ்ரீஅன்னா) மாநாட்டினைப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் தொடங்கி வைத்தார்.
- சீனாவிற்கும் அருணாச்சலப் பிரதேசத்திற்கும் இடையிலான சர்வதேச எல்லையாக மெக்மோகன் கோட்டினை அங்கீகரிப்பதற்கான ஒரு தீர்மானத்தினை அமெரிக்கா நிறைவேற்றியுள்ளது.
- குழந்தைகள் மற்றும் இளையோர்களுக்கான உலக நாடகத் தினமானது ஆண்டு தோறும் மார்ச் 20 ஆம் தேதியன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.
- ஐக்கிய நாடுகள் சபையின் பிரெஞ்சு மொழித் தினமானது 2010 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் மார்ச் 20 ஆம் தேதியன்று அனுசரிக்கப் படுகிறது.
    - இந்தத் தினமானது கலாச்சார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான முகமை உருவாக்கப் பட்ட தினத்தினைக் குறிக்கிறது.
- தமிழக வேளாண்மை-விவசாயிகள் நலத்துறை அமைச்சர் M.R.K. பன்னீர்செல்வம், தமிழ்நாடு அரசானது ஐந்தாண்டு காலத்திற்கான தமிழ்நாடு சிறு தானிய இயக்கத்தினைச் செயல்படுத்த உள்ளதாக அறிவித்தார்.

- நுகர்வோர் மத்தியில் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காகவும், சிறு தானியச் சாகுபடியை அதிகரிப்பதற்காகவும் வேண்டி சிறு தானிய திருவிழாக்களும் இந்த இயக்கத்தின் மூலம் நடத்தப்படும்.

❖ இசைக் கழகத்தின் (மியுசிக் அகாடமி) 2023 ஆம் ஆண்டிற்கான சங்கீத கலாநிதி விருதிற்கு பாம்பே ஜெயஸ்ரீ அவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

❖ திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ராதாபுரம் சட்டமன்றத் தொகுதியானது, அங்கு அமைந்துள்ள 295 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில், குறைந்தபட்சம் ஒரு திறன்மிகு வகுப்பறையினைப் பெற்ற தமிழகத்தின் முதல் சட்டமன்றத் தொகுதி என்ற பெருமையைப் பெற்றுள்ளது.

❖ உத்தரப் பிரதேசத்தின் ரேபரேலியில் அமைந்துள்ள மைதானத்திற்கு இந்திய ஹாக்கி அணியின் நட்சத்திர வீராங்கனையான இராணி ராம்பால் பெயர் சூட்டப்பட்டதன் மூலம் இந்தப் பெருமையைப் பெற்ற முதல் விளையாட்டு வீராங்கனை என்ற ஒரு பெருமையை அவர் பெற்றுள்ளார்.

❖ ஜி ஜின்பிங்கிற்கு மூன்றாவது முறையாக ஐந்தாண்டு கால அதிபர் பதவி வகிக்க சீன நாடாளுமன்றம் அங்கீகாரம் வழங்கியது.

❖ சர்வதேசத் தொலைத்தொடர்பு ஒன்றியம் (ITU) புதுடெல்லியில் சர்வதேச தொலைத் தொடர்பு ஒன்றியத்தின் பகுதிசார் அலுவலகம் மற்றும் புத்தாக்க மையத்தினைத் திறந்துள்ளது.

❖ இந்திய நாட்டினைச் சேர்ந்த 43 வயதான ரோகன் போபண்ணா ATP மாஸ்டர்ஸ் 1000 போட்டியில் வென்ற மிக வயதான வீரர் என்ற வரலாற்றினைப் படைத்துள்ளார்.

❖ சர்வதேச வண்ணமயத் தினமானது, ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 21 ஆம் தேதியன்று அனுசரிக்கப் படுகிறது.

❖ வைக்கம் சத்தியாக்கிரகத்தின் நூற்றாண்டு விழாவையொட்டி தமிழகம் மற்றும் கேரள முதல்வர்கள் இணைந்து ஏப்ரல் 1ம் தேதி வைக்கம் நகரில் மாநில அளவிலானக் கொண்டாட்டங்களை தொடங்கி வைக்கின்றனர்.

❖ கேரளாவின் பெண்கள் அதிகாரம் மற்றும் வறுமை ஒழிப்புத் திட்டமான குடும்பஸ்ரீ என்ற திட்டம் 2023 ஆம் ஆண்டில் தனது வெள்ளி விழாவைக் கொண்டாடுகிறது.

❖ துபாயின் எமார் குழுமம் ஜம்மு காஷ்மீர் மாநிலம் ஸ்ரீநகரில் 60 மில்லியன் டாலர் செலவில் 'மால் ஆஃப் ஸ்ரீநகர்' என்ற பெயரில் வணிக மற்றும் அலுவலக வளாகத்தைக் கட்டவுள்ளது.

- இந்த ஒன்றியப் பிரதேசத்தில் இது முதல் நேரடி அந்நிய முதலீடு (FDI) ஆகும்.

❖ இந்திய வருமான வரித் துறையானது 'வரி செலுத்துவோருக்கான ஏஐஎஸ்' என்ற புதிய கைபேசிச் செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.

- இது வரி செலுத்துவோர் தங்களது வருடாந்திரத் தகவல் அறிக்கையில் கிடைக்கும் தகவல்களைப் பார்க்க வசதியாக உள்ளது.

❖ முழு அளவிலான மொத்த மனித உரிமை மீறல்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் கண்ணியம் தொடர்பான மற்றும் உண்மை தொடர்பான உரிமைக்கான சர்வதேச தினம் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 24 அன்று அனுசரிக்கப் படுகிறது.

❖ பிரதமர் நரேந்திர மோடி, பாரத் 6ஜி தொலைநோக்குத் திட்ட ஆவணத்தினை வெளியிட்டு, 6ஜி ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுச் சோதனை மையத்தினையும் தொடங்கி வைத்தார்.

- ஹிந்துஸ்தான் ஜிங்க் என்ற நிறுவனமானது அதன் நிலையான மற்றும் நீடித்த சுரங்க நடவடிக்கைகளுக்காக இந்தியத் தொழில்துறைக் கூட்டமைப்பின் கிரீன்கோ என்ற வெள்ளித் தர மதிப்பீட்டினைப் பெற்றுள்ளது.
- சிவசேனா கட்சியின் தலைவர் ஆதித்யா தாக்கரே மற்றும் பாஜக யுவ மோர்ச்சா சங்கத்தின் துணைத் தலைவர் மதுகேஷ்வர் தேசாய் உட்பட இந்தியாவைச் சேர்ந்த 6 பேர் உலகப் பொருளாதார மன்றத்தின் 2023 ஆம் ஆண்டிற்கான இளம் உலகளாவியத் தலைவர்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.
- உலக வர்த்தக மையச் சங்கம் (WTCA) மற்றும் மெர்லின் குழுமம் ஆகியவை இணைந்து கொல்கத்தா நகரத்தின் சால்ட் லேக் என்னுமிடத்தில் நபாடிகந்தா தொழில்துறை நகர ஆணைய (NDITA) பகுதியில் உலக வர்த்தக மையத்தினை (WTC) நிறுவுவதற்காக கூட்டு சேர்ந்துள்ளது.
  - கிழக்கு இந்தியாவில் கட்டமைக்கப்பட்டு வரும் முதல் உலக வர்த்தக மையம் இது ஆகும்.
- எல்லைச் சாலைகள் அமைப்பானது உத்திசார் முக்கியத்துவம் வாய்ந்த லே-மனாலி நெடுஞ்சாலையினை (NH 3) 138 நாட்களில் மக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தது.
  - கடந்த ஆண்டு, போக்குவரத்துப் பயன்பாட்டிற்காக இந்த நெடுஞ்சாலையைத் திறப்பதற்கு எல்லைச் சாலைகள் அமைப்பிற்கு 144 நாட்கள் ஆனது.
- ஐக்கிய நாடுகள் சபையின் 2023 ஆம் ஆண்டு தண்ணீர் வள மாநாடானது நியூயார்க் நகரில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் நடைபெற்றது.
  - இதனை தஜிகிஸ்தான் நாட்டு அரசு மற்றும் நெதர்லாந்து இராட்சியம் ஆகியவை இணைந்து நடத்தின.
- மும்பை இந்தியன்ஸ் மகளிர் கிரிக்கெட் அணி, மும்பையில் டெல்லி கேப்பிடல்ஸ் அணியினை வீழ்த்தி முதலாவது மகளிர் கிரிக்கெட் பிரிமியர் லீக் கோப்பையைக் கைப்பற்றியது.
- புதிய மேம்பாட்டு வங்கியின் தலைவராக பிரேசில் நாட்டின் முன்னாள் அதிபர் டில்மா ரூசெஃப் "ஒருமனதாக" தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- ICICI லோம்பார்ட் பொதுக் காப்பீட்டு நிறுவனமானது, சுகாதாரக் காப்பீடு எடுத்த நபர்களுக்காக அத்தொழில்துறை சார்ந்த முதல் அம்சமான 'எந்தவொருப் பகுதியிலும் பணமில்லாச் சேவை' என்ற வசதியினை அறிமுகப்படுத்தியுள்ளது.
  - இது வாடிக்கையாளர்கள் தங்களது காப்பீட்டுப் பட்டியலில் பதிவு செய்யப்படாத மருத்துவமனைகளில் கூட பணமில்லாச் சேவை மூலமான வசதிகளைப் பெற வழி வகை செய்கிறது.
- ஜப்பான் பிரதமர் ஃபுமியோ கிஷிடா, G7 உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்குப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு முறைப்படி அழைப்பு விடுத்துள்ளார்.
- ஜார்க்கண்ட் அரசானது, பணியாள் சேர்ப்பு நிறுவனங்களுக்கும் மாநிலத்தில் உள்ள வேலைவாய்ப்புத் தேடி அலையும் நபர்களுக்கும் இடையிலான ஒரு இடைவெளியைக் குறைப்பதற்காக ஒரு எண்மத் தளமாகச் செயல்படுவதை ஒரு நோக்கமாகக் கொண்ட 'ஜர்னியோஜன்' என்ற தளத்தினைத் தொடங்கியுள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## புதிய புவிசார் குறியீடு

- வேலூர் முள்ளு கத்தரிக்காய் மற்றும் ராமநாதபுரம் குண்டு மிளகாய் ஆகியவற்றிற்குப் புவிசார் குறியீடானது வழங்கப்பட்டுள்ளது.
- வேலூர் முள்ளு கத்தரிக்காய் ஆனது தமிழில் இலவம்பாடி முள்ளு கத்திரிக்காய் என்று அழைக்கப் படுகிறது.
- வேலூர் முள்ளு கத்தரிக்காயில் 100 கிராமிற்கு 10.5 மி.கி. புரதம் என்ற நிலையில் 2 சதவீதம் புரதம் உள்ளது.
- ஒரு வேலூர் முள்ளு கத்தரிக்காயானது, சராசரியாக 40 கிராம் எடை கொண்டதோடு, அறை வெப்பநிலையில் மூன்று நாட்களும், குளிர்சாதன வசதியில் ஒரு வாரம் வரையிலும் அது கெடாமல் இருக்கும்.
- குண்டு (முண்டு) மிளகாய் என்பது உணவுப் பொருட்களில் வண்ணமளிப்பதற்காகப் பயன்படுத்தப் படுகின்ற மற்றும் தென்னிந்திய உணவுகளில் பெருமளவில் பயன் படுத்தப் படுகிற ஒரு வட்ட வடிவ மிளகாய் ஆகும்.



## ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்புடனான ஒப்பந்தம்

- ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்புடனான (UNEP) புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழக அரசு கையெழுத்திட்டுள்ளது.
- இது தமிழ்நாட்டில் நகர்ப்புறக் குளிரூட்டல் தொழில்நுட்பத் திட்டத்தினை உருவாக்கச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 'குளிரூட்டல் தொழில்நுட்பக் கூட்டணி' மற்றும் இந்திய-டென்மார்க் பசுமை உத்திசார் கூட்டாண்மை ஆகியவற்றின் கட்டமைப்பின் கீழ் இந்தத் திட்டமானது மேற் கொள்ளப் படுகிறது.
- இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தமானது, நிலையான குளிரூட்டல் தொழில்நுட்பத்தில் பல்வேறு பங்குதாரர்களின் திறன் மேம்பாட்டினை எளிதாக்குகிறது.
- இது இந்தியாவின் மற்ற மாநிலங்களுக்குப் பயிற்சி அளித்தல் மற்றும் மற்ற நாடுகள் இந்தத் திட்டத்தின் மூலம் நடை முறைகளிலிருந்துக் கற்றல் என்ற முறை மூலம் தெற்கு நாடுகளிடையேயான ஒத்துழைப்பினை மேம்படுத்துகிறது.

## இரயில் நிலையத்தில் உலர் மீன் விற்பனை நிலையம்

- மதுரை இரயில் நிலையத்தில் இந்தியாவின் முதல் உலர் மீன் (கருவாடு) விற்பனை நிலையமானது திறக்கப்பட்டுள்ளது.
- தற்போது மதுரை இரயில் நிலையத்தில் சுங்குடி சேலைகள் கூட விற்பனை செய்யப் படுகின்றன.
- ஒவ்வோர் ஊரின் பிரபலமான உள்ளூர் தயாரிப்புப் பொருட்களை ஊக்குவிக்கும் வகையில், இரயில்வே நிர்வாகம் அந்தந்த மாவட்ட இரயில் நிலையங்களில் "ஒரு நிலையம், ஒரு பொருள்" என்ற திட்டத்தின் கீழ் விற்பனை நிலையங்களை அமைத்து வருகிறது.
- நாடு முழுவதும் உள்ள சுமார் 5,000 இரயில் நிலையங்கள் இத்தகைய விற்பனைக்கு அனுமதி வழங்கியுள்ளன.
- மேலும், தெற்கு இரயில்வே நிர்வாகத்தின் பின்வரும் மற்ற ஆறு இரயில் வழித் தடங்களில் உள்ள இரயில் நிலையங்களில், பிரபலமான உள்ளூர் தயாரிப்புப் பொருட்கள் விற்பனை செய்யப் படுகின்றன.
    - திண்டுக்கல் இரயில் நிலையத்தில் சின்னாளப்பட்டி கைத்தறி சேலைகள்,
    - தூத்துக்குடி மற்றும் வாஞ்சி மணியாச்சி இரயில் நிலையத்தில் மக்ரூன் எனப்படும் இனிப்பு வகை,
    - இராமேஸ்வரம் இரயில் நிலையத்தில் கடல் பாசி பொருட்கள்,
    - கோவில்பட்டி இரயில் நிலையத்தில் தேங்காய் மிட்டாய்,
    - விருதுநகர் மற்றும் சாத்தூர் இரயில் நிலையத்தில் காரச்சேவு,
    - தென்காசி மற்றும் செங்கோட்டை இரயில் நிலையத்தில் மூங்கில் சார்ந்தத் தயாரிப்புப் பொருட்கள்.

## கீழடி அருங்காட்சியகம்

- சிவகங்கை மாவட்டத்தில் கீழடி அகழ்வாராய்ச்சி நடைபெறும் இடத்தில் அமைக்கப் பட்டு, மேலும் செட்டிநாடு கட்டிடக் கலை வடிவத்தில் அமைக்கப் பட்டுள்ள கீழடி அருங்காட்சியகத்தினை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.
- இந்த அருங்காட்சியகத்தில் கீழடி அகழ்வாராய்ச்சித் தளங்களில் 2018 ஆம் ஆண்டு முதல் கண்டெடுக்கப்பட்ட கலைப் பொருட்கள் உள்ளன.
- கீழடிப் பகுதியில் வைகை நதிக் கரையில் செழித்துக் காணப்பட்ட பண்டைய நாகரிகம் அமைந்திருந்தது.
- இங்கு கண்டெடுக்கப்பட்ட கலைப் பொருட்கள் கீழடி மற்றும் மதுரை, வேளாண் மற்றும் நீர் மேலாண்மை, பீங்கான் பொருள் தயாரிப்புத் தொழில், நெசவு மற்றும் இரும்புத் தொழில், கடல் வாணிபம் மற்றும் வாழ்க்கை முறை என வகைப் படுத்தப் பட்டுள்ளன.
- கீழடியில் மேற்கொள்ளப்பட்ட இந்த அகழ்வாராய்ச்சியானது சங்கக் காலத்தினை முன்பு கணிக்கப் பட்ட கிமு 3 ஆம் நூற்றாண்டு முதல் கிபி 3 ஆம் நூற்றாண்டு என்ற காலத்திலிருந்து கிமு 6 ஆம் நூற்றாண்டு என்ற காலத்திற்குக் கணித்துள்ளது.
- ஒரு பண்டையத் தமிழ் எழுத்து முறையான தமிழி என்ற எழுத்துக்களுடன் கூடிய 1000 முத்திரைகளும் 60 பானைகளும் கண்டெடுக்கப் பட்டன.

- 2013-14 ஆம் ஆண்டில் வைகைப் பள்ளத்தாக்குப் பகுதியின் ஊடாக தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் 293 இடங்களில் இந்தியத் தொல்லியல் துறை அகழ்வாராய்ச்சியினை மேற்கொண்டது.
- இந்த அகழ்வாராய்ச்சியானது கீழடியின் பள்ளிச் சந்தைத் திடலில் மேற்கொள்ளப் பட்டது.
- 2018 ஆம் ஆண்டில் மாநிலத் தொல்லியல் துறையானது நான்காவது பருவத்திலிருந்து இந்த அகழ்வாராய்ச்சியினை மேற்கொண்டது.
- இதில் ஆறாவது பருவத்திலிருந்து கீழடியுடன் கொந்தகை, அகரம் மற்றும் மணலூர் ஆகியவை தொகுப்புகளாக சேர்க்கப் பட்டன.
- இதில் கொந்தகை எனபது ஒரு மிகப்பெரிய புதைவிடமாக உள்ள நிலையில், அகரம் மற்றும் மணலூர் ஆகியவை ஒரு துடிப்பான மனித வாழ்விடங்கள் ஆகும்.



## புனித அந்தோணியார் திருவிழா




- வருடாந்திர புனித அந்தோணியார் திருவிழாவானது இலங்கையில் உள்ள கச்சத்தீவில் நடைபெற உள்ளது.
- இந்த விழாவில் பங்கேற்பதற்காக இந்தியாவினைச் சேர்ந்த புனித யாத்ரீகர்கள் கச்சத் தீவை அடைந்துள்ளனர்.
- 2400க்கும் மேற்பட்ட யாத்ரீகர்கள் இந்தத் தீவை அடைந்துள்ள நிலையில், இலங்கைத் தரப்பில் இருந்து அதற்குச் சமமான எண்ணிக்கையில் யாத்ரீகர்கள் இதில் பங்கேற்க உள்ளனர்.
- கச்சத்தீவு என்பது ஜாஃப்னாவுக்கு (யாழ்ப்பாணம்) அருகிலுள்ள 163 ஏக்கர் பரப்பளவு கொண்ட மக்கள் வசிக்காத ஒரு தீவு ஆகும்.

- புனித அந்தோணியார் தேவாலயம் மட்டுமே இந்தத் தீவில் அமைந்துள்ளது.
- இது 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஒரு வளமிக்க இந்தியக் கத்தோலிக்க தமிழ் மீனவரால் கட்டமைக்கப்பட்டது.

## ஆசியப் பசிபிக் பிராந்தியத்தின் சிறந்த விமான நிலையம்

- திருச்சி சர்வதேச விமான நிலையம் ஆனது ஆசியப் பசிபிக் பிராந்தியத்தின் சிறந்த விமான நிலையமாக மதிப்பிடப் பட்டுள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் இரண்டு மில்லியனுக்கும் அதிகமான பயணிகள் போக்குவரத்து என்ற பிரிவில் இந்த விமான நிலையம் முதலிடத்தில் உள்ளது.
- திருச்சி விமான நிலையம் இந்த அங்கீகாரத்தைப் பெறுவது இதுவே முதல் முறை ஆகும்.
- விமான நிலையச் சேவை தர (ASQ) மதிப்பாய்வினைத் தொடர்ந்து திருச்சி விமான நிலையம் இந்த உலகளாவிய அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.
- விமான நிலையச் சேவை வழங்கீட்டாளர்களின் ஒரு உலகளாவிய இலாப நோக்கற்ற அமைப்பான சர்வதேச விமான நிலையச் சபை இந்த ஆய்வை மேற்கொண்டது.




## தோள் சீலைப் போராட்டத்தின் 200வது ஆண்டு நிறைவு

- கன்னியாகுமரியில் உள்ள நாகர்கோவிலில் மார்ச் 06 ஆம் தேதியன்று, தமிழ்நாடு மற்றும் கேரள முதல்வர்கள் ஒன்று கூடி தோள் சீலைப் போராட்டம் அல்லது மாரு மரக்கால் சமரத்தின் 200வது ஆண்டு நிறைவு நினைவு விழாவினை நடத்தினர்.

- இது பழைய திருவிதாங்கூரில் வாழ்ந்த ஒடுக்கப்பட்ட சாதிகளைச் சேர்ந்த பெண்கள் தங்கள் மேல் உடலை மறைக்கும் வகையில் சேலை அணிவதற்கான உரிமையினைப் பெறுவதற்காக பல தசாப்தங்களாக நடத்திய ஒரு போராட்டமாகும்.
- திருவிதாங்கூர் என்பது இன்றைய தெற்கு கேரளா மற்றும் தென் தமிழ்நாட்டின் சில பகுதிகளை உள்ளடக்கியிருந்தது.
- 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் மார்புப் பகுதியினை மறைக்கும் வகையிலான ஆடைகளை அணிவதற்கான உரிமையானது மேல் சாதிப் பெண்களுக்கு மட்டுமே வழங்கப் பட்டிருந்தது.
- 1812 ஆம் ஆண்டில், திருவிதாங்கூர் மகாராணி அவர்கள், கிறித்தவச் சமயத்திற்கு மாறிய தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பெண்கள் மேலாடை (ரவிக்கை) அணிய அனுமதி அளித்து உத்தரவிட்டார்.
- சமூக சீர்திருத்தவாதி அய்யா வைகுண்ட சுவாமி அவர்கள், பெண்களை ஒன்று திரட்டி அவர்களுடன் இணைந்து பல்வேறு வகையிலான கூட்டங்களை நடத்தி உரிமை கோரல் போராட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- மேலாடை கிளர்ச்சியின் முதல் கட்டமானது 1822-1823 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் நடைபெற்றது.
- இந்தக் கிளர்ச்சியின் இரண்டாம் கட்டமானது 1827-1829 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் நடைபெற்றது.
- 1958-1859 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் நடைபெற்ற மூன்றாம் கட்ட கிளர்ச்சியின் போது தான், வகுப்பு, சாதி மற்றும் மதம் என பாராமல் அனைத்துப் பிரிவு பெண்களும் மேல் ஆடை அணியலாம் என அனுமதி வழங்கப்பட்டது.

## மகளிர் தின விருதுகள் 2023

- தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், 2023 ஆம் ஆண்டிற்கான ஔவையார் விருதினை கமலம் சின்னசாமிக்கு வழங்கினார்.
- இவர் ஊட்டியைச் சேர்ந்த 90 வயது எழுத்தாளர் மற்றும் சமூக சேவகர் ஆவார்.
- இவர் பல கவிதைகளையும், சுமார் 43 புத்தகங்களையும் எழுதியுள்ளார்.
- 2022-23 ஆம் ஆண்டிற்கான பெண் குழந்தைகளுக்கான அதிகாரமளித்தல் விருதானது, 11 ஆம் வகுப்பு மாணவியான இளந்திரை என்பவருக்கு வழங்கப்பட்டது.
- அடுக்குமாடிக் கட்டிடங்களில் உள்ள மின் தூக்கிகளைப் பழுது பார்க்கும் போது ஏற்படும் உயிரிழப்புகளைத் தடுக்கும் வகையிலான ஒரு புதிய கருவியை இவர் கண்டு பிடித்து உள்ளார்.
- மேலும் 2023 ஆம் ஆண்டில் மாவட்டத்தின் குழந்தை பாலின விகிதத்தை மேம்படுத்தச் செய்ததற்காக திருவள்ளூர் ஆட்சியாளர் ஆல்பி ஜான் வர்கீசுக்கு முதல் பரிசினையும் முதல்வர் அவர்கள் வழங்கினார்.
- நாகப்பட்டினம் மற்றும் நாமக்கல் மாவட்ட ஆட்சியர்கள் ஆகியோருக்கு முறையே இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுகளை அவர் வழங்கினார்.

## புன்னகை திட்டம்

- பள்ளிக் கல்வித் துறை அமைச்சர், அரசுப் பள்ளி மாணவர்களுக்கான 'புன்னகை' என்ற புதியத் திட்டத்தினைத் தொடங்கி வைத்தார்.
- மாணவர்களின் பல் பராமரிப்புக்காக இத்திட்டம் ஆனது தொடங்கப்பட்டுள்ளது.
- முதற்கட்டமாக, 6 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் பல் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.
- மாணவர்களுக்கு ஏற்படும் வாய் சார்ந்த நோய்களைத் தடுக்கும் வகையில் இந்தத் திட்டமானது தொடங்கப் பட்டுள்ளது.
- இந்தத் திட்டமானது, பள்ளி மாணவர்களைப் பரிசோதித்து, வாய்வழி நோய்கள், பல் சொத்தை மற்றும் ஈறு பிரச்சனைகள் குறித்து அவர்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்துவதன் மூலம் அவர்களுக்குப் பயனளிக்கும்.



## செயற்கை மணல் தொடர்பான கொள்கை

- தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் செயற்கை மணல் குவாரிகளை (எம்-சாண்ட் என பிரபலமாக அழைக்கப்படும்) ஒழுங்குமுறைப் படுத்தச் செய்வதற்காக தமிழக அரசு ஒரு புதிய கொள்கையை அறிமுகப் படுத்தியுள்ளது.
- கட்டுமானப் பொருட்களின் கலவையாகப் பயன்படுத்தப்படும் ஒரு வகை நொறுக்கப் பட்ட மணலான செயற்கை மணலின் தரத்தை மேம்படுத்துவதையும், மணல் குவாரிகளை ஒழுங்குமுறைப் படுத்துவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- செயற்கை மணல் மற்றும் சரளை மணல் உற்பத்தி அலகுகளின் செயல்பாடுகளைக் கண்காணிப்பதற்கான ஒற்றைச் சாளர இணைய தளம் மற்றும் மையப்படுத்தப்பட்ட ஒரு அமைப்பு ஆகியவற்றினை அரசு நிறுவ உள்ளது.
- இந்தப் புதிய கொள்கையின்படி, குவாரி உரிமையாளர்கள் தங்கள் உரிமங்களுக்கு விரைவான அனுமதி பெறுவதை உறுதி செய்யும் வகையில் மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், பொதுப் பணித்துறை, சுரங்கங்கள் மற்றும் பிற துறைகள் ஆகியவை ஒரு தளத்தில் இணைக்கப்படும்.
- தற்போது, மாநிலத்தில் 378 உரிமம் பெற்ற சரளை மணல் உற்பத்தி அலகுகள் உள்ளன.

- இந்தப் புதிய கொள்கையின் படி, அனைத்து சரளை மணல் ஆலைகளும், 1948 ஆம் ஆண்டுத் தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் தொழில்துறைப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநரகத்தில் பதிவு செய்யப்பட வேண்டும்.
- செயற்கை மணல் அல்லது சரளை மணல் என்பது குவாரிப் பாறைக் கற்களை மணல் அளவிலான துகள்களாக நொறுக்குவதன் மூலம் தயாரிக்கப் படுகிறது.
- பிரத்தியேகமாக செயற்கை மணல் உற்பத்தி செய்வதற்காக மட்டுமே என்று எந்த குவாரிக்கும் குத்தகை வழங்கப் படாது என்றும் இந்தக் கொள்கை கூறுகிறது.
- ஒட்டு மொத்தமாக, இந்தப் புதியக் கொள்கையானது, தமிழகத்தில் செயற்கை மணல் தொழில் துறையில் அதிக அளவிலான ஒழுங்குமுறை மற்றும் வெளிப்படைத் தன்மையைக் கொண்டு வரும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- இதில் செயற்கை மணல் உற்பத்தி அலகுகள் இரண்டு குழுக்களாக வகைப்படுத்தப் பட்டு உள்ளன. அவை
    - செயல்பாட்டில் உள்ள கல் குவாரிக் குத்தகைகளை வைத்திருக்கும் நபர்கள் தான் சொந்தமாக இயக்குகின்ற ஒருங்கிணைந்த அலகுகள்.
    - செல்லுபடியாகும் கல் குவாரிக் குத்தகைகளைக் கொண்டிருக்காத நபர்களால் இயக்கப் படும் தனி அலகுகள்.

## மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறப்பு

- 2022 ஆம் ஆண்டில் மேட்டூர் அணையில் இருந்து அதிக அளவு (440.76 ஆயிரம் மில்லியன் கன அடி) உபரி நீர் திறக்கப் பட்டது.
- இது 1934 ஆம் ஆண்டில் இந்த அணை கட்டப்பட்டதில் இருந்து திறக்கப்பட்ட அதிக அளவு ஆகும்.
- திறந்து விடப்பட்ட உபரி நீரின் அளவு அணையின் கொள்ளளவை விட 4.7 மடங்கு அதிகமாக உள்ளது.
- கடந்த 88 ஆண்டுகளில் அந்த அணையின் மொத்த உபரி அளவு சுமார் 3,614 ஆயிரம் மில்லியன் கன அடி (tmcft) ஆகும்.

| | (in tmc ft) |
|---|---|
| 2022 | 440.76 |
| 1961 | 321.062 |
| 1959 | 186.148 |
| 1956 | 180.02 |
| 1943 | 179.082 |
| 1942 | 148.839 |
| 1964 | 146.623 |
| 2005 | 142.513 |
| 2018 | 119.084 |



In 2022, surplus water released was over 4.7 times the Mettur dam's capacity.

## அனைத்து மகளிர் உற்பத்தி அலகு

- அசோக் லேலண்ட் நிறுவனமானது, முற்றிலும் பெண் ஊழியர்களால் இயக்கப்படும் புதிய உற்பத்தி அலகு ஒன்றினை ஓசூரில் தொடங்கியுள்ளது.
- இது பெண்களுக்கு அதிகாரமளிப்பதை ஊக்குவிப்பதோடு, உற்பத்தித் தொழில் துறையில் அவர்கள் பங்கு பெறச் செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த நிறுவனமானது 80 பெண் ஊழியர்களுடன் இந்தப் புதிய அலகினை நிறுவி உள்ளது.




## திருப்புகழ் குழு - இறுதி அறிக்கை

- சென்னை வெள்ளப் பெருக்குப் பேரிடர் தணிப்பு மற்றும் மேலாண்மை குறித்த திருப்புகழ் குழுவானது தனது இறுதி அறிக்கையை தமிழக முதலமைச்சர் அவர்களிடம் சமர்ப்பித்துள்ளது.
- இது ஒழுங்குமுறை கட்டமைப்பில் சீர்திருத்தங்களை மேற்கொள்ளவும், சென்னையில் பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் வெள்ளப் பெருக்கினை அளவிடுவதற்கும் மற்றும் வெள்ளப் பெருக்குப் பேரிடர் தணிப்பு மேலாண்மையில் உள்ள தொழில்நுட்பம் சார்ந்த சட்ட முறை ஆளுமையினை மேம்படுத்துவதற்கும் பரிந்துரைத்துள்ளது.
- குறிப்பிட்ட மழைநீர் வடிகால் திட்டங்களை வழங்குமாறு முதல்வர் அவர்கள் இந்தக் குழுவினரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.
- சென்னை மாநகரத்தில் உள்ள 600 மற்றும் ஒரு சில குறிப்பிட்ட பாதிக்கப்படக் கூடிய பகுதிகளுக்கான பகுதி சார்ந்த ஒரு விரிவான நீண்ட கால வெள்ள மேலாண்மை திட்டங்களையும் இக்குழு முன்மொழிந்துள்ளது.

## முதலாவது ஒத்திசைவுக் கணக்கெடுப்பு

- தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா ஆகிய மாநிலங்களின் எல்லைப் பகுதிகளில் மேற் கொள்ளப் பட்ட முதலாவது ஒத்திசைவுக் கணக்கெடுப்பில் 246 கழுகுகள் கண்டறியப் பட்டன.
- இந்த மூன்று மாநிலங்களில், தமிழ்நாடு மாநிலமானது கழுகுகள் அதிகம் கூடு கட்டும் இடமாகவும், தங்கும் இடமாகவும் தொடர்ந்துத் திகழ்ந்து வருகிறது.
- முதுமலை புலிகள் காப்பகத்தில் மட்டும் 98 கழுகு இனங்கள் உள்ளன.
- இந்த 98 இனங்களில், இரண்டு எகிப்தியக் கழுகுகள் மற்றும் ஒரு இமயமலை கழுகு ஆகியவை அரிதாக தென்பட்டுள்ளன.

- கர்நாடகாவில் உள்ள பந்திப்பூர் மற்றும் நாகர்ஹோலே புலிகள் காப்பகங்களில் மொத்தம் 94 கழுகு இனங்கள் இருப்பதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.
- கேரளாவில் உள்ள வயநாடு வனவிலங்கு சரணாலயத்தில் 52 கழுகு இனங்கள் உள்ளன.




## தமிழ்நாடு இயற்கை வேளாண்மைக் கொள்கை

- முதல்வர் அவர்கள் 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயற்கை வேளாண்மைக் கொள்கை என்பதினை வெளியிட்டார்.
- இந்தக் கொள்கையானது பாதுகாப்பான, ஆரோக்கியமான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த உணவை வழங்குவதோடுச் சேர்த்து, மண் ஆரோக்கியம், வேளாண்மையியல் மற்றும் பல்லுயிர்த் தன்மை வளங்காப்பு மற்றும் பாதுகாத்தல் ஆகியவற்றினையும் நோக்கமாகக் கொண்டது.
- இக்கொள்கையானது, ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு மறுமதிப்பாய்வு செய்யப் படும்.
- இக்கொள்கையின் செயல்முறை முன்னேற்றங்களைக் கண்காணிப்பதற்காக மாநில அளவிலான மற்றும் மாவட்ட அளவிலான குழுக்கள் அமைக்கப்படும்.
- சான்றிதழ் வழங்கீட்டு நடைமுறையை எளிதாக்குவதற்காக ஒற்றைச் சாளர முறை என்பது செயல்படுத்தப்படும்.
- இயற்கை வேளாண்மைக் கொள்கையானது தமிழ்நாட்டில் இரசாயனமற்ற இயற்கை வேளாண்மையினை உறுதிப்படுத்தவும், மேம்படுத்தவும், ஆதரிக்கவும் உதவும்.
- 2.66 மில்லியன் ஹெக்டேர் பரப்பளவு நிலங்களில் இயற்கை வேளாண்மை மேற் கொள்ளப் படுவதுடன், இந்தியா ஐந்தாவது இடத்தில் உள்ளது.
- இந்திய அளவில் 31,629 ஹெக்டேர் நிலங்களில் இயற்கை வேளாண்மை மேற் கொள்ளப் பட்டு தமிழ்நாடு 14வது இடத்தில் உள்ளது.
- இயற்கை வேளாண்மையில் அதிக பரப்பளவு நிலங்களைக் கொண்ட மாநிலமாக மத்தியப் பிரதேசம் உள்ள நிலையில் அதைத் தொடர்ந்து மஹாராஷ்டிரா, ராஜஸ்தான், குஜராத் மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்கள் இடம் பெற்றுள்ளன.
- 2020-21 ஆம் ஆண்டில், தமிழ்நாடு மாநிலமானது 108 கோடி ரூபாய் மதிப்புள்ள 4,223 மெட்ரிக் டன் இயற்கை வேளாண் உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்துள்ளது.

## ‘Pyre’ புதினம்

- தமிழ் எழுத்தாளர் பெருமாள் முருகனின் ‘பூக்குழி’ என்ற புதினத்தினை அனிருத் வாசுதேவன் என்பவர் ஆங்கிலத்தில் ‘Pyre’ என்ற பெயரில் மொழிபெயர்த்துள்ளார்.
- இந்தப் புத்தகமானது 2023 ஆம் ஆண்டிற்கான சர்வதேச புக்கர் பரிசுக்கான தகுதிப் பட்டியலில் இடம் பிடித்துள்ளது.
- இதன் மூலம் புக்கர்ஸ் பரிசிற்குப் பரிந்துரைக்கப்பட்ட முதல் தமிழ் புதினம் என்ற பெருமையினை இது பெற்றுள்ளது.
- 1980 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாட்டின் கிராமப்புறங்களின் அம்சங்களைக் கொண்ட இந்தப் புத்தகமானது, இளம் கலப்பு திருமணத் தம்பதியினர் உயிர் பிழைப்பதில் உள்ள சிக்கல்கள் மூலம் சாதிய அடிப்படையிலான வன்முறையை ஆராய்கிறது.
- ஒட்டுமொத்தமாக இந்த ஆண்டிற்கான தகுதிப் பட்டியலில் 13 புதினங்கள் இடம் பெற்று உள்ளன.
- 2022 ஆம் ஆண்டில், கீதாஞ்சலி ஸ்ரீ 'Ret Samadhi' என்ற புத்தகத்திற்காக சர்வதேச புக்கர் பரிசினை வென்ற முதல் இந்திப் புதின ஆசிரியர் என்ற ஒரு பெருமையினைப் பெற்று உள்ளார்.
- இப்புத்தகத்தினை டெய்சி ராக்வெல் என்பவர் ஆங்கிலத்தில் ‘Tomb of Sand’ என்று மொழி பெயர்த்துள்ளார்.




## தமிழ்நாடு நிதிநிலை அறிக்கையின் முக்கிய அம்சங்கள்

- தமிழ்நாடு நிதி அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் அவர்கள் 2023-24 ஆம் நிதி ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையினை 2023 ஆம் ஆண்டு மார்ச் 20 ஆம் தேதியன்று தாக்கல் செய்தார்.
- 2021-22 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மதிப்பீட்டில் 4.33% ஆக குறிப்பிடப் பட்ட மாநிலத்தின் நிதிப் பற்றாக்குறையானது, 3.80% ஆக குறையும்.
- 2021 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மதிப்பீட்டில் ரூ. 58,000 கோடியாக குறிப்பிடப் பட்ட ஒட்டு மொத்த வருவாய் பற்றாக்குறையானது ரூ.55,000 கோடியாக மதிப்பிடப் பட்டுள்ளது.
- ரூ.62,000 கோடியாக இருந்த மாநிலத்தின் வருவாய்ப் பற்றாக்குறையானது ரூ.30,000 கோடி அளவிற்கு குறைக்கப் பட்டுள்ளது.
- 2024 ஆம் நிதியாண்டில் மாநிலத்தின் சொந்த வரி வருவாய் ஆனது ரூ.1.5 லட்சம் கோடியாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

- இது நடப்பு நிதியாண்டில் ரூ.1.4 லட்சம் கோடியாக இருந்தது.
- தமிழக அரசானது, வரும் செப்டம்பர் 15 ஆம் தேதி முதல் குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1,000 நிதியுதவியினை வழங்கவுள்ளது.
- இந்த உதவித் தொகையானது அதிகாரப்பூர்வமாக தமிழில் 'மகளிர் உரிமைத் தொகை' அதாவது 'பெண்களுக்கான உதவி பெறும் உரிமை' என்று பொருள்படும் வகையில் அழைக்கப் படுகிறது.
- இதற்கான ஒதுக்கீடு இந்த ஆண்டு 7000 கோடி ரூபாய்கள் ஆகும்,
- 2023-24 ஆம் நிதியாண்டு முதல் 30,122 என்ற எண்ணிக்கையிலான அனைத்து அரசுத் தொடக்கப் பள்ளிகளுக்கும் இலவச காலை உணவுத் திட்டமானது விரிவுபடுத்தப்படும்.
- எண்ணும் எழுத்தும் திட்டம் ஆனது ஐந்தாம் வகுப்பு வரை நீட்டிக்கப் படும்.
- ரூ. 1000 கோடி செலவில் வடசென்னை மேம்பாட்டுத் திட்டமானது தொடங்கப்படும்.
- மரக்காணத்தில் சர்வதேசப் பறவைகள் மையமானது அமைக்கப்படும்.
- மாற்றுத் திறனாளிகளுக்கான மாதாந்திர நிதி உதவியானது ரூ.1,500 ஆக உயர்த்தப் பட்டுள்ள நிலையில், கடுமையாகப் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான மாதாந்திர நிதி உதவியானது ரூ.2000 ஆக உயர்த்தப் பட்டுள்ளது.
- தங்கம் மற்றும் கல்விக் கடன்களைத் தள்ளுபடி செய்வதற்காக ரூ.3,993 கோடி நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.
- இந்த ஆண்டில் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.30,000 கோடி வங்கிக் கடன் வழங்க தமிழக அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.
- தமிழகத்தின் மேற்கு மண்டலத்தில், சேலத்தில் புதிய ஜவுளிப் பூங்கா ஒன்றினை தமிழக அரசு நிறுவ உள்ளது.
- தமிழ்நாடு அரசானது, அம்பத்தூரில் "தமிழ்நாடு உலகப் புத்தாக்கம் மற்றும் திறன் பயிற்சி வழங்கீட்டு மையம்" (TN-WISH) என்ற உலகத் தரம் வாய்ந்த திறன் மேம்பாட்டு மையத்தினை நிறுவ உள்ளது.
- தஞ்சாவூரில் பிரம்மாண்ட சோழர் அருங்காட்சியகம் ஒன்று அமைக்கப்படும்.
- 2030ஆம் ஆண்டிற்குள் 14,500 மெகாவாட் மின்சாரத்தினை உற்பத்தி செய்யும் வகையில் மாபெரும் மின் நிலையத்தினை உருவாக்குவதற்காக ரூ.77,000 கோடி நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.
- அதிநவீன உலக விளையாட்டுத்துறை நகரம் ஆனது சென்னையில் அமைக்கப்படும்.
- ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் அறிவிக்கப்பட்டச் சமூகங்கள் மற்றும் வனப்பிரிவு உள்ளிட்ட பல்வேறு துறைகளின் கீழ் செயல்படும் அனைத்துப் பள்ளிகளும், பள்ளிக் கல்வித் துறையின் கீழ் ஒருங்கிணைக்கப்படும்.
- குடிமைப் பணித் தேர்வின் முதல்நிலைத் தேர்வுக்குத் தயாராகும் மாணவர்களுக்கு 10 மாதங்களுக்கு மாதம் ரூ. 7,500 வழங்கப்படும்.
- முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு மொத்தமாக ரூ. 25,000 வழங்கப்படும்.
- பட்டியலிடப்பட்ட சாதியினர்/ பழங்குடியினர் சார்ந்த தொழில்முனைவோரின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக வேண்டி, ‘அண்ணல் அம்பேத்கர் வணிக வாகையர் திட்டம்’ என்ற புதிய திட்டமானது தொடங்கப் படும்.

- கணினியில் தமிழ்மொழிப் பயன்பாட்டினைப் பிரபலப்படுத்தச் செய்வதற்காக என்று தமிழக அரசானது சர்வதேச தமிழ்க் கணினி மாநாட்டினை நடத்த உள்ளது.
- தமிழ்நாட்டினை உலகளாவிய தகவல் தொழில்நுட்பம்/ தகவல் தொழில்நுட்பம் மூலம் வழங்கப்படும் சேவை மையமாக மேம்படுத்துவதற்காக, சென்னை, கோயம்புத்தூர் மற்றும் ஓசூர் ஆகிய நகரங்களில் 'தமிழ்நாடு தொழில்நுட்ப நகரம்' (TNTech City) ஆனது அமைக்கப்படும்.
- மேலும் வயது முதிர்ந்த 591 தமிழ் அறிஞர்களுக்கு இலவசப் பேருந்துப் பயணச் சலுகை திட்டம் விரிவுபடுத்தப்படும்.
- நீலகிரி வரையாட்டினைப் பாதுகாக்கச் செய்யவும், அவற்றின் வளத்தினைக் காத்திட செய்வதற்காகவும் ரூ. 10 கோடி செலவில் 'நீலகிரி வரையாடு திட்டம்' ஆனது முதன் முறையாக தமிழகத்தில் தொடங்கப் படும்.
- பள்ளிக் கல்வித் துறைக்கு ரூ.40,229 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
- அவிநாசி சாலை மற்றும் சத்தியமங்கலம் சாலையை உள்ளடக்கியப் பகுதிகளுக்கு ரூ.9000 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூர் மெட்ரோ இரயில் சேவை தொடங்கப்படும்.
- திருமங்கலம் - ஒத்தக்கடை இடையேயான மெட்ரோ இரயில் சேவையானது ரூ.8500 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்படும்.
- கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய இரு நகரங்களின் திட்டமிட்ட மேம்பாட்டிற்காக எழில்மிகு கோயம்புத்தூர் மற்றும் மா மதுரை ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்படும்.
- 2030 ஆம் ஆண்டிற்குள் மேலும் 33000 மெகாவாட் உற்பத்தியினைச் சேர்ப்பதன் மூலம் ஏற்கனவே நிறுவப்பட்ட மின் உற்பத்தித் திறனை இரட்டிப்பாக்குவதற்கும், 2030 ஆம் ஆண்டிற்குள் பசுமை ஆற்றலின் பங்கை 50 சதவீதமாக உயர்த்துவதற்கும் இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.
- விருதுநகர், வேலூர், கள்ளக்குறிச்சி மற்றும் கோயம்புத்தூரில் புதிய சிப்காட் தொழிற் பூங்கா அமைக்கப்படும்.
- ஈரோட்டில் தந்தை பெரியார் வனவிலங்குச் சரணாலயம் என்ற புதிய வனவிலங்குச் சரணாலயம் அமைக்கப்பட உள்ளது.
- தமிழகத்தில் நிறுவப்பட உள்ள இந்தப் புதிய சரணாலயம் ஆனது மாநிலத்தின் 18 வது சரணாலயம் ஆகும்.
- இந்தி மொழித் திணிப்புக்கு எதிராகப் போராடி தமிழ் மொழியினைக் காப்பதற்காக உயிர்த் தியாகம் செய்த தமிழ் மொழிப் போர் தியாகிகள் திருவாளர்கள் தாளமுத்து மற்றும் நடராஜன் ஆகியோரின் நினைவாக சென்னையில் நினைவிடம் அமைக்கப் படும்.
- கிண்டியில் உள்ள கிங் நோய்த்தடுப்பு மற்றும் ஆய்வு மைய வளாகத்தில் கட்டமைக்கப் பட்டு வரும் 1,000 படுக்கைகள் கொண்ட கலைஞர் நினைவுப் பல்நோக்குச் சிறப்பு மருத்துவமனை இந்த ஆண்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வரும்.
- செங்கல்பட்டு, திருநெல்வேலி, ஈரோடு உள்ளிட்ட 3 இடங்களில் புதிய டைடல் தொழில் நுட்பப் பூங்காக்கள் விரிவுப்படுத்தப்படும்.
- மதுரையில் நிறுவப்பட்டு வரும் கலைஞர் நினைவு நூலகம் ஆனது 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் திறக்கப்படும்.
- பத்திரப் பதிவுக் கட்டணத்தினை 2 சதவீதமாகக் குறைக்க மாநில அரசு முடிவு செய்து உள்ளது.

- ❖ கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள SIPCOT தொழில் பூங்காவில் அதிநவீனத் திறன் மேம்பாட்டு மையம் அமைக்கப்படும்.
- ❖ சிறந்த இணைய இணைப்பை ஏற்படுத்தவும், மலிவு விலையில் பல்வேறு எண்ணிமச் சேவைகளை வழங்கவும், மாநிலத் தலைமையகம் முதல் அனைத்து மாவட்டங்களுக்கும் அதிவேக ஒளியிழை வலையமைப்பினை உருவாக்கச் செய்யும் வகையிலான "ஒருங்கிணைந்த எண்ணிம உள்கட்டமைப்பு" என்ற ஒன்றை அரசாங்கம் அமைக்க உள்ளது.
- ❖ தமிழ்நாடு அரசானது கடலோரச் சுற்றுச்சூழல் அமைப்பில் ஏற்படும் பருவநிலை மாறுபாடுகளின் விளைவுகளைத் தணிப்பதற்காக வேண்டி, தமிழ்நாடு கடற்கரை மறு சீரமைப்புத் திட்டத்தினை அறிவித்துள்ளது.
- ❖ அடுத்த ஐந்தாண்டுகளில் ரூ. 2,000 கோடி மதிப்பீட்டில் உலக வங்கி உதவியுடன் செயல் படுத்தப்பட உள்ள இந்தத் திட்டமானது, கடல் அரிப்பைத் தடுத்தல், கடல் மாசுபாட்டை குறைத்தல் மற்றும் கடல்சார் பல்லுயிர்த் தன்மையினைப் பாதுகாத்தல் போன்ற கொள்கைகளை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ சென்னை, ஆவடி, தாம்பரம், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் சேலம் ஆகிய நகரங்களில் முக்கியப் பொது இடங்களில் இலவச வைஃபை (Wi-Fi) சேவை வழங்கப் படும்.




## புதுமைப் பெண் திட்டத்திற்கான RuPay கடன் அட்டை

- ❖ பேங்க் ஆஃப் பரோடா, தமிழ்நாடு அரசுடன் இணைந்து, RuPay பிளாட்டினம் ரகப் பற்று அட்டைகளை தனது இணை முத்திரையுடன் மாநில அரசின் திட்டங்களுக்காக வழங்க உள்ளது.
- ❖ மாநில அரசின் 'புதுமைப் பெண்' திட்டத்தின் பயனாளிகளுக்கு வழங்கப்பட உள்ள பற்று அட்டைகளை இந்த வங்கி வெளியிட்டுள்ளது.
- ❖ புதுமைப் பெண் திட்டமானது, அரசுப் பள்ளிகள் முதல் உயர்கல்வி நிறுவனங்கள் வரை பெண் குழந்தைகளின் சேர்க்கை விகிதத்தை அதிகரிக்கச் செய்வதனை ஒரு முக்கிய நோக்கமாகக் கொண்டது.
- ❖ இந்தத் திட்டத்தின் மூலம், பட்டப் படிப்பு முடியும் வரையில், தகுதியுள்ள ஒவ்வொரு பெண்ணுக்கும் மாதம் ரூ.1,000 நிதியுதவி வழங்கப்படும்.




## 'நவரத்தின' அறிவிப்புகள்

- காவல்துறையில் பெண்கள் பங்கு பெறத் தொடங்கி 50 ஆண்டுகள் நிறைவடைந்ததை (பொன் விழா) தமிழக அரசு கொண்டாடுகிறது.
- 1973 ஆம் ஆண்டில் 22 படைப் பிரிவினருடன் மகளிர் காவல் படை தொடங்கப்பட்டது.
- இந்த நாளினை நினைவு கூரும் வகையில் முதல்வர் அவர்கள் அஞ்சல் தலையினை வெளியிட்டு, நவ ரத்தின திட்டங்களையும் அறிவித்தார்.




### முக்கியக் கூறுகள்:

- மகளிர் காவலர்களுக்கான காலை வருகை நேரம் இனி காலை 7 மணிக்குப் பதிலாக 8 மணிகுத் தொடங்கும்.
- மகளிர் காவலர்களுக்கான தங்கும் விடுதி அமைக்கப்படும்.

- மகளிர் காவலர்களுக்கான தனி ஓய்வு அறைகள் அமைக்கப் படும்.
- மகளிர் காவலர்களுக்கான குழந்தைகள் காப்பகங்கள் சீரமைக்கப் படும்.
- கலைஞர் காவல் பணிக் கோப்பை என்ற விருதுடன் அங்கீகாரம் வழங்கப் படும்.
- ஒரு மகளிர் காவலரின் குடும்பக் கடமைகளுக்கு ஏற்ப அவருக்குப் பணி இடமாற்றம் மற்றும் விடுமுறை நாட்கள் வழங்கப்படும்.
- அனைத்து மகளிர் காவலர்களுக்கான துப்பாக்கிச் சுடுதல் போட்டி நடத்தப்படும்.
- காவல் துறையில் பெண்கள் என்ற வருடாந்திரத் தேசிய உச்சி மாநாடு நடத்தப்படும்.
- பணி ஆலோசனைக் குழு அமைக்கப்படும்.

## தமிழ்நாடு எத்தனால் கலப்புக் கொள்கை

- தமிழக மாநில அரசின் தொழில் துறையானது, 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு எத்தனால் கலப்புக் கொள்கையினை (EBP) வெளியிட்டுள்ளது.
- இதன்படி சர்க்கரைக் கழிவிலிருந்து எத்தனால் உற்பத்திச் செய்யும் ஆலைகளை நிறுவச் செய்யவும் அவற்றின் திறன்மிக்க பயன்பாட்டினை மேம்படுத்தவும் சர்க்கரை தொழிற் சாலைகளுக்கு அரசு ஊக்கமளிக்கும்.
- தற்போதுள்ள ஆலைகளின் திறன் பயன்பாட்டினை மேம்படுத்துவதன் மூலம், இந்த மாநிலத்தில் உள்ள சர்க்கரைத் தொழில்துறைப் புத்துயிர் பெறுவதற்கான ஒரு வாய்ப்பினையும் இந்தக் கொள்கை வழங்கும்.
- எண்ணெய் விற்பனை நிறுவனங்கள் (OMCs) ஆனது, தற்போது மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா உள்ளிட்ட பிற மாநிலங்களில் இருந்து எத்தனாலை பெறுகின்றன.
- எண்ணெய் விற்பனை நிறுவனங்களானது, தமிழ்நாடு எத்தனால் கலப்புக் கொள்கையின் கீழ் தற்போது, எரிபொருள் தர எத்தனாலை உற்பத்தி செய்வதற்காக, ஒரு நாளைக்கு 664 கிலோ லிட்டர் (KLPD) கொள்ளளவு வரை எத்தனால் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட ஆலைகளைக் கொண்டுள்ளது.
- இவை மாநிலத்தில் உள்ள, 12% எத்தனால் கலப்புச் செயல்பாட்டிற்கு ஏற்ப எரிபொருள் தர எத்தனாலை உற்பத்தி செய்கின்றன.



## தமிழ்நாடு நகர்ப்புற எரிவாயு விநியோகக் கொள்கை 2023

- நகர்ப்புற எரிவாயு விநியோகக் கொள்கையானது (CGD), மாநில அரசானது இயற்கை எரிவாயுவினை ஒரு பசுமை மற்றும் தூய்மையான எரிபொருளாக ஏற்று அதனைப் பயன்படுத்துவதனை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தமிழகம் முழுவதும் உள்ள வீடுகளுக்கு வழங்கப்படும் குழாய் வழி இயற்கை எரிவாயு விநியோகத்தினை மேலும் துரிதப்படுத்துவதற்காக, மாநில அரசானது இந்த விரிவான கொள்கையினை அறிமுகம் செய்துள்ளது.
- மாநில அரசானது, தமிழ்நாடு தொழில்துறை மேம்பாட்டுக் கழகத்தினை (TIDCO) ஒரு ஒருங்கிணைப்பு முகமையாக நியமித்துள்ளது.
- எட்டு ஆண்டுகளுக்குள் 38 மாவட்டங்களுக்குமான சேவையினை உள்ளடக்கும் வகையில் 2.28 லட்சம் வீடுகளுக்கு எரிவாயு இணைப்புகளை வழங்கவும், சுமார் 2,785 அழுத்தப் பட்ட இயற்கை எரிவாயு நிலையங்களை நிறுவச் செய்வதற்கும் இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.
- 2018 ஆம் ஆண்டில் நகர்ப்புற எரிவாயு விநியோக உள்கட்டமைப்பினை உருவாக்கச் செய்வதற்கான முதல் ஒப்பந்தங்களை மத்திய அரசு வெளியிட்டது.
- இது சென்னை மற்றும் அண்டை மாவட்டங்கள் உள்ளிட்டப் பகுதிகளுக்குமான ஒரு ஒப்பந்தமாகும்.
- 15 மாவட்டங்களில் நகர்ப்புற எரிவாயு விநியோக வலையமைப்புகள் கட்டமைக்கப் பட்டு வருகின்ற நிலையில், மீதமுள்ள 23 மாவட்டங்களுக்கான கட்டமைப்புச் சார்ந்த ஒப்பந்தங்களுக்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளன.



## தமிழ்நாடு தளவாடக் கொள்கை மற்றும் ஒருங்கிணைந்த தளவாடத் திட்டம்

- 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு தளவாடக் கொள்கை மற்றும் ஒருங்கிணைந்த தளவாடத் திட்டத்தினை முதலமைச்சர் வெளியிட்டார்.
- இந்தக் கொள்கையின் குறிக்கோள் ஆனது, "மாநிலத்தின் மேம்பட்ட போட்டித்திறன் மற்றும் விரைவான பொருளாதார மேம்பாட்டிற்காக என்று தமிழக மாநிலத்தில் ஓர் ஒருங்கிணைந்த, நம்பகமான, செலவு குறைந்த மற்றும் நிலையானத் தளவாட அமைப்பை உருவாக்குவதை ஊக்குவிப்பதாகும்".
- நவீன காலத் தொழில்நுட்பங்களை ஏற்றல், திறன் மேம்பாட்டினைச் செயல்படுத்துதல் மற்றும் தளவாட சூழல் அமைப்பில் நெகிழ்திறன் மற்றும் நிலைப்புத் தன்மையை உருவாக்குதல் ஆகியவை இந்தக் கொள்கையினுடைய முக்கிய நோக்கங்களின் ஒரு பகுதியாகும்.
- இது அடுத்த 10 ஆண்டுகளுக்கான ஓர் உத்திசார் திட்டமாகும்.
- இது இதற்காக அடையாளம் காணப்பட்ட திட்டங்கள், அவற்றிலிருந்துப் பெறவுள்ள விளைவுகள், காலக்கெடு மற்றும் அவற்றைச் செயல்படுத்துவதற்கான முக்கியப் பங்குதாரர்கள் ஆகியவற்றினைப் பற்றி குறிப்பிட்டுக் காட்டுகிறது.
- இக்கொள்கையின் நோக்கம்:
  - மாநிலத்தில் தளவாடங்கள் (ஏற்றுமதி-இறக்குமதி மற்றும் உள்நாட்டு சரக்குப் போக்குவரத்து) சார்ந்த செலவினங்கள் குறைப்பு;
  - தளவாட உள்கட்டமைப்பின் மேம்பாட்டிற்கான தனியார் துறையின் பங்களிப்பை மேம்படுத்துதல்;
  - தளவாடத் துறை தொடர்பான பல்வேறு முன்னெடுப்புகளை உருவாக்குவதிலும், செயல்படுத்துவதிலும் மாநிலம் மற்றும் மத்திய தொழில்துறை நிறுவனங்களுக்கு இடையேயான திறன்மிக்க ஒருங்கிணைப்பு செயல்முறையினை உருவாக்குதல்.
- மாநிலத்தில் பதிவு செய்யப்பட்ட கனரக வாகன ஓட்டுநர்களுக்கு என்று நியாயமான விலையில் மருத்துவ மற்றும் சுகாதாரக் காப்பீடு வழங்குவதற்கான அம்சம் குறித்தும் அரசாங்கம் ஆய்வு செய்து வருகிறது.

## 'The Elephant Whisperers' ஆவணப் படக் குழுவினருக்குப் பாராட்டு

- "The Elephant Whisperers" என்ற தமிழ் ஆவணப்படம் ஆனது, 95வது அகாடமி விருது வழங்கீட்டு விழாவின் ஆவணப்படக் குறும்படப் பிரிவில் விருது பெற்ற முதல் இந்தியத் திரைப்படத் தயாரிப்பு என்ற வரலாற்றை உருவாக்கியுள்ளது.
- அகாடமி (ஆஸ்கார்) விருது பெற்ற இந்த ஆவணப்படத்தின் இயக்குனர் கார்த்திகி கோன்சால்வ்ஸுக்கு தமிழக முதல்வர் அவர்கள் ஒரு கோடி ரூபாய் ஊக்கத் தொகை வழங்கினார்.
- இந்தப் பாராட்டின் ஒரு அடையாளமாக, ஆவணப்படத்தில் நடித்த பொம்மன் மற்றும் பெல்லி தம்பதியினருக்கும் தலா ரூ. 1 லட்சம் பரிசுத் தொகை வழங்கப்பட்டது.
- மேலும், தமிழகத்தின் முதுமலை மற்றும் ஆனைமலை யானைகள் முகாமில் உள்ள 91 யானைப் பாகர்கள் மற்றும் பராமரிப்பாளர்கள் ஆகியோருக்குத் தலா 1 லட்சம் ரூபாய் வழங்க முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (15.3.2023) தலைமைச் செயலகத்தில், முதுமலை யானைகள் வளர்ப்பு முகாமில் எடுக்கப்பட்ட ஆஸ்கர் விருது பெற்ற "The Elephant Whisperers" ஆவணப் படத்தில் இடம் பெற்ற ரகு எனும் யானைக் குட்டியின் பராமரிப்பாளர்களான திரு. பொம்மன், திருமதி பெள்ளி தம்பதியரை வாழ்த்தி பாராட்டு கேடயமும், பொன்னாடையும் அணிவித்து தலா ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்.

## காசநோய் உயிரிழப்புகளில் சரிவு



### Saving lives by cutting down delay, beginning treatment

The TN-KET (Tamil Nadu-Kasanoi Erappila Thittam) initiative began in April 2022 in 2,500-odd public healthcare facilities that diagnosed tuberculosis in 30 districts

- The heart of the initiative is the 'Differentiated TB Care' aimed at assessing whether people with TB need ambulatory care or admission in a health facility to manage severe illness at the time of diagnosis
- Nearly 70% of all TB deaths among notified TB patients take place in the first two months after diagnosis
- Preliminary assessment of patients based on just three conditions was sufficient for quick identification at diagnosis and referral for admission in a hospital
- This resulted in admission of people with severe TB illness in a hospital on the same day of diagnosis, thus increasing the chances of saving lives

**Lacking:** Most PHCs, many taluk and block-level healthcare facilities lack clinical and diagnostic capacity

- Around 150 nodal inpatient care facilities have been identified, and nearly 900 beds earmarked for people with TB who are severely ill
- In December 2022, the State achieved 90% triaging of patients, 90% referral and confirmation of severe illness, and 90% admission among confirmed

❖ TN-KET (தமிழ்நாடு காசநோயால் இறப்பில்லாத் திட்டம், அதாவது காசநோய் இறப்பு இல்லாத மாநிலம் என்ற திட்டம்) ஆனது 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் தொடங்கப் பட்டது.

❖ 2,500 பொது சுகாதார மையங்கள் ஆனது 30 மாவட்டங்களில் காசநோய் பாதிப்பினைக் கண்டறிந்துள்ளது.

- மாநில அரசானது, காசநோய்ப் பாதிப்பினால் ஏற்படும் முன்கூட்டிய இறப்புகளின் எண்ணிக்கையில் ஏற்கனவே குறிப்பிடத் தக்க அளவில் குறைப்பினை எட்டியுள்ளது.
- பதிவு செய்யப்பட்ட காசநோயாளிகளில் ஏற்பட்ட உயிரிழப்புகளில் சுமார் 70% உயிரிழப்புகள் ஆனது, நோயறிதலுக்குப் பிறகான முதல் இரண்டு மாதங்களுக்குள் நிகழ்கின்றன.
- 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் 600க்கும் அதிகமாக இருந்த காசநோய் நோய் அறிதலுக்குப் பிறகான இரண்டு மாதங்களுக்குள் ஏற்படும் இறப்புகள் ஆனது (முன் கூட்டிய காசநோய் இறப்புகள்) 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் 350க்கும் கீழ் குறைந்துள்ளது.
- மேலும், ஏப்ரல் மாதத்தில் 20 நாட்களாக இருந்த, நோயறிதலுக்குப் பிறகு ஏற்படும் இறப்புக்கானச் சராசரிக் காலமானது ஜூலை மாதத்தில் 40 நாட்களாக இரட்டிப்பாகி உள்ளது.
- 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், மாநில அளவில் 90%-90%-90% என்ற இலக்கானது எட்டப் பட்டுள்ளது.

## தமிழகத்தின் 18வது வனவிலங்குச் சரணாலயம்

- 2023-24 ஆம் ஆண்டிற்கான தமிழக நிதிநிலை அறிக்கையின் போது, ஈரோடு மாவட்டத்தில் தந்தை பெரியார் விலங்குகள் சரணாலயம் என்ற புதிய வனவிலங்குச் சரணாலயம் உருவாக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.
- இது தமிழகத்தின் 18வது வனவிலங்குச் சரணாலயம் ஆகும்.
- ஈரோடு மாவட்டத்தில் தற்போது வெள்ளோடு பறவைகள் சரணாலயம் மற்றும் சத்திய மங்கலம் புலிகள் காப்பகம் ஆகிய இரண்டு வனவிலங்குச் சரணாலயங்கள் உள்ளன.
- முன்மொழியப்பட்டுள்ள இந்தச் சரணாலயத்தில், முக்கியமாக யானைகள், புலிகள், சிறுத்தைகள், கருஞ்சிறுத்தைகள், காட்டுப்பன்றிகள் மற்றும் மான்கள் ஆகிய பல விலங்குகள் இடம் பெற உள்ளன.
- 21 வெவ்வேறு வகையான பாலூட்டிகள், 139 பறவை இனங்கள் மற்றும் 118 வகையான பட்டாம்பூச்சிகள் இங்கு இடம் பெற உள்ளன.

## தமிழக வேளாண் நிதிநிலை அறிக்கை

- வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சர் M.R.K. பன்னீர்செல்வம் அவர்கள், 2023-2024 ஆம் ஆண்டிற்கான வேளாண் நிதிநிலை அறிக்கையினைத் தாக்கல் செய்தார்.
- 2022-23 ஆம் ஆண்டிற்கான வேளாண் நிதிநிலை அறிக்கையில், வேளாண்மை மற்றும் அதைச் சார்ந்த துறைகளுக்கான ஒதுக்கீடானது 33,007.68 கோடியாக உயர்த்தப் பட்டு உள்ளது.
- இது 2021-22 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட மதிப்பீட்டில் வழங்கப்பட்ட 32,775.78 கோடியை விட சற்று அதிகமாகும்.
- 2022-23 ஆம் ஆண்டில் 126 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி என்ற இலக்கினை எட்டுவதற்காக அரசு தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

- பயிர்க் காப்பீட்டுக்கான தவணை மானியத்தில் மாநில அரசின் பங்காக ரூ.2,337 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- முதலாவது வேளாண் நிதிநிலை அறிக்கையில் 'கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் மேம்பாட்டுத் திட்டமானது' அறிவிக்கப் பட்டது.
- விவசாயிகளுக்குக் கூட்டுறவுப் பயிர்க்கடன் வழங்குவதற்காக ரூ.14,000 கோடி நிதி வழங்கப் படும்.
- விவசாயிகளுக்கு ஆடு வளர்ப்பு, பால் பண்ணை, கோழி வளர்ப்பு மற்றும் மீன் வளர்ப்பு போன்ற நடவடிக்கைகளுக்கு வட்டியில்லா கூட்டுறவுக் கடன் வழங்குவதற்காக ரூ.1,500 கோடி நிதி வழங்கப்படும்.
- நுண்ணீர்ப் பாசன திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காக ரூ.744 கோடி நிதி ஒதுக்கப் படும்.
- தண்ணீர்ப் பற்றாக்குறையால் வேளாண்மை பாதிக்கப்பட்ட கிராமங்களில் 53,400 ஹெக்டேர் பரப்பளவில் நுண்ணீர்ப் பாசன வசதியினை நிறுவுவதற்காக ரூ.450 கோடி செலவிடப் படும்.
- இயற்கை வேளாண்மை முறையினை மேற்கொண்டு அதனை ஊக்குவிக்கும் விவசாயிகளுக்கும், அதற்கு உதவியாக இருக்கும் சக இயற்கை விவசாயிகளுக்கும் நம்மாழ்வார் விருது வழங்கப்படும்.
- இதற்காக குடியரசுத் தினத்தன்று 5 லட்சம் ரூபாய் மற்றும் பாராட்டுச் சான்றிதழ் ஆகியவை வழங்கப் படும்.
- காவிரி டெல்டா பகுதியில் வேளாண் தொழில்நுட்பம் சார்ந்தக் கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்கத் திட்டத்தின் மூலம் தஞ்சாவூரில் புதிய பிராந்தியப் புத்தொழில் மையம் ஆனது உருவாக்கப்படும்.
- ஆண்டு முழுவதும் வெங்காயம் மற்றும் தக்காளி ஆகியவற்றின் விநியோகத்தை உறுதிப்படுத்தும் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.
- பட்டியலிடப்பட்ட சாதியினர் மற்றும் பழங்குடியினத்தவர் ஆகியோரினைச் சார்ந்த சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு கூடுதலாக 20 சதவீத மானியம் வழங்கப் படும்.
- மா, கொய்யா, பலா, நெல்லிக்காய், எலுமிச்சை, சீத்தாப்பழம் போன்ற பல்லாண்டு கால பழ மரக்கன்றுகள் அடங்கிய தொகுப்புகள் 10 லட்சம் வீடுகளுக்கு வழங்கப்படும்.
- ஏற்காடு தோட்டக்கலைப் பூங்கா மற்றும் சென்னையின் மாதவரத்தில் உள்ள அரசு தாவரவியல் பூங்காக்கள் அழகுபடுத்தப்படும்.
- அதிக மகசூல் தரும் தொழில்நுட்பங்களைப் பற்றிக் கற்பிப்பதற்காக சுமார் 150 விவசாயிகள் இஸ்ரேல், நெதர்லாந்து, தாய்லாந்து, எகிப்து, மலேசியா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளுக்கு வெளிநாட்டுச் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுவார்கள்.
- கல்வித் துறையுடன் இணைந்து, பள்ளி மாணவர்களுக்காக வேளாண் சுற்றுலாவானது மேம்படுத்தப்படும்.
- தேனி மாவட்டத்தில் வாழை உற்பத்திக்காக ரூ.130 கோடி செலவில் சிறப்புத் தொகுப்பு மேம்பாட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.
- வேளாண் கல்லூரிகள், ஆராய்ச்சி மையங்கள் அல்லது கிருஷி விக்ஞ்யான் கேந்திராக்கள் ஆகியவற்றில் இருந்து ஓர் அறிவியலாளர் ஒவ்வொரு தொகுதிக்குமான அதிகாரியாக நியமிக்கப்படுவார்.

- காவிரி டெல்டாவின் நீர்பிடிப்புப் பகுதிகளில் உள்ள ஆறுகள், கால்வாய்கள் மற்றும் வடிகால் வாய்க்கால்களில் ரூ.90 கோடி மதிப்பீட்டில் தூர்வாரப்படும்.
- திண்டிவனம், தேனி, திருச்சி மாவட்டத்தில் உள்ள மணப்பாறை ஆகிய இடங்களில் உணவுப் பூங்காக்கள் அமைக்கப்படும்.
- கரும்பு விவசாயிகள் பயன்பெறும் வகையில் வெல்ல உற்பத்தி ஊக்குவிக்கப்படும்.
- முதல்வரின் திட்டத்தின் கீழ் 3,000 சூரியசக்தியில் இயங்கும் பம்புகள் அமைக்கப்படும்.
- தமிழக மாநில மரமான பனைமரத்தின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக மாநில அரசானது 10 லட்சம் பனை விதைகளை வழங்க உள்ளது.
- மஞ்சள் மற்றும் இஞ்சி சாகுபடிக்கு ரூ.3 கோடி ஒதுக்கப் படும்.
- மயிலாடுதுறையில் உள்ள செயல்பாட்டில் இல்லாத NPKR ராமசாமி கூட்டுறவுச் சங்க சர்க்கரை ஆலை மீண்டும் திறக்கப்படும்.
- சேலம் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் துவரம் பருப்பு சாகுபடிக்கான சிறப்பு மண்டலங்கள் அமைக்கப்படும்.
- விவசாயிகளுக்குத் தேவையான அனைத்து தகவல்களையும் வழங்குவதற்காக புதிய கைபேசி செயலி உருவாக்கப் படும்.
- மயிலாடுதுறையில் ரூ.75 லட்சம் செலவில் மண் பரிசோதனை மையம் அமைக்கப் படும்.

## இணையவழி விளையாட்டு எதிர்ப்பு மசோதா மீண்டும் ஏற்பு

- தமிழ்நாடு சட்டசபையானது, 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு இணையவழி சூதாட்டத் தடை மற்றும் இணையவழி விளையாட்டுப் போட்டிகளை ஒழுங்குபடுத்துச் செய்யும் ஒரு மசோதாவினை எந்தவித மாற்றமும் இல்லாமல் மீண்டும் நிறைவேற்றியது.
- 2022 ஆம் ஆண்டு அக்டோபர் 01 ஆம் தேதியன்று இது ஆளுநரால் ஓர் அவசரச் சட்டமாக வெளியிடப் பட்டு அக்டோபர் 03 அன்று அரசிதழில் அறிவிக்கப் பட்டது.
- அதைத் தொடர்ந்து 2022 ஆம் ஆண்டு அக்டோபர் 19 ஆம் தேதியன்று சட்டமன்றத்தில் ஒரு மசோதா நிறைவேற்றப் பட்டது.
- இது 2022 ஆம் ஆண்டு அக்டோபர் 26 ஆம் தேதியன்று ஆளுநரின் ஒப்புதலைப் பெறச் செய்வதற்காக அனுப்பி வைக்கப்பட்டது.
- 141 நாட்களுக்குப் பிறகு, மார்ச் 06 ஆம் தேதியன்று, ஆளுநர் அவர்கள் இந்த மசோதாவை நிறைவேற்றுவதற்கு மாநிலச் சட்டமன்றத்திற்கு சட்டம் சார்ந்தத் தகுதி இல்லை என்று கூறி இந்த மசோதாவினைத் திருப்பி அனுப்பினார்.



## முதல் PM MITRA பூங்கா

- இந்தியாவின் முதல் PM MITRA மாபெரும் ஜவுளிப் பூங்காவானது விருதுநகர் மாவட்டத்தில் அமைக்கப் பட்டுள்ளது.
- PM MITRA என்பது பிரதான் மந்திரி மாபெரும் ஒருங்கிணைந்த ஜவுளி மண்டலம் மற்றும் ஆடைப் பூங்கா என்பதன் சுருக்கமாகும்.
- இந்தப் பூங்காக்கள், வேளாண் நிலத்திலிருந்து நூல் இழை - தொழிற்சாலை - ஆடை வடிவமைப்பு - வெளிநாட்டுச் சந்தை வரையில் என்று 5F என்ற ஒரு குறிக்கோளினை அடிப்படையாகக் கொண்டவையாகும்.
- இந்தியாவின் கைத்தறி உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கினைத் தமிழ்நாடு கொண்டு உள்ளது.
- PM MITRA பூங்காக்கள் உலகத்தரம் வாய்ந்தத் தொழில்துறை உள்கட்டமைப்பைக் கொண்டிருக்கும்.
- இது அதி நவீனத் தொழில்நுட்பத்தினை ஈர்ப்பதோடு, ஜவுளித் துறையில் அந்நிய நேரடி முதலீடு மற்றும் உள்ளூர் முதலீடு ஆகியவற்றினை அதிகரிக்கும்.

## தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை கொள்கை

- புதுப்பிக்கப்பட்ட தமிழ்நாடு மாநிலப் பேரிடர் மேலாண்மைக் கொள்கை மற்றும் பேரிடர் மேலாண்மைத் திட்டம் 2023 என்ற கொள்கையினை தமிழக முதலமைச்சர் வெளியிட்டார்.
- வலுவான பேரிடர் மேலாண்மை இயந்திரங்களின் உதவியுடன் பேரழிவுகளின் மீதான எதிர்மறையான தாக்கத்தைக் குறைப்பதை இந்தக் கொள்கை நோக்கமாக கொண்டு உள்ளது.
- பேரிடர் அபாயத்தைக் குறைக்கச் செய்வதற்கான ஒரு உலகளாவிய மற்றும் தேசியக் கட்டமைப்பிற்கு இணங்கி, மாநிலத்தின் கருதுகோள்கள் மற்றும் முன்னுரிமைகளுக்கு ஏற்றவாறு இந்தக் கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது.
- இது மாநில அரசு, உள்ளூர் அரசாங்கங்கள், மத்திய அரசு மற்றும் தனியார் துறை ஆகியவை இணைந்து செயல்படுவதற்கு ஏற்ற ஒரு நிலையான, மாநில அளவிலான நிறுவனக் கட்டமைப்பை வழங்குகிறது.

| Mainstreaming | State Development Plans/Strategies | To Mitigate | To ensure Reduced Disaster impacts |
|---|---|---|---|
| Disaster Risk Reduction & Climate Change Adaptation | ➢ Policies<br>➢ Land Use, Flood Plain Regulations<br>➢ Building Regulations<br>➢ Budget<br>➢ Sector Plans<br>➢ Programmes<br>➢ Projects<br>➢ City Development plans | ➢ Floods<br>➢ Cyclone<br>➢ Tsunami<br>➢ Landslide<br>➢ Earthquake<br>➢ Drought<br>➢ Heat Wave<br>➢ Lightning<br>➢ CBRN | ❖ Reduction in Number of Vulnerable Areas,<br>❖ Reduction in degree of Vulnerability<br>❖ Minimising loss of Lives<br>❖ Minimising Loss and Damages to public & private properties |

# தேசியச் செய்திகள்

## இந்தியாவின் 22வது சட்ட ஆணையம்

- 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி 21 ஆம் தேதியன்று, மூன்று ஆண்டு கால பணிக் காலத்திற்கு நீதிபதி ரிதுராஜ் அவஸ்தியின் தலைமையின் கீழ் 22வது சட்ட ஆணையம் அமைக்கப் பட்டது.
- மத்திய அமைச்சரவை தற்போது 22வது சட்ட ஆணையத்தின் பணிக் காலத்தினை மேலும் ஒன்றரை ஆண்டுக்கு (ஆகஸ்ட் 31, 2024 வரை) நீட்டித்துள்ளது.
- "இனி எந்த வகையிலும் பொருந்தாத" சட்டங்களைக் கண்டறிந்து அவற்றை ரத்து செய்யப் பரிந்துரைப்பதே இந்த ஆணையத்தின் பணியாகும்.
- சட்ட ஆணையம் என்பது அவ்வப்போது மத்திய அரசால் அமைக்கப்படுகின்ற சட்டப் பூர்வமற்ற அமைப்பாகும்.
- 21வது சட்ட ஆணையத்தின் பதவிக் காலம் ஆனது 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31 ஆம் தேதியன்று நிறைவடைந்தது.

## ஜெய்ப்பூர் பிரகடனம்

- ஜெய்ப்பூர் பிரகடனம் ஆனது இரயில்வே பாதுகாப்புப் படை மற்றும் UIC ஆகியவை இணைந்து நடத்திய 18வது உலகப் பாதுகாப்பு மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- உலகளாவிய இரயில்வே நிறுவனங்களின் பாதுகாப்பு மற்றும் காவல் ஆகிய நீண்ட கால இலக்கை அடைய உதவும் புதுமையான அணுகுமுறைகளை ஆராய்வதற்கான UIC அமைப்பிற்கான செயல்படுத்தக் கூடிய செயல்திட்டமாகும்.
- இந்த மாநாடானது இரயில்வே பாதுகாப்பு உத்தி: எதிர்காலத்திற்கான நடவடிக்கைகள் மற்றும் குறிக்கோள் என்ற கருத்துருவில் நடைபெற்றது.

## வேலைவாய்ப்பின்மை விகிதம்

- தேசியப் புள்ளியியல் அலுவலகமானது, சமீபத்திய வருடாந்திரத் தொழிலாளர் வளக் கணக்கெடுப்பு (PLFS) அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- இந்தியாவின் வேலைவாய்ப்பின்மை விகிதம் ஆனது கடந்த ஐந்தாண்டுகளில் இல்லாத அளவிற்கு 2021 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் 2022 ஆம் ஆண்டு ஜூன் மாத காலக் கட்டத்தில் 4.1 சதவீதமாகக் குறைந்துள்ளது.
- கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் பதிவான வேலைவாய்ப்பின்மை விகிதம் ஆனது முறையே 2021-22 ஆம் ஆண்டில் 3.2 சதவீதம் மற்றும் 6.3 சதவீதமாகக் குறைந்துள்ளது.
- 2020-21 ஆம் ஆண்டில், அந்த விகிதங்கள் முறையே கிராமப்புற மற்றும் நகர்ப் புறங்களில் 3.3 சதவீதம் மற்றும் 6.7 சதவீதமாக இருந்தது.
- சமீபத்தியக் கணக்கெடுப்பானது, 2018-19 ஆம் ஆண்டில் 37.5 சதவீதமாக இருந்த தொழிலாளர் வளப் பங்கேற்பு விகிதம் (LFPR) ஆனது கடந்த ஐந்து ஆண்டுகளில் கணிசமான அளவில் அதிகரித்து 2021-22 ஆம் ஆண்டில் 55.2 சதவீதமாக உள்ளதனைக் குறிப்பிடுகிறது.

- 2020-21 ஆம் ஆண்டில் 52.6 சதவீதமாக இருந்த தொழிலாளர் மற்றும் மக்கள் தொகை விகிதம் ஆனது 2021-22 ஆம் ஆண்டில் 52.9 சதவீதமாக அதிகரித்துள்ளது.
- 2019-20 ஆம் ஆண்டில் இது 50.9 சதவீதமாக இருந்தது.
- தேசியப் புள்ளியியல் அலுவலகமானது, தனித்தனியாக நகர்ப்புற இந்தியாவிற்கான காலாண்டு தொழிலாளர் வளக் கணக்கெடுப்பினை வெளியிட்டது.
- டிசம்பர் மாதம் வரையிலான காலாண்டில், ஆண்களுக்கான வேலைவாய்ப்பின்மை விகிதம் ஆனது 6.5 சதவீதமாக குறைந்துள்ளது.
- 6.6 சதவீதமாக இருந்த பெண்களுக்கான வேலைவாய்ப்பின்மை விகிதம் ஆனது சிறு அளவில் அதிகரித்து 9.6 சதவீதமாக உள்ளது.




## ஹிந்துஸ்தான் 228 ரக விமானம்

- ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் 'ஹிந்துஸ்தான் 228-201 LW' ரக விமானத்தின் புதிய வடிவத்திற்குப் பொது விமானப் போக்குவரத்திற்கான தலைமை இயக்குநரகம் ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த வகை விமானமானது, 19 பயணிகளுடன் அதிகபட்சமாக 5,695 அளவிலான கிலோ எடையினைச் சுமந்து பறக்கும் திறன் கொண்டதாகும்.
- இது ஓட்டுநருக்கான தகுதி வரையறையைக் குறைக்கச் செய்வதோடு, கூடுதலாக வணிக ரீதியிலான உரிமம் பெற்ற விமானிகள் கூட இந்த விமானத்தை ஓட்ட முடியும்.



## ஆலயச் சடங்குகள் செய்வதற்கு இயந்திர யானை அறிமுகம்

- கேரளாவில் திருச்சூரில் மாவட்டத்தில் உள்ள இரிஞ்சடபில்லி கோயில் அதன் ஆலயச் சடங்குகளைச் செய்வதற்காக (மோட்டார்) இயக்கி பொருத்தப்பட்ட ஒரு யானையின் உருவத்தினை ஒத்த அளவிலான ஒரு மாதிரியினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது இந்தியாவில் இந்த மாதிரியிலான முதல் முயற்சி ஆகும்.
- பீட்டா இந்தியா அமைப்பானது இதனை அக்கோவிலுக்குப் பரிசாக வழங்கியது.
- யானையின் உருவத்தினை ஒத்த அளவிலான இயந்திர யானைக்கு இரிஞ்சடபில்லி ராமன் என்று பெயரிடப்பட்டுள்ளது.
- இதில் 4 பேர் பயணம் செய்ய முடியும்.
- இந்த யானையின் தலை, கண், வாய், காது, வால் ஆகிய அனைத்தும் மின்சாரம் மூலமாக இயங்குகின்றது.



## ரைசினா பேச்சுவார்த்தை – 2023




- இத்தாலி நாட்டுப் பிரதமர் ஜியோர்ஜியா மெலோனி அலுவல் முறையாக இந்தியா வந்துள்ளார்.
- அவர் 8வது ரைசினா பேச்சுவார்த்தையின் (2023) தலைமை விருந்தினராகவும் முக்கிய பேச்சாளராகவும் வருகை புரிந்துள்ளார்.

- ரைசினா பேச்சுவார்த்தை என்பது உலகத் தலைவர்களை ஒன்றிணைத்து பல்வேறு முக்கியமான உலகளாவிய பிரச்சினைகளைப் பற்றி விவாதிப்பதற்கும் பல்வேறு கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவதற்குமாக நடத்தப் படும் ஒரு வருடாந்திர மாநாடு ஆகும்.
- இது 2016 ஆம் ஆண்டு முதல் புது டெல்லியில் ஆண்டுதோறும் நடத்தப்படுகிறது.
- இது மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்துடன் இணைந்து அப்சர்வர் ரிசர்ச் பவுண்டேஷன் அமைப்பின் (ORF) மூலம் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

## இந்துஸ்தான் சமாச்சார்

- அரசுப் பொது ஒளிபரப்பு நிறுவனமானது, பிரசார் பாரதி இந்துஸ்தான் சமாச்சார் (HS) நிறுவனத்துடன் இணைந்து தூர்தர்ஷன் மற்றும் அகில இந்திய வானொலி (AIR) நிறுவனம் ஆகியவற்றிற்குச் செய்தி உள்ளீடுகளை வழங்குவதற்கான இரண்டு ஆண்டு கால ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- இதன் மூலம் பிரசார் பாரதி நிறுவனத்திற்கு 10 தேசியச் செய்திகளும், பிராந்திய மொழிகளில் 40 "உள்ளூர்" செய்திகளும் உள்ளடங்கும் வகையில் ஒவ்வொரு நாளும் 100 செய்திகள் வழங்கப் படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- பிரசார் பாரதி நிறுவனமானது, இந்திய செய்தித் தாள்களின் ஒரு இலாப நோக்கற்றக் கூட்டுறவு நிறுவனமான இந்தியப் பத்திரிகை அறக்கட்டளைக்கான (PTI) சந்தாவை 2020 ஆம் ஆண்டில் ரத்து செய்தது.
- இந்துஸ்தான் சமாச்சார் நிறுவனமானது 1948 ஆம் ஆண்டில் M.S.கோல்வால்கர் என்பவருடன் இணைந்து ஷிவ்ராம் ஷங்கர் ஆப்தே அவர்களால் நிறுவப்பட்டது.

## இராணுவப் பயிற்சி - டோப்சி

- இந்திய இராணுவமானது, மகாராஷ்டிராவின் நாசிக்கில் உள்ள தேவ்லாலி என்னும் இடத்தில் டோப்சி எனப்படும் தனது வருடாந்திர பயிற்சியினை மேற்கொண்டது.
- இந்தப் பயிற்சியானது, இந்திய நாட்டின் பீரங்கிப் படைத் திறனை வெளிப்படுத்தச் செய்கிறது.
- இந்த ஆண்டின் பயிற்சியில், 'ஆத்ம நிர்பாரதம்' (தற்சார்பு) குறித்து வலியுறுத்தப் பட்டது.

- இப்பயிற்சியில் துப்பாக்கிகள், பீரங்கிகள், ஏவுகலங்கள், ஆளில்லா விமானங்கள் மற்றும் வான்வழி வாகனங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய ஆயுத சக்தி மற்றும் கண்காணிப்பு அமைப்புகளின் ஒருங்கிணைப்பு நிலை நிறுத்தப்பட்டது.
- K-9 வஜ்ரா, தனுஷ் ஆயுத அமைப்பு அல்லது M777 துப்பாக்கி அமைப்பு மற்றும் பினாகா என்ற பல்வேறு கலன்களை கொண்ட ஏவுகணை ஏவு இயந்திரங்கள் ஆகியத் துப்பாக்கிகள் மற்றும் பிற ஆயுத அமைப்புகள் இதில் நிலை நிறுத்தப்பட்டன.



**Army puts up imposing firepower display**

The Indian Army on Sunday put up an imposing firepower display with a raft of indigenous artillery guns, rocket systems and ammunition, including weapons deployed along the contested Line of Actual Control (LAC) where the Indian and Chinese armies have been locked in a lingering dispute for over 32 months. By **Rahul Singh**

**EXERCISE TOPCHI-2023**

The blockbuster demonstration of the Army's capabilities by the elite School of Artillery featured several big guns. HT was invited to witness the show.

The focus of the exercise was to showcase indigenous capabilities and strides made in achieving self-reliance in the defence sector, said Lieutenant General S Harimohan Iyer, commandant of the Devlali-based School of Artillery. **"Atmanirbharta in defence is scaling new heights. The army is ready for any challenge,"** he said.

**The drills came at a time when the army is pursuing a major firepower upgrade, and is set to induct more artillery guns, longer range rockets and loitering munition to bolster its capabilities along the China border.**

**Weapons deployed in the exercise**

**Dhanush towed artillery gun**

It made its maiden appearance at the R-Day parade in 2017. Made by Jabalpur-based Gun Carriage Factory, its costs ₹14.5cr apiece.

**38km range**

Known as the desi Bofors, it's the first long-range artillery gun to be produced in India. The army has operationalised its first Dhanush regiment along the China border, and is now looking at raising a second regiment by March 2023.

**K9 Vajra-T guns**

The guns have been manufactured in India by private sector defence major Larsen & Toubro and South Korea's Hanwha Techwin. The army has already inducted 100 of these guns under a 2017 contract worth $720 million, and some of them have been deployed in the Ladakh sector after winterisation upgrades as the guns were bought for a desert role. The army plans to buy 100 more of these.

**M777 ultra-light howitzers**

India ordered 145 M777 howitzers from the US for $750 million in November 2016. The M777s were the first artillery guns to be ordered after the Bofors scandal unfolded in the late 1980s.

The 155 mm/39-calibre howitzers can be sling-loaded to helicopters and deployed to high-altitude areas. M777 manufacturer BAE Systems delivered 25 ready-built howitzers and the remaining guns have been built locally in collaboration with Mahindra Defence.

**Sharang guns**

The upgraded Sharang artillery guns are a key element of the artillery modernisation. The army already has three Sharang regiments, it's raising a fourth one, and eventually plans to have 15 such regiments. The Sharang project involves upgrading the army's vintage Soviet-origin 130mm M46 towed artillery pieces to 155 mm/45-calibre standard. The guns have an enhanced range – up from 27km to 37km – and better terminal effectiveness.

**What's next**

The army is looking at inducting ATAGS by the year-end. The indigenous howitzer was deployed for the ceremonial 21-gun salute at the 75th Independence Day ceremony at Red Fort last year along with British guns that have been traditionally used for the event. The Defence Research and Development Organisation (DRDO) began the ATAGS project in 2013 to replace older army guns with a modern 155 mm artillery gun. It partnered with two private firms, Bharat Forge Limited and Tata Advanced Systems Limited, for manufacturing the gun, which has a range of 48 km.

## ‘திரிசக்தி பிரஹார்’ - கூட்டு இராணுவப் பயிற்சி

- இந்திய இராணுவமானது மேற்கு வங்காளத்தின் வடக்குப் பகுதியில் திரிசக்தி பிரஹார் எனப்படும் ஒரு கூட்டு இராணுவப் பயிற்சியினை மேற்கொண்டது.
- இராணுவம், இந்திய விமானப்படை மற்றும் மத்திய ஆயுதக் காவல் படை ஆகியவற்றினை உள்ளடக்கிய பிணைய, ஒருங்கிணைந்தச் சூழலில் சமீபத்திய ஆயுதங்கள் மற்றும் உபகரணங்களைப் பயன்படுத்தி, பாதுகாப்புப் படைகளின் போர் தயார் நிலை குறித்து பயிற்சி செய்வதே இந்தப் பயிற்சியின் நோக்கமாகும்.
- இந்தப் பயிற்சியின் ஒரு பகுதியாக, மேற்கு வங்காளத்தின் வடக்குப் பகுதியின் பல்வேறு இடங்களில் விரைவான படை திரட்டல் மற்றும் நிலைநிறுத்தல் போன்ற நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.
- இப்பகுதியானது இந்தியாவிற்கு உத்தி சார்ந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.
- இந்த 20 முதல் 30 கிமீ அகலம் கொண்ட பாதையான குறுகிய சிலிகுரி பகுதி தெற்கில் வங்காளதேசத்தையும் வடக்கே பூடானையும் ஒட்டி அமைந்துள்ளது.




## TARKASH பயிற்சி

- இந்திய ராணுவம் மற்றும் அமெரிக்க இராணுவம் ஆகியவை இணைந்து தமிழ்நாட்டின் சென்னை நகரில் TARKASH எனப்படும் பயிற்சியினை சமீபத்தில் மேற்கொண்டன.
- இது தேசிய பாதுகாப்புப் படை (NSG) மற்றும் அமெரிக்காவின் சிறப்பு நடவடிக்கைப் படை (SOF) ஆகியவற்றினால் மேற்கொள்ளப்படும் ஒரு கூட்டுப் பயிற்சியாகும்.
- இந்தப் பயிற்சியில் முதன்முறையாக "இரசாயனம், உயிரியல், கதிரியக்கம் மற்றும் அணுசக்தி" (CBRN) சார்ந்த தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் சேர்க்கப்பட்டுள்ளன.
- CBRN ஆயுதங்கள் பெருமளவிலான உயிரிழப்புகள் மற்றும் பெருமளவிலான இடையூறுகளை உருவாக்கும் திறனைக் கொண்டுள்ளதால் அவை மிகப் பேரழிவினை ஏற்படுத்தும் ஆயுதங்களாக வகைப்படுத்தப்படுகின்றன.
- ஜெனீவா நெறிமுறை என்றும் அழைக்கப்படும், போரில் CBRN ஆயுதங்களைப் பயன்படுத்துவதற்கான தடை விதிப்பு நெறிமுறையானது, 1925 ஆம் ஆண்டு ஜூன் 17 ஆம் தேதியன்று சுவிட்சர்லாந்து நாட்டின் ஜெனீவா நகரில் கையெழுத்தானது.
- இது 1928 ஆம் ஆண்டு பிப்ரவரி 08 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்தது.
- CBRN ஆயுதங்களின் சமீபத்தியப் பயன்பாடு, 2013 ஆம் ஆண்டில் நடைபெற்ற சிரிய உள்நாட்டுப் போரின் போது பொதுமக்களுக்கு மீது சிரிய நாட்டின் இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்ட சாரின் என்ற வாயு தாக்குதலாகும்.



## தீவிரவாதத்தின் நிலை குறித்த அறிக்கைகள் 2021 - இந்தியா

- அமெரிக்க தீவிரவாத எதிர்ப்புப் பணியகமானது 'தீவிரவாதத்தின் நிலை குறித்த அறிக்கைகள் 2021 - இந்தியா' என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- தீவிரவாத அமைப்புகளின் செயல்பாடுகளைக் கண்டறிவதற்காகவும், அதற்குக் கிடைக்கப் பெறும் சேவைகளைத் தடை செய்வதற்காகவும், வீழ்ச்சியுறச் செய்திடச் செய்வதற்காகவும் இந்திய அரசு குறிப்பிடத் தக்க முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.
- ஜம்மு & காஷ்மீர் ஒன்றியப் பிரதேசம், வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் மத்திய இந்தியாவின் சில பகுதிகளை தீவிரவாதம் வெகுவாகப் பாதித்துள்ளது.
- லஷ்கர்-இ-தொய்பா, ஜெய்ஷ்-இ-முகமது, ஹிஸ்புல் முஜாகிதீன், ISIS, அல்-கொய்தா, ஜமாத்-உல்-முஜாஹிதீன், ஜமாத்-உல்-முஜாஹிதீன் வங்காளதேசம் ஆகியவை தீவிரவாத அமைப்புகள் இந்தியாவில் செயல்பட்டு வருகின்ற தீவிரவாத அமைப்புகள் ஆகும்.
- 2021 ஆம் ஆண்டில், இந்தியாவின் ஜம்மு காஷ்மீர் பகுதியில் 153 தீவிரவாதத் தாக்குதல்கள் பதிவாகியுள்ளன.
- இந்தத் தாக்குதலில் 45 பாதுகாப்புப் படையினர், 36 பொதுமக்கள், 193 தீவிரவாதிகள் உட்பட 274 பேர் உயிரிழந்தனர்.
- தேசியப் புலனாய்வு முகமையானது 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை, ISIS தொடர்பான 37 வழக்குகளை விசாரித்து 168 பேரைக் கைது செய்துள்ளது.

## இந்தியத் தேர்தல் ஆணையர் நியமனம் தொடர்பான உச்சநீதிமன்றத் தீர்ப்பு




- ஆறு ஆண்டுகளுக்கும் குறைவான ஒரு பதவிக் காலத்திற்கு ஒரு தேர்தல் ஆணையரை நியமிக்கும் நடைமுறையானது தெளிவான ஒரு சட்ட மீறல் என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.
- அருண் கோயலை தேர்தல் ஆணையராக நியமிப்பது குறித்து விவாதிக்கும் போது நீதிமன்றத்தின் இந்த ஆய்வு முன் வைக்கப்பட்டது.
- கோயல் அவர்களின் நியமனம் ஆனது கடந்த ஆண்டு நவம்பர் 18 ஆம் தேதியன்று மேற் கொள்ளப்பட்ட நிலையில் அவரின் பதவிக் காலமானது ஐந்து ஆண்டுகளுக்குச் சற்றும் கொஞ்சம் அதிகம் ஆகும்.

- 1991 ஆம் ஆண்டு தேர்தல் ஆணையம் (தேர்தல் ஆணையர்களின் பணி நிலைகள் மற்றும் செயல்பாடு) என்ற சட்டத்தின் 4(1)வது பிரிவின் படி, தலைமைத் தேர்தல் ஆணையர்கள் மற்றும் தேர்தல் ஆணையர்கள் என தனித்தனியாக ஆறு ஆண்டுகள் பதவியில் இருக்க வேண்டும்.

## திபாங் பல்நோக்கு நீர்மின் நிலையம்

- அருணாச்சலப் பிரதேசத்தில் மிகப்பெரிய நீர்மின் நிலையத்தினை அமைப்பதற்கு இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தப் பல்நோக்கு பயன்பாட்டுத் திட்டம் ஆனது திபாங் ஆற்றில் சீனாவின் எல்லைக்கு அருகில் அமைக்கப்படுகிறது.
- திபாங் நீர்மின் நிலையத்தினைக் கட்டமைப்பதற்கு ஒன்பது ஆண்டுகள் ஆகும் என மதிப்பிடப் பட்டுள்ளது.
- இந்த நீர்மின் நிலையத்தினைத் தேசிய நீர் மின்னாற்றல் கழக (NHPC) லிமிடெட் என்ற நிறுவனத்தினால் உருவாக்கப்பட உள்ளது.
- திஹாங், திபாங் மற்றும் லோஹித் ஆகியவை பிரம்மபுத்திரா நதியின் முக்கிய துணை நதிகள் ஆகும்.
- திப்ரு-சைகோவா என்ற சரணாலயத்திற்கு அருகில் திபாங் நதி லோஹித் நதியுடன் இணைகிறது.
- திபாங் நதியின் துணை நதிகள் எம்ரா, இதுன், டிரி, ரங்கோன், மாதுன் மற்றும் சிசார் ஆகியனவாகும்.




## வண்ண மீன்கள் வளர்ப்பு

- உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் சமூகம் சார்ந்த வண்ண மீன்கள் வளர்ப்பு முறையானது லட்சத் தீவுகளில் உள்ள பெண்களுக்கு மிகவும் உதவும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- இது ஒருங்கிணைந்தச் செயல்பாடுகள் மூலம் தற்சார்பினை நோக்கிய முதல் படியை மேற்கொண்டுள்ளது.

- முதல்-வகையான இது போன்ற முன்னெடுப்பில் 77 பெண்கள் உட்பட 82 தீவு வாசிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு தீவிரப் பயிற்சிக்கு உட்படுத்தப்பட்டனர்.
- இக்குழுவினர் இந்திய வேளாண் ஆராய்ச்சிச் சபையின் தேசிய மீன் சார்ந்த மரபணு வளக் கழகத்தின் (NBFGR) தொழில்நுட்ப ஆதரவுடன் வண்ண மீன்கள் வளர்ப்பிற்காக தனித்தனி குழுக்களை உருவாக்கியுள்ளனர்.

## ஷின்யு மைத்ரி பயிற்சி

- இந்திய விமானப் படை (IAF) ஆனது ஜப்பான் வான்வழித் தற்காப்புப் படையுடன் (JASDF) இணைந்து ஜப்பானில் நடைபெற்ற ஷின்யு மைத்ரி என்ற பயிற்சியில் பங்கேற்கிறது.
- இந்தியா- ஜப்பான் நாடுகளுக்கு இடையிலான "தர்மா கார்டியன்" என்ற ஒரு கூட்டு இராணுவப் பயிற்சியின் ஓர் அங்கமாக இந்தப் பயிற்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- இந்தப் பயிற்சியானது, அந்தந்தத் துறைகளின் வல்லுநர்கள் இரு நாடுகளின் படைகளுக்குத் தேவையான செயல்பாடு சார்ந்தத் தத்துவங்கள் மற்றும் பல்வேறு சிறந்த நடைமுறைகளைப் பற்றி அறிந்து கொள்ளவும், ஆய்வு செய்வதற்குமான ஒரு சிறந்த வாய்ப்பினை அளிக்கிறது.



## AIRS புத்தாய்வு மாணவர் அந்தஸ்து திட்டம்

- ஆஸ்திரேலியா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த 60க்கும் மேற்பட்ட வளர்ந்து வரும் ஆராய்ச்சியாளர்களுக்கு 2023 ஆம் ஆண்டிற்கான ஆஸ்திரேலிய இந்தியப் புத்தாய்வு மாணவர்கள் அந்தஸ்து ஆனது வழங்கப்பட்டுள்ளது.
- AIRS புத்தாய்வு மாணவர் அந்தஸ்து திட்டமானது இந்தியாவிற்கும் ஆஸ்திரேலியாவிற்கும் இடையிலான இருதரப்புத் திட்டமாகும்.
- இது கல்வி சார் உறவுகளை வலுப்படுத்த முற்படும் 2035 ஆம் ஆண்டு செயல் திட்டத்திற்கான இந்தியப் பொருளாதார உத்திக்கான புதுப்பித்தலின் ஒரு பகுதி ஆகும்.
- இது ஆஸ்திரேலிய இந்திய நிறுவனத்தின் தலைமையில் மேற்கொள்ளப் படுகிறது.
- இந்தத் திட்டத்திற்கான நிதியானது ஆஸ்திரேலிய நாட்டு அரசின் கல்வித் துறையால் வழங்கப் படுகிறது.

- ❖ இது இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா ஆகியவற்றுக்கு இடையிலான ஆராய்ச்சி சார்ந்த ஒத்துழைப்புகள் மற்றும் மாணவர் இடம்பெயர்வு ஆகியவற்றை ஊக்குவிக்கிறது.
- ❖ இது 22 ஆஸ்திரேலியப் பல்கலைக் கழகங்கள் மற்றும் 37 இந்திய உயர் கல்வி நிறுவனங்களிடையே ஒத்துழைப்பைக் கொண்டு வர முயல்கிறது.




## வணிகப் போட்டிச் சட்டத்தின் பொருளாதாரம் குறித்த தேசிய மாநாடு

- ❖ இந்தியப் போட்டித் திறன் ஆணையம் ஆனது தனது வணிகப் போட்டிச் சட்டத்தின் பொருளாதாரம் குறித்த 8வது வருடாந்திரத் தேசிய மாநாட்டினை நடத்தியது.
- ❖ இந்த மாநாடு ஆனது 2016 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் இந்தியப் போட்டித் திறன் ஆணையத்தினால் நடத்தப்படுகிறது.
- ❖ இந்த மாநாட்டில் முழு அளவிலான அமர்வு மற்றும் இரண்டு தொழில்நுட்பம் சார்ந்த அமர்வுகள் மேற்கொள்ளப் படுகின்றன.
- ❖ இந்த ஆண்டு மாநாட்டின் முழு அளவிலான அமர்வானது, 'பொருளாதார அதிகாரக் குவிப்பிற்கான நெறிமுறை மற்றும் ஒழுங்குமுறை: இடைமுகங்கள் மற்றும் இணை திறன்கள்' என்ற தலைப்பு குறித்து மேற்கொள்ளப்பட்டது.

## DUSTLIK 2023



- இந்தியா-உஸ்பெகிஸ்தான் இடையிலான 15 நாட்கள் அளவிலான DUSTLIK எனப்படும் கூட்டு இராணுவப் பயிற்சியானது உத்தரகாண்டில் நிறைவடைந்தது.
- இது உஸ்பெகிஸ்தான் உடனான நட்பைக் குறிக்கும் இரண்டாண்டிற்கு ஒரு முறை நடைபெறும் நான்காவது பயிற்சியாகும்.
- முதலாவது கூட்டு இராணுவப் பயிற்சியானது 2019 ஆம் ஆண்டில் தாஷ்கண்ட் நகரில் நடைபெற்றது.
- ஐக்கிய நாடுகளின் ஒரு உத்தரவின் கீழ், வழக்கத்திற்கு சற்று மாறான சூழ்நிலையில் பல்துறை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான இராணுவத் திறனை மேம்படுத்தச் செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## இந்தியத் தேர்தல் ஆணைய நியமனங்கள் குறித்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பு




- சமீபத்தில் தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் பிற தேர்தல் ஆணையர்கள் ஆகியோரை நியமிப்பது தொடர்பாக, நீதிபதி K.M. ஜோசப் தலைமையிலான 5 நீதிபதிகள் கொண்ட உச்ச நீதிமன்ற அமர்வு ஒருமனதாக தீர்ப்பளித்தது.
- இந்த நியமனங்களானது தேர்வுக் குழுவின் ஆலோசனையின் பேரில் குடியரசுத் தலைவர் அவர்களால் மேற்கொள்ளப் படும்.
- இந்தக் குழுவானது பிரதமர், மக்களவையின் எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் இந்தியத் தலைமை நீதிபதி (CJI) ஆகியோரைக் கொண்டது ஆகும்.
- மக்களவையில் எதிர்க்கட்சித் தலைவர் இல்லாத பட்சத்தில், மக்களவையில் தனது மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை அடிப்படையில் மிகப்பெரிய ஒரு எதிர்க் கட்சியாக விளங்கும் கட்சியின் தலைவர் ஒருவர் அந்தக் குழுவில் இடம் பெறுவார்.
- இந்த ஆணையத்தின் செலவினங்களைக் கையாள்வதற்காக சுதந்திரமான முறையில் செயல்படும் ஒரு செயலகத்தை அமைக்க வேண்டும் என்றும் மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்ற அமர்வு வேண்டுகோள் விடுத்துள்ளது.

*நியமன நடைமுறை*

- 324(2)வது சட்டப் பிரிவின் படி, தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் பிற தேர்தல் ஆணையர்களின் நியமனமானது குடியரசுத் தலைவர் அவர்களால் மேற்கொள்ளப் பட வேண்டும்.
- மேலும் இது பாராளுமன்றத்தினால் இதற்கென உருவாக்கப்பட்ட ஒரு சட்டத்தின் விதிகளுக்கு உட்பட்டது.
- தேர்தல் ஆணையர்களின் பணி நிலை குறித்த நிபந்தனைகள் மற்றும் பதவிக் காலம் ஆகியவற்றைக் குடியரசுத் தலைவர் அவர்களே தீர்மானிக்கிறார்.
- 1991 ஆம் ஆண்டு தேர்தல் ஆணைய (தேர்தல் ஆணையர்களின் பணி நிலை குறித்த நிபந்தனைகள் மற்றும் செயல்பாடுகள்) சட்டத்தின் கீழ் ஆறு ஆண்டுகள் அல்லது 65 வயது எட்டும் வரை, இவற்றுள் எது முந்தையதோ அது வரையில் அவர்கள் அந்தப் பதவியினை பதவி வகிப்பர்.
- பொதுவாக, மிக மூத்தத் தேர்தல் ஆணையரே தலைமைத் தேர்தல் ஆணையராக நியமிக்கப் படுவார்.

## ஒரே நாடு, ஒரே பணம் செலுத்துச் சீட்டு முன்னெடுப்பு

- குஜராத் அரசாங்கம் சமீபத்தில் ஒரே நாடு, ஒரே பணம் செலுத்துச் சீட்டு முன்னெடுப்பு என்பதினை நடைமுறைப் படுத்தியது.
- ஒரே நாடு, ஒரே பணம் செலுத்துச் சீட்டு முன்னெடுப்பு என்பது சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகத்தின் ஒரு முன்னெடுப்பாகும்.
- போக்குவரத்துக் காவல் மற்றும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் (RTO) போன்ற அனைத்துப் போக்குவரத்து முறையுடன் தொடர்புடைய அனைத்து முகமைகளையும் ஒரே தளத்தில் கொண்டு வருவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது தடையற்ற முறையிலான பணம் செலுத்துச் சீட்டு (அபராத ரசீது) சேகரிப்பு மற்றும் தரவுப் பரிமாற்றம் ஆகியவற்றிற்கு வழி வகுக்கும்.
- தேசியத் தகவல் மையம் (NIC) ஆனது இதற்காக தனது செயலி ஒன்றினை அறிமுகப் படுத்த உள்ளது.
- 90 நாட்களுக்குள் அபராத தொகையைச் செலுத்தவில்லை என்றால், அந்த அபராத ரசீது தானாகவே காணொளி வாயிலான இணைய நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு, அதற்கான நடவடிக்கைகள் தொடங்கப்படும்.
- காணொளி வாயிலான நீதிமன்றங்களானது, நீதிமன்றத்தில் அதிகளவில் குவியும் வழக்குகளின் எண்ணிக்கையினைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

## இணைய சங்கேதப் பணத்திற்கு எதிராக பணமோசடி தடுப்புச் சட்டம்

- இணைய சங்கேதப் பணம் சார்ந்த சொத்துக்கள் சம்பந்தப்பட்டப் பரிவர்த்தனைகளை 2002 ஆம் ஆண்டின் பணமோசடித் தடுப்புச் சட்டத்தின் கீழ் கொண்டு வருவதற்கான அறிவிப்பினை மத்திய அரசு வெளியிட்டது.
- இது பணமோசடித் தடுப்புச் சட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட வேண்டிய பல்வேறு பரிவர்த்தனைகளின் தன்மையை வகுத்துள்ளது.

- ❖ அவை பின்வருமாறு:
    - மெய்நிகர் எண்ணிமச் சொத்துக்கள் மற்றும் அரசுரிமை நாணயங்களுக்கு இடையே மேற்கொள்ளப் படும் பரிமாற்றம்;
    - ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட முறைகளிலான மெய்நிகர் எண்ணிமச் சொத்துகளின் இடையே மேற்கொள்ளப்படும் பரிமாற்றம்;
    - மெய்நிகர் எண்ணிமச் சொத்துகளின் பரிமாற்றம்;
    - மெய்நிகர் எண்ணிமச் சொத்துக்கள் அல்லது மெய்நிகர் எண்ணிமச் சொத்துகளின் மீதான கட்டுப்பாட்டைச் செயல்படுத்தும் செயற்கருவிகளின் பாதுகாப்பு அல்லது நிர்வாகம்;
    - மெய்நிகர் எண்ணிமச் சொத்துகளை வெளியிடும் நிறுவனங்களின் சலுகை மற்றும் விற்பனை தொடர்பான நிதிச் சேவைகளில் பங்கேற்பு மற்றும் அதற்கான சேவைகளை வழங்குதல்.
- ❖ இந்த நடவடிக்கை, இணைய சங்கேதப் பணம் சார்ந்த நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதில் புலனாய்வு அமைப்புகளுக்கு உதவும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- ❖ 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல், இணைய சங்கேதப் பணம் மூலம் பெறப்படும் வருவாய் மீது 30 சதவீத வருமான வரி விதிக்கப்படும் என இந்திய அரசு அறிவித்தது.
- ❖ 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், இணைய சங்கேதப் பணத்திற்கான மூல வருவாய் ஆதாரத்தில் இருந்து கழிக்கப் படும் 1 சதவீத வரி தொடர்பான விதிகள் அமலுக்கு வந்தன.



CENTRE CAN SHUT DOWN ERRANT ENTITIES

| Govt's moves | RBI's position |
| --- | --- |
| ➤ In last year's Budget, FM introduced 30% tax on income from VDAs, 1% TDS on transactions | ➤ RBI has likened crypto to Ponzi schemes and said recognising them could lead to 'dollarisation' of the economy, which would be against India's interests |
| ➤ FM had clarified that taxing cryptos does not make them legal | |
| ➤ Centre has now said exchanges will need to perform KYC of clients | ➤ It has been highlighting risks cryptos pose to financial stability |
| ➤ Govt can penalise or shut down entities that do not comply | ➤ To counter the challenge, RBI launched own digital currency |

## இலவச சிறு தானிய பரிசுப் பொருள்

- ❖ இலவச சிறு தானிய பரிசுப் பொருள் என்பது சிறு விவசாயிகளின் வேளாண் வணிகக் கூட்டமைப்பால் மேற்கொள்ளப்படும் ஒரு சிறப்புச் சந்தைப்படுத்துதல் பிரச்சாரம் ஆகும்.
- ❖ இந்தப் பிரச்சாரத்தின் கீழ் விவசாயி உற்பத்தியாளர் அமைப்பினைச் சேர்ந்த விவசாயிகளிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்வதை ஊக்குவிப்பதை சிறு விவசாயிகளின் வேளாண் வணிகக் கூட்டமைப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இந்திய விற்பனையாளர்களுக்காக கட்டமைக்கப்பட்ட ஒரு சந்தையான My Store எனப் படும் எண்ணிம வர்த்தகத்திற்கான தடையற்ற வலையமைப்பு மூலம், விவசாயி உற்பத்தியாளர் அமைப்புகளில் இருந்து நேரடியாக சிறு தானியங்களை வாங்கச் செய்வதற்குக் குடிமக்களை ஊக்குவிக்கிறது.

❖ இது நாட்டின் சிறு மற்றும் குறு விவசாயிகளை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.




## மேம்பட்ட இணைப்பு ரக பீரங்கித் துப்பாக்கி அமைப்பு




❖ இந்திய ராணுவம் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட மேம்பட்ட இணைப்பு ரக பீரங்கித் துப்பாக்கி அமைப்பினை (ATAGS) வாங்குவதற்கான ஒரு திட்டத்தினை முன் வைத்து உள்ளது.

- இதனை உயரமானப் பகுதிகளிலும் பயன்படுத்த முடியும் என்பதோடு, திறன் சார்ந்த நடவடிக்கைகளில் உள்ள முக்கியமான இடைவெளிகளை இது நிவர்த்தி செய்யும்.
- ஒரு நீண்ட காலத்திற்குப் பராமரிப்பு எதுவும் தேவைப்படாத மற்றும் நம்பகமான செயல்பாட்டினை உறுதி செய்வதற்காக அனைத்து வகை மின்சார இயக்கிகளுடனும் ATAGS கட்டமைக்கப் பட்டுள்ளது.
- இது அதிக இயக்கத் திறன், விரைவான நிலை நிறுத்துதல் திறன், துணை மின் அலகு, மேம்பட்ட தகவல் தொடர்பு அமைப்பு, நேரடித் தாக்குதல் முறையில் இரவுநேரத் தாக்குதலை மேற்கொள்ளும் திறன் கொண்ட தானியங்கி வழிகாட்டுதல் அமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அமைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் இது பல மேம்பட்ட அம்சங்களைக் கொண்டுள்ளது.

## நுகர்வோர் நீதிமன்றங்களுக்கான வரைமுறைகள்

- நுகர்வோர் நீதிமன்றங்களில் தலைமைப் பதவியினை வகிப்பதற்கான 20 ஆண்டுகள் என்ற கட்டாயத் தொழில்முறை அனுபவத்தினை உச்ச நீதிமன்றம் 10 ஆண்டுகளாகக் குறைத்துள்ளது.
- உச்ச நீதிமன்றமானது அரசியலமைப்பின் 142வது பிரிவின் கீழ் அதன் அசாதாரண அதிகாரங்களைப் பயன்படுத்தி இந்த அறிவிப்பினை வெளியிட்டது.
- இது விண்ணப்பதாரர்களின் செயல்திறனைச் சோதிப்பதற்காக எழுத்துத் தேர்வுகள் மற்றும் வாய்மொழித் தேர்வுகள் ஆகியவற்றை அறிமுகப் படுத்தியுள்ளது.
- 2020 ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்பு (நியமனத்திற்கான தகுதி, ஆட்சேர்ப்பு முறை, நியமன நடைமுறை, பதவிக் காலம், மாநில ஆணையம் மற்றும் மாவட்ட ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் ராஜினாமா மற்றும் பதவி நீக்கம்) விதிகளில் பல திருத்தங்களை மேற்கொள்ள உள்ளதாக மத்திய அரசு முன்மொழிந்து உள்ளது.



## மூங்கில்களாலான ‘உலகின் முதல்’ விபத்துத் தடுப்பு

- ஒரு மாற்றாக சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் மூங்கில்களாலான விபத்துத் தடுப்புகளை நிறுவி இந்திய அரசு சோதனை செய்துள்ளது.
- 200 மீட்டர் நீளமுள்ள இந்த மூங்கில்களாலான ‘உலகின் முதல்’ விபத்துத் தடுப்பானது மகாராஷ்டிராவின் வாணி-வரோரா நெடுஞ்சாலையில் நிறுவப்பட்டுள்ளது.
- மூங்கில்களாலான விபத்துத் தடுப்பானது எஃகினாலான தடுப்புகளுக்கு மாற்றாகவும், சுற்றுச்சூழலுக்கு உகந்ததாகவும் இருக்கும்.
- மூங்கில்களாலான விபத்துத் தடுப்புகளின் மறுசுழற்சிக்கான மதிப்பீடு என்பது 50-70%, என்றும், எஃகினாலானத் தடுப்புகளுக்கு அது 30-50% என்றும் ஆகும்.



## TROPEX 2023

- 2023 ஆம் ஆண்டிற்கான இந்தியக் கடற்படையின் முக்கிய நடவடிக்கை அளவிலான பயிற்சியான TROPEX, இந்தியப் பெருங்கடல் பகுதியில் நடத்தப்பட்டது.
- இதில் அரபிக் கடல் மற்றும் வங்காள விரிகுடா மேற்பரப்பு ஆகியவற்றிலும் பயிற்சிகள் மேற் கொள்ளப் பட்டன.
- இந்த ஒட்டு மொத்தப் பயிற்சி கட்டமைப்பில் கடலோரப் பாதுகாப்புப் பயிற்சியான கடல் பரப்பு கண்காணிப்பு மற்றும் கடல் & நிலப்பரப்பு சார்ந்தப் பயிற்சியான AMPHEX என்ற பயிற்சியும் அடங்கும்.



## நுண் திரவ DAP உரம்

- இந்தியாவில் நுண் திரவ DAP (டை-அம்மோனியம் பாஸ்பேட்) உரத்தினை அறிமுகப் படுத்துவதற்கு அரசாங்கம் சமீபத்தில் ஒப்புதல் அளித்துள்ளது.
- உரக் கட்டுப்பாட்டு ஆணையில் (FCO) இது குறித்து அறிவிக்கப் பட்டுள்ளது.
- இது 1955 ஆம் ஆண்டு அத்தியாவசியப் பொருட்கள் சட்டத்தின் கீழ் வெளியிடப் பட்டு உள்ளது.
- இந்திய விவசாயிகள் உரக் கூட்டுறவு லிமிடெட் (IFFCO) நிறுவனமானது, 2021 ஆம் ஆண்டில் நுண் திரவ யூரியாவை அறிமுகப்படுத்தியது.
- யூரியாவுக்கு அடுத்தபடியாக நாட்டில் அதிகம் நுகரப்படும் உரம் DAP ஆகும்.
- 10-12.5 மில்லியன் டன்களாக மதிப்பிடப்பட்ட வருடாந்திர நுகர்வில், சுமார் 4-5 மில்லியன் டன்கள் உள்ளூர் உற்பத்தி மூலம் பெறப்படுகிற நிலையில், மீதமுள்ளவை இறக்குமதி செய்யப்படுகின்றன.




## குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்துறை நிறுவனங்கள் போட்டித் திறன் (LEAN) திட்டம்

- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்துறை நிறுவனங்கள் துறை அமைச்சகமானது புதுப்பிக்கப் பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்துறை நிறுவனங்கள் போட்டித் திறன் (LEAN) திட்டத்தினைத் தொடங்கியுள்ளது.
- இது இந்தியாவின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்துறை நிறுவனங்களுக்கு உலகளாவியப் போட்டித் திறனில் பங்கேற்பதற்கான ஒரு செயல்திட்டத்தினை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இத்திட்டத்தின் முதல் கட்டமானது உற்பத்தித் துறையையும், இரண்டாம் கட்டமானது சேவைத் துறையையும் உள்ளடக்கும்.
- புதுப்பிக்கப்பட்ட இந்தத் திட்டத்தின் கீழ், நம்பகமான மற்றும் ஆலோசனை சார்ந்த கட்டணங்களுக்கான அமலாக்கச் செலவில் மத்திய அரசின் பங்களிப்பு முன்னதாக 80 சதவீதமாக இருந்த நிலையில் தற்போது 90 சதவீதமாக இருக்கும்..
- முன்னதாக, இந்தத் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கான காலம் 18 மாதங்களாக நிர்ணயிக்கப் பட்டிருந்தது.

- பெண்கள் / பட்டியலிடப்பட்ட சாதியினர் / பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் ஆகிய பிரிவினருக்குச் சொந்தமான மற்றும் வடகிழக்குப் பிராந்தியத்தில் உள்ள SFURTI தொகுதிகளின் ஓர் அங்கமாக இருக்கும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்துறை நிறுவனங்களுக்கு 90% பங்களிப்புடன் கூடுதலாக 5 சதவீதப் பங்களிப்பு வழங்கப் படும்.




## 4வது தேசிய இளையோர் பாராளுமன்ற விழா

- 4வது தேசிய இளையோர் பாராளுமன்ற விழாவானது (NYPF) புது டெல்லியில் உள்ள பாராளுமன்றத்தின் மத்திய மண்டபத்தில் நடைபெற்றது.
- இளையோர் பாராளுமன்றம் ஆனது 2019 ஆம் ஆண்டு முதல் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.
- இந்த நிகழ்வின் நோக்கம் ஜனநாயகத்தை வலுப்படுத்துவதும், நாடாளுமன்றத்தின் செயல்பாடு குறித்து மாணவர் சமூகத்தைப் புரிந்து கொள்ளச் செய்வதும் ஆகும்.
- இந்த நிகழ்விற்கான கருத்துரு, "சிறந்த எதிர்காலத்திற்கான கருத்தாக்கங்கள்: உலக நாடுகளுக்கான இந்தியா" என்பதாகும்.



## ஸ்வதேஷ் தர்ஷன் 2.0 திட்டத்தில் புதிய நகரங்கள்

- ஸ்வதேஷ் தர்ஷன் 2.0 திட்டத்தில் நிலையான மற்றும் பொறுப்பு மிக்கச் சுற்றுலாத் தளங்களாக உருவாக்கப் படுவதற்காக 15 மாநிலங்களில் இருந்து 30 நகரங்கள் தேர்வு செய்யப் பட்டுள்ளன.
- இந்த 15 மாநிலங்களில் மத்தியப் பிரதேசம், கர்நாடகா, தமிழ்நாடு, உத்தரப் பிரதேசம் மற்றும் மகாராஷ்டிரா ஆகியவையும் அடங்கும்.
- ஸ்வதேஷ் தர்ஷன் என்ற திட்டமானது, கருத்துரு அடிப்படையிலான சுற்றுலா வட்டாரங்களின் ஒருங்கிணைந்த மேம்பாட்டிற்காக 2014-15 ஆம் ஆண்டில் மத்திய அரசினால் தொடங்கப்பபட்டது.
- இந்தத் திட்டத்தின் கீழ், சுற்றுலா உள்கட்டமைப்பினை மேம்படுத்தச் செய்வதற்காக மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களுக்கு சுற்றுலா அமைச்சகம் நிதி உதவி வழங்குகிறது.
- ஸ்வதேஷ் தர்ஷன் 2.0 திட்டமானது, உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில், ஒரு நேரத்தில் ஒரு தளத்தில் ஈடுபாடு செலுத்துவதை இலக்காகக் கொண்டு, கருத்தாக்கப் பட்டது.




## இந்தியாவின் நிலச்சரிவு குறித்த தகவல் அறிக்கை

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பின் (இஸ்ரோ) கீழ் செயல்படும், ஹைதராபாத்தில் அமைந்துள்ள தேசியத் தொலை உணர்வு மையமானது (NRSC) இந்தியாவின் இந்தியாவின் நிலச்சரிவு குறித்தத் தகவல் அறிக்கையினை வெளியிட்டு உள்ளது.

- 17 மாநிலங்கள் மற்றும் இரண்டு ஒன்றியப் பிரதேசங்களில் உள்ள நிலச்சரிவினால் அதிகம் பாதிக்கப்படக்கூடிய 147 மாவட்டங்களின் பட்டியலை இந்தக் குழு வெளியிட்டு உள்ளது.
- உத்தரகாண்ட் மாநிலத்தின் ருத்ரபிரயாக் மற்றும் தெஹ்ரி கர்வால் ஆகிய மாவட்டங்கள் நாட்டிலேயே அதிகளவில் நிலச்சரிவினால் பாதிக்கப்படும் பகுதிகளைக் கொண்டதாகவும், அதிகளவில் நிலச்சரிவு அபாயத்திற்கு உட்படக் கூடியதாகவும் உள்ளன.
- நிலச்சரிவு நெருக்கடியில் சிக்கித் தவிக்கின்ற உத்தரகாண்ட் மாநிலத்தின் ஜோஷிமத் பகுதி அமைந்துள்ள சமோலி மாவட்டமானது 19வது இடத்தைப் பிடித்து உள்ளது.
- ஹரித்வார் மற்றும் உதம் சிங் நகர் ஆகியவை முறையே 146வது மற்றும் 147வது இடங்களில் உள்ளன.
- உத்தரகாண்ட் தவிர, நிலச்சரிவினால் அதிகம் பாதிக்கப்படும் 10 மாவட்டங்களில், கேரளாவின் நான்கு மாவட்டங்களும், ஜம்மு காஷ்மீரில் இரண்டு மாவட்டங்களும், சிக்கிமில் இரண்டு மாவட்டங்களும் இதில் வெள்ளப் பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளில் அமைந்துள்ளன.
- இமயமலைக்கு அடுத்தபடியாக மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியானது நிலச்சரிவு அதிகம் ஏற்படும் பகுதியாக உள்ளது.



## வைபவ் புத்தாய்வு மாணவர் திட்டம்

- மத்திய அரசானது வைபவ் புத்தாய்வு மாணவர் திட்டத்தினைத் தொடங்கியுள்ளது.
- இந்தத் திட்டமானது, வெளிநாடு வாழ் இந்திய ஆராய்ச்சியாளர்களுக்கு இந்தியாவில் உள்ள ஒரு ஆராய்ச்சி நிறுவனம் அல்லது ஒரு கல்வி நிறுவனத்தில் ஒரு வருடத்திற்கு குறைந்த பட்சமாக ஒரு மாதம் முதல் அதிகபட்சமாக இரண்டு மாதங்கள் வரை பணி புரியும் வாய்ப்பினை வழங்குகிறது.
- அரசானது இந்த ஆராய்ச்சியாளர்களுக்கு அவர்களின் முழு பணி காலத்திற்கும் ரூ.37 லட்சம் வரை வழங்குகிற நிலையில் புத்தாய்வு மாணவராக பணியாற்றுவதற்கான காலம் மூன்று ஆண்டுகள் ஆகும்.
- இதற்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் வெளிநாடு வாழ் இந்தியர்கள், இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் அல்லது இந்தியாவின் வெளிநாட்டுக் குடி மக்கள் ஆக இருக்க வேண்டும்.




## நீரடி நீர்மூழ்கி எதிர்ப்பு ஏவுகணைகள்

- இந்தியக் கடற்படையானது RGB 60 எனப்படும் நீரடி ஏவுகணைக்கான முற்றிலும் உள் நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஃபியூஸ் YDB-60 என்ற ஒரு ஆயுத அமைப்பினைப் பெற்று உள்ளது.
- RGB-60 எனப்படும் நீரடி நீர்மூழ்கி எதிர்ப்புப் போர் (ASW) ஏவுகணைகளுக்கான YDB-60 ஆயுத அமைப்பானது பெரிய போர்க் கப்பல்களில் பயன்படுத்தப்பட உள்ளது.
- ஃபியூஸ் என்பது அதன் செயல்பாட்டைத் தொடக்கி வைக்கின்ற ஓர் ஆயுத அல்லது வெடி மருந்துகளின் ஒரு பகுதியாகும்.
- கடற்கணைகளில், இதன் செயல்பாடு அவற்றை வெடிக்கச் செய்வதாகும்.
- RGB-60 என்பது நீர்மூழ்கிக் கப்பல்களைத் தாக்கப் பயன்படும் ஏவுகணையாகும்.



## தோட்டக்கலைப் பயிர்களுக்கான புதிய சிறப்பு மையங்கள்

- வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின் கீழான, ஒருங்கிணைந்த தோட்டக்கலை மேம்பாட்டுத் திட்ட அமைப்பானது (MIDH) தோட்டக்கலைப் பயிர்களுக்கான மூன்று புதிய சிறப்பு மையங்களை (CoEs) நிறுவுவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தச் சிறப்பு மையங்கள், தோட்டக்கலைத் துறையில் உள்ள சமீபத்தியத் தொழில் நுட்பங்களுக்கான செயல்விளக்க மற்றும் பயிற்சி மையங்களாக செயல்படும்.

- இந்தச் சிறப்பு மையங்கள் ஆனது பாதுகாக்கப்பட்டப் பயிர் சாகுபடிக்காக பழங்கள் மற்றும் காய்கறி நாற்றுகளுக்கான நடவுப் பொருட்களின் மூல ஆதாரமாகவும் செயல் படுகின்ற நிலையில், அவை பல்வேறு பகுதிகளில் தொழில்நுட்பம் மற்றும் அறிவுவாற்றல் பரிமாற்றம் ஆகியவற்றிற்காகவும் பயன்படுத்தப்படுகின்றன.
- கமலம் (டிராகன் பழம்) பழத்திற்கான சிறப்பு மையமானது, பெங்களூருவில் உள்ள ஹிரேஹள்ளியில் அமைந்துள்ள பரிசோதனை நிலையத்தில் நிறுவப்பட உள்ளது.
- மாம்பழம் மற்றும் காய்கறிகளுக்கான சிறப்பு மையமானது, ஒடிசாவின் ஜாஜ்பூர் மாவட்டத்தில் உள்ள பனிக்கோயிலி எனுமிடத்தில் நிறுவப்பட உள்ளது.
- காய்கறிகள் மற்றும் பூக்களுக்கான சிறப்பு மையமானது, கோவா மாநிலத்தில் உள்ள கோடார், கண்டேபர், போண்டா, தெற்கு கோவா ஆகிய இடங்களில் அமைந்த அரசு வேளாண் பண்ணைகளில் நிறுவப்பட உள்ளது.

## G20 மலர் திருவிழா

- புது டெல்லி மாநகராட்சிச் சபையானது (NDMC), இரண்டு நாட்கள் அளவிலான G20 அமைப்பின் கருத்துரு அடிப்படையிலான மலர்த் திருவிழாவினை ஏற்பாடு செய்து உள்ளது.
- இந்த விழாவானது, G20 அமைப்பின் உறுப்பினர் நாடுகள் மற்றும் சிறப்பு விருந்தினர் நாடுகளின் ஒத்திசைவினை முன்னிலைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- G20 அமைப்பின் நான்கு உறுப்பினர் நாடுகளான சீனா, ஜப்பான், சிங்கப்பூர் மற்றும் நெதர்லாந்து ஆகியவை புது டெல்லி மாநகராட்சிச் சபையின் G20 மலர்த் திருவிழாவில் பங்கேற்கின்றன.
- இந்தத் திருவிழாவில் தேசிய மலர்கள் அல்லது G20 அமைப்பின் உறுப்பினர் நாடுகள் மற்றும் விருந்தினர் நாடுகளின் முக்கிய மலர்த் தோட்டங்கள் ஆகியவற்றின் ஓவியம் அல்லது புகைப்படங்கள் ஆகியவையும் காட்சிப்படுத்தப் பட்டன.

## ஆஹார் 2023



- 37வது சர்வதேச உணவு மற்றும் விருந்தோம்பல் நிகழ்ச்சியான ஆஹார், டெல்லியின் பிரகதி மைதானத்தில் நடைபெற்றது.
- ஆஹார் என்பது இந்தியாவின் மிகப்பெரிய நான்கு நாட்கள் அளவிலான சமையல் சார்ந்த நிகழ்ச்சியாகும்.
- மத்திய உணவு பதப்படுத்தும் தொழிற்சாலை அமைச்சகம் மற்றும் வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் ஆகியவற்றின் ஆதரவுடன் இந்த நிகழ்சசியானது ஏற்பாடு செய்யப்பட்டது.
- இந்த நிகழ்ச்சியில் விருந்தோம்பல் துறையின் திறனை வெளிப்படுத்துவதிலும், உள் நாட்டு மற்றும் சர்வதேச கொள்முதல் நிறுவனங்களுக்கு இந்தியாவின் தொழில் நுட்பங்கள், தயாரிப்புகள் மற்றும் சேவைகள் பற்றி வெளிப்படுத்துவதிலும் கவனம் செலுத்தப் பட்டது.

## பாரம்பரிய மருத்துவம் பற்றிய B2B உலக மாநாடு & கண்காட்சி

- பாரம்பரிய மருத்துவம் பற்றிய B2B உலக மாநாடு & கண்காட்சியானது அசாமின் குவஹாத்தி நகரில் நடைபெற்றது.
- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் கீழ் இது போன்ற முதல் வகை மாநாடு ஆனது நடைபெறுகிறது.
- இது உலக அளவில் பாரம்பரிய மருந்துகளை மேம்படுத்தச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ATL சார்த்தி

- அடல் புத்தாக்கத் திட்ட அமைப்பானது ATL சார்த்தி என்ற முன்னெடுப்பினை அறிமுகப் படுத்தி உள்ளது.
- இது அடல் மேம்பாட்டு ஆய்வகங்களின் (ATL) கீழ் பெருவளர்ச்சி பெற்று வரும் சூழல் அமைப்பை வலுப்படுத்துவதற்கான ஒரு விரிவான சுயக் கண்காணிப்புக் கட்டமைப்பு ஆகும்.
- ATL சார்த்தி கட்டமைப்பானது, அடல் மேம்பாட்டு ஆய்வகங்களைத் திறனுள்ளதாகவும் பயனுள்ளதாகவும் செயல்பட உதவும் வகையில் ஒரு வழிகாட்டி போன்றதாகும்.
- இதன் முதல் கட்டத்தில், அடல் புத்தாக்கத் திட்ட அமைப்பானது, அடல் மேம்பாட்டு ஆய்வகங்களை (ATLs) திறப்பதற்காக 10,000 பள்ளிகளுக்கு நிதியளித்துள்ளது.
- நாடு முழுவதும் புதுமை மற்றும் தொழில்முனைவினை மேம்படுத்துவதற்காக 2016 ஆம் ஆண்டு நிதி ஆயோக் அமைப்பினால் அடல் புத்தாக்கத் திட்டமானது தொடங்கப் பட்டது.

## இந்தியா மற்றும் தெற்காசியப் பிராந்தியத்தின் சிறந்த விமான நிலையம்

- இந்தியா மற்றும் தெற்காசியப் பிராந்தியத்தின் சிறந்த விமான நிலையமாக டெல்லி விமான நிலையம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- ஸ்கைட்ராக்ஸ் எனப்படும் ஒரு சர்வதேச விமானப் போக்குவரத்துத் தரவரிசை அமைப்பின் தரவில் இது கூறப் பட்டுள்ளது.

- 2022 ஆம் ஆண்டில் 37வது இடத்தில் இருந்த இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையம் (IGIA) ஆனது இந்த ஆண்டில் 36வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.
- ஸ்கைட்ராக்ஸ் உலக விமான நிலைய விருதுகளானது வருடாந்திர உலகளாவிய விமான நிலைய வாடிக்கையாளர் மன நிறைவுக் கணக்கெடுப்பை அடிப்படையாகக் கொண்டதாகும்.




## இந்தியாவில் உள்ள பெண்கள் மற்றும் ஆண்கள் பற்றிய அறிக்கை 2022

- இந்தியாவில் உள்ள பெண்கள் மற்றும் ஆண்கள் பற்றிய 2022 ஆம் ஆண்டிற்கான அறிக்கையைப் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் வெளியிட்டுள்ளது.
- இந்தியாவின் பாலின விகிதம் (1,000 ஆண்களுக்கு எத்தனை பெண்கள்) 2036 ஆம் ஆண்டிற்குள் 952 ஆக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- 2017-19 ஆம் ஆண்டில் 904 ஆக இருந்த குழந்தை பிறப்பின் போதான பாலின விகிதம் ஆனது 2018-20 ஆம் ஆண்டில் மூன்று புள்ளிகள் உயர்ந்து 907 ஆக உயர்ந்துள்ளது.
- 15 வயதுக்கு மேற்பட்டவர்களின் இந்தியாவின் தொழிலாளர் பங்கேற்பு விகிதம் ஆனது 2017-2018 ஆம் ஆண்டு முதல் அதிகரித்து வருகிறது.
- இது 2021-22 ஆம் ஆண்டில் ஆண்களுக்கு 77.2 ஆகவும், பெண்களுக்கு 32.8 ஆகவும் இருந்தது.
- 1971 ஆம் ஆண்டில் 2.2% ஆக இருந்த மக்கள்தொகை வளர்ச்சியானது 2021 ஆம் ஆண்டில் 1.1% ஆக குறைந்து சரிவினை எதிர்கொள்ளும் போக்கில் உள்ளது.
- இது 2036 ஆம் ஆண்டில் மேலும் 0.58% ஆக குறையும் என்று கணிக்கப் பட்டுள்ளது.
- 2016 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் 20-24 வயது மற்றும் 25-29 வயதுப் பிரிவினருக்கான வயது சார்ந்த கருவுறுதல் விகிதம் ஆனது முறையே 135.4 மற்றும் 166.0 என்ற அளவிலிருந்து 113.6 மற்றும் 139.6 ஆகக் குறைந்துள்ளது.
- 2016 ஆம் ஆண்டில் 32.7 ஆக இருந்த 35-39 வயதுப் பிரிவினருக்கான அதே குறி காட்டியானது 2020 ஆம் ஆண்டில் 35.6 ஆக அதிகரித்துள்ளது.
- 2017 ஆம் ஆண்டில் 22.1 வயதாக இருந்த திருமணத்திற்கான சராசரி வயது ஆனது 2020 ஆம் ஆண்டில் 22.7 வயதாக சற்று உயர்ந்துள்ளது.
- 2036 ஆம் ஆண்டில், 15 வயதுக்குட்பட்ட மக்கள் தொகை குறையும் என்றும் 60 வயதுக்கு மேற்பட்ட மக்கள் தொகை அதிகரிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.




## கால்நடை வளர்ப்பு பற்றிய அடிப்படைப் புள்ளி விவரங்கள் 2022

- மத்திய அரசானது, கால்நடை வளர்ப்புத் துறையின் ஒரு வருடாந்திர வெளியீடான 'கால்நடை வளர்ப்பு பற்றிய அடிப்படைப் புள்ளி விவரங்கள் 2022' என்ற ஒரு அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- இந்த ஆவணமானது, கால்நடைத் துறையின் ஒரு மரபார்ந்த மற்றும் முக்கியமானத் தகவல் ஆதாரமாகவும் உள்ளது.
- 2021-22 ஆம் ஆண்டில் இந்தியாவின் மொத்தப் பால் உற்பத்தி சுமார் 221.06 மில்லியன் டன்களாக இருந்தது.
- நடப்பு ஆண்டான 2021-22 ஆம் ஆண்டில், பால் உற்பத்தியின் வருடாந்திர வளர்ச்சி விகிதமானது 5.29% ஆக பதிவாகியுள்ளது.
- பால் உற்பத்தியில் முன்னணியில் உள்ள 5 மாநிலங்கள் ராஜஸ்தான் (15.05%), உத்தரப் பிரதேசம் (14.93%), மத்தியப் பிரதேசம் (8.06%), குஜராத் (7.56%) மற்றும் ஆந்திரப் பிரதேசம் (6.97%) ஆகியனவாகும்.
- முந்தைய ஆண்டை விட 6.19% அதிகரித்து, 2021-22 ஆம் ஆண்டில், இந்தியாவின் மொத்த முட்டை உற்பத்தி 129.60 பில்லியன் ஆகும்.
- முட்டை உற்பத்தியில் முன்னணியில் உள்ள 5 மாநிலங்கள் ஆந்திரப் பிரதேசம் (20.41%), தமிழ்நாடு (16.08%), தெலுங்கானா (12.86%), மேற்கு வங்காளம் (8.84%) மற்றும் கர்நாடகா (6.38%) ஆகியனவாகும்.
- 2021-22 ஆம் ஆண்டில் இந்தியாவின் மொத்த இறைச்சி உற்பத்தியானது 5.62% என்ற வருடாந்திர வளர்ச்சி விகிதத்துடன், 9.29 மில்லியன் டன்களாக இருந்தது.

- இறைச்சி உற்பத்தியில் முன்னணியில் உள்ள 5 மாநிலங்கள் மகாராஷ்டிரா (12.25%), உத்தரப் பிரதேசம் (12.14%), மேற்கு வங்காளம் (11.63%), ஆந்திரப் பிரதேசம் (11.04%), மற்றும் தெலுங்கானா (10.82%) ஆகியனவாகும்.
- முந்தைய ஆண்டை விட 10.30% குறைந்து 2021-22 ஆம் ஆண்டில் இந்தியாவின் மொத்த கம்பளி உற்பத்தி 33.13 ஆயிரம் டன்களாக இருந்தது.
- கம்பளி உற்பத்தியில் முன்னணியில் உள்ள 5 மாநிலங்கள் ராஜஸ்தான் (45.91%), ஜம்மு மற்றும் காஷ்மீர் (23.19%), குஜராத் (6.12%), மகாராஷ்டிரா (4.78%) மற்றும் இமாச்சலப் பிரதேசம் (4.33%) ஆகியனவாகும்.
- 2020-21 ஆம் ஆண்டில், வேளாண் துறையில் நிலையான விலையில் கால்நடைத் துறையின் பங்கு மற்றும் மொத்த நிகர மதிப்புக் கூட்டல் அளவு ஆகியவை முறையே 30.13% மற்றும் 4.9% ஆகும்.




## இந்தியாவில் எழுத்தறிவு விகிதம்

- உலக வங்கி-இந்தியா அறிக்கையின்படி, இந்தியா சுதந்திரம் அடைந்த போது, ஒன்பது சதவீதம் பேர் மட்டுமே எழுத்தறிவு பெற்றிருந்த நிலையில், 11 பெண்களில் ஒரு பெண் மட்டுமே கல்வியறிவு பெற்றிருந்தார்கள்.
- தற்போது, பெண்களின் கல்வியறிவு விகிதம் 77% ஆக உயர்ந்துள்ளது.
- இந்தியாவின் ஆண்களின் கல்வியறிவு விகிதம் 84.7% ஆக உள்ளது.
- தேசிய மாதிரி ஆய்வு அறிக்கையின் படி, நாட்டிலேயே 92.2% கல்வியறிவு பெற்ற மாநிலமாக கேரளா திகழ்கிறது.
- அதைத் தொடர்ந்து ஒன்றியப் பிரதேசமான லட்சத்தீவு (91.85%) உள்ளது.
- நாட்டிலேயே அதிகளவு கல்வியறிவு பெற்ற மூன்றாவது மாநிலமாக மிசோரம் திகழ்கிறது (91.33%).
- பீகார் 61.8% கல்வியறிவு விகிதத்துடன் இந்தியாவிலேயே குறைவான கல்வியறிவு பெற்ற மாநிலமாக உள்ள நிலையில், அதைத் தொடர்ந்து அருணாச்சலப் பிரதேசம் 65.3% மற்றும் ராஜஸ்தான் 66.1% ஆகியவை இடம் பெற்றுள்ளன.

- இருப்பினும், இந்தியாவில் சுமார் 12.6% மாணவர்கள் பள்ளிக் கல்வியிலிருந்து இடை நிற்கின்றனர்.
- 19.8% பேர் இடைநிலைக் கல்வி நிலையில் தனது கல்வியினை இடை நிறுத்தியுள்ளனர்.
- கல்வியறிவு விகிதமானது கிராமப்புற இந்தியாவில் 67.77% ஆகவும், நகர்ப்புற இந்தியாவில் 84.11% ஆகவும் உள்ளது.

**Literacy rates for those aged 7 or more (%)**

| State/UT | Male | Female | Person | Gender Gap (% pts) | State/UT | Male | Female | Person | Gender Gap (% pts) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Kerala | 97.4 | 95.2 | 96.2 | 2.2 | Chhattisgarh | 85.4 | 68.7 | 77.3 | 16.7 |
| Delhi | 93.7 | 82.4 | 88.7 | 11.3 | J&K | 85.7 | 68 | 77.3 | 17.7 |
| Uttarakhand | 94.3 | 80.7 | 87.6 | 13.6 | Odisha | 84 | 70.3 | 77.3 | 13.7 |
| Himachal | 92.9 | 80.5 | 86.6 | 12.4 | Karnataka | 83.4 | 70.5 | 77.2 | 12.9 |
| Assam | 90.1 | 81.2 | 85.9 | 8.9 | Jharkhand | 83 | 64.7 | 74.3 | 18.3 |
| Maharashtra | 90.7 | 78.4 | 84.8 | 12.3 | MP | 81.2 | 65.5 | 73.7 | 15.7 |
| Punjab | 88.5 | 78.5 | 83.7 | 10 | Uttar Pradesh | 81.8 | 63.4 | 73 | 18.4 |
| Tamil Nadu | 87.9 | 77.9 | 82.9 | 10 | Telangana | 80.5 | 65.1 | 72.8 | 15.4 |
| Gujarat | 89.5 | 74.8 | 82.4 | 14.7 | Bihar | 79.7 | 60.5 | 70.9 | 19.2 |
| West Bengal | 84.8 | 76.1 | 80.5 | 8.7 | Rajasthan | 80.8 | 57.6 | 69.7 | 23.2 |
| Haryana | 88 | 71.3 | 80.4 | 16.7 | Andhra | 73.4 | 59.5 | 66.4 | 13.9 |
| | | | | | **India** | **84.7** | **70.3** | **77.7** | **14.4** |

## "நிலத்தடி நீர்: ஒரு மதிப்புமிக்க ஆனால் குறைந்து வரும் வளம்" என்ற அறிக்கை

- நீர்வளத்துறைக்கான நிலைக்குழுவானது நாடாளுமன்றத்தில் இந்த அறிக்கையினைத் தாக்கல் செய்துள்ளது.
- 2020 ஆம் ஆண்டு வரையில் இந்தியாவில் இருந்த, வருடாந்திரமாக நிலத்திலிருந்து எடுக்கக் கூடிய வகையில் 398 பில்லியன் கன மீட்டர் (BCM) என்ற அளவிலான மொத்த நிலத்தடி நீர் ஆதாரத்திலிருந்து, 245 BCM நீர் பிரித்தெடுக்கப்பட்டுள்ளது.
- 2017 ஆம் ஆண்டில் 63.3 சதவீதமாக இருந்த நிலத்தடி நீர் எடுப்பு அளவானது 2020 ஆம் ஆண்டில் 61.6 சதவீதமாக குறைந்துள்ளது.
- 2017 முதல் 2020 வரையிலான காலகட்டத்தில் டெல்லி, காசியாபாத், ஃபரிதாபாத் மற்றும் 20 இதர நகரங்களில் உள்ள நிலத்தடி நீர் மட்டம் ஆனது 20 மீட்டருக்கும் மேலாக குறைந்துள்ளது.
- ஹரியானாவின் ஃபரிதாபாத் நகரமானது 100 சதவீதம் நிலத்தடி நீரைச் சார்ந்தே உள்ளது.
- பஞ்சாப், ஹரியானா மற்றும் ராஜஸ்தான் ஆகியவை முறையே 97%, 90% மற்றும் 86% நிலத்தடி நீரை வெளியே எடுத்து வருகின்றன.
- கர்நாடகா, தமிழ்நாடு மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகியவை, நிலத்தடி நீரைப் பாசனத்திற்காக என்று முறையே 89%, 92% மற்றும் 90% என்ற கணிசமான அளவில் பயன்படுத்துகின்றன.

**GROUNDWATER USAGE**

| State | Irrigation (IN BCM) | Extraction (IN BCM) | Share in irrigation (%) |
|---|---|---|---|
| Punjab | 32.80 | 33.85 | 96.90 |
| Haryana | 10.47 | 11.61 | 90.18 |

**Assessment units from 2017-2020**

| State | Improvement | Deteriorated | No change |
|---|---|---|---|
| Punjab | 5 | 11 | 122 |
| Haryana | 13 | 15 | 113 |

## தேசிய மாதிரிக் கணக்கெடுப்பின் 78வது சுற்றறிக்கை

- ❖ தேசிய மாதிரிக் கணக்கெடுப்பு அலுவலகம் (NSSO) ஆனது 78வது பல்குறிகாட்டிகள் சார்ந்த கணக்கெடுப்பு (MIS) என்ற சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளது.
- ❖ கேரளா, மணிப்பூர், நாகாலாந்து மற்றும் ஜார்க்கண்ட் ஆகிய மாநிலங்களில் குடிநீருக்கான மேம்பட்ட வளங்களுக்கான அணுகல் 90%க்கும் குறைவாக உள்ளது.
- ❖ முக்கிய மாநிலங்களில், அசாம், ஜார்க்கண்ட், பீகார் மற்றும் ஒடிசா ஆகியவை கிராமப் புற மற்றும் நகர்ப்புற வீடுகளுக்கான குழாய்வழிக் குடிநீர் வசதி வழங்கீட்டில் மிகவும் மோசமான நிலையில் உள்ளன.
- ❖ முக்கிய மாநிலங்களில் பீகார், ஜார்க்கண்ட் மற்றும் ஒடிசா ஆகியவற்றில் பிரத்தியேக கழிப்பறை வசதி கொண்ட கிராமப்புற வீடுகள் மிகக் குறைந்த அளவு விகிதத்திலேயே உள்ளன.
- ❖ சத்தீஸ்கர், ஒடிசா, மேற்கு வங்காளம், நாகாலாந்து மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் 70 சதவீதத்திற்கும் அதிகமான வீடுகளில், விறகுகளே சமையலுக்குப் பயன்படுத்தப்படும் முக்கிய எரிபொருள் மூலமாக உள்ளது.
- ❖ ஜார்க்கண்ட் மாநிலத்துடன் சேர்த்து இந்த மாநிலங்களில், 25 சதவீதத்திற்கும் குறைவான குடும்பங்களே சமையலுக்கு LPG எரிபொருளினைப் பயன்படுத்துகின்றன.
- ❖ இந்தக் கணக்கெடுப்பின் போது, 15 முதல் 24 வயதுடைய 16.1% ஆண்களும், 43.8% பெண்களும் படிக்கவில்லை, வேலை வாய்ப்பு பெறவில்லை அல்லது எந்தவித ஒரு பயிற்சியும் பெற்று இருக்க வில்லை.
- ❖ 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவர்களில் 50 சதவீதத்திற்கும் குறைவான நபர்களே கைபேசிகளுக்கான பிரத்தியேக அணுகலைப் பெற்றுள்ளனர்.
- ❖ பெரிய மாநிலங்களில், உத்தரகாண்ட், ஒடிசா, கேரளா மற்றும் டெல்லி ஆகியவற்றில் கல்வி, வேலைவாய்ப்பு அல்லது பயிற்சி ஆகியவை பெறாத 15 முதல் 24 வயதுடைய ஆண்கள் அதிக விகிதத்தில் (20%க்கும் அதிகமானோர்) உள்ளனர்.
- ❖ உத்தரப் பிரதேசம், அசாம், ஒடிசா, குஜராத், மேற்கு வங்காளம் மற்றும் பீகார் ஆகிய மாநிலங்களில் கல்வி, வேலைவாய்ப்பு அல்லது பயிற்சி ஆகியவை பெறாத பெண்களின் விகிதம் அதிகமாக உள்ளது.
- ❖ இதில் சில முக்கிய கண்டுபிடிப்புகள்

| Item Description | Percentage (all-India) % | | |
|---|---|---|---|
| | Rural | Urban | All* |
| persons reported to have improved source of drinking water1 | 95 | 97.2 | 95.7 |
| persons reported access to improved latrine, among the persons who had reported access to latrine2 | 97.5 | 99 | 98 |
| persons reported access to hand washing facility with water and soap/detergent within the premises | 77.4 | 92.7 | 81.9 |
| households using clean fuel as primary source of energy for cooking3 | 49.8 | 92 | 63.1 |
| persons of *age 15-29 years* were in formal and non-formal education and training for the 12 months preceding the survey | 33 | 39.4 | 34.9 |
| persons of *age 15-24 years* not in education, employment or training (NEET) as on date of survey | 30.2 | 27 | 29.3 |
| persons of age *18 years and above* who used mobile telephone with active sim card during the three months preceding the date of the survey | 67.8 | 83.7 | 72.7 |
| households in rural areas reported availability of all-weather roads within 2 km from the place of living | 92.5 | - | - |
| households reported purchase/ construction of any *new house/ flat* after 31.03.2014 | 11.2 | 7.2 | 9.9 |
| households reported purchase/construction of new house/flat for the *first time*, among the households which reported purchase/construction of any new house/flat after 31.03.2014 | 47.5 | 57.9 | 49.9 |
| persons having current place of residence different from the last usual place of residence | 26.8 | 34.6 | 29.1 |

## பசுமை இழுவைப் படகுப் பரிமாற்றத் திட்டம்

- இந்திய அரசானது பசுமை இழுவைப் படகுப் பரிமாற்றத் திட்டத்தினைத் தொடங்கச் செய்வதன் மூலம் 2030 ஆம் ஆண்டிற்குள், இந்திய நாட்டினை ‘உலகளாவியப் பசுமை முறை கப்பல் உற்பத்தி மையமாக’ மாற்றுவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இந்தத் திட்டமானது பசுமைக் கலப்பின இழுவைப் படகுகள் அறிமுகப்படுத்துவதன் மூலம் தொடங்கப் பட உள்ளது.
- இது பசுமைக் கலப்பின உந்துவிசை அமைப்புகளால் இயக்கப் படுவதோடு, மேலும், மெத்தனால், அம்மோனியா, ஹைட்ரஜன் போன்ற புதைபடிவம் சாரா எரிபொருள் தீர்வுகள் மூலங்களை ஏற்கும் வகையிலும் அமைக்கப்பட உள்ளது.
- பசுமைத் துறைமுகம் மற்றும் கப்பல் போக்குவரத்தில் இந்தியாவின் முதல் தேசியச் சிறப்பு மையமானது ஹரியானாவின் குருகிராம் நகரில் திறக்கப் பட்டுள்ளது.

## சஹ்பகீதா திட்டம்

- சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தால் சஹ்பகீதா திட்டம் தொடங்கப் பட்டுள்ளது.
- பங்கேற்புப் பாதுகாப்பு மற்றும் ஈரநிலங்களைத் திறம்படப் பயன்படுத்துவதற்கு இது ஒரு முக்கியமான படியாகும்.
- இந்த ஈரநிலங்களுடன் தொடர்பில் இருக்கும் சமூகங்களுக்குச் சமூக அளவிலான ஒரு உரிமை வழங்கும் அணுகுமுறையைச் செயல்படுத்துவதே இதன் நோக்கமாகும்.
- தற்போது, நீர்வாழ் சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாப்பதற்கான தேசியத் திட்டம் (NPCA) என்ற மத்திய நிதியுதவித் திட்டத்தை அமைச்சகம் செயல்படுத்தி வருகிறது.

- NPCA என்ற திட்டத்தின் கீழ், 42 ராம்சார் தளங்கள் உட்பட நாடு முழுவதும் உள்ள 165 ஈர நிலங்களைப் பாதுகாப்பதற்கான மத்திய அரசின் உதவியை அந்த அமைச்சகம் அனுமதித்துள்ளது.

## டிஜிகிளைம் தரவுத் தளம்

- மத்திய விவசாய அமைச்சகம் தேசியப் பயிர்க் காப்பீட்டுத் தளத்தில் எண்ம முறை உரிமை கோரல் தீர்வுத் தொகுதியான 'டிஜிகிளைம்' என்பதினை அறிமுகப்படுத்தி உள்ளது.
- இது பிரதான் மந்திரி ஃபசல் பீமா யோஜனா (PMFBY) திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்டது.
- இப்போது உரிமை கோரல்கள் மின்னணு முறையில் வழங்கப்படும் நிலையில், இது பின்வரும் ஆறு மாநிலங்களின் அந்தந்த விவசாயிகளுக்குப் பயனளிக்கும்.
- ராஜஸ்தான், உத்தரப் பிரதேசம், இமாச்சலப் பிரதேசம், சத்தீஸ்கர், உத்தரகாண்ட் மற்றும் ஹரியானா ஆகியவை அந்த 6 மாநிலங்கள் ஆகும்.




## வேதகாலப் பாரம்பரிய இணையதளம்

- மத்திய உள்துறை அமைச்சர் வேதகாலப் பாரம்பரிய இணையதளத்தைத் திறந்து வைத்தார்.
- இது கலாச்சார அமைச்சகத்தின் கீழ் இந்திரா காந்தி தேசியக் கலை மையத்தால் உருவாக்கப்பட்டது.
- இது வேதங்களில் உள்ள செய்தியை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- வேத காலப் பாரம்பரியம் தொடர்பான எந்தவொருத் தகவலுக்கும் இது ஒரு ஒற்றைத் தீர்வாக இருக்கும்.
- இது நான்கு வேதங்களின் 18 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மந்திரங்களைக் கொண்டு உள்ளது.

## சரக்கு மற்றும் சேவை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம்

- சரக்கு மற்றும் சேவை வரியின் கீழான சர்ச்சைகளைத் தீர்ப்பதற்கான மேல் முறையீட்டுத் தீர்ப்பாயத்தினை அமைப்பதற்கு வழி வகுக்கும் வகையில், நிதி மசோதாவில் திருத்தங்களை மேற்கொள்ள மக்களவை ஒப்புதல் அளித்துள்ளது.

- ❖ இந்தத் திருத்தங்களின்படி, ஒவ்வொரு மாநிலத்திலும் சரக்கு மற்றும் சேவை வரி மேல் முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் அமர்வுகள் அமைக்கப்படும்.
- ❖ இந்த அமர்வில் இரண்டு நீதித்துறை உறுப்பினர்கள் மற்றும் மத்திய மற்றும் மாநில அரசுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தச் செய்யும் வகையில் இரண்டு தொழில்நுட்ப உறுப்பினர்கள் ஆகியோர் இடம் பெறுவர்.
- ❖ டெல்லியில் இதன் முதன்மை அமர்வு செயல்படும்.
- ❖ முதன்மை அமர்வு ஆனது ஒரு தலைவர், ஒரு நீதித்துறை உறுப்பினர் மற்றும் மத்திய மற்றும் மாநில அரசுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இரண்டு தொழில் நுட்ப உறுப்பினர்கள் ஆகியோரைக் கொண்டிருக்கும்.
- ❖ தற்போது, மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் இல்லாத நிலையில், வரி செலுத்துவோர் உயர் நீதிமன்றங்களில் நீதிப் பேராணை மனுக்களைத் தாக்கல் செய்து வருகின்றனர்.

## ராகுல் காந்தி பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்துத் தகுதி நீக்கம்

- ❖ சூரத்தில் உள்ள உள்ளூர் நீதிமன்றம் அவருக்கு 2 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்ததையடுத்து, வயநாடு தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் ராகுல் காந்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி ரத்து செய்யப் பட்டுள்ளது.
- ❖ இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 102(1)(E) சட்டப் பிரிவின் விதிமுறைகளின்படி, 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 8வது பிரிவுடன் சேர்த்து இந்த தகுதியின்மை அறிவிக்கப்பட்டது.
- ❖ 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 8(3) வது பிரிவானது, "எந்தவொரு குற்றத்திற்காகவும் குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகளுக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட ஒரு நபர், அத்தகையக் குற்றம் நிரூபிக்கப்பட்ட நாளிலிருந்து தகுதி நீக்கம் செய்யப்படுவார் என்பதோடு, மேலும், அவர் விடுவிக்கப் பட்டதிலிருந்து மேலும் ஆறு வருடங்கள் வரை அவர் தொடர்ந்து தகுதியிழப்பு (போட்டியிடுவதில்) செய்யப் படுவார் என்று கூறுகிறது.



MAY ALSO HAVE TO VACATE TUGHLAQ LANE BUNGALOW

➤ Section 8(3) of RP Act mandates **disqualification of any lawmaker who is 'convicted** of any offence and sentenced to imprisonment for not less than 2 years'

➤ Sec 8(4) of Representation of People Act, 1951 states that disqualification takes effect only 'after 3 months have elapsed' from date of conviction. In 2013 ruling in **'Lily Thomas v Union of India', SC struck it down as unconstitutional and declared that MP/MLA would stand disqualified immediately**

➤ In 2018 'Lok Prahari v Union of India' order, **SC said disqualification 'will not operate from date of stay of conviction** by appellate court'

➤ Rahul may have to vacate 12, Tughlaq Lane house in a month if he doesn't get relief from higher court

➤ Abhishek Manu Singhvi cites Lok Prahari judgment, says there's **no automatic disqualification as Article 103 of Constitution states that only President has power to disqualify** after taking EC's advice

➤ Citing Section 8 of RP Act, an expert says **disqualification from contesting polls will be for 8 years** – 2-year jail and 6 from date of release

➤ Gandhi **second LS member, after Lakshadweep MP P P Mohammed Faisal of NCP, to be disqualified** following conviction. Kerala HC suspended Faisal's conviction and sentence but LS Secretariat is yet to revoke his disqualification

➤ RJD chief Lalu Prasad Yadav was disqualified in 2013 after conviction

Rahul Gandhi attended Lok Sabha's morning session and a meeting of Congress MPs

"Consequent upon his conviction by the court of Chief Judicial Magistrate, Surat... Rahul Gandhi, Lok Sabha MP representing Wayanad parliamentary constituency of Kerala, stands disqualified from the membership of the lower house from the date of his conviction, ie 23 March, 2023 —**LS Secretariat**

I am fighting for the voice of India, I am ready to pay any cost —**Rahul Gandhi**

- அரசியலமைப்பின் 102வது சட்டப்பிரிவானது, ஒரு பாராளுமன்ற உறுப்பினரைத் தகுதி நீக்கம் செய்வதற்கான காரணங்கள் பற்றி கூறுகிறது.
- 102(1)வது சட்டப்பிரிவின் (e) என்ற துணைப் பிரிவானது, "பாராளுமன்றத்தினால் உருவாக்கப் பட்ட எந்தவொருச் சட்டத்தினாலோ அல்லது அந்தச் சட்டத்தின் கீழ் அவர் தகுதியற்றவராக இருந்தாலோ" ஒரு பாராளுமன்ற உறுப்பினர் தனது உறுப்பினர் பதவியினை இழக்க நேரிடும் என்று கூறுகிறது.
- இதற்கான சட்டம் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டமாகும்.

## கிரித் பரிக் குழு பரிந்துரைகள்

- இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் எரிவாயுக்கான எரிவாயு விலை சூத்திரத்தினை மறுமதிப்பாய்வு செய்வதற்காக 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் கிரித் பரிக் குழு அமைக்கப்பட்டது.
- பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத் துறை அமைச்சகம் ஆனது கிரித் பரிக் குழு அறிக்கையின் பரிந்துரைகளுக்கான அமைச்சரவை ஒப்புதலினைக் கோரி உள்ளது.
- இந்த அறிக்கையானது கடைநிலை நுகர்வோருக்கு இயற்கை எரிவாயுவின் நியாயமான விலையை நிர்ணயிப்பதனைப் பரிந்துரைக்கிறது.
- இயற்கை எரிவாயுவின் விலையானது ஆண்டிற்கு இருமுறை மாற்றியமைக்கப் படுகிறது.




## சுகாதாரத் துறையில் செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு

- இந்திய மருத்துவ ஆராய்ச்சி சபையானது (ICMR), உயிரி மருத்துவ ஆராய்ச்சி மற்றும் சுகாதாரத் துறையில் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துவதற்கான இந்தியாவின் முதல் நெறிமுறை வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.
- இது "செயற்கை நுண்ணறிவு - அடிப்படையிலான தீர்வுகளின் உருவாக்கம், செயலாக்கம் மற்றும் ஏற்பு ஆகியவற்றில் உதவக் கூடிய ஒரு நெறிமுறைக் கட்டமைப்பை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டது.
- படைப்பாளிகள், மேம்பாட்டாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், மருத்துவர்கள், நெறி முறைக் குழுக்கள், நிறுவனங்கள், நிதி வழங்கீட்டாளர்கள் மற்றும் நிதியளிப்பு நிறுவனங்கள் உட்பட, உயிரியல் மருத்துவ ஆராய்ச்சி மற்றும் சுகாதார நலனில் செயற்கை நுண்ணறிவு பயன்பாடு பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள அனைத்துப் பங்குதாரர்களுக்கும் இந்த ஆவணம் பொருந்தும்.

- இந்த வழிகாட்டுதல்களின்படி, சுகாதார நலனில் செயற்கை நுண்ணறிவுப் பயன்பாட்டிற்கான நெறிமுறை மறு ஆய்வு செயல்முறையானது, நெறிமுறைக் குழுவின் கட்டுப்பாட்டின் கீழ் வருகிறது.




## மனித-வனவிலங்கு மோதலை நிவர்த்தி செய்வதற்கான வழிகாட்டுதல்கள்

- மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் ஆனது மனித-வனவிலங்கு மோதலை (HWC) நிவர்த்தி செய்வதற்காக என்று 14 வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.
- இந்தியாவில் மனித-வனவிலங்கு மோதலை நிவர்த்தி செய்வதற்கான பயனுள்ள மற்றும் திறம் மிக்க நடவடிக்கைகள் எவை என்பது குறித்து, முக்கியப் பங்கு தாரர்களிடையே ஒரு பொதுவான புரிதலை உருவாக்கச் செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த வழிகாட்டுதல்கள் இயல்பில் ஓர் ஆலோசனை வழங்கீடு சார்ந்தவையாகும் என்பதோடு இது ஓர் இடம் சார்ந்த மனித-வனவிலங்கு மோதல்களுக்கானத் தணிப்பு நடவடிக்கைகளின் உருவாக்கத்திற்கும் உதவும்.
- இந்த வழிகாட்டுதல்கள் என்பவை மனித-வனவிலங்கு மோதல்களுக்கானத் தணிப்பு நடவடிக்கைகளின் இந்திய-ஜெர்மானிய ஒத்துழைப்புத் திட்டத்தின் கீழ் உருவாக்கப் பட்டுள்ளன.
- 10 இனங்கள் சார்ந்த வழிகாட்டுதல்கள்:
  - யானை, காட்டெருது, சிறுத்தை, பாம்பு, முதலை, செம்முகக் குரங்கு, காட்டுப் பன்றி, கரடி, மரையான் மற்றும் புல்வாய் ஆகிய இனங்களுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான மோதலைத் தணிப்பதற்கான வழிகாட்டுதல்கள்.
- பல்வேறு துறை சார்ந்த சிக்கல்கள் குறித்த 4 வழிகாட்டுதல்கள்
  - இந்தியாவில் வனம் மற்றும் ஊடகத் துறைக்கு இடையேயான ஒத்துழைப்புக்கான வழிகாட்டுதல்கள்: மனித-வனவிலங்கு மோதலைத் தணிப்பதற்கான பயனுள்ள தகவல் தொடர்புகளை நோக்கிய வழிகாட்டுதல்கள்.
  - மனித-வனவிலங்கு மோதலைத் தணிக்கும் சூழலில் தொழில்சார் வளம் மற்றும் பாதுகாப்பு
  - மனித-வனவிலங்கு மோதல் தொடர்பான சூழ்நிலைகளில் கூட்ட மேலாண்மை

- மனித-வனவிலங்கு மோதல் சூழ்நிலைகளில் எழும் சுகாதாரம் சார்ந்த அவசர நிலைகள் மற்றும் சாத்தியமான சுகாதாரம் சார்ந்த அபாயங்களை நிவர்த்தி செய்தல்: ஒற்றைச் சுகாதார அணுகுமுறையை மேற்கொள்தல்.

## CBuD செயலி

- 'Call Before u Dig' (CBuD) என்ற செயலியானது சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இது தகவல் தொடர்பு அமைச்சகத்தின் தொலைதொடர்பு துறையின் ஒரு முக்கிய முன்னெடுப்பாகும்.
- தோண்டும் பணிகளைத் தொடங்குவதற்கு முன், தற்போதுள்ள நிலத்தடியில் செல்லும் சேவைகள் குறித்து விசாரணை மேற்கொள்கின்ற தோண்டும் நிறுவனங்களுக்கு ஒரு இடைமுகத்தை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஒளியிழை கம்பிவடங்கள் போன்ற நிலத்தடி அமைப்புகள் சேதமடைவதால் ஒவ்வோர் ஆண்டும் ஏற்படுகின்ற சுமார் ரூ. 3,000 கோடி (400 மில்லியன் டாலர்) இழப்பினை இது தடுக்கும்.
- எரிவாயுக் குழாய்கள், நீர் குழாய்கள் மற்றும் ஒளியிழைக் கம்பிவடங்கள் போன்ற பல்வேறு நிலத்தடிச் சேவை அமைப்புகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த இது உதவும்.




## MGNREGA திட்டத்தின் கீழ் ஊதிய உயர்வு

- கிராமப்புற வேலைவாய்ப்பு உறுதித் திட்டமான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் (MGNREGS) கீழ் 2023-24 ஆம் நிதியாண்டிற்கான ஊதிய விகிதங்களை உயர்த்த உள்ளதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.
- ஹரியானா மாநில அரசானது, அதிகபட்சமாக 357 ரூபாயினைத் தினசரி ஊதியமாக வழங்குகிறது.
- மத்தியப் பிரதேசம் மற்றும் சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்கள் மிகக் குறைந்த ஊதியமாக ரூ.221 வழங்குகின்றன.

- கோவா மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்கள் வெறும் இரண்டு சதவீத உயர்வுடன் மிகக் குறைந்த அளவிலான ஊதிய உயர்வைப் பெற்றுள்ளன.
- 10.39 சதவீதம் ஊதியங்கள் அதிகரிப்புடன் ராஜஸ்தான் மாநிலமானது, ஏப்ரல் 01 ஆம் தேதி முதல் தற்போதைய ஊதிய விகிதத்தை விட அதிகபட்சமான அளவிலான ஊதிய உயர்வினைப் பெற்றுள்ளது.
- மற்ற ஏழு மாநிலங்கள், தற்போதைய (2022-23) ஊதிய விகிதங்களை விட 2023-24 ஆம் ஆண்டிற்கான ஊதிய விகிதங்களில் 5 சதவீதத்திற்கும் குறைவான ஒரு அளவிலேயே ஊதிய உயர்வினைப் பெற்றுள்ளன.
- அவை மேகாலயா (3.4 சதவீதம்), மணிப்பூர் (3.59 சதவீதம்), அருணாச்சலப் பிரதேசம் (3.7 சதவீதம்), நாகாலாந்து (3.7 சதவீதம்), அசாம் (3.93 சதவீதம்), தமிழ்நாடு (4.63 சதவீதம்), மற்றும் புதுச்சேரி (4.63 சதவீதம்) ஆகும்.

| State | MGNREGA wages 2023-24 | Notified min wages** | Avg wage of agri workers# | Avg wage of non-agri workers## | % change |
|---|---|---|---|---|---|
| Andaman & Nicobar Islands | 311-328* | NA | NA | NA | NA |
| Andhra Pradesh | 272 | 390 | 345.5 | 337.7 | -7.31 |
| Arunachal Pradesh | 234 | NA | NA | NA | NA |
| Assam | 238 | 382 | 327.4 | 326.4 | -65.49 |
| Bihar | 228 | 379 | 290.3 | 291.1 | -22.37 |
| Chhattisgarh | 221 | 257 | NA | NA | -9.25 |
| Dadra and Nagar Haveli | 297 | NA | NA | NA | NA |
| Daman and Diu | 297 | NA | NA | NA | NA |
| Goa | 322 | NA | NA | NA | NA |
| Gujarat | 256 | 383 | 285.3 | 282.5 | -20.09 |
| Haryana | 357 | 358 | 395 | 403.3 | -1.26 |
| HP | 236-295*** | 275 | 457.6 | 389.8 | NA |
| Jammu & Kashmir & Ladakh | 244 | 125 | 524.6 | 510.8 | 1.29 |
| Jharkhand | 228 | 305 | NA | NA | -11.58 |
| Karnataka | 316 | 425 | 375.2 | 397.9 | -16.49 |
| Kerala | 333 | 403 | 726.8 | 695.8 | -20.12 |
| Lakshadweep | 304 | NA | NA | NA | NA |

| State | MGNREGA wages 2023-24 | Notified min wages** | Avg wage of agri workers# | Avg wage of non-agri workers## | % change |
|---|---|---|---|---|---|
| Madhya Pradesh | 221 | 228 | 277.8 | 250.3 | -1.87 |
| Maharashtra | 273 | 276 | 284.2 | 277.2 | -1.80 |
| Manipur | 260 | NA | NA | NA | NA |
| Meghalaya | 238 | NA | 325.8 | 298.9 | NA |
| Mizoram | 249 | NA | NA | NA | NA |
| Nagaland | 234 | NA | NA | NA | NA |
| Odisha | 237 | 308 | 269.5 | 284.9 | -19.96 |
| Puducherry | 294 | NA | NA | NA | NA |
| Punjab | 303 | 381 | 351.5 | 356.9 | -9.34 |
| Rajasthan | 255 | 221 | 358.3 | 308.6 | 11.76 |
| Sikkim | 236 | NA | NA | NA | NA |
| Tamil Nadu | 294 | 322 | 445.6 | 442.3 | -9.52 |
| Telangana | 272 | 306 | NA | NA | -12.50 |
| Tripura | 236 | NA | 270 | 250 | NA |
| Uttar Pradesh | 230 | 231 | 288 | 302.9 | 12.81 |
| Uttarakhand | 230 | 246 | NA | NA | -6.52 |
| West Bengal | 237 | 360 | 315.3 | 300.7 | -9.30 |

## இந்தியாவில் 'மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினைகள்' : அமெரிக்க அரசின் அறிக்கை

- இது அமெரிக்கச் சட்டப் பேரவையின் கட்டளையின் கீழ், வெளியுறவுத் துறையின் ஒரு பணியகத்தின் தலைமையில் மேற்கொள்ளப்படும் ஒரு வருடாந்திர நடவடிக்கை ஆகும்.
- இது 2022 ஆம் ஆண்டில் இந்தியாவில் நிகழ்ந்த சில குறிப்பிடத்தக்க மனித உரிமைகள் சார்ந்த பிரச்சினைகளைப் பட்டியலிட்டுள்ளது.
- அவை சட்டவிரோதமான மற்றும் கொடுங்கோண்மை சார்ந்த கொலை, பத்திரிக்கைச் சுதந்திரம் மற்றும் சமய மற்றும் இனச் சிறுபான்மையினரைக் குறி வைக்கும் வன்முறை உள்ளிட்டவையாகும்.
- நீதிமன்றத்திற்குப் புறம்பான கொலைகள், காவல்துறை மற்றும் சிறைத் துறை அதிகாரிகளால் மேற்கொள்ளப்படும் சித்திரவதை அல்லது கொடூரமான, மனிதாபிமானமற்ற, அல்லது இழிவாக நடத்துதல் அல்லது தண்டனை மற்றும் கடுமையான மற்றும் உயிருக்கு ஆபத்தான சிறை வாழ் நிலைமைகள் போன்ற மனித உரிமை மீறல்கள் ஆகியவை இப்பட்டியலில் குறிப்பிடப் படுகின்றன.

# சர்வதேசச் செய்திகள்

## உக்ரைன் போர் மீதான ஐக்கிய நாடுகள் சபையின் வாக்கெடுப்பு

- உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பின் முதலாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு, உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பைக் கண்டித்து ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் மீது வாக்களிக்கச் செய்வதிலிருந்து இந்தியா மீண்டும் விலகியுள்ளது.
- 193 உறுப்பினர்களைக் கொண்ட ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் நடைபெற்ற வாக்கெடுப்பின் போது, 141 உறுப்பினர் நாடுகள் அந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தன.
- 7 நாடுகள் இந்தத் தீர்மானத்தை எதிர்த்த நிலையில், இந்தியா, சீனா, ஈரான் மற்றும் தென்னாப்பிரிக்கா உள்ளிட்ட 32 நாடுகள் இந்த வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.
- ரஷ்யா, பெலாரஸ், வடகொரியா, எரித்திரியா, மாலி, நிகரகுவா மற்றும் சிரியா ஆகிய ஏழு நாடுகள் இந்தத் தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்தன.
- அமெரிக்காவுடனான இந்தியாவின் பாதுகாப்பு வர்த்தகம் சுமார் 21 பில்லியன் அமெரிக்க டாலர்கள் ஆகும்.
- ஆனால் இந்தியாவிற்குப் பாதுகாப்பு உபகரணங்களை அதிகளவில் ஏற்றுமதி செய்யும் நாடாக ரஷ்யா திகழ்கிறது.

## உலக வங்கியின் புதியத் தலைவர்




- அமெரிக்க அதிபர் ஜோ பிடன் அவர்கள் இந்திய-அமெரிக்க வணிக நிர்வாகி அஜய் பங்காவினை உலக வங்கியின் தலைவர் பதவிக்குப் பரிந்துரைத்துள்ளார்.
- சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி ஆகிய இரண்டு சிறந்த சர்வதேச நிதி நிறுவனங்களில் ஒன்றின் தலைவராகப் பதவியேற்க உள்ள முதல் இந்திய-அமெரிக்கர் இவரே ஆவார்.
- ஒரு நிதிச் சேவை நிறுவனமான மாஸ்டர் கார்டு நிறுவனத் தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியாகவும் இவர் பணியாற்றியுள்ளார்.
- 2016 ஆம் ஆண்டில், இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களால் இவருக்கு பத்மஸ்ரீ விருது வழங்கப் பட்டது.

- உலக வங்கியின் தலைவர், சர்வதேச மறுசீரமைப்பு மற்றும் மேம்பாட்டு வங்கி (IBRD) அல்லது உலக வங்கி மற்றும் சர்வதேச மேம்பாட்டுக் கூட்டமைப்பின் (IDA) நிர்வாக இயக்குநர்கள் குழுவின் அதிகாரப் பூர்வத் தலைவராக செயல்படுவார்.
- உலக வங்கிக் குழுமத்தின் தலைவராக இருந்த அமெரிக்க வங்கித் துறையாளர் டேவிட் மல்பாஸ் சமீபத்தில் பதவி விலகினார்.

## உலக நிலையான மேம்பாட்டு உச்சி மாநாடு




- எரிசக்தி மற்றும் வளங்கள் கல்வி நிறுவனத்தின் (TERI) 22வது உலக நிலையான மேம்பாட்டு உச்சி மாநாடு (WSDS) ஆனது புது டெல்லியில் நடைபெற்று வருகிறது.
- இந்த உச்சி மாநாட்டின் விவாதங்களில், கூட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளச் செய்வதற்காக வேண்டி நிலையான மேம்பாடு மற்றும் பருவநிலை நெகிழ்திறன் ஆகியவற்றினை நெறிப்படுத்தச் செய்தல் என்ற முதன்மைக் கருத்துருவின் மீது கவனம் செலுத்தப் பட்டது.
- 2022 ஆம் ஆண்டானது ஒரு முக்கியமானச் சாதனையினைக் குறிக்கிறது.
- 1972 ஆம் ஆண்டு ஸ்டாக்ஹோம் மாநாடு என்று பிரபலமாக அழைக்கப்படும் மனித சுற்றுச்சூழல் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் மாநாட்டின் 50 ஆண்டுகள் நிறைவினை இது குறிக்கிறது.

## நிதியியல் நடவடிக்கைப் பணிக் குழுவின் உறுப்பினர் அந்தஸ்து-ரஷ்யா

- நிதியியல் நடவடிக்கைப் பணிக் குழுவானது ரஷ்யாவின் உறுப்பினர் அந்தஸ்தினை தற்காலிகமாக ரத்து செய்துள்ளது.
- ஆனால் ரஷ்யக் கூட்டமைப்பு ஆனது அதன் நிதிசார் கடமைகளைத் தொடர்ந்து பூர்த்தி செய்ய வேண்டும் என்று வலியுறுத்தப் பட்டுள்ளது.
- நைஜீரியா மற்றும் தென்னாப்பிரிக்கா ஆகிய ஆப்பிரிக்காவின் இரண்டு பெரியப் பொருளாதாரங்களை "சாம்பல் நிறப் பட்டியலில்" சேர்த்துள்ளது.
- மொராக்கோ மற்றும் கம்போடியா ஆகிய இரண்டு நாடுகள் தங்களது கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேம்படுத்தியதையடுத்து இந்தப் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டன.

- நிதியியல் நடவடிக்கைப் பணிக்குழு என்பது 1989 ஆம் ஆண்டில் ஜி7 என்ற அமைப்பால் ஏற்படுத்தப் பட்ட அரசுகளுக்கிடையேயான ஒரு அமைப்பு ஆகும்.
- இது உலகளாவியத் தரநிலைகளை நிர்ணயிப்பதன் மூலமும், உலக நாடுகள் அவற்றை மதிக்கிறதா என்று சோதிப்பதன் மூலமும் பணமோசடி (கறுப்புப் பணப் பரிமாற்றம்) மற்றும் தீவிரவாதத்திற்கு நிதியுதவி அளித்தல் ஆகியவற்றிற்கு எதிராக போராடச் செய்கிறது.

## ரஷ்யா மற்றும் START அணுசக்தி ஒப்பந்தம்

- அமெரிக்காவுடனான புதிய START என்ற அணு ஆயுதக் குறைப்பு ஒப்பந்தத்தில் தனது நாட்டின் ஈடுபாட்டினை இடை நிறுத்துவதாக ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் அவர்கள் அறிவித்தார்.
- START என்ற பெயர் "உத்திசார் ஆயுதக் குறைப்பு ஒப்பந்தம்" என்பதைக் குறிக்கிறது.
- இது START-I என்றும் அழைக்கப்படுகிறது.
- 1991 ஆம் ஆண்டில் அமெரிக்காவிற்கும் முன்னாள் சோவியத் ஒன்றிய அமைப்பிற்கும் இடையில் கையெழுத்தான இது 1994 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்தது.
- START-I ஒப்பந்தமானது, இரு நாடுகளும் நிலை நிறுத்தக் கூடிய அணு ஆயுதங்கள் மற்றும் கண்டம் விட்டு கண்டம் பாயும் உந்துவிசை ஏவுகணைகள் (ICBMs) ஆகியவற்றின் எண்ணிக்கையில் வரம்புகளை நிர்ணயித்த நிலையில், அந்த இரு நாடுகளும் முறையே 6,000 மற்றும் 1,600 என்ற வரம்பில் அவற்றை நிலை நிறுத்தலாம்.
- புதிய START ஒப்பந்தமானது, 2011 ஆம் ஆண்டு பிப்ரவரி 05 ஆம் தேதியன்று அதிகாரப் பூர்வமாக நடைமுறைக்கு வந்தது.
- அமெரிக்கா மற்றும் ரஷ்யக் கூட்டமைப்பு ஆகியவை பின்னர் இந்த ஒப்பந்தத்தினை 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி 04 ஆம் தேதி வரை நீட்டிக்க ஒப்புக் கொண்டிருந்தன.



## இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பதப்படுத்தப்பட்ட கடல்சார் உணவுப் பொருட்கள்

- இந்தியாவில் இருந்து பதப்படுத்தப்பட்ட (உறைந்த) கடல்சார் உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கான தற்காலிகத் தடையை கத்தார் நீக்கியுள்ளது.
- இந்த மேற்கு ஆசிய நாட்டுடனான ஒரு மேம்பட்ட ஏற்றுமதிக்கும், இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதற்கும் இது வழி வகுக்கிறது.
- இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சில சரக்குப் பொருட்களில் விப்ரியோ காலரா பாக்டீரியாக்கள் இருப்பது கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இந்தியாவில் இருந்து பதப்படுத்தப்பட்ட கடல்சார் உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதற்குத் தடை விதிக்கப் பட்டது.
- சமீபத்தில், பாக்டீரியாவின் பரவல் கட்டுப்பாடு மீதான இந்தியாவின் உத்தரவாதத்தை ஒப்புக் கொண்டதையடுத்து, பெய்ஜிங் அரசும் இந்தியாவினைச் சேர்ந்த 99 கடல்சார் உணவுப் பதப்படுத்துதல் ஏற்றுமதி நிறுவனங்களுக்கு விதிக்கப் பட்ட இடைக்காலத் தடையினையும் நீக்கியது.




## வின்ட்சார் கட்டமைப்பு `

- பிரதமர் ரிஷி சுனக் தலைமையிலான ஐக்கியப் பேரரசின் அரசானது ஐரோப்பிய ஒன்றியத்துடன் (EU) ஒரு முக்கிய ஒப்பந்தத்தினை மேற்கொண்டுள்ளது.
- இது வடக்கு அயர்லாந்தில் பின்பற்றப்பட உள்ள பிரெக்ஸிட் ஒப்பந்தத்திற்குப் பிந்தைய வர்த்தக விதிகளுக்கு உதவும்.
- 'வின்ட்சார் கட்டமைப்பு' ஆனது வடக்கு அயர்லாந்து நெறிமுறைக்கு மாற்றாக அமையும்.
- இது பொருளாதார மற்றும் அரசியல் ரீதியானப் பிரச்சனைகளை உருவாக்கிய, பிரெக்சிட் தோல்விக்குப் பிறகான சிக்கல் நிறைந்த ஒப்பந்தமாகும்.
- இந்த புதிய வின்ட்சார் கட்டமைப்பானது வடக்கு அயர்லாந்துப் பகுதிக்குள்ளேயே வணிகம் செய்யப் படும் பொருட்களுக்கான பச்சை வழித்தடம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திற்குக் கொண்டுச் செல்லப் படும் பொருட்களுக்கான சிவப்பு வழித்தடம் ஆகிய இரண்டு முக்கிய அம்சங்களைக் கொண்டுள்ளது.

- இது ஐக்கியப் பேரரசில் வடக்கு அயர்லாந்தின் நிலையைப் பாதுகாப்பதையும், அந்த நாட்டு மக்களின் இறையாண்மையை மீட்டெடுப்பதையும் நோக்கமாகக் கொண்டது.




## 'Chip 4' கூட்டணியின் விநியோகச் சங்கிலி மேலாண்மை குறித்த பேச்சுவார்த்தை

- ஜப்பான், அமெரிக்கா, தென் கொரியா மற்றும் தாய்வான் ஆகிய நாடுகள் இணைந்து "Chip 4" கூட்டணியின் காணொளி வாயிலான மாநாட்டில் பங்கேற்றன.
- குறை கடத்திகளின் நிலையான விநியோகத்தை உறுதிப்படுத்த உதவுவதற்காக, அமெரிக்கா தலைமையிலான புதியக் கட்டமைப்பின் கீழ் இந்த மாநாடானது நடத்தப் படுகிறது.
- இயற்கைப் பேரழிவுகள் மற்றும் பிற அவசர நிலைகளின் போது விநியோகச் சங்கிலியில் ஏற்படும் ஒரு பின்னடைவை எதிர்கொள்வதற்கான வழிகளைப் பற்றி விவாதிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## 83.7 சதவிகிதம் செறிவுமிக்க யுரேனியம்




- சர்வதேச அணுசக்தி முகமையானது, ஈரானின் ஃபோர்டோ என்ற நிலத்தடி அணு சக்தித் தளத்தில் 83.7 சதவீதம் வரை செறிவு கொண்ட யுரேனியம் மூலக்கூறுகளைக் கண்டுபிடித்துள்ளது.
- ஆனால் ஈரான் நாட்டில் 69 சதவீதத்திற்கு மேல் செறிவு கொண்ட யுரேனிய இருப்புகள் இல்லை.

- ஈரானின் 2015 ஆம் ஆண்டு அணுசக்தி ஒப்பந்தம் ஆனது தெஹ்ரானின் யுரேனியம் இருப்பு அளவினை 300 கிலோகிராம் (661 பவுண்டுகள்) ஆகவும் அதற்கான செறிவு வரம்பினை 3.67% ஆகவும் வரையறுத்துள்ளது.
- 3.67% செறிவு கொண்ட யுரேனியமானது அணுமின் நிலையத்திற்கு எரிபொருளாகப் பயன்படுத்தப் படுவதற்குப் போதுமானதாகும்.
- 2018 ஆம் ஆண்டில் இந்த ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா ஒருதலைப் பட்சமாக விலகியதால், தனது அணுசக்தித் திட்டத்தின் மீது தெஹ்ரான் தொடர்ச்சியான மாற்றங்கள் மற்றும் விரிவாக்கங்களை மேற்கொண்டது.

## சுவீடன் சர்வதேச தகவல் பிரச்சாரம்

- சுவீடன் அரசாங்கமானது புலம்பெயர்ந்தோர் தனது நாட்டிற்கு வருவதை குறைக்கச் செய்வதற்காக சர்வதேச தகவல் பிரச்சாரத்தை அறிவித்துள்ளது.
- இந்தப் பிரச்சாரமானது சுவீடன் அரசின் புலம்பெயர்வு கொள்கை பற்றிய மேலதிகத் தகவல்களைப் பரப்பும்.
- இந்தப் பிரச்சாரத்தின் போது, சுவீடன் அரசாங்கம் ஆனது வெளிநாடுகளில் தொடர்பு மையங்களை உருவாக்க உள்ளது.
- சுவீடன் அரசானது 1950 ஆம் ஆண்டு முதல் அகதிகளை வரவேற்று மீள்குடியேற்றம் செய்து வருகிறது.
- சுவீடன் அரசாங்கத்தின் கூற்றுப்படி, 2019 ஆம் ஆண்டில், நார்டிக் நாடுகளுக்கு வந்த அகதிகளில் 76% பேர் சுவீடனில் தஞ்சம் புகுந்தனர்.
- இந்தப் பிரச்சாரத்தை மேற்கொள்வதன் மூலம் இந்த அகதிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு சுவீடன் அரசு திட்டமிட்டுள்ளது.



## REAIM 2023

- ராணுவத்தில் செயற்கை நுண்ணறிவினைப் பொறுப்புமிக்க வகையில் பயன்படுத்தச் செய்தல் என்பது குறித்த உலகின் முதல் சர்வதேச உச்சி மாநாடானது நெதர்லாந்தில் நடைபெற்றது.
- 2023 ஆம் ஆண்டு REAIM மாநாடானது அரசாங்கங்கள், பெருநிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள், புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் குடிமைச் சமூகங்கள் ஆகிய பலவற்றினை ஒன்றிணைக்கிறது.

- இது விழிப்புணர்வை ஏற்படுத்துதல், பிரச்சினைகள் குறித்து விவாதித்தல் மற்றும் ஆயுத மோதல்களில் செயற்கை நுண்ணறிவினைப் பயன்படுத்துவதற்கெனவும் நிலை நிறுத்துவதற்கெனவும் விதிக்கப்பட்டுள்ள பொதுவான கொள்கைகளை ஏற்றல் ஆகியவற்றினை நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப் படுகிறது.

## இணைய சங்கேதப் பணம் குறித்த ஒன்பது அம்ச செயல் திட்டம்

- இணைய சங்கேதப் பணம் சார்ந்தவற்றினை உலக நாடுகள் எவ்வாறு கருத்தில் கொள்ள வேண்டும் என்பதற்கான ஒன்பது அம்ச செயல் திட்டத்தினைச் சர்வதேச நாணய நிதியம் வகுத்துள்ளது.
- நிதியியல் இறையாண்மையைப் பாதுகாப்பதற்காக, பிட்காயின் போன்றவற்றிற்குச் சட்டப்பூர்வப் பணம் என்ற அந்தஸ்து வழங்குவதற்கு இது எதிரானதாகும்.
- அதிகப்படியான மூலதன வரவினைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளுமாறு இதில் குறிப்பிடப் பட்டுள்ளது.
    - இணைய சங்கேதப் பணம் சார்ந்த சொத்துக்கள் தொடர்பான தெளிவான வரி விதிப்பு விதிமுறைகள் மற்றும் சட்டங்களைப் பின்பற்றுவதற்கு அறிவுறுத்தப் பட்டு உள்ளது.
    - அனைத்து இணைய சங்கேதப் பணம் சார்ந்த சந்தை நிறுவனங்களுக்குமான கண்காணிப்பு விதிமுறைகளை உருவாக்குவதற்கும் செயல்படுத்துவதற்கும் இணக்கம் தெரிவித்துள்ளது.
    - அமலாக்க விதிமுறைகளை அதிகரிப்பதற்காக வேண்டி சர்வதேச அளவிலான அமைப்புகளை நிறுவுதல்.
    - இணைய சங்கேதப் பணத்தின் தாக்கத்தினைக் கண்காணிப்பதற்கான வழி முறைகளை நிறுவுதல்.
    - இணைய சங்கேதப் பணத்தினைப் பயன்படுத்தச் செய்யும் நிறுவனங்களுக்கு வரி விதித்தல்.
- 2021 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் எல் சால்வடார், பிட்காயினை சட்டப்பூர்வப் பணமாக ஏற்றுக் கொண்ட முதல் நாடாக மாறியது.
- அந்நாட்டில் பிட்காயின் பயன்பாட்டின் போது 60 மில்லியன் அமெரிக்க டாலர்களுக்கு மேல் அந்நாட்டு பொருளாதாரம் இழந்ததோடு, பொருளாதார நெருக்கடி மற்றும் மிக அதிக நிதிப் பற்றாக்குறையையும் அந்நாடு எதிர்கொண்டது.
-

## சாதிப் பாகுபாட்டிற்குத் தடை

- சாதி அடிப்படையிலான பாகுபாட்டினைத் தடை செய்வதற்கான ஒரு சட்டத்தினைக் கொண்டு வந்த அமெரிக்காவின் முதல் நகரமாக சியாட்டில் மாறியுள்ளது.
- "பணியமர்த்தல், பதவிக்காலம், பதவி உயர்வு, பணியிட விதிமுறைகள் அல்லது ஊதியம் ஆகியவற்றில் சாதியின் அடிப்படையில் வணிக நிறுவனங்கள் பாகுபாடு காட்டுவதை" இது தடை செய்கிறது.
- தெற்காசியாவிலிருந்து 1,67,000க்கும் மேற்பட்ட மக்கள் வாஷிங்டன் மாகாணத்தில் வாழ்வதோடு, இவர்களில் பெரும்பாலோர் கிரேட்டர் சியாட்டில் நகரில் உள்ளனர்.

- 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், பாஸ்டன் நகருக்கு அருகிலுள்ள பிராண்டீஸ் பல்கலைக் கழகமானது தனது பாகுபாடற்றக் கொள்கையில் சாதியை உள்ளடக்கிய முதல் அமெரிக்கக் கல்லூரி ஆக மாறியது.




## வனுவாட்டு மற்றும் பருவநிலை நீதி

- ஐக்கிய நாடுகள் சபையில் (UN) பருவநிலை மாற்றம் தொடர்பான பிரச்சனையை எதிர்த்துப் போராடுவதற்காக 16 நாடுகளின் குழு ஒரு துணிச்சல்மிக்க முயற்சியை மேற்கொண்டுள்ளது.
- வனுவாடு குடியரசு தலைமையிலான இந்தக் குழுவானது, பருவநிலை மாற்றம் தொடர்பான பிரச்சினையில் சர்வதேச நீதிமன்றத்திடம் (ICJ) இருந்து ஆலோசனைக் கருத்தைக் கோருகிறது.
- "பருவநிலை மாற்றத்தின் பாதகமான விளைவுகளைத் தடுப்பதற்கும் அவற்றைச் சரி செய்வதற்குமான அனைத்து நாடுகளின் சட்டப்பூர்வக் கடமைகளைத் தெளிவு படுத்துவது" குறித்து சர்வதேச நீதிமன்றத்திடம் (ICJ) இருந்து ஆலோசனைக் கருத்தைப் பெறுவதற்காக வேண்டி, ஐக்கிய நாடுகள் பொதுச் சபை மூலம் வனுவாட்டு ஒரு முன்னெடுப்பினைத் தொடங்கியுள்ளது.
- சர்வதேச நீதிமன்றம் வாதாடுதல் (சர்ச்சைக்குரியப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல்) மற்றும் ஆலோசனை வழங்குதல் ஆகிய இரண்டு வகையான அதிகார வரம்புகளைக் கொண்டுள்ளது.
- சர்ச்சைக்குரியப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் என்ற அதிகார வரம்பு என்பது சம்பந்தப் பட்ட அரசுகளுக்கு இடையேயான பல்வேறு சட்ட ரீதியிலான மோதல்களைத் தீர்ப்பதைக் குறிக்கிறது.
- சர்ச்சைக்குரியப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் அதிகார வரம்பில் வழங்கப் பட்ட முடிவுகள் போலல்லாமல், ஆலோசனை அதிகார வரம்பின் கீழ் சர்வதேச நீதிமன்றம் வழங்கும் ஆலோசனைக் கருத்துக்கள் பிணைப்பு அதிகாரம் அற்றது.
- பருவநிலை மாற்றம் குறித்த சர்வதேச நீதிமன்றத்தின் ஆலோசனைக் கருத்து ஆனது உலக நாடுகள் அளவில் மேற்கொள்ளப்படும் பருவநிலை தொடர்பான வழக்குகளிலும் எளிதாகக் கிடைக்கப் பெறும்.




## கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை ஹுவாசங் 15

- ❖ வட கொரிய நாட்டு அரசானது, ஹுவாசங் 15 எனப்படும் தனது கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை (ICBM) கொரியாவின் கிழக்குக் கடல் பகுதியில் ஏவியது.
- ❖ இந்த ஏவுகணையானது அதிகபட்சமாக 5,768 கி.மீ. உயரம் வரம்பில் 989 கிமீ தூரம் வரை பாய்ந்தது.
- ❖ இது 14,000 கிலோமீட்டர் என்ற இயல்பான வரம்புடன் அமெரிக்கக் கண்டத்தினையும் அடையும் திறன் கொண்டது.
- ❖ இந்த ஏவுகணையானது 2017 ஆம் ஆண்டில் முதல் முறையாக ஏவப்பட்டது.

**North Korea's main intercontinental ballistic missiles**



| | Hwasong-14 | Hwasong-15 | Hwasong-17 |
|---|---|---|---|
| Range (km) | 10,000 | 8,500-13,000 | At least 15,000 |
| Length | 19.8 m | 21-22.5 m | 22-24 m |
| Diameter | 1.85 m | 2-2.4 m | 2.4 m |
| Engine | Two-stage | Two-stage | Three-stage |
| Key facts | Two were successfully fired in July 2017, shortly before sixth nuclear test. | First launched in November 2017. Leader Kim Jong Un declared the "completion" of the "state nuclear force." | Thought capable of carrying multiple to be nuclear warheads. Thursday's launch apparently failed. Claim of first successful launch in March 2022 may have involved an older version. |

Sources: Center for Strategic and International Studies, Yonhap News TV, others.
Photos: Korean Central News Agency via Reuters.

## முனிச் பாதுகாப்பு மாநாடு

- ❖ முனிச் பாதுகாப்பு மாநாடு என்பது ஜெர்மனியின் முனிச் நகரில் நடைபெறும் சம காலத்திய உலக நாடுகளின் பாதுகாப்புக் கொள்கை சார்ந்தச் சவால்கள் குறித்த ஒரு வருடாந்திர மாநாடு ஆகும்.

- ❖ முனிச் பாதுகாப்பு மாநாடானது, ஒரு ஜெர்மனி அதிகாரி மற்றும் பதிப்பாளர் எவால்ட் ஹெயின்ரிச் வோன் க்ளெய்ஸ்ட் என்பவரால் பனிப்போர் (1947-1991) உச்சக் கட்டத்தில் இருந்த போது நிறுவப்பட்டது.
- ❖ 1963 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்த மாநாடானது ஆரம்பத்தில் இராணுவப் பிரச்சினைகளில் மட்டுமே கவனம் செலுத்தியது.
- ❖ மேலும், பெரும்பாலும் மேற்கத்திய நாடுகளும் அவற்றின் உயர்மட்ட அதிகாரிகளும் மட்டுமே இதில் கலந்து கொண்டனர்.
- ❖ பனிப்போர் முடிவடைந்த பின்னர், பாதுகாப்பு சார்ந்த விஷயங்களுக்கும் அப்பாற் பட்டுப் பருவநிலை மாற்றம் மற்றும் புலம்பெயர்வு போன்ற பிரச்சினைகளையும் உள்ளடக்கிய வகையில் தனது செயல்பாட்டு நிரலை விரிவுபடுத்தியது.
- ❖ ரஷ்யா, இந்தியா மற்றும் சீனா உள்ளிட்ட கிழக்கு நாடுகளின் தலைவர்களையும் இதில் பங்கேற்பதற்காக அழைப்பு விடுக்கத் தொடங்கியது.

## உலகப் பாதுகாப்பு முன்னெடுப்பு




- ❖ சமீபத்தில் சீனாவின் அதிபர் ஒரு புதிய உலகப் பாதுகாப்பு முன்னெடுப்பினை (GSI) முன்மொழிந்துள்ளார்.
- ❖ உலகப் பாதுகாப்பு முன்னெடுப்பானது, "பொதுவான, விரிவான, கூட்டுறவு மற்றும் ஒரு நிலையான" பாதுகாப்பிற்கான அழைப்பினை விடுப்பதோடு, பரஸ்பர மதிப்பு, தடை அற்ற நிலை மற்றும் ஒருங்கிணைப்பு ஆகியவற்றிற்கான ஆசியப் பாதுகாப்பு மாதிரியை உருவாக்குகிறது.
- ❖ இது அமெரிக்காவின் இந்தோ-பசிபிக் உத்தி சார் கூட்டமைப்பு மற்றும் குவாட் அமைப்பு (இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான் குழுமம்) ஆகியவற்றிற்கு நேர்மாறாகச் செயல்படுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- உலகளாவியப் பாதுகாப்பு முன்னெடுப்பானது "பகுக்க முடியாதப் பாதுகாப்பு" என்ற கொள்கையை நிலை நிறுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்று சீனா கூறியது.
- "பகுக்க முடியாத பாதுகாப்பு" என்ற கொள்கையின் பொருள், எந்தவொரு நாடும் மற்ற நாடுகளின் இழப்பின் மூலம் தனது சொந்தப் பாதுகாப்பைப் பலப்படுத்த முடியாது என்பதாகும்.

## ஆசிய ஆற்றல் மாற்ற முன்னெடுப்பு (AETI)

- ஜப்பானின் 'ஆசிய நாடுகளின் ஆற்றல் மாற்ற முன்னெடுப்பினை' விரிவுபடுத்துவதன் மூலம் தூய்மையான ஆற்றல் மாற்றத்தினை நோக்கியப் பாதையில் இந்தியாவிற்கு உதவி வழங்க ஜப்பான் திட்டமிட்டுள்ளது.
- ஜப்பான் நாட்டின் ஆசிய ஆற்றல் மாற்ற முன்னெடுப்பானது (AETI) 2021 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது.
- இந்த முன்னெடுப்பானது ஆரம்பத்தில் நிகரச் சுழிய உமிழ்வு என்ற ஒரு நிலையினை அடைவதற்கு தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பு (ASEAN) சார்ந்த சில நாடுகளுக்கு ஆதரவு அளித்தது.
- 2070 ஆம் ஆண்டிற்குள் நிகரச் சுழிய உமிழ்வு நிலையினை அடைவதற்கான இலட்சிய மிக்க இலக்கினை இந்தியா நிர்ணயித்துள்ளது.
- ஜப்பான் நாடானது 2050 ஆம் ஆண்டிற்குள் நிகரச் சுழிய நிலையினை அடைவதென்ற இலக்கினை நிர்ணயித்துள்ளது.
- உமிழ்வினைக் குறைக்க உதவும் புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் பொருளாதார மாதிரிகளை இந்த நாடுகள் பயன்படுத்துகின்றன.




Renewable Energy Generation in Japan

## கோப்ரா வாரியர் பயிற்சி

- கோப்ரா வாரியர் பயிற்சியானது இங்கிலாந்தின் வாடிங்டன் விமானப்படை தளத்தில் நடைபெற உள்ளது.
- இது பின்லாந்து, சுவீடன், தென்னாப்பிரிக்கா, அமெரிக்கா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் விமானப் படைகள் பங்கேற்கின்ற பலதரப்பு விமானப் பயிற்சியாகும்.

- மிராஜ் 2000 போர் விமானங்கள், C-17 க்ளோப் மாஸ்டர் III மற்றும் IL-78 நடுவானில் எரிபொருள் நிரப்புவதற்கான விமானம் ஆகியவற்றுடன் இந்தியப் படையும் இந்தப் பயிற்சியில் பங்கேற்கிறது.




## இந்தியா-ஆசியான் எண்ணிமச் செயல்பாட்டுத் திட்டம் 2023

- இந்தியாவுடனான 3வது ASEAN எண்ணிம அமைச்சர்கள் (ADGMIN) கூட்டமானது காணொளி வாயிலாக நடைபெற்றது.
- இந்தக் கூட்டத்தின் போது 2023 ஆம் ஆண்டு இந்தியா-ஆசியான் எண்ணிமச் செயல்பாட்டுத் திட்டமானது அங்கீகரிக்கப் பட்டது.
- இந்தத் திட்டத்தில், இணையவெளிப் பாதுகாப்பில் செயற்கை நுண்ணறிவு, அடுத்தத் தலைமுறை தொழில்நுட்பம் சார்ந்த திறன்மிகு நகரங்களில் இணைய உலக வலை அமைப்பு மற்றும் செயற்கை நுண்ணறிவு போன்ற துறைகளில் திறன் மேம்பாடு மற்றும் தகவல் பகிர்வு மற்றும் எண்ணிம வளம் & பாதுகாப்பு ஆகியவற்றினைச் செயல்படுத்துவதில் தகவல்தொடர்புத் தொழில்நுட்பங்களின் பங்கு ஆகியவை அடங்கும்.
- இந்தக் கூட்டத்திற்கான கருத்துரு, "நிலையான எண்ணிமம் சார்ந்த எதிர்காலத்தை நோக்கிய ஒருங்கிணைப்பு" என்பதாகும்.
- தகவல் தொழில்நுட்பத் துறையில் இந்தியா மற்றும் ASEAN கூட்டமைப்பு நாடுகள் ஆகியவற்றிற்கு இடையிலான பலத்தை மேம்படுத்துவதே இந்தக் கூட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.



## குவாட் நாடுகளின் இணையவெளிப் பாதுகாப்பு சவால்

- நாற்கரப் பாதுகாப்புப் பேச்சுவார்த்தை அமைப்பு அல்லது குவாட் அமைப்பு, தங்களது நாடுகளில் இணையப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக என்று, 'குவாட் நாடுகளின் இணையவெளிப் பாதுகாப்பு சவால்' என்ற பொதுப் பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.
- குவாட் அமைப்பானது இந்திய-பசிபிக் மற்றும் அதற்கு அப்பால் உள்ள நாடுகளின் இணையப் பயனர்களை இந்தச் சவாலின் ஓர் அங்கமாக விளங்கவும், "பாதுகாப்பான மற்றும் பொறுப்புமிக்க இணையவெளிப் பழக்க வழக்கங்களைப் பின்பற்றவும் அழைப்பு விடுத்துள்ளது.
- இவை இணைய வெளிப் பாதுகாப்பு விழிப்புணர்வு மற்றும் நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கும், உலக நாடுகள் மற்றும் பல்வேறு பயனர்களுக்குப் பயனளிக்கும் வகையில் மிகவும் பாதுகாப்பான மற்றும் நெகிழ்திறன் மிக்க இணையச் சூழலை உருவாக்குவதற்குமான குவாட் நாடுகளின் தொடர்ச்சியான முயற்சிகளாகும்.
- இந்தியாவில் இந்த நடவடிக்கைகளானது, தேசியப் பாதுகாப்புச் சபையின் செயலகத்துடன் இணைந்துத் தேசிய இணையவெளி ஒருங்கிணைப்பு அலுவலகம் என்பதினால் ஒருங்கிணைக்கப்படுகிறது.
- குவாட் அமைப்பானது இந்தியா, அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளை உள்ளடக்கியதாகும்.



## 9வது ஆசிய நாடுகளின் எரிசக்தி அமைச்சர்கள் வட்டமேசை (AMER9) மாநாடு

- பெங்களூருவில் நடைபெற்ற சர்வதேச எரிசக்தி மன்றத்துடன் (IEF) சேர்த்து 9வது ஆசிய நாடுகளின் எரிசக்தி அமைச்சர்கள் வட்டமேசை (AMER9) மாநாட்டினையும் இந்திய அரசு நடத்துகிறது.
- இந்த நிகழ்வின் கருத்துரு, "எரிசக்தி பாதுகாப்பு, உள்ளார்ந்த வளர்ச்சி மற்றும் எரிசக்தி வள மாற்றங்களுக்கான புதிய பாதைகளை உருவாக்குதல்" என்பதாகும்.
- 2030 ஆம் ஆண்டிற்குள் தனது 40% எரிசக்தித் தேவையினை, புதைபடிவம் சாரா எரிசக்தி மூலங்களிலிருந்து பெற வேண்டும் என்ற தனது உறுதிப்பாட்டை 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலேயே இந்தியா பூர்த்தி செய்துள்ளது.
- சர்வதேச எரிசக்தி மன்றம் (IEF) ஆனது 71 உறுப்பினர் நாடுகளைக் கொண்ட உலகின் மிகப்பெரிய எரிசக்தி அமைப்பாகும்.
- இதன் உறுப்பினர் நாடுகள், உலக எரிசக்திச் சந்தையில் 90 சதவீதத்தினைக் கொண்டு உள்ளன.

## 5வது சர்வதேச பாதுகாக்கப்பட்ட கடல்சார் பகுதிகள் மாநாடு

- சமீபத்தில், 5வது சர்வதேச பாதுகாக்கப்பட்ட கடல்சார் பகுதிகள் மாநாடு (IMPAC5) ஆனது கனடாவில் நடைபெற்றது.
- பாதுகாக்கப்பட்ட கடல்சார் பகுதிகளுக்கான நிதி வழங்கீட்டில் உள்ள இடைவெளியை நிவர்த்தி செய்வதற்கான பல தீர்வுகளைப் பற்றி விவாதிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த மாநாடானது ஒரு தடையற்ற மற்றும் மதிப்புமிக்கச் சூழலில் பலவிதமான கருத்துகளுக்கு இடையே உலக நாடுகள் தங்களது கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்கும், தகவல், வெற்றி பெற்ற மற்றும் சிறந்த நடைமுறைகளைப் பகிர்வதற்குமான ஒரு மன்றத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த நிகழ்வில் மூன்று பாதுகாக்கப்பட்ட கடல்சார் பகுதிகள் (MPAs) மதிப்புமிக்க ப்ளூ பார்க் விருதுகளை வென்றன.




## எரிவாயு மற்றும் டீசல் ஆகிய எரிபொருட்களில் இயங்கும் மகிழுந்துகளின் விற்பனைக்குத் தடை

- ஐரோப்பிய ஒன்றியத்தில் எரிவாயு மற்றும் டீசல் ஆகிய எரிபொருட்களில் இயங்கும் புதிய மகிழுந்துகளின் விற்பனையை 2035 ஆம் ஆண்டு முதல் தடை செய்யும் ஒரு சட்டத்திற்கு ஐரோப்பியப் பாராளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.
- ஆனால் அந்நாட்டு உற்பத்தியாளர்கள் மகிழுந்துகளைத் தயாரித்து மற்ற நாடுகளில் விற்க அனுமதிக்கப்பட்டுள்ளது.
- இந்தப் புதியச் சட்டமானது 2035 ஆம் ஆண்டில் புதிய பயணிகள் மகிழுந்துகள் மற்றும் இலகுரக வணிக வாகனங்களுக்கானச் சுழிய அளவு $CO_2$ உமிழ்வை நோக்கிய ஒரு பாதையினை அமைக்கிறது.
- ஐரோப்பிய ஒன்றியச் சந்தையில் விற்கப்படும் மகிழுந்துகள் மற்றும் இலகுரக வாகனங்களின் முழு பயன்பாட்டுச் சுழற்சி முழுவதும் வெளியிடப்படும் $CO_2$ உமிழ்வுகள் பற்றியத் தரவை மதிப்பிடுவதற்கும் அது குறித்து அறிக்கை வழங்கச் செய்வதற்குமான ஒரு வழிமுறையை 2025 ஆம் ஆண்டிற்குள் ஆணையம் முன் வைக்க உள்ளது.

- இந்தக் கட்டுப்பாடானது சுழிய அளவு மற்றும் குறைந்த அளவு உமிழ்வினை வெளியிடும் வாகனங்களின் உற்பத்தியை ஊக்குவிக்கிறது.




## IDEX மற்றும் NAVDEX

- NAVDEX 23 (கடற்படைப் பாதுகாப்பு சார் கண்காட்சி) மற்றும் IDEX 23 (சர்வதேசப் பாதுகாப்பு சார் கண்காட்சி) ஆகியவற்றில் பங்கேற்பதற்காக இந்தியக் கடற்படை தனது ஐ.என்.எஸ் சுமேதா என்ற கப்பலினை அனுப்பியுள்ளது.
- IDEX-UAE என்பது சர்வதேச அளவில் உத்திசார் முக்கியத்துவம் வாய்ந்த முப்படை சார்ந்த ஒரு பாதுகாப்புக் கண்காட்சியாக கருதப்படுகிறது.
- மத்தியக் கிழக்கு மற்றும் வடக்கு ஆப்பிரிக்க நாடுகளின் (MENA) பிராந்தியத்தில் நடைபெறும் ஒரே சர்வதேச அளவிலான பாதுகாப்புக் கண்காட்சி மற்றும் மாநாடு இதுவே ஆகும்.
- இது உலக நாடுகளின் பாதுகாப்புத் துறையில் கிடைக்கப் பெறும் நிலம், கடல் மற்றும் வான் சார்ந்த சமீபத்திய நவீன தொழில்நுட்பங்களைக் காட்சிப்படுத்துகிறது.
- 2014 ஆம் ஆண்டில் இந்தியக் கடற்படையில் இணைக்கப் பட்ட உள்நாட்டிலேயே கட்டமைக்கப் பட்ட சரயு ரக கடற்படைக் கடல் ரோந்துக் கப்பல்களில் 3வது கப்பல் ஐ.என்.எஸ் சுமேதா ஆகும்.



## டெஸர்ட் ஃபிளாக் VIII - பயிற்சி




- ❖ ஐக்கிய அரபு அமீரகமானது, 3 வார கால அளவிலான டெஸர்ட் ஃபிளாக் VIII என்ற பயிற்சியினை நடத்துகிறது.
- ❖ இது ஐக்கிய அரபு அமீரகம், பிரான்சு, குவைத், ஆஸ்திரேலியா, ஐக்கியப் பேரரசு, பஹ்ரைன், மொராக்கோ, ஸ்பெயின், கொரியக் குடியரசு மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் பங்கேற்கும் பலதரப்பு வான்படைப் பயிற்சியாகும்.
- ❖ இது பல்வேறு போர் விமானச் செயல்பாடுகளின் இயங்குந்தன்மை மற்றும் பல்வேறு விமானப்படைகளின் சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்து கொள்வது ஆகியவற்றினை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இந்திய விமானப் படையானது இந்தப் பயிற்சியில் 5 LCA தேஜாஸ் விமானங்களுடனும், 2 C-17 க்ளோப்மாஸ்டர் III விமானங்களுடனும் பங்கேற்க உள்ளது.
- ❖ இந்தியாவிற்கு வெளியில் ஒரு சர்வதேச விமானப் படைப் பயிற்சியில் LCA தேஜாஸ் வகை விமானங்கள் பங்கேற்பது இதுவே முதன்முறையாகும்.

## மலபார் பயிற்சி 2023

- ❖ 2023 ஆம் ஆண்டு மலபார் பயிற்சியானது ஆகஸ்ட் மாதம் நடைபெற உள்ள நிலையில் இந்த ஆண்டு மலபார் பயிற்சியினை ஆஸ்திரேலியா நடத்த உள்ளது.
- ❖ 2020 ஆம் ஆண்டில் நடைபெற்ற மலபார் பயிற்சியில், ஆஸ்திரேலியா அதன் நிரந்தர உறுப்பினராக சேர்க்கப்பட்டது.
- ❖ ஜப்பான் 2015 ஆம் ஆண்டில் இந்தக் கடற்படைப் பயிற்சியில் சேர்ந்தது.
- ❖ 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் நடைபெற்ற இதற்கு முந்தைய மலபார் பயிற்சியினை ஜப்பான் நடத்தியது.
- ❖ 2022 ஆம் ஆண்டு மலபார் பயிற்சியானது, 1992 ஆம் ஆண்டில் இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான இருதரப்புப் பயிற்சியாகத் தொடங்கப்பட்ட இந்தப் பயிற்சியின் 30 ஆண்டுகள் நிறைவினைக் குறிக்கிறது.




## உலகின் மிக நீளமான சித்திரச் சுவரோவியம்

- சவுதி அரேபியா மக்காவின் பெரிய மசூதிக்குச் செல்லும் சாலையான கிங் அப்துல் அஜிஸ் தெருவில் உலகின் மிக நீளமான சித்திரச் சுவரோவியத்தினை நிறுவியுள்ளது.
- கலைஞர் அமல் ஃபெலம்பன் என்பவர் வடிவமைத்த இந்த 75 மீட்டர் நீளமுள்ள சுவரோவியமானது, சாதனைச் சிற்பங்கள் மற்றும் கட்டிடங்களின் பட்டியலில் இணைகிறது.
- இந்தச் சுவரோவியம் ஆனது அந்நாட்டு மக்களின் பாரம்பரியம், கருத்துக்கள் மற்றும் பல ஆண்டு கால வரலாறு ஆகியவை முழுவதும் பறைசாற்றும் வகையில் அழகினை வெளிப்படுத்துகிறது.



## மீன்பிடி மானியம் தொடர்பான புதிய ஒப்பந்தம்

- மீன்பிடி மானியம் தொடர்பான புதிய ஒப்பந்தத்தை அதிகாரப் பூர்வமாக ஏற்றுக் கொண்ட உலக வர்த்தக அமைப்பின் முதல் உறுப்பினர் நாடு சுவிட்சர்லாந்து ஆகும்.
- இந்த ஒப்பந்தத்தினை அங்கீகரித்த இரண்டாவது உறுப்பினராக சிங்கப்பூர் மாறியது.
- 2022 ஆம் ஆண்டில் நடைபெற்ற 12வது அமைச்சர்கள் மாநாட்டில் உலக வர்த்தக அமைப்பின் மீன்பிடி மானியங்கள் தொடர்பான ஒப்பந்தம் ஆனது ஏற்றுக் கொள்ளப் பட்டது.

- இது உலகின் மீன்வளம் பெருமளவில் குறைந்து வருவதற்கு ஒரு முக்கியக் காரணியாக இருக்கும் தீங்கு விளைவிக்கும் வகையிலான மீன்பிடி மானியங்களைத் தடை செய்யும் ஒப்பந்தமாகும்.
- வளர்ந்து வரும் நாடுகள் மற்றும் குறைந்த அளவு வளர்ச்சியடைந்த நாடுகள் ஆகியவற்றிற்கு, இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்த நாளிலிருந்து இரண்டு ஆண்டுகள் வரையில் ஒரு பரிமாற்ற காலமாக கடைப்பிடிக்கப் பட அனுமதிக்கப் பட்டு உள்ளது.
- உலக வர்த்தக அமைப்பின் சுற்றுச்சூழல் மீது கவனம் செலுத்தும் முதல் ஒப்பந்தம், கடல் நிலைத் தன்மையின் மீதான முதல் பரந்த, பிணைப்பு சார், பலதரப்பு ஒப்பந்தம் இதுவாகும்.
- மேலும், இது உலக வர்த்தக அமைப்பு தொடங்கப்பட்டதிலிருந்து அதில் மேற்கொள்ளப் பட்ட இரண்டாவது ஒப்பந்தம் இதுவாகும்.




## ப்ளூஸ்கை

- ட்விட்டர் ஊடகத்தின் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரியும் நிறுவனருமான ஜாக் டோர்சி ப்ளூஸ்கை எனப்படும் தனது சொந்தச் சமூக ஊடக தளத்தினைத் தொடங்கி உள்ளார்.
- ப்ளூஸ்கை என்பது பகிரும் வகையிலான மற்றும் தடையற்ற ஒரு சமூக ஊடக தளத்தை உருவாக்கச் செய்வதற்குப் பயனர்களை அனுமதிக்கும் ஒரு கொள்கையை அடிப்படையாகக் கொண்டதாகும்.



## தெற்கு-தெற்கு நாடுகள் இடையிலான ஒத்துழைப்பு குறித்த கத்தார் அமைச்சர்கள் கூட்டம்

- LDC5 மாநாட்டின் போது (குறைவான அளவில் வளர்ச்சியடைந்த நாடுகள்) தெற்கு-தெற்கு நாடுகள் இடையிலான ஒத்துழைப்பு குறித்த அமைச்சர்கள் கூட்டமானது நடைபெற்றது.
- இது உறுதியான, புதுமை மிக்க மற்றும் செயல்படுத்தக் கூடிய வகையிலான தீர்வுகளை ஆராய்ந்து வெளிக் கொணர்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தெற்கு-தெற்கு நாடுகள் இடையிலான ஒத்துழைப்புத் தடமானது, தோஹா செயல் திட்டத்தின் வழங்கீடுகளுக்கு ஆதரவாக என்று பரந்த கூட்டாண்மைகளை உருவாக்கச் செய்வதற்கான ஒரு தளத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




## ஐக்கிய நாடுகள் சபையின் தொலைதூரப் பெருங்கடல் பரப்புப் பாதுகாப்பு ஒப்பந்தம்

- ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பினர் நாடுகள், கடல் பரப்பின் மூன்றில் இரண்டு பங்கை உள்ளடக்கிய சர்வதேசக் கடல் பரப்பில் உள்ள பல்லுயிர்த் தன்மையினைப் பாதுகாப்பதற்கான ஒரு சர்வதேச ஒப்பந்தத்தில் ஒப்புக் கொண்டுள்ளன.
- மேலும் இது பெருங்கடல் மீதான பாரீஸ் ஒப்பந்தம் எனவும் அழைக்கப் படுகின்றது.
- 1982 ஆம் ஆண்டில், கடல்சார் சட்டம் தொடர்பான ஐக்கிய நாடுகள் உடன்படிக்கை அல்லது UNCLOS ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- இந்த உடன்படிக்கையானது பெருங்கடல்கள் மற்றும் அதன் வளங்களைப் பயன்படுத்துவதற்கான விதிகளை வரையறுத்தது.
- ஆனால் எந்த நாடுகளின் கட்டுப்பாட்டிற்குள்ளும் அடங்காத பகுதிகளுக்கான ஒரு விரிவானச் சட்ட முறைமை எதுவும் உருவாக்கப்படவில்லை.
- 1958 ஆம் ஆண்டு ஜெனீவா தொலைதூரப் பெருங்கடல்பரப்பு உடன்படிக்கையின் படி, ஒரு நாட்டின் பிராந்திய நீர்ப் பரப்பு அல்லது உள்நாட்டு நீர் வளத்தில் சேர்க்கப்படாத கடல் பகுதிகள் தொலைதூரப் பெருங்கடல்பரப்பு என்று அழைக்கப் படுகின்றன.
- இது கடற்கரையிலிருந்து 200 கடல் மைல்கள் (370 கிமீ) வரை நீண்டு காணப்படுகின்ற, ஒரு நாட்டின் பிரத்தியேகப் பொருளாதார மண்டலத்திற்கு அப்பால் அமைந்துள்ள பகுதியாகும்.
- தொலைதூரப் பெருங்கடல் பரப்புகளில் உள்ள வளங்களின் மேலாண்மை மற்றும் பாதுகாப்பிற்கு எந்த நாடும் பொறுப்பேற்காது.

- தொலைதூரப் பெருங்கடல்பரப்புகள் உலகின் கடல் பரப்பில் 60%க்கும் அதிகமான பரப்பினை உள்ளடக்கியதோடு, அவை பூமியின் மேற்பரப்பில் பாதியளவினை உள் அடக்கியதாகும்.
- உயிரியல் பன்முகத் தன்மைக்கான உடன்படிக்கை மீதான (COP15) பங்குதாரர்கள் மாநாட்டில், 2030 ஆம் ஆண்டிற்குள் 30% கடல் பரப்புகளைப் பாதுகாப்பதற்கு உறுப்பினர் நாடுகள் ஒப்புக் கொண்டன.
- இது வரலாற்றுச் சிறப்புமிக்க குன்மிங்-மாண்ட்ரியல் உலகப் பல்லுயிர்க் கட்டமைப்பு அமைப்பினால் கொண்டு வரப்பட்ட (GBF) '30 x 30 உறுதிமொழியின்' ஒரு பகுதி ஆகும்.




## CITES உடன்படிக்கையின் 50வது ஆண்டு நிறைவு

- அழிந்து வரும் வனவிலங்குகள் மற்றும் தாவர உயிரினங்களில் மேற்கொள்ளப்படும் சர்வதேச வர்த்தகம் தொடர்பான உடன்படிக்கையானது (CITES) 1973 ஆம் ஆண்டு மார்ச் 03 ஆம் தேதியன்று கையெழுத்தானது.
- CITES என்பது, அழிந்து வரும் தாவரங்கள் மற்றும் விலங்குகளின் உடல் பாகங்கள் மற்றும் அவற்றிலிருந்துப் பெறப்படும் தருவிப்புகள் உட்பட அவற்றின் வர்த்தகத்தை ஒழுங்குபடுத்துவதையும் கண்காணிப்பதையும் நோக்கமாகக் கொண்ட ஒரு சர்வதேச ஒப்பந்தமாகும்.




- CITES உடன்படிக்கையின் கீழ், அனுமதி வழங்கீடு மற்றும் ஒதுக்கீட்டு முறை ஆகியவை மூலம் அழிந்து வரும் உயிரினங்களின் வர்த்தகத்தினை உறுப்பினர் நாடுகள் ஒழுங்கு படுத்தவும் கண்காணிக்கவும் வேண்டும்.

- மேலும் அவை இந்த உடன்படிக்கையினை நடைமுறைப்படுத்தச் செய்வது குறித்து தவறாமல் அறிக்கை அளிக்க வேண்டும் என்பதோடு, மேலும், அதன் செயல்திறனை உறுதி செய்வதற்காக மற்ற நாடுகளுடன் இணைந்து அவை செயல்பட வேண்டும்.
- சர்வதேச வர்த்தகத்தின் காரணமாக, சுரண்டலுக்கு (அதிகப் பாதிப்பிற்கு) உள்ளாகும் கிட்டத்தட்ட 40,000 இனங்களை இந்த உடன்படிக்கை பாதுகாக்கிறது.
- தற்போது, CITES உடன்படிக்கையில் 184 நாடுகள் கையெழுத்திட்டுள்ளன.

## ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் புறக்கணிப்பு – அறிக்கை




FIGURE 1: Trends in the prevalence of underweight in adolescent girls aged 10–19 years and women aged 20–49 years and anaemia in adolescent girls and women aged 15–49 years

- யுனிசெஃப் அமைப்பானது, ‘ஊட்டச்சத்து குறைபாடு மிக்க மற்றும் புறக்கணிக்கப் பட்டவர்கள்: உலகிலுள்ள இளம் பருவ வயது சிறுமிகள் மற்றும் பெண்கள் மத்தியில் நிலவும் ஊட்டச்சத்து நெருக்கடி’ என்ற அறிக்கையை வெளியிட்டது.
- இது இளம் பருவ வயது பெண்கள் மற்றும் இனப்பெருக்க வயதுடைய பெண்களின் ஊட்டச்சத்து அளவில் உள்ள தற்போதைய நிலை, போக்குகள் மற்றும் ஏற்றத்தாழ்வு ஆகியவற்றை ஆராய்கிறது.
- 12 நாடுகளில் 2020 ஆம் ஆண்டு முதல் 5.5 மில்லியனாக இருந்த கடுமையான ஊட்டச் சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்ட கர்ப்பிணி மற்றும் தாய்ப்பால் கொடுக்கும் பருவ வயது பெண்கள் மற்றும் பெண்களின் எண்ணிக்கையானது 6.9 மில்லியனாக அல்லது 25 சதவீதமாக உயர்ந்துள்ளது.
- அந்த 12 நாடுகள்; ஆப்கானிஸ்தான், புர்கினா பாசோ, சாத், எத்தியோப்பியா, கென்யா, மாலி, நைஜர், நைஜீரியா, சோமாலியா, தெற்கு சூடான், சூடான் மற்றும் ஏமன் ஆகியன ஆகும்.
- உலகளவில், 2 வயதிற்குட்பட்ட 51 மில்லியன் குழந்தைகள் வளர்ச்சி குன்றிய நிலையில் அதாவது ஊட்டச்சத்துக் குறைபாடு காரணமாக அவர்கள் வயதிற்கு ஏற்ற உயரத்தினைக் காட்டிலும் குறைவான உயரத்தில் உள்ளனர்.
- தெற்காசியா மற்றும் ஆப்பிரிக்காவின் துணை-சஹாரா பகுதிகள் ஆகியவை இளம் பருவ வயது சிறுமிகள் மற்றும் பெண்களிடையே ஊட்டச்சத்து குறைபாடு அதிகமாக காணப்படும் பகுதிகளாக விளங்குகின்றன.

- இப்பகுதியானது, உலகளவில் குறைந்த எடையால் பாதிக்கப்பட்ட மூன்றில் இரண்டு இளம்பருவ சிறுமிகள் மற்றும் பெண்களைக் கொண்ட, மேலும் இரத்த சோகையினால் பாதிக்கப்பட்ட ஐந்தில் மூன்று இளம்பருவ சிறுமிகள் மற்றும் பெண்களைக் கொண்ட நாடுகளாகும்.
- 2021 ஆம் ஆண்டில், 126 மில்லியன் பெண்கள் ஆண்களை விட உணவுப் பாதுகாப்பற்ற நிலையில் உள்ள நிலையில் இது 2019 ஆம் ஆண்டில் சுமார் 49 மில்லியன் ஆக இருந்தது.

## FRINJEX-23

- இந்திய இராணுவத்திற்கும் பிரெஞ்சு இராணுவத்திற்கும் இடையிலான முதலாவது கூட்டு இராணுவப் பயிற்சியான FRINJEX-23 கேரளாவின் பாங்கோடு இராணுவ மையத்தில் நடத்தப்பட்டது.
- இரு நாடுகளும் ஒரு குழுவினை உள்ளடக்கிய ஒரு படைப்பிரிவுடன் இந்த வகையிலான பயிற்சியில் ஈடுபடுவது இதுவே முதல் முறையாகும்.
- இந்தப் பயிற்சியானது உத்திசார் நிலையில் இரு நாடுகளுக்கு இடையிலான இயங்குந் தன்மை, ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- "ஒரு போட்டிமிக்கச் சூழலில் மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரண நடவடிக்கைகள்" என்ற கருத்துருவின் கீழ் இந்தப் பயிற்சியானது மேற்கொள்ளப் பட்டது.




## IMX/CE-23 பயிற்சி

- INS திரிகண்ட் என்ற கப்பலானது வளைகுடாப் பகுதியில் நடத்தப் படுகின்ற சர்வதேச கடல்சார் பயிற்சி/ கட்லாஸ் எக்ஸ்பிரஸ் 2023 (IMX/CE-23) என்ற பயிற்சியில் பங்கேற்கச் செய்றது.
- இது அமெரிக்கா தலைமையிலான 34 நாடுகளைக் கொண்ட கடற்படைக் குழுவான, ஒருங்கிணைந்த கடல்சார் படைகளால் (CMF) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

- 50க்கும் மேற்பட்ட நாடுகள் மற்றும் சர்வதேச கடல்சார் முகமைகளின் பங்கேற்புடன் சேர்ந்து திரிகண்ட் கப்பலும் இப்பயிற்சியில் பங்கேற்க உள்ளது.
- IMX/CE-23 என்பது உலகின் மிகப்பெரியப் பன்னாட்டுக் கடல்சார் பயிற்சிகளில் ஒன்று ஆகும்.
- சர்வதேசக் கடல்சார் பயிற்சியில் இந்தியக் கடற்படை பங்கேற்பது இது முதல் முறை என்றாலும், ஒருங்கிணைந்த கடல்சார் படைகளின் பயிற்சியில் இந்தியக் கடற்படைக் கப்பல் பங்கேற்பது இது இரண்டாவது முறையாகும்.
- முன்னதாக, 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில், ஒருங்கிணைந்தக் கடல்சார் படைகளினால் நடத்தப்பட்ட சீ ஸ்வார்டு 2 என்ற நடவடிக்கையில் INS திரிகண்ட் என்ற கப்பல் பங்கேற்றது.




## கடல்சார் கூட்டாண்மைப் பயிற்சி (MPX)



- இந்தியக் கடற்படையின் ஐஎன்எஸ் சஹ்யாத்ரி கப்பலானது, பிரெஞ்சுக் கடற்படைக் கப்பல்களுடன் இணைந்து அரபிக் கடலில் நடைபெற்ற ஒரு கடல்சார் கூட்டாண்மைப் பயிற்சியில் பங்கேற்றது.
- இந்தப் பயிற்சியில், கப்பல்களுக்கிடையேயான தரையிறக்கம், விமான ஏற்றம் தொடர்பானப் பயிற்சிகள் மற்றும் கப்பல் போக்குவரத்துச் செயல்திறன் போன்ற பல

பரிணாமங்களை உள்ளடக்கிய பரந்த அளவிலான பரிணாமங்களில் பயிற்சிகள் மேற் கொள்ளப் பட்டன.

- ❖ ஐஎன்எஸ் சஹ்யாத்ரி என்பது ஷிவாலிக் வகுப்பின் மேம்பட்ட, ரேடாருக்குப் புலப்படாத, வழிகாட்டுதலுடன் கூடிய ஏவுகணை தாங்கி போர்க் கப்பலாகும்.

## குறைவான வளர்ச்சி பெற்ற நாடு நிலை - பூடான்

- ❖ ஐக்கிய நாடுகள் சபையின் (UN) குறைவான வளர்ச்சி பெற்ற நாடுகளின் (LDC) பட்டியலில் இருந்து முன்னேற்றம் பெற்ற ஏழாவது நாடு பூடான் ஆகும்.
- ❖ ஐக்கிய நாடுகள் சபையினால் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை மேற்கொள்ளப்படும் குறைவான வளர்ச்சி பெற்ற நாடுகள் பட்டியலின் 2021 ஆம் ஆண்டு மறுமதிப்பாய்வில், வங்காளதேசம், லாவோஸ் மற்றும் நேபாளம் ஆகியவை இப்பட்டியலிலிருந்து நீக்கப் படுவதற்கு பரிந்துரைக்கப் பட்டன.
- ❖ 1971 ஆம் ஆண்டில், பூடான் குறைவான வளர்ச்சி பெற்ற நாடுகளின் ஆரம்பநிலைப் பட்டியலில் சேர்க்கப் பட்டது.
- ❖ பூடான் முதலில் 2015 ஆம் ஆண்டில் வெளியேறும் தகுதி பெற தேவையான நிபந்தனைகளை நிறைவு செய்த நிலையில், பின்னர் மீண்டும் 2018 ஆம் ஆண்டில் நிறைவு செய்தது.
- ❖ பூடான் தனது முன்னேற்றத் தகுதி பெறல் செயல்முறையினை 2021 ஆம் ஆண்டில் நிறைவு செய்யும் என்று எதிர்பார்க்கப்பட்டது.
- ❖ கடந்த 20 ஆண்டுகளில் 7 சதவீதத்திற்கும் அதிகமான சராசரி வருடாந்திர வளர்ச்சி விகிதத்துடன், பூடானின் பொருளாதாரம் எட்டு மடங்குக்கு மேல் வளர்ச்சிப் பெற்று உள்ளது.




- ❖ இந்தியாவிற்குப் பூடான் நாட்டினால் மேற்கொள்ளப்படும் புனல் மின்னாற்றல் ஏற்றுமதியானது தற்போது அதன் பொருளாதாரத்தில் 20% ஆகும்.
- ❖ குறைவான வளர்ச்சி பெற்ற நாடுகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் வரையறை: குறைந்த அளவிலான வருமானம், மனித மூலதனம் மற்றும் பொருளாதாரப் பன்முகத் தன்மை, அதிக அளவில் பொருளாதார பாதிப்புள்ளாகும் நிலை மற்றும் வேளாண்மை, இயற்கை வளங்கள் மற்றும் முதன்மை தொழில்துறைப் பொருட்கள் ஆகியவற்றினை விகிதம் சாரா அளவில் சார்ந்த மக்கள் தொகை ஆகியவற்றுடன் கூடிய சமூகப் பொருளாதார வளர்ச்சியின் மிகக் குறைந்தக் குறிகாட்டிகளை வெளிப்படுத்தும் நாடு என்பதாகும்.

❖ ஐக்கிய நாடுகள் சபையானது, தற்போது 46 நாடுகளைக் குறைவான வளர்ச்சி பெற்ற நாடுகளாக அங்கீகரித்துள்ளது.

❖ இதில் கரீபியன் பகுதியில் இருந்து ஒன்றும், ஆசியாவில் இருந்து ஒன்பது நாடுகளும், ஆப்பிரிக்காவில் இருந்து 33 நாடுகளும் மற்றும் பசிபிக் பகுதியில் இருந்து 3 நாடுகளும் அடங்கும்.

## சிலிக்கான் வேலி வங்கியின் வீழ்ச்சி




❖ அமெரிக்காவின் கலிபோர்னியா வங்கி கட்டுப்பாட்டாளர்களால் சிலிக்கான் வேலி வங்கி மூடப்பட்டது.

❖ 2008 ஆம் ஆண்டில் ஏற்பட்ட உலகளாவிய நிதி நெருக்கடிக்குப் பிறகு, ஏற்பட்டுள்ள மிகப்பெரிய வங்கி வீழ்ச்சி இதுவாகும்.

❖ அமெரிக்க வங்கிக் கட்டுப்பாட்டாளர்கள், சிலிக்கான் வேலி வங்கியை (SVB) மூடிவிட்டு, அதன் வைப்புத் தொகையினைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளனர்.

❖ சிலிகான் வேலி வங்கியானது, சில பெரிய தொழில்நுட்பப் புத்தொழில் நிறுவனங்களுக்கு கடன் வழங்குவதில் புகழ்பெற்றது.

❖ சிலிக்கான் வேலி வங்கியானது, தனது பெரும்பாலான சொத்துக்களை அமெரிக்க அரசுப் பத்திரங்களில் முதலீடு செய்திருந்தது.

❖ பணவீக்க விகிதங்களைக் குறைப்பதற்காக, கடந்த ஆண்டு ஃபெடரல் ரிசர்வ் வங்கி வட்டி விகிதங்களை உயர்த்தத் தொடங்கியதால் அதன் விளைவாக அப்பத்திரங்களின் மதிப்புகள் குறைந்தன.

❖ இதனால் கிட்டத்தட்ட 2 பில்லியன் டாலர்களை அந்த வங்கி இழந்தது.

❖ இந்த வங்கி மூடப்பட்ட பிறகு, கிட்டத்தட்ட 175 பில்லியன் டாலர் மதிப்பிலான அந்த வாடிக்கையாளர்களின் வைப்புத் தொகை தற்போது கூட்டாண்மை வைப்புத் தொகை

காப்பீட்டுக் கழகத்தின் (FDIC) கட்டுப்பாட்டில் உள்ளது.

- கூட்டாண்மை வைப்புத்தொகை காப்பீட்டுக் கழகமானது, தேசிய சாண்டா கிளாரா வங்கி என்ற புதிய வங்கியை உருவாக்கியுள்ளது.
- அது தற்போது சிலிக்கான் வேலி வங்கியின் அனைத்துச் சொத்துக்களையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும்.

## Kill Web உத்தி

- தென் கொரிய ராணுவமானது "Kill Web" என்ற மிகவும் பயனுள்ள நடவடிக்கையினைப் பயன்படுத்த உள்ளது.
- இவை ஏவப்படுவதற்கு முந்தைய நிலையிலேயே வட கொரியாவின் அணுசக்தி மற்றும் ஏவுகணைகளின் அச்சுறுத்தல்களை அகற்றக் கூடியது.
- இது இணையவழி நடவடிக்கைகள் மற்றும் மின்னணு சார்ந்த போர் போன்ற மேம்பட்ட போர் நுட்பங்களைப் பயன்படுத்தும் பல அடுக்கு அமைப்பு ஆகும்.
- Kill Web என்பது தாக்குதல் நடவடிக்கைகளை மேம்படுத்தச் செய்யும் வகையில் கள அலுவலர்கள் தங்கள் ஆரம்பக் கட்ட இலக்குத் தேர்வுகளை மாற்றியமைப்பதற்கு வழி வகுக்கிற வகையில் அமைந்த ஒரு நெகிழ்திறன் மிக்க உத்தி ஆகும்.
- தற்போது, தென் கொரியா அதன் மூன்று மைய அமைப்பின் கீழ் Kill Chain என்ற செயல் முறையினைப் பயன்படுத்துகிறது.
- Kill Chain என்ற செயல்முறையானது, Kill Web என்பதைப் போலல்லாமல் ஒற்றை தடத்தினைப் பயன்படுத்துவதோடு, குறைந்த நெகிழ்திறன் கொண்டதாகும்.




## சீ டிராகன் 23

- இந்தியக் கடற்படையின் P8I ரக விமானமானது, அமெரிக்காவின் குவாம் பகுதியில் சீ டிராகன் 23 பயிற்சியில் பங்கேற்றது.
- இது நீண்ட தூரக் கடல்சார் உளவு விமானங்களுக்கான மூன்றாவது ஒருங்கிணைந்தப் பலதரப்பு நீர்மூழ்கி எதிர்ப்பு போர் (ASW) பயிற்சியாகும்.

- பிராந்திய மற்றும் உலகளாவிய பாதுகாப்பு சார்ந்த சவால்களுக்கு எதிராக அவற்றின் பகிரப்பட்ட உறுதிப்பாட்டினை ஒருங்கிணைப்பதை இந்தப் பயிற்சி நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இப்பயிற்சியானது நட்புறவுமிக்க கடற்படைகளுக்கிடையில் உயர் மட்ட இணைதிறன் மற்றும் ஒருங்கிணைப்பு ஆகியவற்றினை அடைவதையும் நோக்கமாகக் கொண்டு உள்ளது.



## 3வது லா பெரூஸ் பயிற்சி

- இரண்டு நாட்கள் அளவிலான பலதரப்பு கடல்சார் பயிற்சியான லா பெரூஸ் இந்தியப் பெருங்கடலில் நடைபெற்றது.
- பிரெஞ்சுக் கடற்படையானது இந்தப் பயிற்சியின் பொறுப்பினை ஏற்று நடத்தியது.
- இந்த நிகழ்வில் ஆஸ்திரேலியக் கடற்படை, பிரெஞ்சுக் கடற்படை, இந்தியக் கடற்படை, ஜப்பானியப் படை மற்றும் அமெரிக்கப் படை ஆகியவற்றின் பணியாளர்கள், கப்பல்கள் மற்றும் ஒருங்கிணைப்பு ஹெலிகாப்டர்கள் பங்கேற்றன.
- இது பங்கேற்பாளர் நாடுகளின் கடற்படைகளுக்கு இடையே கடல்சார் நடவடிக்கை ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.



## பிரேசில் மற்றும் அர்ஜென்டினா ஆகிய இரு நாடுகளுக்கான பொதுவான பணம்

- பிரேசில் மற்றும் அர்ஜென்டினா ஆகிய இரு நாடுகளும் பொதுவான பணத்தினை உருவாக்குவதற்கான ஆயத்தப் பணிகளைத் தொடங்கியுள்ளன.
- பிரேசில் பரிந்துரைத்த புதியப் பணமானது "சுர்" (தெற்கு) என அழைக்கப்படும்.
- இது பிராந்திய வர்த்தகத்தை அதிகரிப்பதோடு, அமெரிக்க டாலரைச் சார்ந்திருக்கும் நிலையினைக் குறைக்கும்.
- இது முதலில் பிரேசிலிய ரியல் மற்றும் அர்ஜென்டினா பெசோ ஆகியவற்றிற்கு இணையாக புழக்கத்தில் இருக்கும்.
- ஒட்டுமொத்த இலத்தீன் அமெரிக்காவிலும் புழக்கத்தில் உள்ள இந்த நாணய அமைப்பானது உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 5 சதவீதத்தைக் கொண்டுள்ளது.
- உலகின் மிகப்பெரிய நாணய முறையான யூரோ, டாலர் மதிப்பில் அடிப்படையில் மதிப்பிடப் படும் போது, உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 14 சதவீதத்தைக் கொண்டுள்ளது.




## தோஹா அரசியல் பிரகடனம்

- குறைவான வளர்ச்சி பெற்ற நாடுகளுக்கான ஐந்தாவது ஐக்கிய நாடுகள் சபையின் மாநாடானது கத்தாரில் "திறனில் இருந்து செழிப்பினை உருவாக்குதல்" என்ற ஒரு கருத்துருவின் கீழ் நடத்தப்பட்டது.
- உலக நாடுகளின் தலைவர்கள் 'தோஹா அரசியல் பிரகடனத்தை' ஏற்றுக் கொண்டதுடன் இந்த மாநாடானது நிறைவுற்றது.
- இது மிகவும் பாதிக்கப்படக் கூடிய நிலையில் உள்ள 46 உலக நாடுகளை நிலையான மேம்பாட்டு இலக்குகளை (SDG) அடைவதற்கான பாதையில் மீண்டும் நிலை பெறச் செய்வதற்கான 10 ஆண்டு திட்டமாகும்.
- 2011 ஆம் ஆண்டில் குறைவான வளர்ச்சிப் பெற்ற நாடுகளில் 5 சதவீதமாக இருந்த கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான செலவினங்கள் கடந்த பத்தாண்டுகளில் 20 சதவீதத்திற்கும் அதிகமாக உயர்ந்துள்ளது.

## பாலின சுயநிர்ணயச் சட்டம்

- ஸ்பெயின் நாட்டுச் சட்டமன்றமானது 16 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள் தங்களது அடையாள அட்டையில் தங்களது பாலினத்தை மாற்றுவதற்கு அனுமதி வழங்கும் வகையிலான திருநர் சட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- ஐரோப்பாவில், 2014 ஆம் ஆண்டில் அத்தகைய உரிமையை வழங்கிய முதல் நாடு டென்மார்க் ஆகும்.
- இந்தச் சட்டமானது, திருநர்களின் பாலின அடையாளத்தைச் சுயமாகத் தீர்மானிக்கும் உரிமையை அங்கீகரிக்கிறது.




## ஆஸ்திரேலியா – உரிமைகள் பறிக்கப்பட்ட தலைமுறையினருக்கான தேசிய மன்னிப்பு தினத்தின் ஆண்டு விழா

- 1910 மற்றும் 1970 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் மூன்று வெவ்வேறு பழங்குடியினக் குழந்தைகளில் ஒரு குழந்தையினை வெந்நிறச் சமூகத்தினருடன் சேர்க்கும் ஒரு முயற்சியில் அவர்களின் குடும்பங்களில் இருந்து பிரிக்கப்பட்டனர்.
- 1995 ஆம் ஆண்டில், ஆஸ்திரேலியாவின் மனித உரிமைகள் ஆணையமானது ஒரு நாடு தழுவிய விசாரணையைத் தொடங்கி, 1000க்கும் மேற்பட்ட உரிமைகள் திருடப்பட்டத் தலைமுறை குழந்தைகள் குறித்தத் தகவல்களைச் சேகரித்தது.
- 1997 ஆம் ஆண்டில் அவர்களை மீண்டும் தங்களது குடும்பங்களிடம் அழைத்து வருதல் என்ற பிரச்சாரமானது தொடங்கப்பட்டது.
- 2008 ஆம் ஆண்டில், ஆஸ்திரேலியாவின் முன்னாள் பிரதமர் கெவின் ரூட் தனது நாட்டுப் பழங்குடி மக்களிடம் முறையாக மன்னிப்பு கேட்டார்.
- 2023 ஆம் ஆண்டில், ஆஸ்திரேலிய நாட்டின் அரசாங்கமானது உரிமைகள் திருடப்பட்ட தலைமுறையினருக்கான தேசிய மன்னிப்புத் தினத்தின் 15வது ஆண்டு நிறைவினை அனுசரிக்கிறது.




## மன்னர் மூன்றாம் சார்லஸ் அஞ்சல் தலை

- அரசர் சார்லசின் உருவம் கொண்ட புதிய அஞ்சல் தலைகள் சமீபத்தில் வெளியிடப் பட்டன.
- இந்தப் புதிய உறுதியளிக்கப்பட்ட அஞ்சல் தலை ஆனது அன்றாடப் பயன்பாட்டிற்காக வடிவமைக்கப்பட்டுள்ளதோடு, இதில் அரசரின் தலை மட்டுமே இடம் பெற்றுள்ளது.
- நாணயங்கள் மற்றும் ரூபாய் நோட்டுகள் ஆகியவற்றிலிருந்து, அங்கு அரசாங்கத்தால் பயன்படுத்தப் படும் அதிகாரப்பூர்வ ராயல் சைஃபர் சின்னம் வரை அனைத்திலும் புதிய அரசரின் உருவமானது பயன்படுத்தப்பட உள்ளது.
- பிரிட்டன் அரசானது, மெதுவாக புதிய அரசரின் உருவம் இடம் பெறும் மாற்றுகளை அறிமுகப்படுத்தி வருகிறது.
- சார்லஸ், ஒரு உறுதியளிக்கப்பட்ட அஞ்சல் தலையில் இடம் பெற்ற ஏழாவது பிரிட்டிஷ் அரசர் ஆவார்.




## விளாடிமிர் புடினுக்குப் பிடியாணை

- தி ஹேக் நகரில் அமைந்துள்ள சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் ஆனது உக்ரைன் நாட்டில் குழந்தைகள் கடத்தப்பட்ட விவகாரத்தில் விளாடிமிர் புடினுக்கு எதிராக சிறை பிடிப்புப் பற்றாணையினைப் பிறப்பித்துள்ளது.

- இந்த சர்வதேஸ் நீதிமன்றத்தின் அதிகார வரம்பினை ரஷ்யா அங்கீகரிக்கவில்லை ஆதலால் ரஷ்யா அதன் பற்றாணைகளுக்கு உட்பட்டதில்லை.
- ஆனால் ரஷ்யத் தலைவர் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தின் 123 உறுப்பினர் நாடுகளில் பயணம் மேற்கொள்வதில் இருக்கும் சுதந்திரத்தில் வரம்புகள் விதிக்கப் படும்.
- இந்தியாவும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் உறுப்பினராக இல்லை.
- புடின் G20 அமைப்பின் உறுப்பினர் நாடுகளின் உலகத் தலைவர்களின் உச்சி மாநாட்டிற்காக, இந்த ஆண்டு இறுதியில் புது டெல்லிக்குப் பயணம் மேற் கொள்ள உள்ளார்.
- சர்வதேச குற்றவியல் நீதிமன்றமானது, போர்க் குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் அல்லது இனப் படுகொலை தொடர்பான வழக்குகளில் இருந்து உலக நாடுகளின் தலைவர்களுக்கு விலக்கு அளிக்கவில்லை.




## NZIA மற்றும் CRMA சட்டங்கள்

- ஐரோப்பிய ஒன்றியமானது சமீபத்தில் இரண்டு முக்கியச் சட்டங்களை அறிவித்து உள்ளது.
- அவை நிகரச் சுழிய உமிழ்வு கொண்ட தொழில்துறைச் சட்டம் (NZIA) மற்றும் முக்கிய மூலப் பொருட்கள் சட்டம் (CRMA) ஆகும்.
- 2030 ஆம் ஆண்டிற்குள், உள்நாட்டு உற்பத்தி மூலம் ஐரோப்பிய ஒன்றியத்தின் பசுமைத் தொழில்நுட்பத் தேவைகளில் குறைந்தது 40 சதவீதத்தையாவதுப் பூர்த்தி செய்வதை நிகரச் சுழிய உமிழ்வு கொண்ட தொழில்துறை சட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் எட்டு தொழில்நுட்பங்களானது "உத்திசார் நிகரச் சுழிய உமிழ்வுத் தொழில் நுட்பங்கள்" ஆக அடையாளம் காணப்பட்டுள்ளன:
- முக்கிய மூலப்பொருட்களின் பிரித்தெடுத்தல், செயலாக்கம் மற்றும் மறுசுழற்சி ஆகியவற்றினை ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்குளேயே மேற்கொள்ளுதல் என்ற இலக்குகளை நிர்ணயிப்பதன் மூலம், ஐரோப்பிய ஒன்றியமானது முக்கிய மூலப் பொருட்களுக்காக இறக்குமதியைச் சார்ந்திருக்கும் ஒரு நிலையினைக் குறைக்கச் செய்வதை முக்கிய மூலப்பொருட்கள் சட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ இதன் மூலம் 2030 ஆம் ஆண்டிற்குள், ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரித்தெடுத்தல் செயல்முறைக்கான வருடாந்திர நுகர்வில் குறைந்தது 10 சதவிகிதம், செயலாக்கம் செய்வதற்கான நுகர்வில் 40 சதவிகிதம் மற்றும் மறுசுழற்சி செய்வதற்கான நுகர்வில் 15 சதவிகிதம் வரை குறைக்கப்படும் என எதிர்பார்க்கப் படுகிறது.




## AFINDEX-23 பயிற்சி




❖ இரண்டாவது ஆப்பிரிக்க-இந்திய களப் பயிற்சியானது (AFINDEX 2023) புனேவில் தொடங்கியது.

- முதலாவது ஆப்பிரிக்க-இந்திய களப் பயிற்சியானது 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் புனேயில் நடைபெற்றது.
- இந்தப் பயிற்சியானது நான்கு கட்டங்களாக பிரிக்கப்பட்டு, இதன் ஆரம்பக் கட்டத்தில் பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.
- இதைத் தொடர்ந்து ஒரு மனிதாபிமான அடிப்படையிலான கண்ணிவெடி இருப்பு சோதனை நடவடிக்கை மற்றும் அமைதி காப்பு நடவடிக்கையானது மேற்கொள்ளப் படும்.

## இந்தியா-வங்காளதேசம் நட்புறவுசார் குழாய் இணைப்புத் திட்டம்

- இந்தியா மற்றும் வங்காளதேச நாட்டின் பிரதமர்கள் இந்தியா-வங்காளதேச நட்புறவு சார் குழாய் இணைப்புத் திட்டத்தினைத் தொடங்கி வைத்தனர்.
- இந்தியா மற்றும் வங்காளதேசம் ஆகிய நாடுகளின் எல்லைகளுக்கு இடையேயான முதல் எரிசக்தி குழாய் இணைப்புத் திட்டம் இதுவாகும்.
- 131.57 கி.மீ. நீளமுள்ள இந்தக் குழாய் ஆனது மேற்கு வங்கத்தின் சிலிகுரியில் இருந்து வங்க தேசத்தின் பர்பதிபூர் வரை செல்கிறது.
- இந்தக் குழாயானது, ஆண்டிற்கு 1 மில்லியன் மெட்ரிக் டன் என்ற அளவிற்கு அதிவேக டீசலைக் கொண்டு செல்லும் திறன் கொண்டது.
- இந்த எரிபொருள் இடம் பெயர்வு ஒப்பந்தமானது 15 ஆண்டுகளுக்கு நடைமுறையில் இருப்பதோடு, மேலும் இதை நீட்டிப்பதற்கான வாய்ப்புகளும் இதில் உள்ளது.



# பொருளாதாரச் செய்திகள்

## இந்தியாவின் முதல் மாநகராட்சிப் பத்திரக் குறியீடு

- NSE குறியீடுகள் நிறுவனமானது, இந்தியாவின் முதல் மாநகராட்சிப் பத்திரக் குறியீட்டினை அறிமுகப் படுத்தியுள்ளது.
- நிஃப்டி இந்தியா மாநகராட்சிப் பத்திரக் குறியீடானது, இந்திய மாநகராட்சிக் கழகங்களால் வழங்கப்பட்ட மாநகராட்சிப் பத்திரங்களின் செயல்திறனை அவற்றின் நிறைவுக் காலம் மற்றும் முதலீட்டுத் தரக் கடன் மதிப்பீடு ஆகியவற்றின் அடிப்படையில் கண்காணிக்கிறது.
- இந்தியப் பத்திரப் பரிவர்த்தனை வாரியத்தின் பத்திர வெளியீடு மற்றும் 2015 ஆம் ஆண்டு மாநகராட்சிக் கடன் பத்திரங்கள் ஒழுங்குமுறைகள் ஆகியவற்றின் படி வழங்கப் பட்ட மாநகராட்சிக் கடன் பத்திரங்கள் இந்தக் குறியீட்டில் அடங்கும்.
- தற்போது, AA தர வரிசைப் பிரிவில் தர மதிப்பீடு பெற்ற 10 பத்திர வழங்கீட்டு நிறுவனங்களால் வழங்கப்பட்ட 28 மாநகராட்சிக் கடன் பத்திரங்கள் இந்தக் குறியீட்டில் இடம் பெற்றுள்ளன.




## உலக நாடுகளின் கடன் குறித்த வட்டமேசை மாநாடு

- உலக நாடுகளின் கடன் குறித்த ஒரு வட்டமேசை மாநாடானது பெங்களூரு நகரில் நடைபெற்றது.
- இது இந்தியா, உலக வங்கி மற்றும் சர்வதேசச் செலாவணி நிதியம் ஆகியவற்றால் இணைந்து தலைமை தாங்கி நடத்தப் பட்டது.
- சரியான நேரத்தில் கடன் மறுசீரமைப்புச் செயல்முறையினை மேற்கொள்வதற்கு இடையூறாக இருக்கும் சிக்கல்களைப் பற்றி விவாதிப்பதற்காக வேண்டி முக்கியப் பங்குதாரர்களை இது ஒன்றிணைக்கிறது.
- அரசுகளின் (இறையாண்மை) கடன் என்பது ஒரு நாட்டின் அரசாங்கம் ஆனது ஒரு நிதி நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டிய கடனாகும்.
- இதில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதி நிறுவனங்கள் ஆகியவை அடங்கும்.




## இந்தியாவின் உலக வர்த்தக மற்றும் தொழில்நுட்பச் சபை

- இந்தியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை இணைந்து புதிய உலக வர்த்தக மற்றும் தொழில்நுட்பச் சபையினை (TTC) நிறுவ உள்ளதாக அறிவித்துள்ளன.
- வர்த்தக மற்றும் தொழில்நுட்பச் சபை என்பது இரு பங்குதார நாடுகளும் வர்த்தகம், நம்பகமான தொழில்நுட்பம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றில் உள்ள சவால்களை எதிர் கொள்ள வழிவகுக்கும் ஒரு உத்திசார் ஒருங்கிணைப்பு செயல்முறையாகும்.
- வர்த்தக மற்றும் தொழில்நுட்பச் சபையின் கீழ், மூன்று குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன.
- முதல் பணிக் கட்டுப்பாட்டுக் குழுவானது உத்திசார் தொழில்நுட்பங்கள், எண்ணிம ஆளுமை மற்றும் எண்ணிம இணைப்பு ஆகியவை தொடர்பானது.
- இரண்டாவது பணிக் கட்டுப்பாட்டுக் குழுவானது பசுமை மற்றும் தூய்மையான ஆற்றல் தொழில்நுட்பங்கள் ஆகியவை தொடர்பானது.
- மூன்றாவது பணிக் கட்டுப்பாட்டுக் குழுவானது வர்த்தகம், முதலீடு மற்றும் நெகிழ் திறன் மிக்க மதிப்புச் சங்கிலி ஆகியவை தொடர்பானது.
- வர்த்தக மற்றும் தொழில்நுட்பச் சபையின் அமைச்சர்கள் கூட்டமானது வருடத்திற்கு ஒரு முறை நடைபெறும் என்ற நிலையில், அதற்கான இடமானது ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியா ஆகிய இரண்டிற்கும் இடையில் மாறி மாறி நிர்ணயிக்கப்படும்.

- முதல் வர்த்தக மற்றும் தொழில்நுட்பச் சபை அமைப்பானது 2021 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் அமெரிக்காவுடன் இணைந்து உருவாக்கப்பட்ட நிலையில், அதன் பிறகு ஏற்படுத்தப் பட்ட இரண்டாவது வர்த்தக மற்றும் தொழில்நுட்பச் சபை இதுவாகும்.

## இந்தியாவின் தனிநபர் வருமானம்

- தேசியப் புள்ளியியல் அலுவலகம் ஆனது (NSO) 2022-23 ஆம் ஆண்டிற்கான மொத்த உள் நாட்டு உற்பத்தியின் தேசிய வருமானம் மற்றும் செலவினக் கூறுகளின் இரண்டாவது முன்கூட்டிய மதிப்பீடுகளை வெளியிட்டுள்ளது.
- 2014-15 ஆம் ஆண்டில் இருந்து இந்தியாவின் தனிநபர் வருமானம் பெயரளவிலான ஒரு மதிப்பீட்டில் இரட்டிப்பாகியுள்ளது.
- 2014-15 ஆம் ஆண்டில் தனிநபர் தேசிய வருமானம் (தற்போதைய விலையில்) ரூ.86,647 ஆக இருந்தது.
- தற்போது இது ரூ.172,000 ஆக உள்ளது.
- இது 98.5% அதிகமாகும்.
- தனி நபர் வருமானம் என்பது ஒரு குறிப்பிட்ட ஆண்டில் ஒரு குறிப்பிட்டப் பகுதியில் ஒரு நபர் ஈட்டிய சராசரி வருமானத்தின் அளவீடு ஆகும்.
- இது அந்தப் பகுதியின் மொத்த வருமானத்தை அதன் மொத்த மக்கள்தொகையால் வகுப்பதன் மூலம் கணக்கிடப் படுகிறது.
- ஒரு நாட்டின் தனிநபர் மக்கள்தொகை அதிகரித்துள்ளதென்றால், ஒட்டு மொத்த மக்களின் வருமானம் அதிகரித்திருப்பதாக அர்த்தமில்லை.
- ஆக்ஸ்பாம் இந்தியா அமைப்பின் அறிக்கையின்படி, 2021 ஆம் ஆண்டில் இந்தியாவில் மேல்தட்டில் உள்ள 1% மக்கள் நாட்டின் மொத்தச் சொத்துக்களில் 40.5%க்கும் அதிகமானச் சொத்துக்களை வைத்திருந்தனர்.
- அடித்தட்டில் உள்ள 50% மக்கள் அல்லது 700 மில்லியன் மக்கள் நாட்டின் மொத்த சொத்துக்களில் 3 சதவீதத்தினை மட்டுமே கொண்டிருந்தனர்.



## இந்தியத் துணிகர முதலீடுகள் குறித்த அறிக்கை 2023

- ❖ பெயின் & கம்பெனி, அதன் வருடாந்திர 2023 ஆம் ஆண்டிற்கான இந்தியத் துணிகர முதலீடுகள் குறித்த அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- ❖ இந்த அறிக்கையின்படி, இந்தியாவில் 38.5 பில்லியன் டாலராக இருந்த துணிகர மூல தன முதலீடுகள் 2022 ஆம் ஆண்டில், 33% குறைந்து 25.7 பில்லியன் டாலராக குறைந்து உள்ளது.
- ❖ மென்பொருள் சேவை மற்றும் நிதிசார் தொழில்நுட்பச் சேவை ஆகியன பிரிவுகள் முதலீட்டாளர்களுக்குக் குறிப்பிடத்தக்க ஒரு முக்கியத்துவம் வாய்ந்தப் பிரிவுகளாக தொடர்ந்துத் திகழ்கின்றன.
- ❖ 2022 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் இந்தியப் புத்தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப் பட்ட ஒட்டு மொத்த நிதியில் இரு துறைகளிலும் சேர்ந்து தோராயமாக 35% மற்றும் 25% பங்கினைக் கொண்டுள்ளன.
- ❖ 2021-2022 ஆம் ஆண்டின் முதல் பாதியில் இந்த முதலீடுகள் 1.4 மடங்கு அதிகரித்தன.
- ❖ 2021 ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியுடன் ஒப்பிடப் படும் போது 2022 ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில் இவை 70% சரிவைக் கண்டன.




## இந்தியாவின் சர்க்கரை ஏற்றுமதி

- ❖ 2017-18 மற்றும் 2021-22 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், 810.9 மில்லியன் டாலர்களாக இருந்த இந்தியாவின் சர்க்கரை ஏற்றுமதியின் அளவானது 4.6 பில்லியன் டாலர்களாக உயர்ந்துள்ளது.
- ❖ 2016-17 மற்றும் 2017-18 ஆகிய சர்க்கரை ஆண்டுகளில் (அக்டோபர்-செப்டம்பர்), இந்தியாவின் சர்க்கரை ஏற்றுமதி முறையே 0.46 லட்சம் டன்கள் (Lt) மற்றும் 6.2 லட்சம் டன்கள் (Lt) ஆக இருந்தது.
- ❖ அவை 2021-22 ஆம் ஆண்டில் 110 Lt ஆக அதிகரித்தன.
- ❖ இந்தோனேசியா (16.73 Lt), வங்காளதேசம் (12.10 Lt), சவுதி அரேபியா (6.83 Lt), ஈராக் (4.78 Lt) மற்றும் மலேசியா (4.15 Lt) ஆகியவை இந்தியக் கச்சா சர்க்கரையின் மிகப்பெரிய இறக்குமதியாளர் நாடுகளாக உள்ளன.
- ❖ உலகளவிலான சர்க்கரை ஏற்றுமதியில் பிரேசிலுக்கு அடுத்தபடியாக (255.40 Lt) இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## பூமியின் ஆழமான பகுதி

- நமது கோளின் புவியியல் சார்ந்த மர்மங்களைக் கண்டறியும் முயற்சியில் பூமியின் ஐந்தாவது உள்ளடுக்கானது அறிவியலாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- மேலோடு, மூடகம், வெளிக் கருவம் மற்றும் உள் கருவம் ஆகியவை தான் பூமியின் கட்டமைப்பாக இன்று வரை கருதப்பட்டது.
- பல்வேறு நில நடுக்கங்களின் போது ஏற்பட்ட நில அதிர்வு அலைகளின் பயண நேரங்களில் உள்ள மாறுபாட்டினை ஒரு குழு ஆய்வு செய்தது.
- உள் கருவத்தின் உள் பகுதிக்குள் காணப்படும் படிகமாக்கப்பட்ட அமைப்பானது வெளிப்புற அடுக்கிலிருந்து வேறுபட்டிருப்பதாக அக்குழு கண்டறிந்தது.
- இந்த அமைப்பானது அதிக வெப்பம் கொண்ட, இரும்பு மற்றும் நிக்கல் ஆகியவற்றினால் ஆன 800 மைல் (1,350 கிலோமீட்டர்) அகலமான, திடமான, ஒரு பந்து போன்ற அமைப்பாகும்.
- இந்த அடுக்கானது உள் கருவத்தின் மையத்தில் அமைந்துள்ள ஒரு திடமான 'உலோகப் பந்து' ஆகும்.



## ஒரு பரிமாண புழுத்துளை அளவிலான அரிமானம்

- ❖ ஒரு பரிமாண புழுத்துளை அளவிலான அரிமானம் எனப்படும் அரிமானத்தின் புதிய வடிவத்தை அறிவியலாளர்கள் சமீபத்தில் கண்டறிந்துள்ளனர்.
- ❖ ஒரு பரிமாண புழுத்துளை அளவிலான அரிமானம் என்பது நிக்கல்-குரோமியம் கலவையானது, உருகிய ஃபுளூரைடு கரைசலுடன் தொடர்பு கொள்ளும் போது ஒரு குறிப்பிட்ட இடத்தில் அதிகமாக ஏற்படுகின்ற, ஊடுருவும் வகையிலான அரிமானம் ஆகும்.
- ❖ இந்த வகை அரிமானமானது மூலக்கூறுகளின் வழித்தட அமைப்புகளில் ஊடுருவல் வலையமைப்பு உருவாவதற்கு வழி வகுக்கின்றது.
- ❖ இந்த வழித்தடங்களில் உருகிய கரைமங்கள் நிரப்பப்பட்டு, மூலக்கூறுகளின் அமைப்புகளில் வெற்றிடங்களை உருவாக்குகின்றன.
- ❖ உருகிய உப்புக் கரைசல்களில் சூழல் அமைப்புகளில் பொருள் சிதைவுச் செயல் முறைகளைப் புரிந்து கொள்வதில் இது முக்கியமான தாக்கங்களைக் கொண்டுள்ளது.
- ❖ அடுத்தத் தலைமுறைத் தொழில்நுட்பம் சார்ந்த அணுமின் நிலையங்களில் பயன் படுத்தப் படும் குளிரூட்டிகளுக்கு உருகிய உப்புக் கரைசல்கள் ஒரு முக்கிய மாற்றாக உள்ளன.
- ❖ இவை அதிக வெப்பக் கடத்துத்திறன் மற்றும் அதிக கொதிநிலையைக் கொண்டு உள்ளதால், உருகிய உப்புக் கரைசல்கள் குளிரூட்டிகளாக பயன்படுத்துவது மிகவும் ஈர்ப்பு மிக்கப் பயன்பாடாக உள்ளது.
- ❖ இது அணு உலையின் மையப் பகுயிலிருந்து வெப்பத்தை வெளியேற்றுவதற்கும், மின்சார உற்பத்திக்கும் சிறந்தப் பயன்பாடாக உள்ளது.




## CE-20 மீக்குளிர்வு எரிபொருள் இயந்திரம்

- ❖ CE-20 மீக்குளிர்வு (கிரையோஜெனிக்) எரிபொருள் இயந்திரமானது, விண்ணில் ஏவுதலுக்கு ஏற்றவாறு உள்ளதா என்பதற்கான சோதனையை இஸ்ரோ வெற்றிகரமாக மேற் கொண்டுள்ளது.
- ❖ இந்த இயந்திரமானது, சந்திரயான்-3 ஆய்வுப் பணிக்காக வேண்டி LVM3 ஏவுகலத்தின் மீக்குளிர்வு எரிபொருள் இயந்திரத்தின் மேல்கட்ட நிலையினை இயக்கும்.

- சந்திரயான்-3 ஆய்வுக் கலமானது உந்துவிசை தொகுதி, தரையிறக்கத் தொகுதி மற்றும் உலாவிக் கலம் ஆகிய மூன்று முக்கியத் தொகுதிகளைக் கொண்டுள்ளது.




## விண்மீன் மண்டல எல்லை ஆய்வுக் கலன்

- நாசாவின் விண்மீன் மண்டல எல்லை ஆய்வு (IBEX) விண்கலம் ஆனது வெற்றிகரமான மறுசீரமைப்புப் பணிகளுக்குப் பிறகு முழுமையாக இயங்கத் தொடங்கியது.
- IBEX என்பது சூரியனில் இருந்து வரும் காற்று மற்ற விண்மீன்களின் காற்றோடுத் தொடர்பு கொள்ளுகின்ற எல்லையை (ஹீலியோஸ்பியர்) ஆய்வு செய்வதற்காக என்று வடிவமைக்கப் பட்ட ஒரு சிறிய விண்கலமாகும்.
- 2008 ஆம் ஆண்டில் விண்ணில் ஏவப்பட்ட இக்கலமானது கிட்டத்தட்ட 15 ஆண்டுகளாக விண்வெளியில் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.



## மெகா-ட்ரோபிக்ஸ் 1 செயற்கைக் கோள் செயலிழப்பு




- செயலிழப்புச் செய்யப்பட்ட இந்திய-பிரெஞ்சு வானிலை செயற்கைக்கோள், மெகா-ட்ரோபிக்ஸ்-1 (MT-1) ஆனது பூமியின் வளிமண்டலத்திற்குக் கொண்டு வரப்பட்டு அது பாதுகாப்பான முறையில் சிதைக்கப்பட்டது.
- மார்ச் 07 ஆம் தேதியன்று வெற்றிகரமாக நடத்தப்பட்ட கட்டுப்பாட்டிற்குட்பட்ட மறு நுழைவு செயல்பாட்டினைத் தொடர்ந்து, இந்தச் சிதைவு செயல்முறையினை இஸ்ரோ மேற்கொண்டது.
- இந்த வானிலை ஆய்வு செயற்கைக் கோளானது இந்தியாவின் விண்வெளி நிறுவனம் இஸ்ரோ மற்றும் பிரெஞ்சு விண்வெளி நிறுவனமான CNES ஆகியவற்றின் கூட்டு முயற்சியாக, 2011 ஆம் ஆண்டு அக்டோபர் 12 ஆம் தேதியன்று விண்ணில் ஏவப்பட்டது.

## NISAR செயற்கைக்கோள் ஒப்படைப்பு



- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) ஆனது அமெரிக்க விண்வெளி நிறுவனத்திடமிருந்து நாசா-இஸ்ரோ SAR (நிசார்) செயற்கைக் கோளினைப் பெற்று உள்ளது.

- NISAR என்பது நாசா மற்றும் இஸ்ரோ ஆகிய நிறுவனங்கள் இணைந்து உருவாக்கிய புவித் தாழ்மட்டச் சுற்றுப்பாதை ஆய்வுக் கலம் ஆகும்.
- இந்தச் செயற்கைக்கோள் ஆனது 2024 ஆம் ஆண்டில் துருவச் சுற்று வட்டப் பாதைக்கு அருகில் நிலை நிறுத்தப்படும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- NISAR ஆனது L மற்றும் S இரட்டை அலைநீளங்களைக் கொண்ட, புவி மேற்பரப்பினைத் துல்லியமாகப் படம் பிடிக்கும் (SAR) ரேடாரினைச் சுமந்து செல்கிறது.
- இஸ்ரோவின் கூற்றுப் படி, NISAR செயற்கைக்கோளானது புவியின் முழு பரப்பினையும் வெறும் 12 நாட்களில் படம் பிடிக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

## இன்ஃப்ளூயென்ஸா வைரஸ் துணை வகை H3N2




- இந்தியாவில் பருவகாலக் காய்ச்சலை ஏற்படுத்தும் வைரசின் H3N2 எனப்படும் துணை வகை வைரஸ் தொற்றினால் இரண்டு நபர்கள் பலியாகியுள்ளனர்.
- கர்நாடகாவின் ஹாசன் மாவட்டத்தினைச் சேர்ந்த 82 வயது முதியவர் ஒருவர் இந்த ஆண்டில் H3N2 பாதிப்பினால் பலியான முதல் நபர் ஆவார்.
- பொதுவாக என்பது மனிதரைச் சாராத இன்ஃப்ளூயென்ஸா வைரஸ் எனப்படும் H3N2 என்பது பொதுவாக பன்றி இனங்களில் பரவுவதோடு மனிதர்களையும் பாதிக்கிறது.
- இந்த வைரஸ் ஆனது இன்ஃப்ளூயென்ஸா A வைரஸின் துணை வகை என்று அறியப் படுகிறது.
- இதற்கான அறிகுறிகள் பருவகாலக் காய்ச்சலை ஏற்படுத்தச் செய்யும் வைரஸ்களின் அறிகுறிகளைப் போலவே இருப்பதோடு இதில் காய்ச்சல் மற்றும் சுவாசப் பிரச்சினைகள் போன்ற அறிகுறிகளும் அடங்கும்.
- H3N2 தொற்றுகள் ஆனது "உண்மையில் மரணத்தை ஏற்படுத்தக் கூடியவை" மற்றும் வழக்கமான காய்ச்சலை விட கடுமையானவையாகும்.

## சூசின்சான் – அட்லஸ் - C/2023 A3 வால் நட்சத்திரம்

- வானியலாளர்கள் C/2023 A3 (சூசின்சான் - அட்லஸ்) என்ற புதிய வால் நட்சத்திரத்தைக் கண்டுபிடித்துள்ளனர்.
- இந்த வால் நட்சத்திரமானது தற்போது வியாழன் மற்றும் சனி கோள்களின் சுற்றுப் பாதைகளுக்கு இடையே பூமியில் இருந்து ஒரு பில்லியன் கிலோமீட்டர் தொலைவில் உள்ளது.
- இது தற்போது பூமியில் இருந்து சுமார் 680 மில்லியன் மைல்கள் (1.09 பில்லியன் கிலோ மீட்டர்) தொலைவில் உள்ள நிலையில், இது சூரியனை நெருங்கி வரும்.
- இது 2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் பூமியின் இரவு வானில் தோன்ற உள்ளது.
- மேலும் இது பல நட்சத்திரங்கள் அல்லது வெள்ளிக் கிரகத்தைப் போல பிரகாசமாக இருக்கும்.




## SOFIA தொலைநோக்கியின் கண்டுபிடிப்புகள்



- நிலவில் தண்ணீரின் பரவலைக் காட்டும் விரிவான வரைபடத்தினை உருவாக்கச் செய்வதற்கு அறிவியலாளர்கள் அகச்சிவப்பு வானியல் ஆய்விற்கான அடி வளி மண்டல ஆய்வுக் கலத்தினை (SOFIA) பயன்படுத்தியுள்ளனர்.
- இந்தத் தொலைநோக்கியானது புவியின் வளிமண்டலத்தின் மேல் அடுக்குகள், இடை மண்டலம் மற்றும் தாழ் வெப்ப மண்டலம் ஆகியவற்றில் கனமான அணு நிலை ஆக்ஸிஜனைக் கண்டறிந்தது.

- ஒரு ஆய்வகத்திற்கு வெளியே ஒரு கனமான ஆக்ஸிஜன் கண்டறியப்படுவது இதுவே முதல் முறையாகும்.
- ஆக்ஸிஜன் 18 என்பது ஆக்ஸிஜனின் நிலையான ஐசோடோப்பு ஆகும்.
- இதில் எட்டு புரோட்டான்கள் மற்றும் 10 நியூட்ரான்கள் உள்ளன.
- ஆர்க்டிக் மற்றும் அண்டார்டிக் பகுதிகளில், பனி உருவாகும் ஒரு வெப்பநிலையைத் தீர்மானிப்பதற்கு ஆக்ஸிஜன்-18 பயன்படுத்தப்படுகிறது.

## நட்சத்திர உருவாக்கத்தின் அதிவேகச் செயல்முறை

- SOFIA தொலைநோக்கியானது, முன்பு நம்பப்பட்டதை விட, மிக விரைவான நட்சத்திர உருவாக்கச் செயல்முறை குறித்து வெளிப்படுத்தியுள்ளது.
- பூமியிலிருந்து சுமார் 5,000 ஒளியாண்டுகள் தொலைவில் உள்ள ஒரு நட்சத்திரங்கள் உருவாகும் இடமாக உள்ள சிக்னஸ் X பகுதியானது வாயு மற்றும் தூசி ஆகியவற்றினை உள்ளடக்கிய ஒரு பரந்த ஒளிரும் திரளினைக் கொண்டுள்ளது.
- சிக்னஸ் X பகுதியில், வாயு திரள்கள் அணு அமைப்புகளால் சூழப்பட்ட மூலக்கூறு ஹைட்ரஜனின் அடர்த்தியான கருவங்களைக் கொண்டிருப்பதாகக் கண்டறியப் பட்டது.
- இந்த மேகங்கள் பின்னர் அதிவேகத்தில் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டு புதிய நட்சத்திரங்களை விரைவாக உருவாக்குகின்றன.
- இந்தப் புதிய கண்டுபிடிப்புகள் மூலம் குறிப்பாக மாபெரும் நட்சத்திரங்கள் உருவாகும் செயல்முறையைச் சிறப்பாக விளக்க முடியும்.




## தூசிப் படலங்களுக்கான பல்கோண ஆய்வகம் (MAIA)

- தூசிப் படலங்களுக்கான பல்கோண ஆய்வகத்தினை (Multi-Angle Imager for Aerosols missions) உருவாக்கி, விண்ணில் ஏவும் ஒரு திட்டத்திற்காக இத்தாலிய விண்வெளி முகமையான ASI உடன் நாசா கைகோர்த்துள்ளது.
- உலகின் அதிக மக்கள்தொகை கொண்ட நகரங்களில் நிலவும் காற்று மாசு பாட்டினால் ஏற்படும் உடல்நலப் பாதிப்புகள் குறித்து இந்தக் கூட்டு ஆய்வுப் பணியானது ஆய்வு மேற்கொள்ளும்.
- MAIA ஆய்வகம் ஆனது PLATiNO-2 என்ற செயற்கைக் கோளைக் கொண்டிருக்கும்.
- இது ஆய்வகம், நிலப்பரப்பில் உள்ள உணர்விகள் மற்றும் வளிமண்டல மாதிரிகள் ஆகியவற்றிலிருந்துத் தரவைச் சேகரித்துப் பகுப்பாய்வு செய்யும்.




## ChatGPT-4

- மைக்ரோசாப்ட் கார்ப்பரேசன் நிறுவனத்தின் ஆதரவு பெற்ற புத்தொழில் நிறுவனமான OpenAI ஆனது GPT-4 என்ற உரையாடு மென்பொருளினை வெளியிடத் தொடங்கியது.
- இது மிகவும் பிரபலமாக உள்ள ChatGPT தொழில்நுட்பத்தின் அம்சத்தினையே விஞ்சுகிற வகையிலான, ஒரு சக்தி வாய்ந்த செயற்கை நுண்ணறிவு மாதிரியாகும்.
- GPT-4 என்பது புகைப்படம் மற்றும் உரை வடிவம் ஆகிய இரண்டு வகையிலான உள்ளீடுகளையும் பயன்படுத்தி உள்ளடக்கத்தினை உருவாக்கக் கூடிய "பல்மாதிரி" தொழில்நுட்பம் ஆகும்.
- GPT-3.5 உரை வடிவ உள்ளீடுகளை மட்டுமே பயன்படுத்தக் கூடிய அதேசமயம் இந்த சமீபத்திய மாபெரும் மொழி மாதிரியானது, ஒரு புகைப்படத்தில் உள்ள உள்ளடக்கங்களை அடையாளம் கண்டு, அவற்றைப் பகுப்பாய்வு செய்யும் வகையில் படங்களையும் உள்ளீடுகளாகப் பயன்படுத்தக் கூடியதாகும்.
- GPT-3.5யின் உள்ளடக்கத்தில் சுமார் 3,000 சொற்கள் என்ற வரையறை உள்ளது.
- இந்தப் புதிய GPT-4 ஆனது 25,000 சொற்களுக்கு மேல் கொண்ட பதில்களை உருவாக்கக் கூடியது.




## உலகின் முதல் மணல் மின்கலன்

- புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களிலிருந்துப் பெறப்படும் வெப்ப ஆற்றலைச் சேமித்து வைக்கக் கூடிய உலகின் முதல் மணல் மின்கலனைப் பின்லாந்து நிறுவி உள்ளது.
- இது நகரின் மையப்படுத்தப்பட்ட வெப்ப ஆற்றல் சார்ந்த கட்டமைப்புடன் இணைக்கப் பட்டுள்ளதால் இது நகரத்தின் கட்டிடங்கள் மற்றும் பொதுக் குடிநீர் வழங்கீட்டு அமைப்புகளைச் சூடாக வைத்திருக்க உதவும்.

- இந்தச் சேமிப்புக் கலனானது 100 kW வெப்பமாக்க ஆற்றல் மற்றும் 8 MWh திறன் கொண்டது.
- "மணல் மின்கலன்" எனப்படும் இந்த உயர் வெப்பநிலை வெப்ப ஆற்றல் சேமிப்புக் கட்டமைப்பில் மணல் அல்லது மணல் போன்ற பொருட்கள் ஆனது சேமிப்பு ஊடகமாகப் பயன்படுத்தப் படுகின்றன.
- மணலானது இதில் வெப்ப ஆற்றல் சேமிப்பகமாகச் செயல்படுகிறது.
- கூடுதல் காற்று மற்றும் சூரிய ஆற்றலுக்கான உயர் ஆற்றல் மற்றும் உயர் திறன் கொண்ட ஆற்றல் சேமிப்பு அமைப்பாக செயல்படுவதே இதன் முதன்மை செயல்பாடு ஆகும்.
- ஆற்றலானது வெப்பமாக மாற்றப்பட்டு, கட்டிடங்களை வெப்பப் படுத்த மற்றும் பிற பயன்பாடுகளுக்காகப் பயன்படுகிறது.




## நீர்மூழ்கிக் கப்பல் எதிர்ப்புப் போர்க் கப்பல் ஐஎன்எஸ் ஆந்த்ரோத்

- ஆழமற்றக் கடற்பகுதியில் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல் எதிர்ப்புப் போர்க் கப்பல்களின் (ASW SWC) வரிசையில் எட்டுக் கப்பல்களுக்கான தயாரிப்பு வரிசையில் தயாரிக்கப் பட்ட இரண்டாவதுக் கப்பலான ஐஎன்எஸ் ஆந்த்ரோத் கப்பல் கொல்கத்தாவில் பயன்பாட்டிற்கு வந்தது.
- இது கடலோரப் பகுதிகளில் நீர்மூழ்கிக் கப்பல் எதிர்ப்பு நடவடிக்கைகள், குறைந்தளவு முக்கியத்துவம் கொண்ட கடல்சார் நடவடிக்கைகள் மற்றும் கடற்பகுதிகளில் கண்ணி வெடிகளை நிறுவும் செயல்பாடுகள் போன்றவற்றினை மேற்கொள்ளும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளது.
- இந்தத் தயாரிப்பு வரிசையில் தயாரிக்கப்பட்ட முதல் கப்பலான ஐஎன்எஸ் அர்னாலா மூன்று மாதங்களுக்கு முன்பு பயன்பாட்டிற்கு வந்தது.



## வேற்றுகிரகத்தின் வைட்டமின் மாதிரிகள்

- ஹயபுசா2 விண்கலமானது ரைகு என்ற ஒரு குறுங்கோளில் இருந்து சுமார் ஒன்றரை வருடங்களாகப் பாறை மாதிரிகளைச் சேகரித்தது.
- இந்த மாதிரிகளில் வாழ்க்கைக்கு அவசியமான கரிமச் சேர்மங்கள் இருப்பது கண்டு பிடிக்கப் பட்டுள்ளன.
- கண்டுபிடிக்கப்பட்ட இந்தச் சேர்மங்களில் வைட்டமின் பி 3 என்றும் அழைக்கப் படுகின்ற நியாசின் மற்றும் யூரேசில் ஆகியவை காணப்படுகின்றன.
- RNAவினை உருவாக்கச் செய்கின்ற நான்கு நியூக்ளியோ மூலக்கூறுகளில் (நைட்ரஜன் கொண்டச் சேர்மங்கள்) இதுவும் ஒன்றாகும்.
- இந்த மூலக்கூறுகளில் உயிரினங்களை எவ்வாறு உருவாக்குவது என்பதற்கான வழி முறைகள் உள்ளன.
- ஹயபுசா2 விண்கலமானது, ஜப்பானிய விண்வெளி நிறுவனமான JAXA மூலம் 2014 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் விண்ணில் ஏவப்பட்டது.
- 2018 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் இந்த விண்கலம் அதன் இலக்கான ரியுகு குறுங் கோளினை அடைந்து, ஒன்றரை வருடங்கள் அங்கு தங்கி மாதிரிகளைச் சேகரித்து, 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பூமிக்குத் திரும்பியது.



### LVM3 விண்கலம் விண்ணில் ஏவல்

- ஒன்வெப் நிறுவனத்தின் 36 செயற்கைக் கோள்களை சுமந்துச் செல்லும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் அதிக எடையைச் சுமந்துச் செல்லக் கூடிய விண்கலமான LVM3 ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து விண்ணில் ஏவப்பட்டது.
- 36 செயற்கைக் கோள்களின் முதல் தொகுப்பு ஆனது LVM3-M2/ஒன்வெப் இந்தியா-1 திட்டம் மூலமாக 2022 ஆம் ஆண்டு அக்டோபர் 23 ஆம் தேதியன்று விண்ணில் ஏவப் பட்டது.
- இது LVM3 விண்கலத்தின் ஆறாவது விண்பயணமாகும்.
- LVM3 விண்கலமானது சந்திரயான்-2 திட்டம் உட்பட ஐந்து தொடர் வெற்றிகரமான விண்வெளிப் பயணங்களை மேற்கொண்டுள்ளது.




## சுற்றுச்சூழல் செய்திகள்

### பருவநிலைக்கான வேளாண்மைப் புத்தாக்கத் திட்டம்

- I2U2 அமைப்பின் ஆதரவில் அமெரிக்கா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளினால் தொடங்கப்பட்ட ஒரு உலகளாவிய அமைப்பில் இந்தியா இணைந்து உள்ளது.
- இது பருவநிலைக்கேற்ற திறன்மிகு வேளாண்மை மற்றும் உணவு முறைப் புத்தாக்கம் ஆகியவற்றிற்கான முதலீட்டையும் ஆதரவையும் அதிகரிக்கச் செய்வதை மிக முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.
- I2U2 - இஸ்ரேல், இந்தியா, அமெரிக்கா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் - என்பது அபுதாபியில் நடத்தப்பட்ட ஒரு வணிக மன்றமாகும்.

- பருவநிலைக்கான வேளாண்மை புத்தாக்கத் திட்டமானது (AIM4C) 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இரு நாடுகளால் தொடங்கப்பட்டதாகும்.
- IM4C பருவநிலைக்கேற்ற திறன்மிகு வேளாண்மை மற்றும் உணவு முறைப் புத்தாக்கம் ஆகியவற்றிற்கான முதலீட்டையும் ஆதரவையும் அதிகரிக்கச் செய்வதை மிக முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இன்றுவரை, AIM4C முன்னெடுப்பானது இவற்றிற்கான முதலீடுகளை உலகளவில் 8 பில்லியன் டாலருக்கும் அதிகமான அளவில் வெற்றிகரமாக உயர்த்தியுள்ளது.

## தரோய் பறவைகள் கணக்கெடுப்பு 2023

- குஜராத், ராஜஸ்தான் மற்றும் மத்தியப் பிரதேசம் போன்ற பல மாநிலங்களைச் சேர்ந்த பறவைக் கண்காணிப்பாளர்கள் இரண்டு நாட்கள் அளவிலான இரண்டாவது தரோய் பறவைக் கணக்கெடுப்பினை (2023) நிறைவு செய்துள்ளனர்.
- தரோய் என்பது 107 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் பரவியுள்ள ஒரு சதுப்பு நிலம் ஆகும்.
- குஜராத் மாநிலத்தில் 616க்கும் மேற்பட்ட பறவை இனங்கள் உள்ளன.
- இதில் கணக்கெடுப்பாளர்கள் 193 இனங்களை மட்டுமே கண்டுபிடித்துள்ளனர்.
- முதல் தரோய் பறவைகள் கணக்கெடுப்பானது 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப் பட்டது.

## உலக மீத்தேன் உமிழ்வு கண்காணிப்பு அறிக்கை

- சர்வதேச எரிசக்தி முகமையானது (IEA), அதன் வருடாந்திர உலக மீத்தேன் உமிழ்வு கண்காணிப்பு அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையின்படி, புதைபடிவ எரிபொருள் நிறுவனங்கள் ஆனது 2022 ஆம் ஆண்டில் 120 மில்லியன் மெட்ரிக் டன் அளவிலான மீத்தேன் வாயுவினை வளி மண்டலத்தில் இருந்து வெளியேற்றியுள்ளன.
- இது 2019 ஆம் ஆண்டில் பதிவான சாதனை அளவிலான உச்ச நிலையை விட சற்று குறைவாகும்.
- இதில் சிறந்த செயல்திறன் கொண்ட நாடுகள், மோசமான செயல் திறன் கொண்ட நாடுகளை விட 100 மடங்குக்கு மேல் சிறந்ததாக உள்ளன.
- நார்வே மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளில் உமிழ்வுச் செறிவானது குறைவாகவே உள்ளது.
- சவூதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் போன்ற மத்தியக் கிழக்கு நாடுகளும் ஒப்பீட்டளவில் குறைந்த உமிழ்வு செறிவினைக் கொண்டுள்ளன.
- துர்க்மெனிஸ்தான் மற்றும் வெனிசுலா ஆகிய நாடுகளில் அதிக உமிழ்வு பதிவாகி உள்ளது.
- எரிசக்தித் துறையில் இருந்து வெளியேற்றப்படும் 75 சதவீத மீத்தேன் வாயுவினை மலிவான மற்றும் எளிதில் கிடைக்கக் கூடிய ஒரு தொழில்நுட்பத்தின் உதவியுடன் குறைக்க முடியும்.
- மனித நடவடிக்கைகள் மூலம் வெளியிடப்படும் மொத்தச் சராசரி மீத்தேன் உமிழ்வில் 40 சதவீதம் எரிசக்தி துறையில் தான் வெளியிடப்படுகிறது.

- எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு நிறுவனங்களானது, இயற்கை எரிவாயு எரியூட்டப்படும் போது அல்லது வெளியேற்றப்படும் போது வளிமண்டலத்தில் மீத்தேன் வாயுவினை வெளியிடுவதாக அறியப் படுகிறது.
- தொழில்துறைமயமாக்கக் காலத்திற்கு முந்தையக் காலத்திலிருந்தே கார்பன் டை ஆக்சைடுக்கு அடுத்தபடியாக, புவியின் 30 சதவீத வெப்பமயமாதலுக்கு காரணமாக உள்ள மீத்தேன் ஒரு பசுமை இல்ல வாயு ஆகும்.




## மண்ணில் உள்ள கார்பன் குறித்த உலகளாவிய மதிப்பீடு




- புல்வெளிகளில் உள்ள மண்ணில் உள்ள கார்பன் அளவு குறித்து, உணவு மற்றும் வேளாண் அமைப்பு மேற்கொண்ட முதலாவது உலகளாவிய மதிப்பீடு ஆனது மண்ணின் கரிமக் கார்பன் (SOC) இருப்புகளின் அடிப்படை விவரங்களை வழங்கச் செய்கிறது.
- மண்ணின் கரிமக் கார்பன் என்பது மண்ணின் கரிமப் பொருட்களில் சேமிக்கப்படும் கார்பனின் அளவாகும்.
- பகுதியளவு இயற்கை (மனிதனால் உருவாக்கப்பட்ட) மற்றும் பராமரிக்கப்பட்ட புல்வெளிகளில் இந்த மதிப்பீடு மேற்கொள்ளப்பட்ட நிலையில், இது அவற்றின் கரிமக் கார்பன் தேக்கத் திறனை மதிப்பிடுகிறது.
- புல்வெளிகள் உலகிலுள்ள கரிமக் கார்பனில் தோராயமாக 20 சதவீதத்தைக் கொண்டு உள்ளன.

- தீவனப் பயன்பாடுகளுக்கானத் தோட்டங்களில் உள்ள மண்ணின் கார்பனின் அளவானது ஆண்டிற்கு 0.03 டன் C/ha என்ற அளவில் அதிகரிக்கும்.

## ஜெர்டன்ஸ் கூர்வாய்த் தவளை

- மேற்குத் தொடர்ச்சி மலையின் உயரமான பகுதிகளில் மட்டுமே காணப்படும் உபெரோடான் மாண்டனஸ் என்ற தவளை 89 ஆண்டுகளுக்குப் பிறகு சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.
- இது கடைசியாக 1934 ஆம் ஆண்டில் ஒரு பிரிட்டிஷ் அறிவியலாளரால் ஆய்வு செய்யப் பட்டது.
- இது ஜெர்டன்ஸ் கூர்வாய்த் தவளை, ஜெர்டன்ஸ் ராமனெல்லா, மலைப் புள்ளித் தவளை, மலை உருண்டைத் தவளை அல்லது மலபார் மலைத் தவளை என்றும் அழைக்கப் படுகிறது.
- இந்த தவளையானது ஒரு மலைப்பாங்கான இடங்களில் காணப்படும் இனமாக கருதப் படுவதோடு, இது 800-1,700 மீட்டர் உயரம் கொண்ட இடங்களில் மட்டுமே காணப் படுகிறது.
- அவை வயநாட்டின் தெற்குப் பகுதியில் இருந்து பால்காட் மற்றும் செங்கோட்டை கணவாய் வழியாக அகஸ்திய மலைப் பகுதி வரை பரவிக் காணப் படுகின்றன.
- இது IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் 'அச்சுறு நிலையில் உள்ள ஒரு இனமாக' வகைப்படுத்தப் பட்டுள்ளது.



## ENSO புதிய தகவல்

- உலக வானிலை ஆய்வு அமைப்பு (WMO) வெளியிட்ட புதியத் தகவல்களின் படி, இனி வர உள்ள மாதங்களில் ஒரு வெப்பமயமான எல் நினோ நிகழ்வு உருவாகலாம் என கூறப் படுகிறது.
- எல் நினோ நிகழ்வு ஆனது வழக்கத்திற்கு மாறான ஒரு கட்டுக்கடங்காத மற்றும் நீடித்த லா நினா நிகழ்வின் ஒரு தொடர்ச்சியாக, மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு உருவாகச் செய்யலாம்.
- இது உலகின் பல்வேறு பகுதிகளில் உள்ள வெப்பநிலை மற்றும் மழைப்பொழிவு போன்ற அம்சங்களைப் பாதிக்கும்.
- எல் நினோ மற்றும் பருவநிலை மாற்றம் ஆகியவற்றின் காரணமாக 2016 ஆம் ஆண்டு ஆனது தற்போது வெப்பமான ஆண்டாக உள்ளது.

- 2026 ஆம் ஆண்டிற்குள் குறைந்தது ஓர் ஆண்டாவது வெப்பமிக்க ஆண்டாக மாற 93% வாய்ப்பு உள்ளது.
- தற்போதைய லா நினா நிகழ்வானது 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் தொடங்கி 2021 ஆம் ஆண்டு போரியல் கோடை என்ற ஒரு நிகழ்வின் போதான ஒரு சிறிய இடைவெளியுடன் நிகழ்ந்து வருகிறது.
- பாதிக்கப்பட்ட பகுதிகளில் எல் நினோ நிகழ்வு போன்றே லா நினா நிகழ்வும் வானிலை மற்றும் பருவநிலையில் எதிர்மறையானத் தாக்கங்களை ஏற்படுத்துகிறது.
- லா நினா என்ற நிகழ்வானது, ஆப்பிரிக்காவின் கிரேட்டர் ஹார்ன் மற்றும் தென் அமெரிக்காவின் பெரும்பாலான பகுதிகளில் காணப்படும் நீடித்த வறட்சி மற்றும் தென்கிழக்கு ஆசியா மற்றும் ஆஸ்திரேலேயாசியாவின் சராசரி மழைப் பொழிவிற்கும் அதிகமான மழைப் பொழிவு ஆகியவற்றுடன் தொடர்புடையது.




## '2022 ஆம் ஆண்டில் CO2 உமிழ்வுகள்' அறிக்கை

- 2022 ஆம் ஆண்டில் $CO_2$ உமிழ்வுகள் என்ற அறிக்கையினை சர்வதேச எரிசக்தி முகமை வெளியிட்டுள்ளது.
- உலக எரிசக்தித் துறையில் இருந்து வெளியாகும் கார்பன் டை ஆக்சைடு உமிழ்வுகள் ஆனது கடந்த ஆண்டு ஒரு சாதனை அளவை எட்டியது.
- 2022 ஆம் ஆண்டில் உலகளாவிய எரிசக்தித் துறையிலிருந்து வெளியான உமிழ்வு ஆனது 0.9% அதிகரித்துச் சாதனை அளவான 36.8 பில்லியன் டன்களாக இருந்தது.
- நிலக்கரி சார்ந்த எரிபொருளில் இருந்து வெளியேறும் கார்பன் டை ஆக்சைடு ($CO_2$) கடந்த ஆண்டு 1.6% அதிகரித்துள்ளது.
- எண்ணெய் சார்ந்த எரிபொருளில் இருந்து வெளியேறும் கார்பன் டை ஆக்சைடு உமிழ்வு ஆனது 2.5% அதிகரித்ததனால் அது பெருந்தொற்றிற்கு முந்தைய அளவை விட குறைவாகவே இருந்தது.
- சீனாவில் கோவிட் பொது முடக்கம் காரணமாக 2022 ஆம் ஆண்டில் உமிழ்வு குறைந்து உள்ளது.
- ஐரோப்பிய ஒன்றியத்தில் உமிழ்வு 2.5% குறைந்துள்ளது.

- ஆசிய பசிபிக் பிராந்தியத்திலும் எதிர்பாராத விதமாக குறைவான அளவானது பதிவாகியுள்ளது (-1.8%).
- உலகளாவியத் தொழில் துறைகளில் இருந்து மேற்கொள்ளப்படும் உமிழ்வும் குறைந்து உள்ளது.
- சிமெண்ட் உற்பத்தியில் ஏற்பட்ட 10% சரிவு மற்றும் எஃகு உற்பத்தியில் ஏற்பட்ட 2% சரிவு ஆகியவையே இந்தக் குறைவிற்கு ஒரு முக்கிய காரணமாகும்.
- இயற்கை எரிவாயுவினால் வெளியேறும் கார்பன் டை ஆக்சைடு உமிழ்வு 1.6% என்ற அளவிற்குக் குறைந்துள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் பதிவான உமிழ்வுகளில் மிகப்பெரியத் துறை சார்ந்த உமிழ்வு அதிகரிப்பு ஆனது மின்சாரம் மற்றும் வெப்ப ஆற்றல் உற்பத்தித் துறையில் பதிவாகி உள்ளது.




## பெரும் பூனை இனங்களுக்கான உலக நாடுகளின் கூட்டமைப்பு

- பெரும் பூனை இனங்களுக்கானப் பாதுகாப்பிற்காக வேண்டி இந்தியா தனது தலைமையில் ஒரு மாபெரும் உலகளாவியக் கூட்டணியைத் தொடங்குவதற்கு முன் மொழிந்துள்ளது.
- மேலும், ஐந்தாண்டுகளுக்கு 100 மில்லியன் டாலர் (ரூ. 800 கோடிக்கு மேல்) நிதியுதவி வழங்க உள்ளதாகவும் இந்தியா உறுதி செய்தது.



- இந்த சர்வதேச பெரும் பூனை இனங்களுக்கான கூட்டமைப்பானது புலிகள், சிங்கங்கள், சிறுத்தைகள், பனிச் சிறுத்தைகள், பூமா (மலையரிமா), ஜாகுவார் மற்றும் சிவிங்கிப் புலிகள் போன்ற ஏழு பெரும் பூனை இனங்களின் மறுவாழ்வு மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்தும்.
- அதன் முக்கிய நடவடிக்கைகளில் "சட்டம், கூட்டாண்மை, அறிவுசார் இணைய தளம், திறன் மேம்பாடு, சுற்றுச்சூழல் சார்ந்த சுற்றுலா, நிபுணர் குழுக்களுக்கு இடையேயான கூட்டாண்மை மற்றும் நிதி வழங்கீடு" ஆகியவை அடங்கும்.

## யெல்லோஸ்டோன் தேசியப் பூங்காவின் 151வது ஆண்டு நிறைவு விழா

- உலகின் முதல் தேசியப் பூங்காவான அமெரிக்காவின் யெல்லோஸ்டோன் தேசியப் பூங்கா தனது 151வது ஆண்டு நிறைவு விழாவினைக் கொண்டாடியது.
- வயோமிங்கின் வடமேற்கு முனையில் அமைந்துள்ள இந்தப் பூங்கா மொன்டானா மற்றும் இடாஹோ வரை பரவியுள்ளது.
- இது யெல்லோஸ்டோன் தேசியப் பூங்கா பாதுகாப்புச் சட்டத்தின் மூலம் 1872 ஆம் ஆண்டு மார்ச் 01 ஆம் தேதியன்று அமெரிக்கச் சட்டசபையினால் நிறுவப் பட்டது.




## மிமியூசெமியா சிலோனிக்

- மிமியூசெமியா சிலோனிகா என்பது 127 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையில் கடைசியாகக் காணப்பட்ட ஒரு அரிய வகை அந்துப்பூச்சி இனமாகும்.
- இது தற்போது தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் மீண்டும் கண்டு பிடிக்கப் பட்டுள்ளது.
- ஜார்ஜ் ஹாம்ப்சன் என்பவர் 1893 ஆம் ஆண்டில் இலங்கையில் உள்ள திருகோண மலையில் மிமியூசெமியா சிலோனிகா இனத்தினைக் கண்டறிந்தார்.
- அதன்பிறகு உலகின் எந்த நாடுகளிலும் இது கண்டறியப் படவில்லை.
- இந்தியாவில் இந்த அந்துப்பூச்சி இனம் கண்டறியப் படுவது இதுவே முதல் முறை ஆகும்.
- மிமியூசெமியா சிலோனிகா இனங்கள் அகரிஸ்டினே என்ற ஒரு துணைக் குடும்பத்தினையும், நாக்டியுடே என்ற குடும்பத்தினையும் சேர்ந்தது ஆகும்.
- 2020 ஆம் ஆண்டு அகஸ்தியமலை சமூக அடிப்படையிலான பாதுகாப்பு மையத்தில் (ACCC) தளவாய் பாண்டி என்பவர் நடத்திய அந்துப்பூச்சி கணக்கெடுப்பின் போது இது இந்தியாவில் முதன்முதலில் கண்டறியப்பட்டது.

- அகஸ்திய மலை சமூக அடிப்படையிலான பாதுகாப்பு மையமானது, திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகத்தின் (KMTR) சுற்றுச் சூழல் தாங்கு மண்டலத்தில் அமைந்துள்ளது.



### "'Don't Choose Extinction" பருவநிலைப் பிரச்சாரம்

- பருவநிலை நெருக்கடி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் மேம்பாட்டுத் திட்ட அமைப்பினால் (UNDP) 'அழிவைத் தேர்ந்தெடுக்க வேண்டாம்' ('Don't Choose Extinction) என்றப் பிரச்சாரமானது தொடங்கப் பட்டது.
- 2வது வருடாந்திர கருத்துரு விருதுகளில் இரண்டு வெவ்வேறுப் பிரிவுகளில் தங்கம் மற்றும் வெள்ளி விருதுகளை இது வென்றுள்ளது.
- இது சர்வதேச எண்ணிம கலை மற்றும் அறிவியல் அகாடமியினால் (IADAS) அறிவிக்கப் பட்டுள்ளது.
- இந்த விருதுகளானது நோக்கம் சார்ந்தப் பணிகள், தனிநபர்கள், பெரு நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளின் சமூகத் தாக்கத்தைக் கொண்டாடும் நோக்கத்தில் வழங்கப் படுகின்றன.
- மற்றவர்களைத் தங்கள் சமூகங்களில் நடவடிக்கை எடுக்கத் தூண்டும் வகையிலான தாக்கத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைக்கான ஒரு புதிய வரையறையை வரையறுக்கச் செய்வதே இதன் குறிக்கோளாகும்.



## அண்டார்டிகாவைச் சுற்றியுள்ள கடல் பனிப் பரவல் 2023

- 2023 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில், அண்டார்டிகாவைச் சுற்றியுள்ள கடல் பனிகளானது 1979 ஆம் ஆண்டில் செயற்கைக் கோள் பதிவு தொடங்கியதிலிருந்து இது வரையில் காணப்படாத அளவிற்கு மிகக் குறைந்த அளவை எட்டியது.
- இந்தப் புள்ளிவிவரங்களை அமெரிக்காவில் அமைந்துள்ள தேசியப் பனிப்பொழிவு மற்றும் பனிக்கட்டித் தரவு மையம் (NSIDC) வெளியிட்டுள்ளது.
- 2023 ஆம் ஆண்டு பிப்ரவரி 21 ஆம் தேதியன்று, அண்டார்டிகாவைச் சுற்றியுள்ள கடல் பனிகளானது 1.79 மில்லியன் சதுர கி.மீ. (691,000 சதுர மைல்) என்ற மிகக் குறைந்த அளவை எட்டியது.
- இது 2022 ஆம் ஆண்டு பிப்ரவரி 25 ஆம் தேதியன்று, பதிவான முந்தைய மிகக் குறைவான அளவை விட 130,000 சதுர கிலோமீட்டர்கள் (50,000 சதுர மைல்கள்) என்ற அளவில் குறைவாக உள்ளது.
- 2 மில்லியன் சதுர கிலோமீட்டருக்கும் கீழே பனிக்கட்டிகளின் இருப்பு குறைந்து வருவதை அறிவியலாளர்கள் கண்டறிந்திருப்பது இது இரண்டாவது முறையாகும்.




## ஆசியச் சிங்கங்களின் இடமாற்றம்

- 40 முதிர் இளம் மற்றும் இளம் வயது சிங்கங்களைப் பர்தா என்ற வனவிலங்குச் சரணாலயத்திற்கு இடமாற்றம் செய்ய குஜராத் அரசு திட்டமிட்டுள்ளது.
- பர்தா சரணாலயம் ஆனது, கிர் தேசியப் பூங்காவிலிருந்து சுமார் 100 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.
- ஆசியச் சிங்கங்களுக்கு வாழிடமளிக்கும் வகையில் அமைந்த இடமாக இது அடையாளம் காணப்பட்டுள்ளது.
- 2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முந்தையக் கணக்கெடுப்பின்படி, மாநிலத்தில் 674 சிங்கங்கள் உள்ள நிலையில் கிர் தேசியப் பூங்காவில் நீண்ட காலமாக இந்தப் பெரும் பூனை இனங்கள் அளவிற்கு அதிகமாக காணப்படுகின்றன.
- 2013 ஆம் ஆண்டில், இந்திய உச்ச நீதிமன்றம் ஆனது, நோய் அல்லது வேறு ஏதேனும் பேரழிவுகள் காரணமாக ஒட்டு மொத்தச் சிங்கங்களும் அழிந்து விடும் வாய்ப்பைத் தவிர்க்கும் விதமாக சில சிங்கங்களை மத்தியப் பிரதேசத்திற்கு இடம் மாற்ற உத்தரவிட்டது.




## கணேசய்யாஸ் குள்ள மரப் பல்லி

- கர்நாடக மாநிலம் சாம்ராஜநகரில் அமைந்துள்ள மலே மகாதேஷ்வரா மலையில் புதிய வகை மரப் பல்லி இனமானது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- இந்தப் புதிய இனத்திற்கு ஆராய்ச்சியாளர்கள், 'நிமாஸ்பிஸ் கணேஷையாஹி' அல்லது கணேசய்யாஸ் குள்ள மரப் பல்லி என்று பெயரிட்டனர்.
- K.N. கணேசய்யா என்பவர் பெங்களூரு வேளாண் அறிவியல் பல்கலைக் கழகத்தின் வேளாண் அறிவியலாளர்கள் மற்றும் புகழ்பெற்ற கன்னட எழுத்தாளர் ஆவார்.
- முன்னதாக, வடக்கு அந்தமானின் சாடில் சிகரம் தேசியப் பூங்காவில் உள்ள ஒரு புல் இனம் (சென்டோதெகா கணேஷையாஹியானா), ஒரு சிறிய கிரிப்டிக் வகை எறும்பு இனம் (பாராசிசியா கணேஷையாஹி) மற்றும் ஒரு சைகாஸ் (மடுப் பனை) இனம் (சைகாஸ் உமா-கணேஷையாஹி) ஆகியவற்றிற்கு அவரது பெயரானது இடப்பட்டது.



## ஆரவல்லி பசுமை மண்டல உருவாக்கத் திட்டம்

- காடுகள் வளர்ப்பு மூலம் சுமார் 1,400-கி.மீ. நீளம் மற்றும் ஐந்து கி.மீ. அகலம் கொண்ட ஒரு பசுமையான மண்டலத்தினை உள்ளடக்கிய வகையிலான தனது பசுமை மண்டல உருவாக்கத் திட்டத்தினை இந்திய அரசு தொடங்கியுள்ளது.
- இது ஆரவல்லி மலைத்தொடரைச் சுற்றியுள்ள ஓர் இடையக மையமாக இருக்கும்.

- இது குஜராத், ராஜஸ்தான், ஹரியானா மற்றும் டெல்லியின் சில பகுதிகளை உள் அடக்கியது ஆகும்.
- இந்த உயர் இலட்சியமிக்கத் திட்டமானது புதர்த் தாவரங்கள் நிறைந்த நிலம், தரிசு நிலம் மற்றும் சேதமடைந்த வன நிலங்களில் பூர்வீக மரங்கள் மற்றும் புதர்ச் செடிகளை நடுவதை உள்ளடக்கியதாகும்.
- இது தார் பாலைவனமானது கிழக்கு நோக்கி விரிவடைவதைத் தடுக்கும்.
- நாட்டின் மேற்குப் பகுதியில் இருந்து டெல்லியின் தேசிய தலைநகர் பகுதி வரை வரும் தூசிக்கு இந்தப் பசுமை மண்டலம் ஒரு தடுப்பாக செயல்படும்.
- முழு ஆரவல்லித் தொடரின் ஐந்து கி.மீ. இடையக மண்டலம் ஆனது 6.3 மில்லியன் ஹெக்டேர் (Mha) நிலப் பரப்பினை உள்ளடக்கியது.




## அஞ்சாலை மீன்

- கடலூர் கடற்கரையில் உள்ள முடசலோடை மீன் பிடிப்பு மையத்தில் புதிய வகை அஞ்சாலை மீன் (விலாங்கு மீன்) இனத்தினை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்து உள்ளனர்.
- தமிழ்நாடு மாநிலத்தின் பெயரைக் கொண்டு இந்த இனத்திற்கு ஜிம்னோதோராக்ஸ் தமிழ்நாடுயென்சிஸ் எனப் பெயரிடப் பட்டுள்ளது.
- தமிழ்நாடு பழுப்பு நிற அஞ்சாலை மீன் என்பது இந்த இனத்தின் பொதுவான பெயர் ஆகும்.
- ஜிம்னோதோராக்ஸ் என்ற இந்த இனத்தில் கண்டறியப் பட்ட முதல் வகை இதுவாகும்.
- இந்தியக் கடல் பகுதியில் இதுவரையில் சுமார் 28 வகையான ஜிம்னோதோராக்ஸ் இனங்கள் கண்டறியப்பட்டு ஆவணப் படுத்தப் பட்டுள்ளது.



# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணியல் கல்வி அறிக்கை

- பிரதமருக்கான பொருளாதார ஆலோசனைக் குழுவானது (EAC-PM) சமீபத்தில் ஓர் ஆய்வறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையானது, ஹார்வர்ட் வணிகக் கல்லூரியில் உள்ள உத்தி மற்றும் போட்டித் திறன் கல்வி நிறுவனத்தின் இந்தியப் பிரிவான போட்டித்திறன் கல்வி என்ற நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டது.
- இது 10 வயதுக்குட்பட்ட குழந்தைகளிடையே நிலவும் கல்வியறிவு தரத்தின் குறிகாட்டி ஆகும்.
- கல்விசார் உள்கட்டமைப்பு, கல்விக்கான அணுகல், அடிப்படை சுகாதாரம், கற்றல் மூலம் பெறும் பயன்கள் மற்றும் நிர்வாகம் போன்ற அனைத்து முக்கியக் குறி காட்டிகளிலும் பஞ்சாப் மாநிலம் முதலிடத்தில் உள்ளது.
- மேற்கு வங்காளம் தனது முன்னிலையைத் தக்க வைத்துக் கொண்ட நிலையில் பெரிய மாநிலங்களின் பிரிவில் உத்தரப் பிரதேசம் கடைசி இடத்தில் உள்ளது.
- சிறிய மாநிலங்களின் பிரிவில், பஞ்சாப் மாநிலம் முதலிடத்திலும் தெலுங்கானா மாநிலம் கடைசி இடத்திலும் உள்ளது.
- ஒன்றியப் பிரதேசங்களின் பட்டியலில் புதுச்சேரி முதலிடத்திலும், லடாக் மோசமான செயல்திறனுடன் கடைசி இடத்திலும் உள்ளது.

CATEGORY WISE RANKING – INDEX ON FOUNDATIONAL LEARNING

| Large State | | |
|---|---|---|
| State | FLN Scores 2022 | Category Rank 2022 |
| West Bengal | 54.58 | 1 |
| Maharashtra | 52.78 | 2 |
| Tamil Nadu | 52.23 | 3 |
| Rajasthan | 52.12 | 4 |
| Karnataka | 44.91 | 5 |
| Gujarat | 44.08 | 6 |
| Madhya Pradesh | 42.43 | 7 |
| Bihar | 40.96 | 8 |
| Uttar Pradesh | 37.46 | 9 |

| North-Eastern | | |
|---|---|---|
| State | FLN Scores 2022 | Category Rank 2022 |
| Sikkim | 56.75 | 1 |
| Mizoram | 48.31 | 2 |
| Manipur | 47.17 | 3 |
| Assam | 46.15 | 4 |
| Tripura | 39.77 | 5 |
| Arunachal Pradesh | 35.82 | 6 |
| Nagaland | 34.41 | 7 |
| Meghalaya | 29.66 | 8 |

CATEGORY WISE RANKING – INDEX ON FOUNDATIONAL LEARNING

| Small State | | |
|---|---|---|
| State | FLN Scores 2022 | Category Rank 2022 |
| Punjab | 64.19 | 1 |
| Kerala | 58.42 | 2 |
| Goa | 51.05 | 3 |
| Uttarakhand | 46.57 | 4 |
| Himachal Pradesh | 46.56 | 5 |
| Haryana | 45.24 | 6 |
| Odisha | 44.36 | 7 |
| Chhattisgarh | 40.98 | 8 |
| Jharkhand | 39.82 | 9 |
| Andhra Pradesh | 39.02 | 10 |
| Telangana | 34.38 | 11 |

| Union Territory | | |
|---|---|---|
| UT | FLN Scores 2022 | Category Rank 2022 |
| Puducherry | 54.76 | 1 |
| Delhi | 52.13 | 2 |
| Jammu & Kashmir | 50.75 | 3 |
| Lakshadweep | 49.26 | 4 |
| Chandigarh | 48.53 | 5 |
| Andaman & Nicobar Islands | 48.15 | 6 |
| Ladakh | 38.46 | 7 |

## சர்வதேச அறிவு சார் சொத்துக் குறியீடு

- சர்வதேச அறிவு சார் சொத்துக் குறியீட்டில் இடம் பெற்ற உலகின் 55 முன்னணி நாடுகளில் இந்தியா 42வது இடத்தில் உள்ளது.
- இந்தக் குறியீடானது அமெரிக்க வர்த்தகச் சபையினால் வெளியிடப்பட்டது.
- 2021 ஆம் ஆண்டில் 40வது இடத்திலும், 2014 ஆம் ஆண்டில் 25வது இடத்திலும் (மதிப்பீடு செய்யப் பட்ட 25 நாடுகளில்) இருந்த இந்தியாவிற்கு இந்த ஆண்டின் தரவரிசை ஒரு பின்னடைவாகும்.
- இந்தக் குறியீட்டில் அமெரிக்கா முதலிடத்திலும், ஐக்கியப் பேரரசு மற்றும் பிரான்சு ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடங்களிலும் உள்ளன.




## 2023 ஆம் ஆண்டில் பெண்கள், வணிகம் மற்றும் சட்டம் என்ற அறிக்கை

- 2023 ஆம் ஆண்டின் பெண்கள், வணிகம் மற்றும் சட்டம் என்ற அறிக்கையானது உலக வங்கி வெளியிடுகின்ற வருடாந்திர அறிக்கைகளில் 9வது ஆண்டு அறிக்கையாகும்.
- இது 190 நாடுகளில் உள்ள பெண்களின் பொருளாதாரம் சார்ந்த மூக்கிய வாய்ப்பைப் பாதிக்கும் சட்டங்கள் மற்றும் நெறிமுறைகள் குறித்து ஆய்வு செய்கிறது.
- இது போக்குவரத்து, பணியிடம், ஊதியம், திருமணம், பெற்றோர் அந்தஸ்து, தொழில் முனைவு, சொத்துக்கள் மற்றும் ஓய்வூதியம் போன்ற முக்கிய எட்டு குறிகாட்டிகளைக் கொண்டுள்ளது.
- இந்தக் குறியீட்டில் 100 என்ற அதிக மதிப்பெண் என்பது ஆண்களுக்கு நிகரான ஒரு நிலையில் பெண்கள் இருப்பதைக் குறிக்கிறது.
- இதில் 14 நாடுகள் மட்டுமே 100 மதிப்பெண்களைப் பெற்றுள்ளன.
- இதில் இந்தியா தற்போது 74.4 புள்ளிகளைப் பெற்றுள்ள நிலையில், இது தெற்காசியப் பிராந்தியத்திற்கான சராசரியான 63.7 என்ற மதிப்பினை விட அதிகமாக உள்ளது.
- ஆனால் இது தெற்காசியப் பிராந்தியத்தின் அதிகபட்ச மதிப்பெண்ணான 80.6 பெற்ற நேபாளத்தை விட குறைவாகவே உள்ளது.
- மும்பை பகுதியில் பொருந்தக் கூடிய சட்டங்கள் மற்றும் நெறிமுறைகள் குறித்தத் தரவுகளை இந்தக் குறியீடு இந்தியாவிற்கான மதிப்பீட்டிற்காகப் பயன்படுத்தியது.
- 2022 ஆம் ஆண்டில், உலக நாடுகளின் சராசரி மதிப்பெண் 100க்கு 76.5 ஆகும்.




## சொகுசு வீடுகளின் விலை உயர்வு

- ❖ சொத்துகள் தொடர்பான துறை ஆலோசக நிறுவனமான நைட் ஃபிராங்க் சமீபத்தில் 2023 ஆம் ஆண்டு 'சொத்து அறிக்கையினை' வெளியிட்டது.
- ❖ உலக நாடுகளில் ஆடம்பர (சொகுசு) வீடுகளின் விலை உயர்வுப் பட்டியலில் 92 வது இடத்தில் இருந்த மும்பை மாநகரம் 37 வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.
- ❖ மும்பையின் பிரதான (உயர்மதிப்பு) சொத்துச் சந்தையானது, உலகளவில் 6.4 சதவீதம் விலை உயர்வினைக் கண்டுள்ளது.
- ❖ உயர்மதிப்புச் சொத்துகளின் விலைகளில் 3 சதவீதம் என்ற உயர்வுடன் பெங்களூரு நகரமானது 62வது இடத்தில் உள்ளது.
- ❖ இதில் 1.2 சதவீத உயர்வுடன், 2021 ஆம் ஆண்டில் 93வது இடத்திலிருந்த டெல்லி 77வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.
- ❖ இந்த அறிக்கையானது, 2022 ஆம் ஆண்டில் உலகெங்கிலும் உள்ள ஆடம்பர வீடுகளின் விலையானது ஆண்டிற்கு 5.2 சதவீதம் (ஆண்டுக்கு ஆண்டு) அதிகரித்துள்ளதைக் குறிப்பிட்டுள்ளது.
- ❖ இந்த அறிக்கையின்படி, 2022 ஆம் ஆண்டில் துபாயில் உள்ள உயர்மதிப்புக் குடியிருப்புகளின் விலைகள் 44.2 சதவீதம் உயர்ந்து முதல் இடத்தில் உள்ளது.
- ❖ கொலராடோவின் ஆஸ்பென் நகரம் 27.6 சதவீத விலை உயர்வுடன் 2வது இடத்தில் உள்ள நிலையில், அதைத் தொடர்ந்து ரியாத் (25 சதவீதம்) இடம் பெற்றுள்ளது.



## கல்விசார் சுதந்திரக் குறியீடு 2023

- ஜெர்மனியில் உள்ள ப்ரீட்ரிக் அலெக்சாண்டர் என்ற பல்கலைக்கழகத்தின் அரசியல் அறிவியல் நிறுவனம் மற்றும் சுவீடன் நாட்டின் ஆலோசனை வழங்கீட்டு நிறுவனமான வி-டெம் ஆகியவை இந்த அறிக்கையினைத் தொகுத்துள்ளன.
- ஐந்து முக்கியக் குறிகாட்டிகளை மதிப்பிடுவதன் மூலம் 179 நாடுகளில் உள்ள கல்வி சார் சுதந்திரம் குறித்தக் கண்ணோட்டத்தை இந்த அறிக்கை வழங்குகிறது.
- 2022 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட 179 நாடுகளில் இந்தியாவின் கல்வி சார் சுதந்திரக் குறியீடு ஆனது இந்தக் குறியீட்டில் கீழ் நிலையில் உள்ள 30% நாடுகளில் இடம் பெற்று உள்ளது.
- 179 உலக நாடுகளில் இந்த நிலையை அடைந்த 22 நாடுகள் மற்றும் பிரதேசங்களில் இந்தியாவும் ஒன்றாக உள்ளது.
- இந்தியாவின் அண்டை நாடுகளான நேபாளம் (0.86), பாகிஸ்தான் (0.45) மற்றும் பூடான் (0.46) ஆகிய நாடுகள் இந்தியாவை விட அதிக மதிப்பெண்களைப் பெற்றுள்ள நிலையில், வங்காள தேசம் (0.25) மற்றும் மியான்மர் (0.01) ஆகியவை இந்தியாவை விட குறைவான மதிப்பெண்களைப் பெற்றுள்ளன.
- முந்தையக் காலங்களில் அதாவது 1950 மற்றும் 2012 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் இந்தியாவின் சுதந்திரக் குறியீட்டின் மதிப்பெண் ஆனது 0.60-0.70 என்ற அளவில் அதிகமாக இருந்தது.
- இதில் ஐந்து சிறிய நாடுகள் மட்டுமே (காம்பியா, உஸ்பெகிஸ்தான், செசல்ஸ், மாண்டினீக்ரோ மற்றும் கஜகஸ்தான்) தங்கள் தரவரிசைகளை மேம்படுத்தியுள்ளன.



## உலக உடல் பருமன் குறித்தத் தகவல் தொகுப்பு 2023

- உலக உடல் பருமன் கூட்டமைப்பானது, “2023 ஆம் ஆண்டிற்கான உலக உடல் பருமன் குறித்த தகவல் தொகுப்பு” என்ற அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- இந்தியாவில் குழந்தைப் பருவ உடல் பருமன் ஆனது 2035 ஆம் ஆண்டளவில் 9.1 சதவீதமாக அதிகரிக்கும்.
- இந்தியாவில் 2035 ஆம் ஆண்டிற்குள் 11 சதவீதம் பேர் அதிக உடல் பருமனைக் கொண்டவர்களாக இருப்பார்கள்.
- 2020 மற்றும் 2035 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் வயது வந்தோர் மத்தியில் நிலவும் உடல் பருமனில் ஏற்படும் வருடாந்திர அதிகரிப்பானது 5.2 சதவீதமாக இருக்கும்.
- 2020 ஆம் ஆண்டில் இந்தியாவில் உள்ள சிறுவர்கள் மத்தியில் ஏற்படும் உடல் பருமன் அபாயம் ஆனது 3 சதவிகிதம் ஆக இருந்த நிலையில் இது 2035 ஆம் ஆண்டில் இந்த ஆபத்து 12 சதவிகிதமாக அதிகரிக்கும்.
- 2020 ஆம் ஆண்டில் பெண் குழந்தைகள் மத்தியில் இதற்கான அபாயம் 2 சதவீதமாக இருந்த நிலையில், அடுத்த 12 ஆண்டுகளில் இது 7 சதவீதமாக உயரும்.
- 2020 ஆம் ஆண்டில் இந்தியப் பெண்கள் மத்தியில் ஏற்படும் உடல் பருமன் ஆபத்து 7 சதவிகிதம் ஆக இருந்த நிலையில், இது 2035 ஆம் ஆண்டிற்குள் 13 சதவிகிதமாக உயரும்.
- 2020 ஆம் ஆண்டில் ஆண்கள் மத்தியில் ஏற்படும் உடல் பருமன் ஆபத்து 4 சதவீதமாக இருந்த நிலையில், இது அடுத்த 12 ஆண்டுகளில் 8 சதவீதமாக உயரும்.
- 2035 ஆம் ஆண்டிற்குள் உடல் பருமன் ஆபத்து 4.32 டிரில்லியன் டாலர் மதிப்பிலான மொத்தப் பொருளாதார இழப்பிற்கு வழி வகுக்கும்.
- இது உலகின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கிட்டத்தட்ட 3 சதவீதத்திற்குச் சமம் ஆகும்.
- இது இந்தியாவின் மொத்த தேசிய உள்நாட்டு உற்பத்தியின் மீது ஏற்படுத்தும் தாக்கம் 1.8 சதவீதமாக இருக்கும்.




## வி-டெம் தேர்தல் ஜனநாயக அறிக்கை 2023

- வி-டெம் ஜனநாயக அறிக்கை நிறுவனத்தின் 2023 ஆம் ஆண்டிற்கான தேர்தல் ஜனநாயகக் குறியீட்டில் இந்தியா 108வது இடத்தில் உள்ளது.

- தான்சானியா, பொலிவியா, மெக்சிகோ, சிங்கப்பூர் மற்றும் நைஜீரியா போன்ற நாடுகளை விட இந்தியா மிகவும் கீழே உள்ளது.
- இந்த அறிக்கையில், கடந்த 10 ஆண்டுகளில் முன்னணியில் உள்ள 10 தன்னாட்சி நாடுகளின் பட்டியலில் இந்தியாவும் இடம் பெற்றுள்ளது.
- தேர்தல் ஜனநாயகக் குறியீட்டில் (EDI) 2022 ஆம் ஆண்டில் 100வது இடத்தில் இருந்த இந்தியாவின் தரவரிசையானது இந்த ஆண்டு 108வது இடத்திற்குச் சரிந்துள்ளது.
- முற்போக்கு ஜனநாயக குறியீட்டில் இந்தியா 97வது இடத்தில் இருந்தது.
- பாகிஸ்தான் முற்போக்கு ஜனநாயகக் குறியீட்டில் 106வது இடத்திலும், தேர்தல் ஜனநாயகக் குறியீட்டில் 110வது இடத்திலும் இரண்டு இடங்கள் கீழே சரிந்தது.
- முற்போக்கு ஜனநாயகக் குறியீட்டில் அமெரிக்கா 23வது இடத்தைப் பிடித்த நிலையில், கனடா மற்றும் ஐக்கியப் பேரரசு ஆகியவை முறையே 24வது மற்றும் 20வது இடங்களைப் பிடித்தன.
- முற்போக்கு ஜனநாயகக் குறியீட்டில் அதிக தொகுப்பு மதிப்பெண்களுடன் டென்மார்க் முதல் இடத்தைப் பிடித்தது.
- சுவீடன் மற்றும் நார்வே ஆகிய நாடுகள் முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களைப் பிடித்துள்ளன.
- 1998 ஆம் ஆண்டில் 74% ஆக இருந்த ஜனநாயக நாடுகளுக்கிடையேயான உலக வர்த்தகம் ஆனது 2022 ஆம் ஆண்டில் 47% ஆகக் குறைந்துள்ளதாக இந்த அறிக்கை கண்டறிந்துள்ளது.
- உலகின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 46% ஆனது தற்போது எதேச்சதிகார மற்றும் ஜனநாயக நாடுகள் தான் பங்களிக்கின்றன.

FIGURE 10. DEMOCRATIZERS VS. AUTOCRATIZERS, 2012-2022



## உலக மக்களின் மன நிலை குறித்த அறிக்கை

- சேப்பியன் லேப்ஸ் நிறுவனமானது, தனது மூன்றாவது வருடாந்திர உலக மக்களின் மன நிலை குறித்த அறிக்கையினை (MSW) வெளியிட்டுள்ளது.
- பெருந்தொற்றுக் காலத்தின் போது மனநலக் குறைவு பாதிப்பில் சிறிதளவே மீட்சி ஏற்பட்டுள்ளதாக இந்த அறிக்கை கண்டறிந்துள்ளது.
- இக்குழுவானது "மனநல ஈவு (குறிப்பீடு)" எனப்படும் மதிப்பெண் மூலம் மக்களின் மன நிலை குறித்து மதிப்பிடுகிறது.
- கடந்த இரண்டு ஆண்டுகளில் சராசரி மதிப்பெண் 33 புள்ளிகள் குறைந்துள்ளது. இருப்பினும் இன்னும் மீட்சிக்கான அறிகுறிகள் வெளிப்படவில்லை.
- 18 முதல் 24 வயதிற்குட்பட்டவர்களும் குறைவான "சமூக சுய மதிப்பீட்டினை" கொண்டு இருந்தனர்.
- இது ஒரு நபர் தன்னைப் பற்றி எவ்வாறு உணர்கிறார் மற்றும் அர்த்தமுள்ள உறவுகளைப் பேணுவதற்கான ஒரு நபரின் திறனை அளவிடும் அளவீடாகும்.
- உலக சராசரி மனநல ஈவானது 64 ஆக உள்ளது.
- தான்சானியா, பனாமா, புயுரிட்டோ ரிக்கோ, டொமினிகன் குடியரசு மற்றும் வெனிசுலா ஆகியவை மனநல ஆரோக்கியத்தில் முதல் 5 இடங்களைப் பெற்ற நாடுகளாகும்.
- பிரிட்டன், அயர்லாந்து, ஆஸ்திரேலியா, தென்னாப்பிரிக்கா மற்றும் பிரேசில் ஆகிய நாடுகள் மனநலத் தரவரிசையில் கடைசி இடங்களைப் பெற்ற நாடுகள் ஆகும்.
- இதில் இந்தியா 49வது இடத்திலும், பாகிஸ்தான் 48வது இடத்திலும் உள்ளன.
- பெரு, இந்தியா, பொலிவியா ஆகிய நாடுகளில் 55-64 வயதுடையவர்களுடன் ஒப்பிடச் செய்கையில், 18-24 வயதுடைய 42% இளைஞர்கள் மனநலம் பாதிக்கப் பட்டவர்களாக அல்லது மன நலம் பேணும் ஒரு முயற்சியில் போராடிக் கொண்டு இருப்பவர்களாக உள்ளனர் என்று இந்த அறிக்கை கூறுகிறது.
- இந்த அறிக்கையில் சீனா பற்றிய விவரங்கள் எதுவும் இடம் பெறவில்லை.



## சொத்து விவரங்கள் குறித்த அறிக்கை 2023

- உலகளாவிய மனை விற்பனை ஆலோசனை வழங்கீட்டு நிறுவனமான நைட் ஃபிராங்க், 2023 ஆம் ஆண்டிற்கான அதன் சொத்து விவரங்கள் குறித்த ஒரு அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- உலகெங்கிலும் உள்ள பிரதான மனை சார்ந்த சொத்துச் சந்தையின் போக்குகள் மற்றும் செயல்திறன் பற்றிய நுண்ணறிவுகளை இந்த அறிக்கை வழங்குகிறது.
- இந்த மதிப்பீட்டில் பங்கேற்ற இந்தியர்களில், 2022 ஆம் ஆண்டில் UHNWI நபர்களின் (மிக அதிக-நிகரச் சொத்து மதிப்பு கொண்ட தனிநபர்கள்) செல்வத்தில் 88 சதவீத உயர்வு ஏற்பட்டது.
- கடந்த ஆண்டில் இந்தியாவின் அதிக-உயர்-நிகரச் சொத்து மதிப்பு கொண்ட தனி நபர்களின் செல்வம் 10 சதவீதத்திற்கும் அதிகமாக அதிகரித்துள்ளது.
- 47 சதவீதத்தினர் தங்களின் சொத்து மதிப்பானது, 10 சதவீதத்திற்கு மேல் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கின்றனர்.
- 53 சதவீதம் பேர் அவர்களது சொத்துகள் முந்தைய ஆண்டை விட, குறைந்தது 10 சதவீதம் வரை உயரும் என எதிர்பார்க்கின்றனர்.
- இந்தியாவின் மிக அதிக-நிகரச் சொத்து மதிப்பு கொண்ட தனிநபர்களின் முதலீடு செய்யத் தக்க சொத்துகள் பெரும்பாலும் பங்குகள், வீட்டுமனை மற்றும் பத்திரங்கள் ஆகியவற்றில் இடப்பட்டுள்ளது என்றும் இந்தக் கணக்கெடுப்பு கண்டறிந்துள்ளது.
- உலகளவில் உள்ள பணக்காரர்களை விட இந்தியாவின் மிக அதிக-நிகரச் சொத்து மதிப்பு கொண்ட தனிநபர்களால் பங்குகளில் அதிகளவில் முதலீடு செய்யப் பட்டு உள்ளதாக அறிக்கை கூறுகிறது.




## இந்தியப் பெருந்தகைமை குறித்த அறிக்கை 2023

- தஸ்ரா மற்றும் பெயின் & கோ நிறுவனம் ஆனது சமீபத்தில் இந்தியப் பெருந்தகைமை குறித்த அறிக்கையினை வெளியிட்டது.

- இந்தியாவில் பெருந்தகைமை நிலையைப் பற்றிய விரிவான பகுப்பாய்வான இந்த அறிக்கையானது, அவற்றின் சுவாரஸ்யமானப் போக்குகளைப் பற்றியத் தகவல்களை வழங்குகிறது.
- இந்தியாவின் மிக அதிக-நிகரச் சொத்து மதிப்பு கொண்ட தனிநபர்களினால் (UHNIs) மேற்கொள்ளப்படும் தொண்டு சார்ந்தப் பங்களிப்புகள் கணிசமாகக் குறைந்துள்ளன.
- முந்தைய நிதியாண்டில் 11,821 பில்லியனாக இருந்தப் பங்களிப்பானது 2022 ஆம் நிதி ஆண்டில் ரூ.4,230 பில்லியனாக குறைந்தது.
- 2021 ஆம் நிதியாண்டில் ரூ.4,041 கோடியாக இருந்த மற்ற அனைத்து மூலங்களில் இருந்தும் வழங்கப்படும் மிக அதிக-நிகரச் சொத்து மதிப்பு கொண்ட தனி நபர்களின் பங்களிப்பு ஆனது 2022 ஆம் நிதியாண்டில் 3,843 கோடியாகக் குறைந்து உள்ளது.
- ஆனால் பெரு நிறுவனங்களின் சமூகப் பொறுப்புச் சார்ந்த செலவினம் 5% அதிகரித்து, 2021-22 ஆம் ஆண்டில் 27,000 கோடி ரூபாயாக இருந்தது.
- இந்தியாவின் அதிக-நிகரச் சொத்து மதிப்பு கொண்ட தனிநபர்கள் கல்வி மற்றும் சுகாதாரம் ஆகிய துறைகளில் பங்களிப்பு வழங்கி உள்ளனர்.
- பெரு நிறுவனங்களின் சமூகப் பொறுப்புச் சார்ந்தப் பங்களிப்புகள் ஆண்டுதோறும் 19% என்ற விகிதத்தில் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- இது 2026 ஆம் நிதியாண்டில் மொத்தத் தனியார் துறைப் பங்களிப்புகளில் சுமார் 32% விகிதத்தை இது எட்டக் கூடும்.
- இந்திய மிக அதிக-நிகரச் சொத்து மதிப்பு கொண்ட தனிநபர்களின் ஒப்பீட்டுப் பங்களிப்புகள் 0.1% முதல் 0.15% வரை இருக்கும்.
- அவை அமெரிக்காவில் 1.2% முதல் 2.5% வரையிலும், ஐக்கியப் பேரரசில் 0.5% முதல் 1.8% வரையிலும், சீனாவில் 0.5% முதல் 1.4% வரையிலும் உள்ளது.




## IPES-உணவு அமைப்பின் சிறப்பு அறிக்கை

- IPES-உணவு (நிலையான உணவு முறைகள் குறித்த சர்வதேச நிபுணர் குழு) அமைப்பானது ஒரு சிறப்பு அறிக்கையினை வெளியிட்டுள்ளது.

- குறைந்த வருமானம் கொண்ட நாடுகளில் 60% நாடுகள் தற்போது, அதிக கடன் நெருக்கடி ஆபத்தில் இருப்பதாக அல்லது ஏற்கனவே கடன் நெருக்கடியில் இருப்பதாக கருதப் படுகிறது.
- சுமார் 21 நாடுகள் கடன் நெருக்கடி மற்றும் உணவுப் பாதுகாப்பின்மை ஆகிய இரண்டின் பேரழிவு நிலைகளை நெருங்கி வருகின்றன.
- ஜாம்பியா, இலங்கை மற்றும் சுரினாம் ஆகியவை ஏற்கனவே தங்கள் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் உள்ளன.
- கானா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் இந்த நிலையினைத் தவிர்ப்பதற்காக தற்போது அவசரப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளன.
- 2022 ஆம் ஆண்டில் உலகின் மிகவும் ஏழ்மையான நாடுகள் தங்களது கடனைச் செலுத்துவதற்கான செலவினங்களில் 35% அதிகரித்துள்ளது.
- அந்த நாடுகள் வெளிநாட்டுக் கடன் கொடுப்பனவுகளில் 47 சதவீதத்தினைத் தனியார் கடன் நிறுவனங்களுக்கும், 12% சீனாவிற்கும், 14% மற்ற அரசாங்கங்களுக்கும் மற்றும் மீத அளவினைச் சர்வதேச நாணய நிதியம் போன்ற பலதரப்பு நிறுவனங்களுக்கும் செலுத்தியுள்ளன.
- பல நாடுகள் தற்போது 'உரங்கள் சூழ்ச்சி' என்று கூறப்படும் பிரச்சனையில் சிக்கித் தவிக்கின்றன.
- இந்தியா, கென்யா மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகள் எரிபொருள் இறக்குமதி செலவுகள் அதிகரித்து வருகின்ற நிலையில், நெருக்கடியை எதிர்கொள்ளும் வகையில், உர மானியங்களை அதிகரித்து வரும் அரசுகளாகும்.




## SIPRI அறிக்கை 2022

- ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் (SIPRI) ஆனது 2018 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் மேற்கொள்ளப்பட்ட உலகளாவிய ஆயுதப் பரிமாற்றங்கள் பற்றிய புதிய ஒரு தரவினை வெளியிட்டுள்ளது.
- 2013-17 மற்றும் 2018-22 ஆகிய ஆண்டுகளுக்கு இடையே இந்தியாவின் ஆயுத இறக்குமதி 11% குறைந்துள்ளது.

- 2022 ஆம் ஆண்டில், 2012-16 மற்றும் 2017-21 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் இந்தியாவின் ஆயுத இறக்குமதி 21% குறைந்துள்ளது.
- இருப்பினும், இந்தியா இன்னும் உலகின் மிகப்பெரிய ஆயுத இறக்குமதியாளராக திகழ்கிறது.
- கடந்த ஐந்தாண்டுகளில், உலகளாவிய ஆயுத இறக்குமதியில் இந்தியாவின் பங்கு அதிக பட்சமாக 11% ஆக உள்ளது.
- அதைத் தொடர்ந்து சவுதி அரேபியா (9.6%), கத்தார் (6.4%), ஆஸ்திரேலியா (4.7%) மற்றும் சீனா (4.7%) ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- ஒரு குறிப்பிட்ட ஆண்டில் கொள்முதல்கள் எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றன என்பதைப் பொறுத்து இந்தத் தரவரிசை முறையானது மாறும்.
- பிரான்சின் ஆயுத ஏற்றுமதியானது, 2013-17 மற்றும் 2018-22 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் 44% உயர்ந்துள்ளது.
- இந்தியா, கடந்த ஐந்து ஆண்டுகளில், பிரான்சின் ஏற்றுமதியில் 30 சதவீதத்தினைப் பெற்றுள்ளது.
- கடந்த ஐந்து ஆண்டுகளில், உலக ஏற்றுமதியில் 40% பங்களிப்புடன் உலகின் முதன்மையான இராணுவ ஏற்றுமதி நாடாக அமெரிக்கா திகழ்கிறது.
- அதைத் தொடர்ந்து ரஷ்யா (16%), பிரான்சு (11%), சீனா (5.2%) மற்றும் ஜெர்மனி (4.2%) ஆகிய நாடுகள் உள்ளன.
- 2013-17 மற்றும் 2018-22 ஆகிய நாடுகளுக்கு இடையே அமெரிக்காவின் ஆயுத ஏற்றுமதி 14% உயர்ந்துள்ளது.
- இதே காலகட்டத்தில் ரஷ்யாவின் ஏற்றுமதி 31% சரிந்தது.
- இந்தியாவிற்கு மேற்கொள்ளப்படும் ரஷ்யாவின் இறக்குமதி 37% குறைந்துள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் முக்கிய ஆயுதங்களை இறக்குமதி செய்யும் மூன்றாவது பெரிய நாடாக உக்ரைன் திகழ்ந்தது.
- ஆயுத இறக்குமதிகள், குறிப்பாக நீண்ட தூர தாக்குதல் வரம்புடைய ஆயுதங்களின் இறக்குமதிகள், தென் கொரியாவில் 61 சதவீதமும், ஜப்பானில் 171 சதவீதமும், ஆஸ்திரேலியாவில் 23 சதவீதமும் அதிகரித்துள்ளதாகவும் இந்த அறிக்கை எடுத்து உரைக்கிறது.



## பசி நிலையைப் போக்குவதற்கான நிதி வழங்கீட்டில் உள்ள இடைவெளி பற்றிய அறிக்கை 2023

- "2023 ஆம் ஆண்டு பசி நிலையைப் போக்குவதற்கான நிதி வழங்கீட்டில் உள்ள இடைவெளி பற்றிய அறிக்கை: உலக நாடுகளின் பசி நெருக்கடியை நிறுத்துவதற்கு என்ன நடவடிக்கை தேவை" என்ற தலைப்பிலான ஒரு அறிக்கையானது பசி நிலைக்கு எதிரான நடவடிக்கை (Action Against Hunger) என்ற ஒரு அமைப்பினால் சமீபத்தில் வெளியிடப் பட்டது.
- இந்த அறிக்கையின்படி, கடுமையான பசி நெருக்கடிகளை எதிர்கொள்ளும் நாடுகள் ஒப்பீட்டளவில் குறைவான அளவில் பசி நெருக்கடிகளைக் கொண்ட நாடுகளை விட குறைவான நிதியையே பெற்றுள்ளன.
- 2022 ஆம் ஆண்டில் பசி நிலையைப் போக்குவதற்கான நிதி வழங்கீட்டில் 53% அளவில் இடைவெளி இருப்பதாக இந்த அறிக்கை குறிப்பிட்டது.
- பசி நிலையைப் போக்குவதற்கான திட்டங்களின் தேவைகளில் 3 சதவீதம் மட்டுமே முழுமையாக நிதியளிக்கப்பட்டது.
- கூடுதல் நிதிக்கான 65 சதவீத வேண்டுகோள்களில் பாதியளவு கூட நிறைவேற்றப் படவில்லை.
- உலக நாடுகளின் பசி நிலையினைப் போக்குவதற்கான நடவடிக்கைகளின் தேவைகளில் 47% ஆனது ஐக்கிய நாடுகள் சபையின் நிதி மூலம் பூர்த்தி செய்யப் படுகிறது.
- எனவே, பசி நிலையைப் போக்குவதற்கான நிதி வழங்கீட்டில் உள்ள இடைவெளி ஆனது 53% ஆக உள்ளது.
- 2021 ஆம் ஆண்டில் 828 மில்லியன் மக்கள் பட்டினியால் பாதிக்கப் பட்டுள்ளனர்.
- இது முந்தைய ஆண்டை விட 46 மில்லியனும், 2019 ஆம் ஆண்டில் இருந்த அளவை விட 150 மில்லியனும் அதிகமாகும்.
- உலக நாடுகளில் உள்ள பசி நெருக்கடியை முடிவுக்குக் கொண்டு வர 4 பில்லியன் அமெரிக்க டாலர் நிதி தேவைப்படுகிறது.
- மொசாம்பிக் மற்றும் கென்யா ஆகிய நாடுகள் ஆப்கானிஸ்தான் மற்றும் ஹைதி ஆகிய நாடுகளை விட 32% அதிக நிதியைப் பெற்றுள்ளன.




## Mind the Gender Gap அறிக்கை

- "பாலின இடைவெளி குறித்த கவனம்" என்ற தலைப்பிலான ஒரு அறிக்கையானது சமீபத்தில் CFA என்ற நிறுவனத்தினால் வெளியிடப்பட்டது.

- இந்தியாவில் நிதி மற்றும் அது சார்ந்தத் துறைகளில் பெண்களின் பங்களிப்பு விகிதம் குறைவாக உள்ளது.
- இந்த நிறுவனத்தின் மாதிரியில் இடம் பெற்றுள்ள நிறுவனங்களில் பதிவான சராசரிப் பெண்கள் பங்கேற்பு விகிதம் 12.7% ஆகும்.
- பல்வேறு துறைகளில், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களில் 30 சதவீதம் என்ற அளவில் அதிகப் பெண்கள் பங்கேற்பு விகிதங்கள் பதிவாகியுள்ள நிலையில், அதைத் தொடர்ந்து நிதிச் சேவைகள் துறை (22.4%) உள்ளது.
- முக்கிய நிர்வாகப் பதவிகளில் 15.9 சதவீத பெண்கள் மட்டுமே பணியாற்றுகின்றனர்.
- இதில் பெண்கள் மற்றும் ஆண்களின் விகிதம் 0.97 ஆக உள்ளது.
- முக்கிய நிர்வாகப் பணியாளர் பதவிகளில் இது 0.52 ஆகவும், இயக்குநர் பதவிகளில் 0.64 ஆகவும் இது குறைகிறது.
- 69% நிறுவனங்கள், தங்கள் நிறுவனங்களில் பெண் பணியாளர்களைக் கொண்டிருக்க வில்லை.




## உலகின் தலைசிறந்த இடங்கள் 2023



- டைம் இதழ் ஆனது 2023 ஆம் ஆண்டிற்கான 'உலகின் தலைசிறந்த இடங்கள்' என்ற தனது வருடாந்திரப் பட்டியலை வெளியிட்டுள்ளது.
- 50 இடங்கள் கொண்ட இந்தப் பட்டியலில் இந்தியாவினைச் சேர்ந்த இரண்டு இடங்கள் இடம் பெற்றுள்ளன.
- மயூர்பஞ்ச் மற்றும் லடாக் ஆகியவை முறையே அரிய வகை புலி இனங்கள் மற்றும் பழங்காலக் கோவில்கள் மற்றும் சாகசத் தளங்கள் மற்றும் உணவு முறைகளுக்காக இப்பட்டியலில் இடம் பெறத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.
- கேரளா மற்றும் அகமதாபாத் ஆகியவை டைம் இதழின் '2022 ஆம் ஆண்டிற்கான உலகின் தலைச்சிறந்த இடங்கள்' பட்டியலில் இடம் பெற்ற இந்திய இடங்களாகும்.

## சோடியம் உட்கொள்ளல் குறைப்பு பற்றிய உலகளாவிய அறிக்கை

- உலக சுகாதார அமைப்பானது சோடியம் உட்கொள்ளல் குறைப்புப் பற்றி உலகளாவிய அறிக்கை என்ற அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- உலக மக்கள் உட்கொள்ள வேண்டிய சராசரி உப்பின் அளவு ஒரு நாளைக்கு 10.8 கிராம் என்று மதிப்பிடப் பட்டுள்ளதாக இந்த அறிக்கை கூறுகிறது.
- இளம் பருவத்தினர் உட்கொள்ள வேண்டிய உப்பின் அளவு, ஒரு நாளைக்கு 5 கிராமுக்கு குறைவாக இருக்க வேண்டும் என்று உலக சுகாதார அமைப்பு பரிந்துரைத்ததை விட இது இரண்டு மடங்கு அதிகமாக உள்ளது.
- இந்த அறிக்கையானது ஒவ்வோர் உறுப்பினர் நாடுகளுக்கும் 1 (குறைந்த அளவு) முதல் 4 (அதிக அளவு) வரை என்ற அளவீட்டில் உலக நாடுகளின் சோடியம் மதிப்பெண் அளவினைக் குறிப்பிட்டுள்ளது.
- இந்த மதிப்பெண் ஆனது சோடியம் குறைப்புக் கொள்கைகள் மற்றும் பிற பல்வேறு நடவடிக்கைகளைச் செயல்படுத்துதலின் நிலையினை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடப் படுகிறது.




- உலக நாடுகளின் சோடியம் மதிப்பெண் ஆனது, உலக மக்களின் உணவு சோடியம் உட்கொள்ளல் மற்றும் இருதய நோய்கள் தொடர்பான கொள்கைகளின் முன்னேற்றத்தின் தாக்கத்தை மதிப்பிடப் பயன்படுத்தப் படுகிறது.

- உலக சுகாதார அமைப்பின் அனைத்து 194 உறுப்பினர் நாடுகளும் 2013 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கிற்கு உறுதிப்பாடு மேற்கொண்டிருந்தாலும், 5% நாடுகள் மட்டுமே விரிவான சோடியம்-குறைப்பு கொள்கைகளைச் செயல்படுத்தியுள்ளன.
- உலக சுகாதார அமைப்பின் 194 உறுப்பினர் நாடுகளில், உலக நாடுகளின் சோடியம் மதிப்பெண்ணில் 56 நாடுகள் மதிப்பெண் 1 என்ற மதிப்பெண்ணைக் கொண்டுள்ளன.
- 98 நாடுகள் தன்னார்வ அல்லது கட்டாயத்தின் அடிப்படையில் கொள்கைகள் மற்றும் பிற நடவடிக்கைகளைச் செயல்படுத்தி அதிக மதிப்பெண்களைப் பெற்றுள்ளன.
- இத்தகையக் கொள்கைகள் 2030 ஆம் ஆண்டிற்குள் உலகளவில் 7 மில்லியன் உயிர்களைக் காப்பாற்றும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

## உலக மகிழ்ச்சி அறிக்கை 2023




- இது 10வது உலக மகிழ்ச்சி அறிக்கையாகும்.
- இது ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான மேம்பாட்டுத் தீர்வுகள் வலை அமைப்பு என்பதினால் வெளியிடப்பட்டது.
- பின்லாந்து, தொடர்ந்து ஆறாவது ஆண்டாக உலகின் மகிழ்ச்சியான நாடாக தனது இடத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளது.

- ஆறு வெவ்வேறு காரணிகள் ஒரு நாட்டின் மகிழ்ச்சியின் அளவைத் தீர்மானிக்கச் செய்கின்றன.
- ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நபர் வருமானம், சமூக ஆதரவு, ஆரோக்கியமான ஆயுட்காலம், சுதந்திரம், பெருந்தன்மை மற்றும் குறைந்த ஊழல் ஆகியவை இதில் அடங்கும்.
- 2022 ஆம் ஆண்டில் 136 ஆக இருந்த இந்தியாவின் தரவரிசையானது 2023 ஆம் ஆண்டில் 126வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.
- இலங்கை (112), பாகிஸ்தான் (108), நேபாளம் (78), சீனா (64) போன்ற நெருங்கிய அண்டை நாடுகளுக்கு அடுத்த இடத்தில் தான் இந்தியா இன்னும் உள்ளது.
- போரினால் பாதிக்கப்பட்ட உக்ரைன் 92வது இடத்திலும், தலிபான் ஆட்சியின் கீழான ஆப்கானிஸ்தான் கடைசி இடத்திலும் (137வது) உள்ளன.

## 5வது வருடாந்திர உலகக் காற்றுத் தர அறிக்கை 2022

- IQAir என்ற அமைப்பானது 5வது வருடாந்திர உலகக் காற்றுத் தர அறிக்கையினை வெளியிட்டு உள்ளது.
- இந்த அறிக்கையில் இடம் பெற்ற சுமார் 60% இந்திய நகரங்களில் காணப்படும் வருடாந்திர PM2.5 அளவுகள் உலக சுகாதார அமைப்பின் வழிகாட்டுதல்களை விட குறைந்தபட்சம் ஏழு மடங்கு அளவு அதிகமாக பதிவாகியுள்ளதாக இந்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.
- 2022 ஆம் ஆண்டில், சராசரி PM2.5 அளவு 53.3 pg/m3 ஆக இருந்தது.
- இது 2021 ஆம் ஆண்டில் 58.1 pg/m3 என்ற அளவை விட சற்று குறைவாக உள்ளது.
- ராஜஸ்தானில் உள்ள பிவாடி நகரம் 92.7 என்ற PM (நுண்மத் துகள்கள்) அளவுகளுடன் நாட்டிலேயே மிகவும் மாசுபட்ட நகரமாக உள்ளது.
- 92.6 என்ற PM அளவுகளுடன் டெல்லி மிகவும் மாசுபட்ட பெருநகரமாகத் திகழ்கிறது.
- மோசமான காற்றுத் தரக் குறியீடு கொண்ட நாடுகளின் பட்டியலில் இந்தியா எட்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.
- இது முந்தைய ஆண்டில் இருந்த ஐந்தாவது இடத்தில் இருந்து பின்னடைந்துள்ளது.
- பாகிஸ்தானில் உள்ள லாகூர் நகரம் 10 இடங்களுக்கு மேல் முன்னேறி 2022 ஆம் ஆண்டில் உலகின் மிக மோசமான காற்றுத் தரம் கொண்ட நகரமாக மாறியுள்ளது.
- மத்திய மற்றும் தெற்காசியாவில் உள்ள மிகவும் மாசுபட்ட 15 நகரங்களில் 12 நகரங்கள் இந்தியாவில் உள்ளன.
- பெங்களூரு நகரில் 29 ஆக இருந்த PM2.5 அளவு 31.5 மைக்ரோகிராம்/கியூபிக் மீட்டராக உயர்ந்துள்ளது.
- ஹைதராபாத் நகரில் 39.4 ஆக இருந்த PM2.5 அளவு 42.4 மைக்ரோகிராம்/கன மீட்டராக அதிகரித்துள்ளது.
- டெல்லி, மும்பை மற்றும் சென்னை ஆகிய நகரங்களில் மாசுபாட்டின் அளவு சில மைக்ரோகிராம் குறைந்துள்ளது.
- கொல்கத்தா நகரின் மாசுபாட்டு அளவில் எந்தவித மாற்றமும் இல்லை.

- அமெரிக்காவின் பசிபிக் பிரதேசமான குவாம் நகரானது 1.3 என்ற PM2.5 செறிவுடன் உலகின் மற்ற நாடுகளை விட தூய்மையானக் காற்றைக் கொண்ட நகரமாக உள்ளது.
- ஆஸ்திரேலியாவின் கான்பெர்ரா 2.8 என்ற அளவுடன் தூய்மையான காற்றை கொண்டு உள்ளது.




## உலகத் தீவிரவாதக் குறியீடு



| RANK | COUNTRY | SCORE | RANK CHANGE |
|---|---|---|---|
| 1 | Afghanistan | 8.822 | ↔ |
| 2 | Burkina Faso | 8.564 | ↑ 2 |
| 3 | Somalia | 8.463 | ↔ |
| 4 | Mali | 8.412 | ↑ 3 |
| 5 | Syria | 8.161 | ↑ 1 |
| 6 | Pakistan | 8.160 | ↑ 3 |
| 7 | Iraq | 8.139 | ↓ 5 |
| 8 | Nigeria | 8.065 | ↓ 2 |
| 9 | Myanmar (Burma) | 7.977 | ↑ 1 |
| 10 | Niger | 7.616 | ↓ 2 |
| 11 | Cameroon | 7.347 | ↑ 1 |
| 12 | Mozambique | 7.330 | ↓ 1 |
| 13 | India | 7.175 | ↔ |
| 14 | Democratic Republic of the Congo | 6.872 | ↑ 2 |
| 15 | Colombia | 6.697 | ↓ 1 |
| 16 | Egypt | 6.632 | ↓ 1 |
| 17 | Chile | 6.619 | ↑ 1 |
| 18 | Philippines | 6.328 | ↓ 1 |
| 19 | Chad | 6.168 | ↔ |
| 20 | Kenya | 6.163 | ↔ |
| 21 | Iran | 5.688 | ↑ 5 |
| 22 | Yemen | 5.616 | ↓ 1 |
| 23 | Türkiye | 5.600 | ↔ |
| 24 | Indonesia | 5.500 | ↔ |
| 25 | Israel | 5.489 | ↑ 5 |
| 26 | Thailand | 5.430 | ↓ 4 |
| 27 | Togo | 4.915 | ↑ 40 |
| 28 | Benin | 4.840 | ↑ 53 |
| 29 | Sri Lanka | 4.839 | ↓ 4 |
| 30 | United States of America | 4.799 | ↓ 2 |
| 31 | Greece | 4.793 | ↓ 2 |
| 32 | Libya | 4.730 | ↓ 5 |
| 33 | Palestine | 4.571 | ↓ 1 |
| 34 | France | 4.419 | ↑ 2 |
| 35 | Germany | 4.245 | ↓ 4 |
| 36 | Nepal | 4.134 | ↓ 7 |
| 37 | Algeria | 4.083 | ↑ 3 |
| 38 | Tanzania | 4.065 | ↓ 3 |
| 39 | Burundi | 4.051 | ↓ 6 |
| 40 | Tunisia | 3.889 | ↓ 1 |
| 41 | Peru | 3.856 | ↓ 3 |
| 42 | United Kingdom | 3.840 | ↓ 5 |
| 43 | Bangladesh | 3.827 | ↓ 2 |
| 44 | Djibouti | 3.802 | ↑ 50 |
| 45 | Russia | 3.783 | ↓ 1 |
| 46 | New Zealand | 3.776 | ↓ 4 |
| 47 | Côte d'Ivoire | 3.747 | ↓ 4 |
| 48 | Uganda | 3.600 | ↓ 2 |
| 49 | Norway | 3.514 | ↑ 38 |
| 50 | Tajikistan | 3.488 | ↓ 3 |
| 51 | Venezuela | 3.409 | ↓ 5 |
| 52 | Lebanon | 3.402 | ↔ |
| 53 | Italy | 3.290 | ↓ 2 |
| 54 | Canada | 3.215 | ↓ 6 |
| 55 | Central African Republic | 3.184 | ↑ 10 |
| 56 | Ethiopia | 3.044 | ↓ 7 |
| 57 | Argentina | 2.875 | ↔ |
| 58 | Slovakia | 2.784 | ↑ 38 |
| 59 | Belgium | 2.733 | ↑ 11 |
| 60 | Spain | 2.712 | ↓ 5 |
| 61 | Austria | 2.677 | ↓ 6 |
| 62 | Japan | 2.396 | ↑ 12 |
| 63 | Saudi Arabia | 2.387 | ↓ 9 |
| 64 | Sweden | 2.301 | ↑ 7 |
| 65 | Switzerland | 2.205 | ↓ 9 |
| 66 | Ecuador | 2.198 | ↓ 6 |
| 67 | Netherlands | 2.150 | ↓ 6 |
| 68 | Jordan | 2.088 | ↓ 6 |
| 69 | Australia | 1.830 | ↓ 6 |
| 70 | Uzbekistan | 1.721 | ↑ 25 |
| 71 | Paraguay | 1.605 | ↓ 7 |
| 72 | Mexico | 1.578 | ↓ 10 |
| 73 | Ukraine | 1.535 | ↓ 10 |
| 74 | Cyprus | 1.382 | ↓ 6 |
| 75 | Malaysia | 1.307 | ↓ 7 |
| 76 | United Arab Emirates | 1.241 | ↑ 20 |
| 77 | Senegal | 1.108 | ↓ 5 |
| 78 | Eswatini | 1.038 | ↓ 5 |
| =79 | Bahrain | 0.826 | ↓ 14 |
| =79 | Rwanda | 0.826 | ↓ 3 |
| =79 | South Africa | 0.826 | ↓ 3 |
| =79 | Uruguay | 0.826 | ↓ 4 |

- புதிய உலகத் தீவிரவாதக் குறியீட்டு அறிக்கையில், தீவிரவாதத்தினால் பாதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் ஆப்கானிஸ்தான் முதலிடத்தினைத் தக்க வைத்துக் கொண்டு உள்ளது.
- இது ஆஸ்திரேலியாவில் அமைந்துள்ள பொருளாதாரம் மற்றும் அமைதிக்கான நிறுவனம் என்ற ஒரு நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.
- தொடர்ந்து நான்காவது ஆண்டாக இப்பட்டியலில் ஆப்கானிஸ்தான் முதலிடம் பிடித்து உள்ளது.
- இந்தக் குறியீட்டில் இந்தியா 13வது இடத்தைப் பிடித்துள்ள நிலையில் இது முந்தைய ஆண்டைக் காட்டிலும் ஒரு சிறிய சரிவைக் கண்டுள்ளது.
- தெற்காசியாவிலேயே அதிகத் தீவிரவாதத் தாக்குதல்கள் மற்றும் உயிரிழப்புகளைக் கொண்ட ஒரு நாடாக ஆப்கானிஸ்தானைப் பின்னுக்குத் தள்ளி பாகிஸ்தான் முதலிடம் பிடித்துள்ளது.
- தீவிரவாதத்தினால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள 25 நாடுகளில் ஒன்றாகவும், தீவிர வாதத்தின் தாக்கம் அதிகமாக உள்ள நாடாகவும் இந்தியாவினைப் பட்டியலிட்டுள்ள நிலையில் இப்பட்டியலில் இந்தியா 13வது இடத்தில் இடம் பெற்றுள்ளது.

## குழந்தைகளுக்கான சமூகப் பாதுகாப்பு பற்றிய அறிக்கை




- குழந்தைகளுக்கான சமூகப் பாதுகாப்பு தொடர்பான இரண்டாவது கூட்டு அறிக்கை சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு மற்றும் யுனிசெஃப் ஆகியவற்றால் இணைந்து வெளியிடப் பட்டுள்ளது.
- உலகளவில் 0-15 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் 26.4 சதவீதம் (4 குழந்தைகளில் 1 பேர் மட்டுமே) சமூகப் பாதுகாப்புத் திட்டத்தால் பாதுகாக்கப் படுகிறார்கள்.
- மீதமுள்ள 73.6 சதவீதம் பேர் வறுமை, புறக்கணிப்பு மற்றும் பல்பரிமாணப் பற்றாக் குறைகளுக்கு ஆளாகியுள்ளனர்.
- 0-18 வயதுக்குட்பட்ட 1.77 பில்லியன் அளவிலான குழந்தைகளுக்கு குழந்தை தொடர்பான அல்லது குடும்பத்திற்கான பண உதவி பலன் கிடைப்பதில்லை.
- இது ஒரு சமூகப் பாதுகாப்பு அமைப்பின் அடிப்படைத் தூணாகும்.

- குழந்தைகளுக்கான பயனுள்ளச் சமூகப் பாதுகாப்பில் பிராந்திய அளவில் பெரிய அளவிலான ஏற்றத் தாழ்வுகள் உள்ளன.
- அமெரிக்காவில், பலனடைவோர் 57.4% ஆகவும், அரபு நாடுகளில் 15.4% ஆகவும், ஆசியா மற்றும் பசிபிக் நாடுகளில் தற்போது 18.0% ஆகவும் உள்ளது.
- 31 இந்திய மாநிலங்கள் தொற்றுநோய்களின் போது தொடங்கப்பட்ட தேசிய அளவிலான "குழந்தைகளுக்கான PM CARES" திட்டத்தைச் செயல்படுத்தியுள்ளன.
- இதுவரை, 4,302 குழந்தைகள் மட்டுமே இத்திட்டத்தின் ஆதரவைப் பெற்றுள்ளனர்.

## நகர்ப்புறக் குறியீடு 2023

- நகர்ப்புறக் குறியீட்டின்படி, உலகில் அதிக பெண் கோடீஸ்வரர்களைக் கொண்டுள்ள நாடுகளில் 92 பெண்களுடன் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது.
- 46 பெண் கோடீஸ்வரர்களுடன் சீனா இரண்டாவது இடத்தில் உள்ளது.
- 32 பெண் கோடீஸ்வரர்களுடன் ஜெர்மனி மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது.
- 16 பெண் கோடீஸ்வரர்களுடன் இத்தாலி நான்காவது இடத்தில் உள்ளது.
- ஆஸ்திரேலியா, இந்தியா மற்றும் ஹாங்காங் ஆகிய நாடுகள் உலகில் ஐந்தாவது அதிக பெண் கோடீஸ்வரர்களை (9) கொண்டுள்ளன.
- இந்திய அரசியல்வாதியும் ஒரு தொழிலதிபருமான சாவித்ரி ஜிண்டால் இந்தியாவின் பணக்காரப் பெண்மணி ஆவார்.

**Countries with the most female billionaires**

| Rank | Country | Number of female billionaires |
|---|---|---|
| 1 | United States | 92 |
| 2 | China | 46 |
| 3 | Germany | 32 |
| 4 | Italy | 16 |
| =5 | Australia | 9 |
| =5 | India | 9 |
| =5 | Hong Kong | 9 |
| =8 | Spain | 8 |
| =8 | Switzerland | 8 |
| =10 | Brazil | 7 |
| =10 | Sweden | 7 |
| =12 | France | 6 |
| =12 | Canada | 6 |
| =14 | Denmark | 4 |
| =14 | Israel | 4 |

*= represents joint value

## யுட்டிலிட்டி பிட்டர் நிறுவன காடழிப்பு அறிக்கை

- இந்த அறிக்கை கடந்த 30 ஆண்டுகளில் 98 நாடுகளில் நிகழ்ந்த காடழிப்பு குறித்தப் போக்குகளை ஆய்வு செய்தது.

❖ 2015 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் பதிவு செய்யப்பட்ட ஒரு மிகப் பெரிய எழுச்சியுடன், கடந்த 30 ஆண்டுகளில் காடுகளை அழிப்பதில் இந்தியா ஒரு மிக உயர்ந்த வளர்ச்சியைக் கண்டுள்ளது.

❖ இந்த ஆண்டுகளில், சராசரியாக 668,400 ஹெக்டேர் காடுகளை அழிப்பதன் மூலம், பிரேசிலுக்கு அடுத்தபடியாக நாடு இரண்டாவது இடத்தில் இருந்தது.

❖ இந்தோனேசியாவில் பாமாயில் பயிரிடப் பட்டதால் குறிப்பிடத்தக்க அளவு காடுகள் இழப்பு ஏற்பட்டது.

❖ உலகளவில் கணிசமான காடழிப்புக்கு சோயாபீன் சாகுபடியும் காரணமாகும்.

Average deforestation (hectares) between 2015-2020

| | Country, Continent | | | | Country, Continent | |
|---|---|---|---|---|---|---|
| 1 | Brazil, South America | 1,695,700 | | 11 | Colombia, South America | 199,230 |
| 2 | India, Asia | 668,400 | | 12 | South Africa, Africa | 199,000 |
| 3 | Indonesia, Asia | 650,000 | | 13 | Zambia, Africa | 189,710 |
| 4 | Tanzania, Africa | 474,000 | | 14 | Peru, South America | 179,090 |
| 5 | Australia, Oceania | 416,840 | | 15 | Mexico, North America | 165,820 |
| 6 | Myanmar, Asia | 293,920 | | 16 | Nigeria, Africa | 163,310 |
| 7 | Paraguay, South America | 279,340 | | 17 | Argentina, South America | 134,800 |
| 8 | Mozambique, Africa | 267,030 | | 18 | China, Asia | 133,200 |
| 9 | Sudan, Africa | 264,000 | | 19 | Venezuela, South America | 108,290 |
| 10 | Bolivia, South America | 242,540 | | 20 | Nicaragua, South America | 105,030 |

## ஐக்கிய நாடுகள் சபையின் நீர்வள மேம்பாட்டு அறிக்கை 2023

❖ உலக தண்ணீர் தினத்தினை முன்னிட்டு 2023 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் உலக நீர்வள மேம்பாட்டு அறிக்கையானது வெளியிடப் பட்டது

❖ 2050 ஆம் ஆண்டில் தண்ணீர் பற்றாக்குறையால் கடுமையாகப் பாதிக்கப்படும் நாடாக இந்தியா திகழும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

❖ தண்ணீர்ப் பற்றாக்குறையில் வாழும் மக்களில் 80 சதவீதத்தினர் ஆசிய நாடுகளில், குறிப்பாக வடகிழக்கு சீனா, இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் வாழச் செய்கின்றனர்.

❖ உலக மக்கள் தொகையில் 26 சதவீதம் பேருக்குப் பாதுகாப்பான குடிநீர் வசதி இல்லை.

❖ மேலும், 46 சதவீதம் பேருக்கு அடிப்படை சுகாதார வசதிகள் இல்லை.

❖ சராசரியாக, "உலக மக்கள்தொகையில் 10% பேர் அதிக அல்லது மோசமான தண்ணீர் பற்றாக்குறை உள்ள நாடுகளில் வாழ்கின்றனர்".

❖ 3.5 பில்லியன் மக்கள் வருடத்திற்குக் குறைந்தது ஒரு மாதமாவது தண்ணீர்ப் பற்றாக் குறை நிலையின் கீழ் வாழ்கின்றனர்.

❖ உலகளவில், 80% அளவிலான கழிவு நீர் சுத்திகரிக்கப்படச் செய்யமல் சுற்றுச்சூழல் அமைப்புகளில் வெளியிடப் படுகிறது.

Figure P.3 Per capita renewable water resources availability by geographic region, 2000, 2012 and 2018 (m³/capita)



## தண்ணீர் பற்றிய GCEW அறிக்கை




FIGURE 3.5 Future costs of inaction

- இந்த அறிக்கையானது 'உலக தண்ணீர் நெருக்கடி குறித்த என்ன, ஏன் மற்றும் எப்படி என்ற கேள்விகள்: தண்ணீர் சார்ந்த பொருளாதாரத்திற்கான உலகளாவிய ஆணையத்தின் முதல் கட்ட மறு ஆய்வு மற்றும் கண்டுபிடிப்புகள்' என்ற தலைப்பிலான ஒரு அறிக்கையினை தண்ணீர் சார்ந்தப் பொருளாதாரத்திற்கான உலகளாவிய ஆணையம் (GCEW) வெளியிட்டுள்ளது.
- 2050 ஆம் ஆண்டில் தண்ணீர் மற்றும் வெப்பநிலை ஆகியவற்றின் நெருக்கடி காரணமாக இந்தியாவின் உணவு விநியோகத்தில் 16% குறைவு ஏற்படும்.
- இந்த அறிக்கையில், உணவு வழங்கீட்டில் 22.4% குறைவுடன் சீனா முதலிடத்திலும், அதைத் தொடர்ந்து 19.4% குறைவுடன் தென் அமெரிக்க நாடும் இடம் பெற்றுள்ளன.

- தற்போது நிகர உணவு ஏற்றுமதியாளர்களாக விளங்கும் சீனா மற்றும் ASEAN உறுப்பினர் நாடுகள் உட்பட பல ஆசிய நாடுகள் 2050 ஆம் ஆண்டிற்குள் நிகர உணவு இறக்குமதியாளர்களாக மாறும்.
- இந்தியாவில் தண்ணீர் வழங்கீடு 1100-1197 பில்லியன் கன மீட்டர்கள் என்ற வரம்பிற்கு இடையே உள்ளது.
- மாறாக, 2010 ஆம் ஆண்டில் 550-710 பில்லியன் கன மீட்டர்களாக இருந்த தண்ணீர் தேவையானது 2050 ஆம் ஆண்டில் 900-1,400 பில்லியன் கன மீட்டர்களாக உயரும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- 2019 ஆம் ஆண்டில் தண்ணீர் நெருக்கடியினை எதிர்கொள்ளும் உலக நாடுகளின் பட்டியலில் இந்தியா 13வது இடத்தில் உள்ளது.

## தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் பற்றிய அறிக்கை 2023




- இது ஐக்கிய நாடுகள் சபையின் வர்த்தகம் மற்றும் மேம்பாட்டிற்கான மாநாட்டு அமைப்பினால் (UNCTAD) வெளியிடப்பட்டது.
- வளர்ந்து வரும் நாடுகளை விட வளர்ச்சி பெற்ற நாடுகள் இந்தப் பசுமைத் தொழில் நுட்பங்களால் அதிகம் பயனடைகின்றன என்பதோடு இது உலகப் பொருளாதாரச் சமத்துவமின்மையை இன்னும் ஆழமாக்கும்.
- 2020 ஆம் ஆண்டில் 1.5 டிரில்லியன் டாலர்கள் என்ற அளவிலிருந்த பசுமைத் தொழில் நுட்பங்களின் சந்தை மதிப்பு ஆனது 2030 ஆம் ஆண்டிற்குள் 9.5 டிரில்லியன் டாலர் மதிப்புள்ளச் சந்தையாக மாறும்.
- இந்த ஆண்டு அறிக்கையில் 'எல்லைப்புற தொழில்நுட்பத் தயார்நிலைக் குறியீடு' சேர்க்கப் பட்டுள்ளது.
- இதன்படி, தொடர்ச் சங்கிலித் தொழில்நுட்பம், ஆளில்லா விமானங்கள் மற்றும் சூரிய சக்தி போன்ற முன்னிலைத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்திக் கொள்ளும் திறன் சில வளர்ந்து வரும் நாடுகளுக்கு மட்டுமே உள்ளது.
- இதில் அதிக வருமானம் கொண்ட பொருளாதாரம் கொண்ட, குறிப்பாக அமெரிக்கா, சுவீடன், சிங்கப்பூர், சுவிட்சர்லாந்து மற்றும் நெதர்லாந்து போன்ற நாடுகளே ஆதிக்கம் செலுத்துகின்றன.

- இதில் குறிப்பிடத்தக்க வகையில் பிரேசில் - 40வது இடத்திலும், ரஷ்யக் கூட்டமைப்பு 31வது இடத்திலும், இந்தியா 46வது இடத்திலும், சீனா 35வது இடத்திலும், தென்னாப்பிரிக்கா 56வது இடத்திலும் உள்ளன.

## QS அமைப்பின் உலகப் பல்கலைக் கழகங்களின் தரவரிசை

- QS அமைப்பின் பாடப் பிரிவு அடிப்படையிலான 12வது உலகப் பல்கலைக்கழகத் தர வரிசையானது (2023) சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- QS அமைப்பின் தரவரிசையில் டெல்லியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் பொறியியல் துறையின் முன்னணி 50 நிறுவனங்களில் இடம் பிடித்துள்ளது.
- 5 பாடப் பிரிவுகளில் முன்னிலைப் பெற்று இந்தப் பட்டியலின் முதல் 100 இடங்களில் இந்தியா இடம் பெற்றுள்ளது.
- இந்த ஆண்டு, இந்திய உயர்கல்வி நிறுவனங்கள் வழங்கும் பல்வேறு துறைகள் சார்ந்த 44 பாடப் பிரிவுத் திட்டங்கள் உலகளவில் முதல் 100 இடங்களில் இடம் பெற்றுள்ளன.
- கடந்த ஆண்டு இந்த எண்ணிக்கை 35 ஆக இருந்தது.
- மும்பையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் கணிதப் பாடப்பிரிவில் 67வது இடத்தில் உள்ளது.
- கான்பூர் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகமானது பொறியியல்-மின்-மின்னணு பாடப் பிரிவில் 87வது இடத்தையும், கணினி அறிவியல் தகவல் அமைப்பு சார்ந்த பாடப் பிரிவுகளில் 96வது இடத்தையும் பெற்றுள்ளது.
- கரக்பூர் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகமானது கணினி அறிவியல் மற்றும் தகவல் அமைப்பு சார்ந்த பாடப் பிரிவுகளில் 94வது இடத்தைப் பிடித்துள்ளது.
- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகமானது கணிதப் பாடப் பிரிவில் 98வது இடத்தைப் பிடித்துள்ளது.



# மாநிலச் செய்திகள்

## இந்தியாவின் முதல் சிறுகலத் துறைமுகம்

- இந்தியாவின் முதல் சிறுகலன் துறைமுகமானது (மரினா) கர்நாடகா மாநிலத்தின் உடுப்பி மாவட்டத்தில் பைந்தூரில் நிறுவப்பட உள்ளது.
- அந்த மாநிலத்தில் கடற்கரையோரச் சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக வேண்டி இந்தத் திட்டமானது தொடங்கப்பட்டுள்ளது.
- மரினா என்பது சிறியப் படகுகளுக்கென பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட மகிழ்வுறு சுற்றுலா இடமாகும்.



## காந்தாரி வகை மிளகாய் அமெரிக்காவிற்கு ஏற்றுமதி

- மிசோரம் மாநிலமானது, அங்கு விளையும் 'காந்தாரி வகை மிளகாயினை' முதன் முறையாக அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யவுள்ளது.
- காந்தாரி வகை மிளகாய் அல்லது மிசோ மிளகாய்க்கு அம்மாநில அரசானது, புவிசார் குறியீட்டினைப் பெற்றுள்ளது.
- ஏற்றுமதி செய்யப்படும் இந்த மிளகாயானது கடந்த வாரம் பெங்களூரு நகரில் மேற் கொள்ளப்பட்ட இயற்கை உறுதிப்பாட்டுச் சோதனையில் தேர்ச்சி பெற்றுள்ளது.
- இந்த மிளகாய் மிகவும் காரமானதாகும்.
- இதன் காரத் தன்மைக்கான ஸ்கோவில் வெப்ப அலகுகள் (SCU) 50,000 முதல் 1,00,000 வரை ஆகும்.
- SCU அதிகமாக இருந்தால், அவற்றின் காரத்தன்மை அதிகமாக இருக்கும்.
- இவை கம்போடியா, வியட்நாம், தாய்லாந்து போன்ற நாடுகளில் அதிகமாக வளர்க்கப் படுகின்றன.



## நாகாலாந்து மாநிலத்தின் முதல் பெண் சட்டமன்ற உறுப்பினர்கள்

- நாகாலாந்து மாநிலத்தினைச் சேர்ந்த இரண்டு பெண்கள், அந்த மாநிலச் சட்டசபைத் தேர்தலில் வெற்றி பெற்ற முதல் இரண்டு பெண்கள் என்ற வரலாற்றினைப் படைத்து உள்ளனர்.
- ஹெகானி ஜகாலு மற்றும் சல்ஹௌடுநௌ குரூஸ் ஆகிய இருவரும் நாகாலாந்து மாநில முதலமைச்சர் நெய்ஃபியூ ரியோ அவர்களின் தேசியவாத ஜனநாயக முன்னேற்றக் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆவர்.
- நாகாலாந்து மாநிலம் உருவானதில் இருந்து இதுவரை நடைபெற்ற 14 சட்டமன்றத் தேர்தல்களில், எந்தப் பெண்ணும் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட வில்லை.
- இந்த ஆண்டில் நடைபெற்ற நாகாலாந்து சட்டசபைத் தேர்தலில் போட்டியிட்ட 183 வேட்பாளர்களில் நான்கு பெண்கள் அடங்குவர்.



## சர்வதேச தர்ம தம்ம மாநாடு

- இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள், மத்தியப் பிரதேசத்தின் போபால் நகரில் நடைபெற்ற 7வது சர்வதேச தர்ம தம்ம (அறநெறிக் கொள்கை) மாநாட்டினைத் தொடங்கி வைத்தார்.
- இந்த நிகழ்விற்கான கருத்துரு, "புதிய சகாப்தத்திற்கான கிழக்கத்திய மனிதநேயம்" என்பதாகும்.

- இது சாஞ்சி புத்த - இந்திய ஆய்வு பல்கலைக் கழகத்துடன் இணைந்து இந்தியா அறக் கட்டளை என்ற அமைப்பினால் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.
- இந்திய அரசியலில் உள்ள சிக்கல்கள், சவால்கள் மற்றும் வாய்ப்புகள் குறித்த ஆய்வுகளை மேற்கொள்ளச் செய்கிற இந்தியா அறக்கட்டளை என்பது புது டெல்லியில் அமைந்துள்ள ஒரு சுயாதீனமாக இயங்கும் ஒரு ஆலோசனை வழங்கீட்டுக் குழு ஆகும்.

## இந்திய மாநிலங்களின் மின்னாற்றல் மாற்றம் குறித்த அறிக்கை

- எரிசக்திப் பொருளாதாரம் மற்றும் நிதிப் பகுப்பாய்வு நிறுவனம் (IEEFA) ஆனது, EMBER இந்தியா என்ற அமைப்புடன் இணைந்து இந்தியாவின் ஆற்றல் மாற்றம் குறித்த ஒரு அறிக்கையினைத் தயாரித்துள்ளது.
- இந்த அறிக்கையானது இந்தியாவின் வருடாந்திர மின் ஆற்றல் தேவையில் 90 சதவீதம் என்ற அளவினைக் கொண்டுள்ள 16 மாநிலங்களில் ஆய்வு மேற்கொண்டுள்ளது.
- கர்நாடகா மற்றும் குஜராத் ஆகியவை தூய்மையான மின்சார ஆற்றலை நோக்கி மாறுவதில் அதிக முன்னேற்றம் அடைந்து வருகின்ற மாநிலங்கள் ஆகும்.
- இந்தப் பகுப்பாய்வு ஆனது ஆற்றல் மாற்றத் தொகுதியின் நான்கு பரிமாணங்களைக் கண்காணித்து மதிப்பிட்டுள்ளது.

| Dimension 1 | Dimension 2 | Dimension 3 | Dimension 4 | |
|---|---|---|---|---|
| Karnataka | Karnataka | Karnataka | Haryana | Quartile 1 |
| Rajasthan | Punjab | Andhra Pradesh | Gujarat | |
| Punjab | Telangana | Gujarat | Karnataka | |
| Haryana | Gujarat | Maharashtra | Chhattisgarh | |
| Tamil Nadu | Haryana | Telangana | Rajasthan | Quartile 2 |
| Andhra Pradesh | Delhi | West Bengal | Maharashtra | |
| Gujarat | Andhra Pradesh | Odisha | Delhi | |
| Delhi | Tamil Nadu | Tamil Nadu | Punjab | |
| Maharashtra | Odisha | Madhya Pradesh | Uttar Pradesh | Quartile 3 |
| Telangana | Chhattisgarh | Chhattisgarh | Madhya Pradesh | |
| Madhya Pradesh | Rajasthan | Punjab | Bihar | |
| Odisha | Maharashtra | Delhi | Telangana | |
| Uttar Pradesh | Uttar Pradesh | Rajasthan | Tamil Nadu | Quartile 4 |
| Bihar | Bihar | Uttar Pradesh | Andhra Pradesh | |
| West Bengal | Madhya Pradesh | Haryana | West Bengal | |
| Chhattisgarh | West Bengal | Bihar | Odisha | |

## போஜ்பூர் சிறு தானியத் திருவிழா

- பீகாரில் போஜ்பூர் திருவிழாவானது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- ஸ்ரீஅன்னா எனப்படும் சிறு தானியப் பயன்பாடுகள் குறித்து மக்களிடையே விழிப்பு உணர்வை அதிகரிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பீகார் மாநிலம் சோளம், கம்பு, கேழ்வரகு மற்றும் சிறு தானிய உற்பத்தியில் ஒரு பிரபலமான மாநிலமாக அறியப்படுகிறது.
- இந்தியா உலகளாவிய அளவில் சிறு தானிய உற்பத்தியில் 20 சதவீதத்தினையும் மற்றும் ஆசியாவின் சிறு தானிய உற்பத்தியில் 80 சதவீதத்தினையும் கொண்டுள்ளது.
- இருப்பினும், உலகத் தானிய வர்த்தகத்தில் வெறும் 3% மட்டுமே சிறு தானியத்தின் பங்காக உள்ளது.

## புதிய தங்கச் சுரங்கம்

- ஒடிசாவின் மூன்று மாவட்டங்களின் (தியோகர், கியோஞ்சர் மற்றும் மயூர்பஞ்ச்) வெவ்வேறு இடங்களில் தங்கத் தாது இருப்புகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
- அடாஸ் பகுதியில் தாமிரத்துடன் சேர்த்து 1,685 கிலோ அளவிற்கு எடை கொண்ட தங்கத் தாதுவினையும் இந்தியப் புவியியல் ஆய்வு அமைப்பின் நிபுணர்கள் கண்டறிந்து உள்ளனர்.
- இந்தியாவின் குரோமைட் இருப்பில் 98 சதவீதம் ஒடிசாவில் காணப்படுகிறது.




## வடகிழக்கு மாநிலங்களின் புதிய முதல்வர்கள்

- மேகாலயா மாநில முதல்வராக தேசிய மக்கள் கட்சியின் கோன்ராட் சங்மா பதவி ஏற்றுள்ளார்.
- பிரஸ்டோன் டைன்சாங் மற்றும் ஸ்னியாவ்பலாங் தார் ஆகியோர் அம்மாநிலத்தின் துணை முதல்வர்களாகப் பதவியேற்றனர்.
- தேசிய ஜனநாயக முற்போக்குக் கட்சியின் நெய்பியு ரியோ நாகாலாந்து முதல்வராக பதவியேற்றுள்ளார்.
- இவர் நீண்ட காலம் அம்மாநில முதல்வராக பணியாற்றுவர் ஆவார் என்ற நிலையில், இது அவரது ஐந்தாவது தொடர் பதவிக் காலமாகும்.
- திரிபுரா மாநிலத்தில், கூட்டணி அரசின் சார்பாக மாணிக் சாஹா முதல்வராகப் பதவி ஏற்றுள்ளார்.



## யாவ்ஷாங் திருவிழா

- ஐந்து நாட்கள் வரை நடக்கும் யாவ்ஷாங் திருவிழா மணிப்பூரின் ஹோலி திருவிழா ஆகும்.
- இந்த விழாவானது, ஒவ்வோர் ஆண்டும் மெய்தி சந்திர நாட்காட்டியின் லாம்டா முழு நிலவு (பிப்ரவரி-மார்ச்) நாளன்று கொண்டாடப் படுகிறது.
- இந்தக் கொண்டாட்டத்தின் போது பாரம்பரிய "தபால் சோங்பா" நடன நிகழ்வானது மேற்கொள்ளப் படுகிறது.
- தபால் சோங்பா என்பது மெய்டே சமூகத்தினரின் பாரம்பரிய நடனமாகும்.

## உலகின் மிக நீளமான இரயில் நடைமேடை

- கர்நாடகாவின் ஹூப்பள்ளி எனுமிடத்தில் அமைக்கப்பட்டுள்ள உலகின் மிக நீளமான இரயில் நடைமேடையினை (1.5 கிமீ நீளம்) பிரதமர் அவர்கள் திறந்து வைத்தார்.
- தென்மேற்கு இரயில்வே மண்டலத்தினைச் சேர்ந்த ஹூப்பள்ளி தற்போது, மிக நீளமான நடைமேடை கொண்ட நிலையமாக கின்னஸ் புத்தகத்தில் பதிவு செய்யப் பட்டுள்ளது.
- உத்தரப் பிரதேசத்தில் உள்ள 1,366.33 மீட்டர் நீளம் கொண்ட கோரக்பூர் இரயில் நிலைய நடைமேடையானது இரண்டாவது இடத்தில் உள்ளது.
- கேரளாவில் உள்ள 1,180.5 மீட்டர் நீளம் கொண்ட கொல்லம் சந்திப்பு மூன்றாவது இடத்தில் உள்ளது.




| Rank | Station name | Length (metres) | State |
|---|---|---|---|
| 1 | Hubli junction railway station | 1,505 | Karnataka |
| 2 | Gorakhpur Junction railway station | 1,366 | Uttar Pradesh |
| 3 | Kollam junction railway station | 1,180.5 | Kerala |
| 4 | Kharagpur Railway Platform | 1,072 | West Bengal |
| 5 | Chennai Egmore Railway Station | 925.22 | Tamil Nadu |

## பெங்களூரு-மைசூரு விரைவுச் சாலை

- பெங்களூரு-மைசூரு விரைவுச் சாலையைப் பிரதமர் அவர்கள் திறந்து வைத்தார்.
- 118 கி.மீ. நீளமுள்ள இந்த விரைவு வழிச்சாலையானது பெங்களூரு மற்றும் மைசூரு இடையேயான பயண நேரத்தை மூன்று மணி நேரத்திலிருந்து 75 நிமிடங்களாகக் குறைக்கும்.
- மேலும், 92 கி.மீ. நீளத்தில் அமைக்கப்பட உள்ள மைசூர்-குஷால்நகர் நான்கு வழிச் சாலைக்கான அடிக்கல்லினையும் அவர் நாட்டினார்.




## லட்லி பஹ்னா திட்டம்

- லட்லி பெஹ்னா என்பது மத்தியப் பிரதேச அரசால் தொடங்கப் பட்டுள்ள ஒரு திட்டமாகும்.
- இந்த முன்னெடுப்பின் ஒரு பகுதியாக, அடித்தட்டு மற்றும் நடுத்தர வர்க்க குடும்பங்களைச் சேர்ந்தப் பெண்களுக்கு மாதந்தோறும் ரூ.1,000 என்ற தொகையானது அவர்களின் வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பப்படும்.
- இது பெண்கள் அதிக நிதிச் சுதந்திரம் பெறவும் குடும்பம் சார்ந்த விவகாரங்களில் முடிவெடுப்பதில் திறம்பட பங்கேற்பதை ஊக்குவிக்கவும் உதவும்.

## வீட்டிலிருந்தபடியே வாக்களித்தல்

- கர்நாடகா மாநிலமானது, ஏப்ரல்-மே மாதங்களில் நடைபெறவுள்ள தேர்தலில் தனது அடுத்த அரசைத் தேர்வு செய்ய தயாராக உள்ளது.
- இதற்காக, வீட்டிலிருந்தபடியே வாக்களித்தல் என்ற விருப்பத் தேர்வினை இந்தியத் தேர்தல் ஆணையம் அறிமுகப்படுத்தியுள்ளது.
- 80 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும், ஏதேனும் குறைபாடுகள் உள்ளவர்களுக்கும் இது பயனுள்ளதாக இருக்கும்.
- தேர்தல் ஆணையம் 80 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இந்த வசதியை வழங்குவது இதுவே முதல் முறையாகும்.
- 'சாக்ஷம்' என்ற கைபேசி செயலி ஒன்று அறிமுகப்படுத்தப் பட்டுள்ள நிலையில், இந்த செயலியில் உள்நுழைந்து வாக்களிக்கும் வசதியை மக்கள் தேர்வு செய்யலாம்.
- 'சுவிதா' என்ற மற்றொரு கைபேசி செயலியும் இதற்காக உருவாக்கப்பட்டுள்ளது.
- இது வேட்பாளர்கள் தங்கள் வேட்புமனு மற்றும் பிரமாணப் பத்திரங்களைத் தாக்கல் செய்வதற்கான இணைய தளம் ஆகும்.
- கூட்டங்கள் மற்றும் பேரணிகளுக்கு அனுமதி பெறுவதற்கு வேட்பாளர்கள் இந்த தளத்தினைப் பயன்படுத்தலாம்.

## அதிமதுரம் சாகுபடி

- இமாச்சலப் பிரதேசம் ஆனது இந்தியாவில் முதல் முறையாக அதிமதுரத்தின் (முலேதி) முறையான வணிக ரீதியிலான சாகுபடியைத் தொடங்கியுள்ளது.
- அதிமதுரமானது (கிளைசிரிசா கிளப்ரா) மசாலாப் பொருளாக மட்டுமல்லாமல் ஆயுர் வேத மருந்துகளிலும் பயன்படுத்தப் படுகிறது.
- சுக்ரோஸை விட 50 மடங்கு இனிப்பான கிளைசிரைசின் இதில் இருப்பதால், இந்த வேர்களுக்கு அதன் மூலம் இனிப்புச் சுவை கிடைக்கிறது.
- இதில் வைரஸ் எதிர்ப்பு, அழற்சி எதிர்ப்பு, ஆக்ஸிஜனேற்றத் தடுப்பு மற்றும் பாக்டீரியா எதிர்ப்பு ஆகிய பண்புகள் உள்ளன.
- தற்போது, இது மற்ற நாடுகளில் இருந்து அதிகளவில் இறக்குமதி செய்யப்படுகிறது.



## இந்தியாவில் முதல் முறையாக இரயில்வே நடை மேடையில் அமைக்கப்பட்டுள்ள 'திருநர் டீக்கடை'

- அனைத்து அசாம் திருநர் சங்கம் திருநர் டீக்கடை அமைப்பதற்காக இந்திய ரயில்வே நிர்வாகத்தின் ஒப்புதலைப் பெற்றுள்ளது.
- குவஹாத்தி இரயில் நிலையத்தின் நடைமேடையில் இந்த முதல் டீக்கடை அமைக்கப் பட்டுள்ளது.
- இக்கடையானது இந்தச் சமூகத்திற்கு அதிகாரம் அளித்து அவர்களுக்கு ஒரு நிலையான வருமானத்தினை ஈட்டித் தரும்.



## மெத்தனால் கலக்கப்பட்ட எரிபொருளில் இயங்கும் முதல் பேருந்துகள்

- பெங்களூரு பெருநகரப் போக்குவரத்துக் கழகம் (BMTC) ஆனது முதல் முறையாக மெத்தனால் கலந்த எரிபொருளைப் பயன்படுத்தி அதன் சில நகரப் பேருந்துகளை இயக்கத் தொடங்கியுள்ளது.
- இந்தப் பேருந்துகளானது சோதனை அடிப்படையில் இயக்கப்படும்.
- இந்தப் பேருந்துகள் ஆனது 15% மெத்தனால் கலந்த எரிபொருளில் இயக்கப் படுகின்றன.
- முழுவதும் மெத்தனால் (M100) எரிபொருளில் இயங்கும் ஒரு சரக்குந்தும் அறிமுகப் படுத்தப் பட்டது.
- பெட்ரோலில் 15% மெத்தனாலை கலப்பதால் பெட்ரோல்/கச்சா எண்ணெய் இறக்குமதியில் குறைந்தது 15% குறைக்கப்படும்.
- மேலும், இது பசுமை இல்ல வாயு உமிழ்வை 20% குறைத்து, நகர்ப்புறப் பகுதியின் காற்றின் தரத்தை மேம்படுத்தவும் உதவும்.



## இரவலர்கள் இல்லாத நகரம்

- மகாராஷ்டிராவின் நாக்பூரில் 'இரவலர்கள் இல்லாத நகரம்' என்ற புதிய ஒரு முன்னெடுப்பானது தொடங்கப் பட்டுள்ளது.
- இது நாக்பூர் நகரக் காவல்துறை மற்றும் நாக்பூர் மாநகராட்சியின் (NMC) சமூக நலத் துறை ஆகியவற்றின் கூட்டு முயற்சியாகும்.
- நாக்பூர் மாநகராட்சியானது, தனக்குச் சொந்தமான தங்குமிடங்களில் வீடற்ற நபர்களைத் தங்க வைப்பதற்கான சிறப்பு ஏற்பாடுகளை செய்துள்ளது.

## அகில இந்திய மகளிர் நாட்டுப்புறக் கலை மாநாடு

- சர்வதேச மகளிர் தினத்தையொட்டி, மும்பையில் அகில இந்திய மகளிர் நாட்டுப்புறக் கலை மாநாடானது நடத்தப்பட்டது.
- சங்கீத நாடக அகாடமியுடன் இணைந்து மகாராஷ்டிர அரசாங்கத்தின் P.L. தேஷ் பாண்டே மகாராஷ்டிரா கலா அகாடமியால் ஏற்பாடு செய்யப் பட்டது.
- இந்நிகழ்வின் போது 'இந்தியப் புனிதப் பெண் புலவர்களின் பங்களிப்பு' மற்றும் 'வெள்ளித் திரையில் நாட்டுப்புறக் கலை' என்ற தலைப்பில் இரண்டு கருத்தரங்குகளும் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளன.




### காசநோய் மருந்து – பெடாகுலின்

- ❖ மருந்துத் தயாரிப்பு நிறுவனமான ஜான்சன் & ஜான்சன், இந்த ஆண்டு ஜூலையில் காலாவதியாகும் காசநோய் எதிர்ப்பு மருந்தான பெடாகுலின் மீதான காப்புரிமையை நீட்டிக்க விண்ணப்பித்தது.
- ❖ எனினும் இந்தியக் காப்புரிமை அலுவலகம் இந்த விண்ணப்பத்தை நிராகரித்தது.
- ❖ இந்தக் காப்புரிமையானது வழங்கப்பட்டால், அது 2027 ஆம் ஆண்டு வரை இந்தியாவில் மருந்து மீதான இந்நிறுவனத்தின் முற்றுரிமையை நீட்டித்திருக்கும்.
- ❖ ஆனால் இந்த விண்ணப்ப நிராகரிப்புடன், காப்புரிமைப் பெறாத பொதுவான மருந்து உற்பத்தியாளர்கள் இந்த ஆண்டு முதல் மலிவு விலையில் தங்கள் சொந்த மருந்துப் பதிப்புகளை உருவாக்க முடியும்.




### பீகார் தினம் – மார்ச் 22

- ❖ 1912 ஆம் ஆண்டு மார்ச் 22 ஆம் தேதியன்று பீகார் உருவானது.
- ❖ முன்னதாக, பீகார் மற்றும் வங்காளம் ஆகிய மாகாணங்கள் ஒன்றாக இருந்தன.

- பீகார் மற்றும் வங்காளம் ஆகியவை 1912 ஆம் ஆண்டில் இரண்டாகப் பிரிக்கப்பட்டன.
- 1936 ஆம் ஆண்டு பிரிப்பின் போது பீகாரில் இருந்து ஒடிசா பிரிக்கப்பட்டது.
- 2000 ஆம் ஆண்டு ஜார்க்கண்ட் தனி மாநிலமாக மாறியபோது மூன்றாவது பிரிப்பு என்பது ஏற்பட்டது.

## சுகாதார உரிமை மசோதா - ராஜஸ்தான்

- சுகாதார உரிமை மசோதாவானது, ராஜஸ்தான் மாநில சட்டசபையில் நிறைவேற்றப் பட்டது.
- இம்மாதிரியான ஒரு சட்டத்தினை நிறைவேற்றும் முதல் இந்திய மாநிலமாக இது உள்ளது
- இந்தச் சட்டத்தின்படி, அவசரச் சிகிச்சை பெற வரும் நபருக்கு மருத்துவம் பார்க்க முடியாது என்று எந்தவொரு அரசு அல்லது தனியார் மருத்துவமனைகளும் அல்லது மருத்துவரும் கூற முடியாது.
- அவசரச் சிகிச்சையில் விபத்துக்கள், விலங்குகள் அல்லது பாம்பு கடித்தல், கர்ப்ப காலத்தில் ஏற்படும் பல்வேறு சிக்கல்கள் அல்லது மாநில சுகாதார ஆணையத்தால் வரையறுக்கப் பட்ட அவசரகால சிகிச்சை ஆகியவை அடங்கும்.
- அத்தகையச் சூழ்நிலையில், ஒரு நோயாளி ஒரு தனியார் மருத்துவமனையில் கூட சிகிச்சை அல்லது நோயறிதலுக்கான முன்பணம் செலுத்தவோ அல்லது முன் கட்டணத் தொகை செலுத்தவோ தேவையில்லை.
- ஒரு நோயாளி தனது சிகிச்சைக்குப் பணம் செலுத்த முடியாவிட்டால், மாநில அரசு அந்த மருத்துவமனைக்குச் சிகிச்சைக்காக ஆன செலவைத் திருப்பிச் செலுத்தும்.
- இதில் நோயாளி எந்த மருந்தகத்தில் மருந்து வாங்க வேண்டும் என்பதையும் அல்லது எந்த ஆய்வகத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற உரிமையையும் பெறுகிறார்.



# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## மார்கோனி பரிசு 2023

- கணினித் துறை சார்ந்த அறிவியலாளர் ஹரி பாலகிருஷ்ணன் அவர்களுக்கு 2023 ஆம் ஆண்டிற்கான மார்கோனி பரிசு வழங்கப் பட்டுள்ளது.
- "கம்பிவடம் சார்ந்த மற்றும் சாராத வலையமைப்புகள், தொலை உணர்வு மற்றும் விநியோக அமைப்புகள் ஆகியவற்றில் அவர் ஆற்றிய அடிப்படைப் பங்களிப்புகளுக்காக" அங்கீகரிக்கப்பட்டுள்ளார்.
- மார்கோனி பரிசு என்பது அமெரிக்காவில் அமைந்துள்ள மார்கோனி என்ற அறக்கட்டளையால் வழங்கப் படுகிற, கணினித்துறை சார்ந்த அறிவியலாளர்களுக்கு வழங்கப் படும் ஒரு சிறந்த அங்கீகாரம் ஆகும்.
- "மேம்பட்ட தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தின் மூலம் எண்ணிம உள்ளடக்கத்தை அதிகரிப்பதில் குறிப்பிடத்தக்கப் பங்களிப்பை வழங்கியவர்களுக்கு" இந்த விருதானது வழங்கப்படுகிறது.
- டாக்டர் பாலகிருஷ்ணன் இதற்கு முன்பு இன்ஃபோசிஸ் பரிசு (2020) மற்றும் IEEE கோஜி கோபயாஷி கணினி மற்றும் தகவல் தொடர்பு விருது (2021) ஆகியவற்றைப் பெற்று உள்ளார்.



## சர்வதேச எல்லோரா-அஜந்தா திருவிழா 2023

- மகாராஷ்டிராவின் ஔரங்காபாத்தில் உள்ள சோனேரி மஹாலில் மூன்று நாட்கள் அளவிலான சர்வதேச எல்லோரா-அஜந்தா திருவிழா நடைபெற்றது.
- சர்வதேச எல்லோரா-அஜந்தா திருவிழாவானது ஔரங்காபாத் மாவட்டத்தில் சுற்றுலாவை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1985 ஆம் ஆண்டு முதன்முதலில் தொடங்கப்பட்ட இந்தத் திருவிழாவானது மிகப்பெரிய வெற்றியைப் பெற்றது.
- இதற்கு முந்தைய சர்வதேச எல்லோரா-அஜந்தா திருவிழாவானது 2016 ஆம் ஆண்டு நடைபெற்றது.




## மகளிர் 20 தொடக்கக் கூட்டம்

- G20 அமைப்பிற்கான இந்தியாவின் தலைமைத்துவத்தின் ஒரு பகுதியாக இரண்டு நாட்கள் அளவிலான W20 (மகளிர் 20) தொடக்கக் கூட்டமானது மகாராஷ்டிரா மாநிலத்தின் ஔரங்காபாத்தில் நடைபெற்றது.
- 2015 ஆம் ஆண்டில் துருக்கிய தலைமைத்துவத்தின் போது நிறுவப்பட்ட W20 என்பது G20 அமைப்பின் கீழான ஓர் அதிகாரப்பூர்வ ஈடுபாட்டுக் குழுவாகும்.
- G20 அமைப்பின் விவாதங்களில் பாலினக் கருத்தாய்வுகளுக்கு முக்கியத்துவம் வழங்கப் படுவதை உறுதி செய்வதே இதன் முதன்மை நோக்கமாகும்.
- W20 இந்தியா குழுவானது 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 12 ஆம் தேதியன்று W20 இந்தோனேசியா குழுவிடமிருந்து தலைமைப் பதவியை ஏற்றுக் கொண்டது.

## தேசிய மகளிர் ஆணையத்தின் உறுப்பினர்



- தேசிய மகளிர் ஆணையத்தின் உறுப்பினராக தமிழகத்தைச் சேர்ந்த குஷ்பு சுந்தர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
- தேசிய மகளிர் ஆணையமானது 1990 ஆம் ஆண்டிற்கான தேசிய மகளிர் ஆணையச் சட்டத்தின் கீழ், 1992 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

- பெண்களுக்கான அரசியலமைப்புச் சார்ந்த மற்றும் சட்டப்பூர்வப் பாதுகாப்புகளை மதிப்பாய்வு செய்வதற்காக இந்த அமைப்பானது நிறுவப் பட்டது.
- முதல் ஆணையமானது 1992 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் தேதியன்று ஜெயந்தி பட் நாயக் அவர்களைத் தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்டது.
- இந்த ஆணையமானது, ஒரு தலைவர், ஒரு உறுப்பினர் செயலாளர் மற்றும் மற்ற ஐந்து உறுப்பினர்கள் ஆகியோர் என குறைந்தபட்ச உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.
- திறன், நேர்மை மற்றும் உறுதிப்பாடு ஆகியவற்றைக் கொண்ட நபர்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து உறுப்பினர்களை மத்திய அரசு நியமிக்கிறது.

## யுனெஸ்கோ அமைப்பின் அமைதி பரிசு - 2022

- ஜெர்மனியின் முன்னாள் அதிபர் ஏஞ்சலா மெர்க்கல் யுனெஸ்கோ அமைப்பின் 2022 ஆம் ஆண்டிற்கான அமைதிப் பரிசினைப் பெற்றுள்ளார்.
- 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ஜெர்மனிக்கு வந்தடைந்த 1.2 மில்லியனுக்கும் அதிகமான அகதிகள் மற்றும் புகலிடம் நாடி வந்த நபர்களை வரவேற்று நாட்டில் இருப்பதற்கு அனுமதித்தற்காக மெர்க்கல் அவர்களுக்கு இந்த விருதானது வழங்கப் பட்டுள்ளது.
- இவர் 2005 ஆம் ஆண்டில் ஜெர்மனியின் முதல் பெண் அதிபராக தேர்ந்தெடுக்கப் பட்டு, அதன் பிறகு 16 ஆண்டுகள் தொடர்ந்து இப்பதவியினை வகித்தார்.
- யுனெஸ்கோவின் ஃபெலீக்ஸ் ஹவுபௌட் பாய்க்னி அமைதிப் பரிசானது 1989 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.
- இது அமைதிக்கு என்று குறிப்பிடத்தக்கப் பங்களிப்பை வழங்கிய தனிநபர்கள் மற்றும் செயலில் உள்ள பொது அல்லது தனியார் அமைப்புகள் அல்லது நிறுவனங்களை கௌரவப் படுத்துகிறது.



## வுல்ஃப் பரிசு 2023

- கலை, இயற்பியல், வேளாண்மை, கணிதம், வேதியியல் மற்றும் மருத்துவம் ஆகிய ஆறு துறைகளில் இந்த விருதுகள் வழங்கப் படுகின்றன.
- கலை வுல்ஃப் பரிசானது இசை, ஓவியம், கட்டிடக் கலை மற்றும் சிற்பம் ஆகிய துறைகளுக்கு வழங்கப் படுகிறது.
- வுல்ஃப் பரிசானது 1978 ஆம் ஆண்டு முதல் இஸ்ரேலின் வுல்ஃப் அறக்கட்டளையால் வழங்கப் படுகிறது.

- விருது பெற்றவர்களின் பட்டியல்
  - மருத்துவம்: பேராசிரியர் டேனியல் ட்ரக்கர் - கனடா
  - வேளாண்மை: மார்டினஸ் தி ரீயன் - ரியோ டி ஜெனிரோ
  - இயற்பியல்: பேராசிரியர் கேன் ஜேனுச்டென்
  - வேதியியல்: ஜான் T வில்சன், ஹிரோகி சுகா மற்றும் ஜெஃப்ரி W கெல்லி
  - கணிதம்: இன்க்ரிட் டௌபெசெஸ் - அமெரிக்கா
  - கலை: புஜிகோ நகயா - ஜப்பான் மற்றும் ரிச்சர்ட் லாங் - இங்கிலாந்து




## 76வது BAFTA விருதுகள்

- BAFTA எனப்படும் 76வது பிரிட்டிஷ் அகாடமி திரைப்பட விருதுகள் ஆனது இங்கிலாந்தின் இலண்டன் நகரில் உள்ள அரசத் திருவிழா மன்றத்தில் வழங்கப்பட்டது.
- இதில் வெற்றி பெற்றவர்களின் பட்டியல்

| CATEGORIES | WINNERS |
|---|---|
| Best Film | All Quiet at the eastern Front |
| Leading Actress | Cate Blanchett for Tar |
| Leading Actor | Austin Butler for Elvis |
| Best Director | Edward Berger for All Quiet at the Western Front |
| Best Casting | Elvis |
| Best Cinematography | All Quiet on the Western Front |
| Adapted Screenplay | Edward Berger, Lesley Paterson, Lan Stokell for All Quiet on the western front |
| Editing | Paul rogers for Everything Everywhere All AT Once, |
| Cinematography | James friend for All Quiet on the western front, |
| Best Documentary | Navalny (Daniel Roher) |
| EE Bafta Rising star Award | Emma Mackey |
| Film Not in the English Language | All Quiet on The Western Front |

## ஆசியச் சிறப்புச் சதுரங்க விருதுகள் 2023

- இந்தியக் கிராண்ட்மாஸ்டர் D. குகேஷுக்கு ஐக்கிய அரபு அமீரகத்தின் அபுதாபியில் நடைபெற்ற ஆசியச் சதுரங்கக் கூட்டமைப்பின் வருடாந்திரக் கூட்டத்தில் ஆண்டின் சிறந்த வீரருக்கான விருது வழங்கப்பட்டுள்ளது.
- கடந்த ஆண்டு மகாபலிபுரத்தில் நடைபெற்ற 44வது சதுரங்க ஒலிம்பியாட் போட்டியில் 9/11 என்ற கணக்கில் சாதனை அளவில் வெற்றி பெற்று, தங்கப் பதக்கத்தை வென்றச் செய்தற்காக வேண்டி இந்த விருதானது வழங்கப்படுகிறது.
- சென்னையில், FIDE சதுரங்க ஒலிம்பியாட் போட்டியை வெற்றிகரமாக நடத்தியதற்காக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு ஆண்டின் சிறந்த நாயகன் விருதானது வழங்கப் பட்டுள்ளது.
- கோனேரு ஹம்பி, D.ஹரிகா, R .வைஷாலி, டானியா சச்தேவ் மற்றும் பக்தி குல்கர்னி ஆகியோர் அடங்கிய இந்திய மகளிர் அணி, 'ஆண்டின் சிறந்த மகளிர் அணி' என்ற விருதினை வென்றது.
- கிராண்ட் மாஸ்டர் R.B.ரமேஷ் வீரர்களுக்கான ஆண்டின் சிறந்தப் பயிற்சியாளர் என்ற விருதை வென்றார்.
- கிராண்ட் மாஸ்டர் அபிஜித் குண்டே, வீராங்கனைகளுக்கான ஆண்டின் சிறந்தப் பயிற்சியாளர் என்ற விருதை வென்றார்.
- அகில இந்தியச் சதுரங்கக் கூட்டமைப்பு (AICF) ஆனது 'மிகவும் செயல்பாடு மிக்க ஒரு கூட்டமைப்பு' என்ற விருதைப் பெற்றது.

## படைப்பிரிவுத் தலைவர் ஷாலிசா தாமி

- இந்திய விமானப்படை படைப் பிரிவுத் தலைவர் ஷாலிசா தாமியை மேற்குப் பிரிவின் முன்னணி போர்ப் பிரிவின் தலைமைப் பொறுப்பினை ஏற்பதற்குத் தேர்வு செய்யப் பட்டுள்ளார்.
- இவர் பாகிஸ்தான் நாட்டினை எதிர்கொள்ளும் வகையில் அமைந்த மேற்குப் பிரிவின் ஏவுகணைப் படைப் பிரிவிற்குத் தலைமை தாங்க உள்ள இந்திய விமானப் படையின் முதல் பெண் அதிகாரி ஆவார்.
- இந்திய விமானப் படையின் ஒரு படைப் பிரிவுத் தலைவர் என்பது இராணுவத்தில் கர்னல் பொறுப்பிற்குச் சமமானதாகும்.
- இந்திய இராணுவத்தில் அதிக எண்ணிக்கையாக 1,705 பெண் அதிகாரிகளும், இந்திய விமானப் படையில் 1,640 பெண் அதிகாரிகளும், இந்தியக் கடற்படையில் 559 பெண் அதிகாரிகளும் உள்ளனர்.



## CBIP விருதுகள் 2022

- ❖ தேசிய அனல்மின் கழக நிறுவனத்திற்கு மின் உற்பத்தியில் சிறந்தப் பங்களிப்பு என்பதற்கான 2022 ஆம் ஆண்டு CBIP விருதானது வழங்கப் பட்டது.
- ❖ ஒடிசா மின்பகிர்வுக் கழக நிறுவனத்திற்கு (OPTCL) 2022 ஆம் ஆண்டிற்கான மத்திய நீர்ப் பாசன மற்றும் மின்னாற்றல் வாரிய (CBIP) விருதானது வழங்கப் பட்டுள்ளது.
- ❖ ஒடிசா மின்பகிர்வுக் கழக நிறுவனத்திற்கு 'சிறந்த செயல்திறன் கொண்ட மின் பகிர்வு துறை' என்ற பிரிவில் விருதினைப் பெற்றது.
- ❖ அரசு நடத்துகின்ற இந்தப் பயன்பாட்டுச் சேவை வழங்கும் நிறுவனத்திற்கு, அது தொடங்கப் பட்டதிலிருந்து முதல் முறையாக இந்த விருது வழங்கப் பட்டுள்ளது.
- ❖ பாரத் மிகு மின் நிறுவனத்திற்கு 'சூரிய ஆற்றலில் சிறந்தப் பங்களிப்பு' என்ற பிரிவில் 2022 ஆம் ஆண்டிற்கான CBIP விருதானது வழங்கப் பட்டுள்ளது.



## 8வது தேசியப் புகைப்பட விருதுகள்

- ❖ இதற்கான விருது விழாவில் தொழில்சார் மற்றும் பொழுதுபோக்குப் புகைப்படக் கலைஞர் பிரிவில் தலா 6 விருதுகளும், வாழ்நாள் சாதனையாளர் விருது பிரிவில் ஒரு விருதும் உட்பட மொத்தம் பதிமூன்று விருதுகள் வழங்கப்பட்டன.
- ❖ தொழில்முறைப் பிரிவிற்கான கருத்துரு "உயிர் மற்றும் நீர்" என்பதாகும்.
- ❖ பொழுதுபோக்குப் புகைப்படத் துறைக்கான கருத்துரு, "இந்தியாவின் கலாச்சாரப் பாரம்பரியம்" என்பதாகும்.

## இந்தியாவிற்கான ஆஸ்கார் விருதுகள்

- ❖ S.S. இராஜமௌளியின் RRR படம் ஆனது ஆஸ்கார் விருதினை வென்ற முதல் இந்தியத் திரைப்படம் என்ற சாதனையைப் படைத்தது.
- ❖ இந்தத் திரைப்படத்தில் இடம் பெற்ற M.M. கீரவாணியின் 'நாட்டு நாட்டு' என்ற பாடல் ஒலிப்பதிவுக்குச் சிறந்த அசல் பாடலுக்கான விருது வழங்கப்பட்டது.
- ❖ மேலும் 'நாட்டு நாட்டு' பாடலானது இந்த மாதத் தொடக்கத்தில் சிறந்தப் பாடலுக்கான கோல்டன் குளோப் விருதை வென்றது குறிப்பிடத் தக்கதாகும்.

- இந்த வெற்றியின் மூலம் கோல்டன் குளோப் விருதை வென்ற முதல் இந்திய திரைப் படம் என்ற பெருமையையும் RRR திரைப்படம் பெற்றது.
- சிறந்த ஆவணக் குறும்படப் பிரிவில், தி எலிஃபண்ட் விஸ்பரர்ஸ் என்ற ஆவணப் படத்திற்காக இந்தியா தனது இரண்டாவது ஆஸ்கார் விருதினை வென்றது.



## ஆஸ்கார் விருதுகள் 2023

- 2023 ஆம் ஆண்டிற்கான அகாடமி விருதுகள் அல்லது ஆஸ்கார் விருதுகளின் 95வது ஆண்டு விழா சமீபத்தில் நடைபெற்றது.
- 2023 ஆம் ஆண்டிற்கான ஆஸ்கார் விருதுகளை பெற்றவர்களின் பட்டியல் பின்வருமாறு

| Category | Winners |
|---|---|
| Best Picture | Everything Everywhere All At Once |
| Best Actress | Michelle Yeoh (Everything Everywhere All at Once) |
| Best Actor | Brendan Fraser (The Whale) |
| Best Director | Daniel Kwan and Daniel Scheinert (Everything Everywhere All at Once) |
| 2023 Best Film Editing | Everything Everywhere All at Once |
| Best Original Song | "Naatu Naatu" (RRR) |
| Best Sound | Top Gun: Maverick |
| Best Adapted Screenplay | Women Talking |
| Best Original Screenplay | Everything Everywhere All at Once – Daniel Kwan and Daniel Scheinert |
| Best Visual Effects | Avatar: The Way of Water |
| Best Animated Feature Film | Guillermo del Toro's 'Pinocchio' |
| Best Actress in a Supporting Role | Jamie Lee Curtis in 'Everything Everywhere All at Once' |
| Best Actor in a Supporting Role | Ke Huy Quan in 'Everything Everywhere All at Once' |
| Best Documentary Feature Film | 'Navalny' by Daniel Roher, Odessa Rae, Diane Becker, Melanie Miller and Shane Boris |
| Best Live Action Short Film | 'An Irish Goodbye' by Tom Berkeley and Ross White |
| Best Cinematography | 'All Quiet on the Western Front' by James Friend |
| Best Makeup and Hairstyling | Adrien Morot, Judy Chin and Annemarie Bradley for 'The Whale' |
| Best Costume Design | Ruth Carter for 'Black Panther: Wakanda Forever' |
| Best International Feature Film | 'All Quiet on the Western Front' – Germany |
| Best Documentary Short Film | 'The Elephant Whisperers' by Kartiki Gonsalves and Guneet Monga |
| Best Animated Short Film | The Boy, the Mole, the Fox, and the Horse |
| Best Original Score | All Quiet on the Western Front |
| Best Production Design | All Quiet on the Western Front |

## தலைமைக் கணக்குக் கட்டுப்பாட்டாளர்

- மூத்தப் பொதுக் கணக்குகள் பணி அதிகாரி S.S. துபே அவர்கள் 28வது தலைமைக் கணக்குக் கட்டுப்பாட்டாளராகப் பொறுப்பேற்றுள்ளார்.
- இவர் மத்திய அரசின் கணக்கு விவகாரங்களுக்கான ஒரு முதன்மை ஆலோசகராக விளங்குவார்.
- இவர் மத்திய அரசாங்கத்திற்கான கணக்குச் சரிபார்ப்பு மற்றும் உள் தணிக்கைகளை மேற்கொள்வது போன்றப் பொறுப்புகளை வகிப்பார்.
- தலைமைக் கணக்குக் கட்டுப்பாட்டாளர், மத்திய அரசாங்கத்திற்கான செலவினங்கள், வருவாய்கள், கடன்கள் மற்றும் பல்வேறு நிதிக் குறிகாட்டிகளின் மாதாந்திர மற்றும் வருடாந்திரப் பகுப்பாய்வைத் தொகுக்கிறார்.
- தலைமைக் கணக்குக் கட்டுப்பாட்டாளர் நிதித் துறை அமைச்சகத்தின் செலவினத் துறையின் கீழ் பணி புரிகிறார்.
- தலைமைக் கணக்குத் தணிக்கையாளரின் (CAG) கணக்கியல் செயல்பாடுகள் 1976 ஆம் ஆண்டில் அவரிடமிருந்து பறிக்கப் பட்டு தலைமைக் கணக்குக் கட்டுப்பாட்டாளர் அலுவலரிடம் ஒப்படைக்கப் பட்டது.




## 32வது வியாஸ் சம்மான்

- இந்தி மொழி எழுத்தாளர் டாக்டர் கியான் சதுர்வேதியின் பாகல்கானா எனப்படும் 2018 ஆம் ஆண்டு முரண்முறை நாவலானது 32வது வியாஸ் சம்மான் (2022) விருதிற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.
- இந்த விருது 1991 ஆம் ஆண்டில் K.K. பிர்லா அறக்கட்டளையால் நிறுவப் பட்டது.
- கடந்த 10 ஆண்டுகளில் வெளியிடப்பட்ட, இந்தியக் குடிமகன் ஒருவரின் சிறந்த இந்தி மொழி இலக்கியப் படைப்புக்கு ஆண்டுதோறும் வியாஸ் சம்மான் விருது வழங்கப் படுகிறது.




### ஸ்வச் சுஜல் சக்தி சம்மான் 2023

- ஜல் சக்தி அமைச்சகம் ஆனது "ஸ்வச் சுஜல் சக்தி சம்மான் 2023" நிகழ்வினை ஏற்பாடு செய்துள்ளது.
- இது கிராமப்புற நீர் மற்றும் சுகாதாரத் துறையில் சாம்பியன்களாகத் திகழும் பெண்களைக் கௌரவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த நிகழ்வில் ஜல் சக்தி அபியான் - மழை நீர் சேமிப்பு 2023 திட்டமும் தொடங்கப் பட்டது.
- 36 பெண்கள் WASH சாம்பியன்களுக்கு 'ஸ்வச் சுஜல் சக்தி சம்மான் 2023' விருதானது வழங்கப் பட்டது.

### WINS விருதுகள் 2023




- சுகாதாரம் மற்றும் கழிவு மேலாண்மையில் பெண்கள் ஆற்றும் பங்குகளின் தாக்கத்தை எடுத்துக் காட்டும் வகையில், மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்களுக்கான அமைச்சகம் ஆனது WINS விருதுகளை அறிவித்துள்ளது.

- 2023 ஆம் ஆண்டிற்கான WINS விருதுகள் நகர்ப்புறச் சுகாதாரம் மற்றும் கழிவு மேலாண்மை ஆகியவற்றில் பெண்கள் தலைமையிலான நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட பெண்களால் நடத்தப்படும் நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் ஊக்கம் அளிக்கும் வகையிலான மற்றும் முன்மாதிரியாக விளங்கும் முன்னெடுப்புகளைக் கொண்டாடச் செய்வதையும் அவற்றின் பங்களிப்பினைப் பரவச் செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- WINS என்பது 'Women Icons Leading Swacchata' (சுவச்சதா திட்டத்தில் முன்னணியாக விளங்கும் நாயகிகள்) என்பதைக் குறிக்கிறது.

## கோல்டன் சிட்டி கேட் சுற்றுலா விருதுகள் 2023

- கோல்டன் சிட்டி கேட் சுற்றுலாப் பல்லூடக விருதுகளானது, சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறைகள் தொடர்பான பல்வேறு பிரிவுகளில் ஆண்டுதோறும் வழங்கப் படுகின்றன.
- ITB பெர்லின் எனப்படும் உலகின் முன்னணி சுற்றுலா வர்த்தகக் கண்காட்சியில் இந்த வருடாந்திர விருது விழா நடைபெறுகிறது.
- இந்தியாவின் சுற்றுலாத் துறை அமைச்சகமானது, 'தொலைக்காட்சி/சர்வதேச வணிக திரைப்படம் மற்றும் சர்வதேச நாடு' என்ற பிரிவில் தங்கம் & வெள்ளி நட்சத்திர விருதுகளைப் பெற்றுள்ளது.




## இராணுவப் படைப்பிரிவின் முதல் பெண் தலைமை அதிகாரி

- கர்னல் கீதா ராணா கிழக்கு லடாக்கில் உள்ள முன்னிலை மற்றும் தொலைதூர இடத்தில் அமைந்த ஒரு தன்னாட்சி களப் பயிலரங்கத்தின் தலைமைப் பொறுப்பினை ஏற்றுள்ளார்.

- ஒரு பெண் அதிகாரி, முதன்முறையாக, அதிக ஆபத்து மிக்க லடாக் பிரிவில் ஒரு தன்னாட்சிப் பிரிவின் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ளார்.
- முன்னதாக, ஜனவரி மாதத்தின் தொடக்கத்தில், உலகின் மிக உயரமான மற்றும் குளிரான போர்க்களமான சியாச்சினில் கேப்டன் ஷிவா சௌஹானை, முதன் முறையாக ஒரு பெண் அதிகாரியாக இந்திய இராணுவம் நியமித்தது.



## PEN/நபோகோவ் வாழ்நாள் சாதனையாளர் விருது

- இந்தியாவின் வினோத் குமார் சுக்லா, இலக்கியத் துறையில் வாழ்நாள் சாதனைக்கான PEN அமெரிக்கா விருதினை வென்றுள்ளார்.
- உலக அளவில் புகழ்பெற்ற இலக்கியப் பரிசுகளில் இதுவும் ஒன்றாகும்.
- நௌகர் கி கமீஸ் (1979) போன்ற புகழ்பெற்ற புதினங்களையும், சப் குச் ஹோனா பச்சா ரஹேகா (1992) போன்ற கவிதைத் தொகுப்புகளையும் அவர் இயற்றியுள்ளார்.
- விளாடிமிர் நபோகோவ் இலக்கிய அறக்கட்டளையுடன் இணைந்து PEN அமெரிக்கா என்ற அமைப்பினால் 2016 ஆம் ஆண்டில் இந்த விருதானது நிறுவப்பட்டது.




## பிரிட்ஸ்கர் கட்டிடக் கலை பரிசு 2023

- பிரிட்டிஷ் நாட்டின் நகர்ப்புறக் கட்டமைப்புத் திட்டமியற்றுநர் மற்றும் ஆர்வலர், சர் டேவிட் ஆலன் சிப்பர்ஃபீல்ட் 2023 ஆம் ஆண்டிற்கான தி பிரிட்ஸ்கர் கட்டிடக் கலைப் பரிசிற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

- இது கட்டிடக்கலைத் துறையின் மிக உயர்ந்த கௌரவமாகக் கருதப் படுகிறது.
- 40 ஆண்டுகளுக்கும் மேலான சிப்பர்ஃபீல்டின் தொழில்முறை வாழ்க்கையில் பொதுக் கட்டிடம், கலாச்சார மற்றும் கல்விசார் கட்டிடங்கள் என 100க்கும் மேற்பட்டவற்றின் கட்டமைப்பு வரைவுகளை இவர் உருவாக்கியுள்ளார்.



## பாக் நீர்ச்சந்தியை அதிவேகமாக நீந்திக் கடந்த இந்தியர்

- புனேவைச் சேர்ந்த நீச்சல் வீரரான சம்பன்னா ரமேஷ் ஷெலார், 21 வயதுக்குட்பட்டோர் பிரிவில் பாக் நீர்ச்சந்தியை அதிவேகமாக நீந்திக் கடந்த இந்தியர் என்ற ஒரு பெருமையைப் பெற்றுள்ளார்.
- இலங்கையின் தலைமன்னாரிலிருந்து தமிழ்நாட்டின் தனுஷ்கோடி வரையிலானத் தொலைவினை இவர் நீந்திக் கடந்தார்.
- இந்தத் தொலைவினை இவர் 5 மணி 30 நிமிடங்களில் கடந்தார்.
- இதில் மேற்கொள்ளப்பட்ட முந்தையச் சாதனை காலம் 8 மணி 26 நிமிடங்கள் ஆகும்.




## 2023 ஏபெல் பரிசு

- அர்ஜென்டினா-அமெரிக்க நாட்டின் கணிதவியலாளர் லூயிஸ் கஃபரெல்லிக்கு 2023 ஆம் ஆண்டிற்கான ஏபெல் பரிசு வழங்கப்பட்டது.
- ஒவ்வொரு ஆண்டும் நார்வே மன்னரால் இந்தப் பரிசு வழங்கப்படுவதோடு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சிறந்தக் கணிதவியலாளர்களுக்கு இது வழங்கப்படுகிறது.
- கஃபரெல்லியின் பணி கணிதத்தின் பல பகுதிகளில் ஒரு குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.
- இந்த விருது கணிதத்திற்கான நோபல் பரிசுக்கு நிகரான விருது என்று பரவலாகக் கருதப் படுகிறது.




## ராம்நாத் கோயங்கா விருதுகள்

- இந்த விருதுகளானது, ஒவ்வோர் ஆண்டும், தி இந்தியன் எக்ஸ்பிரஸ் குழுமத்தின் நிறுவனர் மரபின் புகழினைக் கொண்டாடச் செய்யும் வகையில், பத்திரிகைத் துறையில் சிறந்து விளங்குபவர்களை அங்கீகரித்துக் கௌரவிக்கின்றன.
- 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் தொற்றுநோய் காரணமாக முன்னதாக விருது பெற முடியாத மொத்தம் 43 வெற்றியாளர்களுக்கு இந்த ஆண்டு புது டெல்லியில் நடைபெற்ற விருது விழாவில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

## ககன்யான் விண்வெளித் திட்டத்தின் விண்வெளி வீரர்கள்

- மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் இந்தியாவின் முதலாவது திட்டம் அல்லது ககன்யான் திட்டத்திற்காக நான்கு விண்வெளி வீரர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.
- அவர்கள் விண்வெளி வீரர்களின் பயிற்சிக்கான முதல் பருவமுறைப் பயிற்சியினை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளனர்.
- இந்திய விமானப் படையின் (IAF) பயிற்சி விமானிகளாக உள்ள இந்த வீரர்கள், பெங்களூரில் உள்ள விண்வெளி வீரர்கள் பயிற்சி நிலையத்தில் ககன்யான் விண்வெளிப் பயணத்திற்கான சிறப்புப் பயிற்சியைப் பெற்று வருகின்றனர்.
- அவர்கள் 2020 ஆம் ஆண்டில் ரஷ்யாவிற்கு அனுப்பப் பட்டு, அங்குள்ள காகரின் விண்வெளி வீரர் பயிற்சி மையத்தில் துறை சார்ந்த விண்வெளிப் பயிற்சியை நிறைவு செய்தனர்.



### குழந்தைகளுக்கான சாம்பியன் விருது 2023

- அசாமில் உள்ள, சிறப்புக் கவனம் தேவைப்படுகின்ற மற்றும் மதியிறுக்கம் கொண்ட குழந்தைகளைப் பராமரிக்கும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமானது உடல்நலம் மற்றும் ஊட்டச் சத்துப் பிரிவில் 2023 ஆம் ஆண்டிற்கான குழந்தைகளுக்கான (சில்ட்ரன்ஸ்) சாம்பியன் விருதினை வென்றுள்ளது.
- இந்த விருதானது, 2022 ஆம் ஆண்டில் குழந்தை உரிமைகள் பாதுகாப்பிற்காக டெல்லி ஆணையத்தால் நிறுவப் பட்டதாகும்.
- கல்வி, நீதி, சுகாதாரம், ஊட்டச்சத்து, விளையாட்டு மற்றும் கலை வெளிப்பாடு ஆகியவற்றில் குழந்தைகளின் நலனுக்காகப் போராடும் தனிநபர்கள் மற்றும் பல நிறுவனங்களை இந்த விருது அங்கீகரிக்கிறது.

# விளையாட்டுச் செய்திகள்

### சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் 25,000 ரன்கள்

- விராட் கோலி 549 இன்னிங்ஸ்களில் 25,000 ரன்களை கடந்த ஆறாவது மற்றும் உலகின் அதிவேக மட்டை வீச்சாளர் என்ற பெருமையைப் பெற்றார்.
- சர்வதேச கிரிக்கெட் வரலாற்றில் அதிவேகமாக 25 ஆயிரம் ரன்களை எடுத்த வீரர் என்ற சச்சின் டெண்டுல்கரின் சாதனையை இவர் முறியடித்தார்.
- சச்சின் 577 இன்னிங்ஸ்களில் 25,000 ரன்களை எட்டினார்.
- சச்சினுக்குப் பிறகு இந்த உயர்மதிப்புப் பட்டியலில் இணைந்த இரண்டாவது இந்தியர் விராட் ஆவார்.

**FASTEST TO 25000 INTERNATIONAL RUNS**
ACROSS FORMATS

| INNS | | CAREER MTS | RUNS | AVG |
|---|---|---|---|---|
| 549 | VIRAT KOHLI | 492 | 25003 | 53.64 |
| 577 | SACHIN TENDULKAR | 664 | 34357 | 48.52 |
| 588 | RICKY PONTING | 560 | 27483 | 45.95 |
| 594 | JACQUES KALLIS | 519 | 25534 | 49.10 |
| 608 | KUMAR SANGAKKARA | 594 | 28016 | 46.77 |
| 701 | MAHELA JAYAWARDENE | 652 | 25957 | 39.15 |

### மூன்று வகை போட்டிகளிலும் முதலிடம்

- இந்திய ஆடவர் கிரிக்கெட் அணியானது, ICC அமைப்பின் மூன்று வகையான கிரிக்கெட் போட்டிகளிலும் உலகின் முன்னணி இடத்தைப் பெற்றுள்ளது.
- இந்தியா ஒரே நேரத்தில் மூன்று வகை போட்டிகளிலும் உலகின் முன்னணி அணியாக

இடம் பெறுவது இதுவே முதல் முறையாகும்.

- தென்னாப்பிரிக்கா 2014 ஆம் ஆண்டில் இந்தச் சாதனையை நிகழ்த்தியது.
- மூன்று வகைப் போட்டிகளிலும் உலகின் முன்னணி அணியாகத் திகழும் அணி என்ற அரிய சாதனையை நிகழ்த்திய உலகின் இரண்டாவது அணியாக இந்தியா உள்ளது.
- இந்தச் சாதனையை நிகழ்த்திய முதல் ஆசிய அணி என்ற பெருமையையும் இந்திய அணி பெற்றுள்ளது.




## FIFA விருதுகள் 2023



- 2022 ஆம் ஆண்டு FIFA கால்பந்து விருது வழங்கும் விழா பாரீஸ் நகரில் நடைபெற்றது.
- அலெக்ஸியா புட்டெல்லாஸ் மற்றும் லியோனல் மெஸ்ஸி ஆகியோர் கடந்த ஆண்டின் சிறந்த வீரர்களாக அறிவிக்கப்பட்டனர்.
- 2022 ஆம் ஆண்டு FIFA கால்பந்து விருதுகளை வென்றவர்களின் பட்டியல்
  - சிறந்த கால்பந்து வீராங்கனை: அலெக்ஸியா புட்டெல்லாஸ் (ஸ்பெயின்)
  - சிறந்த கால்பந்து வீரர்: லியோனல் மெஸ்ஸி (அர்ஜென்டினா)
  - சிறந்த மகளிர் கோல்கீப்பர்: மேரி ஏர்ப்ஸ் (இங்கிலாந்து)
  - சிறந்த ஆடவர் கோல்கீப்பர்: எமிலியானோ மார்டினெஸ் (அர்ஜென்டினா)
  - சிறந்த மகளிர் பயிற்சியாளர்: சரீனா வீக்மேன் (இங்கிலாந்து மகளிர் அணி)
  - சிறந்த ஆடவர் பயிற்சியாளர்: லியோனல் ஸ்கலோனி (அர்ஜென்டினா தேசிய ஆடவர் அணி)

- FIFA புஸ்காஸ் விருது: மார்சின் ஒலெக்ஸி (போலந்து)
- FIFA முறையாக விதிகளைப் பின்பற்றுதல் விருது: லூகா லோச்சோஷ்விலி (ஜார்ஜியா)
- FIFA ரசிகர் விருது: அர்ஜென்டினா ரசிகர்கள்

## ஆடவருக்கான நீளம் தாண்டுதல் போட்டியில் சாதனை

- கர்நாடகாவில் நடைபெற்ற இரண்டாவது AFI தேசிய தாண்டுதல் போட்டியில் ஆண்களுக்கான நீளம் தாண்டுதல் போட்டியில் தமிழகத்தின் ஜெஸ்வின் ஆல்ட்ரின் தேசியச் சாதனை ஒன்றைப் படைத்துள்ளார்.
- கடந்த ஆண்டு இந்திய வீரர் M.ஸ்ரீசங்கர் படைத்த 8.36 மீட்டர் என்ற முந்தைய சாதனை அளவினை விஞ்சி இவர் 8.42 மீட்டர் நீளம் தாண்டி சாதனையினைப் படைத்துள்ளார்.




## ஹைதராபாத் பார்முலா E-சாம்பியன்ஷிப் போட்டி

- ஹைதராபாத் E-ப்ரிக்ஸ் என்பது ஹைதராபாத்தில் நடைபெற்ற ஒற்றை இருக்கைகள் கொண்ட, மின்சாரம் மூலம் இயங்கும் பார்முலா E எனப்படும் மின்சார வாகனப் பந்தயத்தின் ஒரு வகையாகும்.
- இது முதன்முதலில் 2022-23 ஆம் ஆண்டு பார்முலா E உலக சாம்பியன்ஷிப் போட்டித் தொடரின் ஒரு பகுதியாக நடைபெற்றதோடு, இந்தியாவில் நடைபெறச் செய்யும் முதல் பார்முலா E பந்தயமும் இதுவாக உள்ளது.
- இரண்டு முறை பார்முலா E உலக சாம்பியன் பட்டம் பெற்ற ஜீன்-எரிக் வெர்க்னே இப்போட்டியில் சாம்பியன்ஷிப் பட்டத்தினையும் வென்றார்.

## 2026 ஆம் ஆண்டு FIFA உலகக் கோப்பைப் போட்டி

- மெக்ஸிகோ மற்றும் கனடா ஆகிய அணிகளுடன் சேர்ந்து அமெரிக்க ஆடவர் தேசிய கால்பந்து அணியானது 2026 ஆம் ஆண்டு உலகக் கோப்பைப் போட்டிக்குத் தகுதி பெற உள்ளது.

- வடக்கு அமெரிக்க நாடுகளின் ஒரு ஒன்றுபட்ட முயற்சியில் இந்த உலகக் கோப்பைப் போட்டியினை நடத்துவதற்கான உரிமையினை இந்த மூன்று நாடுகளும் பெற்றன.
- FIFA வழக்கமாக இந்தப் போட்டியினை நடத்தும் நாடுகளை தகுதிச் சுற்றுகள் இன்றி போட்டியில் நுழைய அனுமதிக்கிறது.
- FIFA அமைப்பு இந்தப் போட்டியினை நடத்தும் இந்த மூன்று நாடுகளை நேரடியாக இந்தப் போட்டியினுள் நுழைய அனுமதிப்பது இதுவே முதல் முறையாகும்.
- 2026 ஆம் ஆண்டில் இந்தப் போட்டியில் இடம் பெறும் அணிகளின் எண்ணிக்கை என்பது 32லிருந்து 48 ஆக அதிகரிக்க உள்ளது.




## ISSF உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டி

- 2023 ஆம் ஆண்டு ISSF உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டியானது எகிப்தில் உள்ள கெய்ரோ நகரில் நடைபெற்றது.
- இந்தியத் துப்பாக்கி சுடுதல் வீரர்கள் கெய்ரோவில் நடைபெற்ற போட்டியில் 4 தங்கம், 3 வெண்கலத்துடனும், தோஹாவில் நடைபெற்ற போட்டியில் ஒரு வெண்கலத்துடன் தங்கள் பங்கேற்பினை நிறைவு செய்தனர்.
- அவர்களின் ஒட்டு மொத்தமாக 8 பதக்கங்களுடன் அவர்கள் பதக்கப் பட்டியலில் 5வது இடத்தைப் பெற்றனர்.
- பதக்கம் வென்ற இந்திய வீரர்களின் பட்டியல் பின்வருமாறு

| Shooter(s) | Event | Medal |
|---|---|---|
| Narmada Raju & Rudrankksh Patil | Mixed Team 10m Air Rifle | Gold |
| Rhythm Sangwan & Varun Tomar | Mixed Team 10m Air Pistol | Gold |
| Rudrankksh Patil | Men's 10m Air Rifle | Gold |
| Aishwary Pratap Singh Tomar | Men's 50m Rifle 3 Positions | Gold |
| Tilottama Sen | Women's 10m Air Rifle | Bronze |
| Varun Tomar | Men's 10m Air Pistol | Bronze |
| Anish | Men's 25m Rapid Fire Pistol | Bronze |
| Prithviraj Tondaiman | Men's Trap | Bronze |

## இந்தியாவிலேயே அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய மூன்றாவது வீரர்

- ❖ சுழற்பந்து வீச்சாளர் R. அஷ்வின், சாதனை நாயகர் கபில்தேவினை விஞ்சி, சர்வதேசக் கிரிக்கெட் போட்டிகளில் இந்தியாவிலேயே அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய மூன்றாவது வீரர் என்ற சாதனையைப் படைத்துள்ளார்.
- ❖ இந்தியா சார்பாக 91 டெஸ்ட் போட்டிகள், 113 ஒருநாள் போட்டிகள் மற்றும் 65 டி20 போட்டிகளில் பங்கேற்றுள்ள அஸ்வின், கிரிக்கெட்டின் மூன்று வடிவங்களிலும் முறையே 466, 151 மற்றும் 72 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.
- ❖ 269 சர்வதேசப் போட்டிகளில் விளையாடிய இவர் 689 விக்கெட்டுகளை வீழ்த்தி உள்ளார்.
- ❖ அனில் கும்ப்ளே, சர்வதேசக் கிரிக்கெட்டில் 401 போட்டிகளில் இந்திய அணி சார்பாக விளையாடி 953 விக்கெட்டுகளை வீழ்த்தி அதிக விக்கெட் வீழ்த்திய நபர்களின் பட்டியலில் முதலிடத்தில் உள்ளார்.
- ❖ அவருக்கு அடுத்தபடியாக 707 விக்கெட்டுகளுடன் ஹர்பஜன் சிங் இரண்டாவது இடத்தில் உள்ளார்.



# முக்கிய தினங்கள்

## பாகுபாடின்மை தினம் - மார்ச் 01

- சமத்துவம் மற்றும் நீதியை மேம்படுத்துவதற்காக, ஐக்கிய நாடுகள் சபை மற்றும் பிற சர்வதேச நிறுவனங்கள் இணைந்து இந்தத் தினத்தினை அனுசரிக்கின்றன.
- HIV/AIDS போன்ற நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எதிரான அமைப்பு மற்றும் கலாச்சாரம் சார்ந்த முற்கோள் கருத்தினை எதிர்த்துப் போராடுவதும், சட்டத்திற்கு முன்பான சமத்துவம் மற்றும் நேர்மை ஆகியவற்றினை மேம்படுத்துவதும் இதன் நோக்கமாகும்.
- UNAIDS ஆனது தனிநபர்களின் நன்மதிப்பினைப் பறிக்கும் பாரபட்சமிக்கச் சட்டங்கள் மற்றும் நடைமுறைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "உயிர்களைக் காத்தல் : குற்றமற்றதாக மாற்றுதல்" என்பதாகும்.

## உலக குடிமைப் பாதுகாப்பு தினம் - மார்ச் 01

- இயற்கைப் பேரழிவுகள், விபத்துக்கள் மற்றும் பிற அவசரநிலைகளில் இருந்து மக்களையும் அவர்களின் உடைமைகளையும் பாதுகாப்பதில் குடிமைப் பாதுகாப்பு நடவடிக்கைகளின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இத் தினமானது பல குடிமைப் பாதுகாப்பு அமைப்புகளின் பணியைக் கௌரவிக்கச் செய்கிறது.
- சமூகங்களைப் பாதுகாப்பதிலும் உயிர்களைக் காப்பாற்றச் செய்வதிலும் இந்த நிறுவனங்கள் மேற்கொள்ளும் முயற்சிகளையும் இந்தத் தினம் அங்கீகரிக்கிறது.
- இந்தத் தினமானது, முதன்முதலில் 1990 ஆம் ஆண்டில் சர்வதேசக் குடிமைப் பாதுகாப்பு அமைப்பினால் (ICDO) கொண்டாடப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு "இடர் மதிப்பீட்டில் தகவல் தொழில் நுட்பத்தின் பங்கு" என்பதாகும்.

## உலக கடற்புல் தினம் - மார்ச் 01

- இது வளமான கடல்கள், கடற்கரைகள் ஆகியவற்றை உருவாக்குவதிலும், ஒரு பருவ நிலை சார்ந்தத் தீர்வாகவும் கடற்புல் வகிக்கும் பங்கு பற்றிய விழிப்புணர்வு மற்றும் கொண்டாட்டத்திற்கான ஒரு தினமாகும்.
- இது கடற்புல் சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தையும், பருவ நிலை மாற்றம், மாசுபாடு மற்றும் பிற மனித நடவடிக்கைகள் சார்ந்த பாதிப்புகள் போன்ற சவால்களுக்கு எதிராக அவற்றின் நெகிழ்திறனை அதிகரிப்பதன் முக்கியத்துவத்தையும் எடுத்துரைக்கிறது.
- கடல் புற்கள் மட்டுமே வெப்ப மண்டலத்திலிருந்து ஆர்க்டிக் வட்டாரம் வரையிலான கடல் பரப்பின் ஆழமற்றப் பகுதிகளில் உள்ள பூக்கும் தாவரங்கள் ஆகும்.

- உலகில் 60க்கும் மேற்பட்ட கடல் புல் வகைகள் உள்ளன.
- இது கடல் தளத்தின் 300,000 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் பரவிக் காணப்படுகிறது.
- ஒரு வகை "நீல நிறக் காடு" (கடற்காடு) என்று குறிப்பிடப் படுகின்ற இது, ஆயிரக் கணக்கான மீன்கள், கடல் குதிரைகள், ஆமைகள் மற்றும் பிற கடல் விலங்குகளுக்கு உணவு மற்றும் தங்குமிடம் ஆகியவற்றினை வழங்குகிறது.
- IUCN அமைப்பானது, உலகிலுள்ள கிட்டத்தட்ட 21% கடற்புல் வகைகளை அச்சுறுத்தப் படுதல் அல்லது பாதிக்கப்படக் கூடிய அல்லது அருகி வரும் நிலையில் உள்ள இனங்களாக வகைப்படுத்துகிறது.
- இத்தினமானது 2022 ஆம் ஆண்டு மே மாதத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு தீர்மானத்தின் மூலம் நிறுவப்பட்டது.




## உலக வனஉயிரினங்கள் தினம் - மார்ச் 03

- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் (UNGA) 68வது அமர்வானது 2013 ஆம் ஆண்டு டிசம்பர் 20 ஆம் தேதியன்று இந்தத் தினத்தினை நியமித்தது.
- இது உலகிலுள்ள வனத் தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1973 ஆம் ஆண்டு மார்ச் 03 ஆம் தேதியன்று தான், அருகி வரும் வன விலங்குகள் மற்றும் தாவரங்கள் மீது மேற்கொள்ளப்படும் சர்வதேச வர்த்தகம் குறித்த உடன்படிக்கை (CITES) என்பது ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- சர்வதேச வர்த்தகமானது இந்த இனங்களுக்கு எந்தவித அச்சுறுத்தலையும் ஏற்படுத்த முடியாது என்பதை உறுதிப்படுத்த இந்த உடன்படிக்கை உதவுகிறது.
- இந்த ஆண்டின் மார்ச் 03 ஆம் தேதியானது இந்த உடன்படிக்கையின் 50வது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'வனவிலங்குப் பாதுகாப்புக்கான கூட்டுறவுகள் என்பதாகும்.




## உலக செவித் திறன் தினம் - மார்ச் 03

- உலகளவில் காது மற்றும் செவித் திறன் பராமரிப்பை ஊக்குவிப்பதற்காகவும், காது கேளாமை மற்றும் செவித் திறன் இழப்பைத் தவிர்ப்பதற்கான வழிகளைப் பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்கவும் இந்தத் தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- உலக சுகாதார நிறுவனம் இந்த நிகழ்வை 2007 ஆம் ஆண்டு முதல் நடத்தி வருகிறது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "அனைவருக்குமான காது மற்றும் செவிப் புலன் பராமரிப்பு!" என்பதாகும்.




## தேசியப் பாதுகாப்பு தினம் - மார்ச் 04

- இந்தத் தினமானது இராணுவம், துணை இராணுவம், அதிரடிப்படை வீரர்கள், காவல் அதிகாரிகள், காவலர்கள் மற்றும் பிற பாதுகாப்புப் படைகளை உள்ளடக்கிய நமது பாதுகாப்புப் படைகளுக்கு நன்றி தெரிவிப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தேசியப் பாதுகாப்புச் சபை என்பது நாட்டின் அரசியல், பொருளாதாரம், எரிசக்தி மற்றும் உத்திசார் பாதுகாப்பு ஆகியவை குறித்த சிக்கல்களைப் போக்குவது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஒரு உச்ச நிலை அமைப்பாகும்.
- இது 1998 ஆம் ஆண்டு நவம்பர் 19 ஆம் தேதியன்று, அப்போதைய பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் அவர்களால் நிறுவப்பட்டது.




## தேசியப் பணியிடப் பாதுகாப்பு தினம் - மார்ச் 04

- இந்தத் தினத்தின் முக்கிய குறிக்கோள், பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து எடுத்து உரைத்தல் மற்றும் பணியிட விபத்துகளைத் தவிர்ப்பதற்காக மக்கள் அவற்றைப் பற்றி அறிந்து, அவற்றைப் பின்பற்றுவதனை உறுதி செய்தல் என்பதாகும்.
- இந்தத் தினமானது தேசியப் பாதுகாப்புச் சபை நிறுவப் பட்டதை நினைவு கூரும் வகையில் அனுசரிக்கப் படுகிறது.
- தேசியப் பாதுகாப்புச் சபை என்பது ஒரு இலாப நோக்கற்ற சுயநிதி அமைப்பாகும்.
- இது 1966 ஆம் ஆண்டு மார்ச் 04 ஆம் தேதியன்று நிறுவப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "நமது குறிக்கோள் - தீங்கின்மை" என்பது ஆகும்.
- இந்தியாவில் ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 04 முதல் 10 ஆம் தேதி வரை தேசியப் பணியிடப் பாதுகாப்பு வாரம் அனுசரிக்கப்படுகிறது.




## உலக உடல் பருமன் தினம் - மார்ச் 04

- உலக உடல் பருமன் தினமானது 2015 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இது அதிகரித்து வரும் உடல் பருமன் பாதிப்புகள் குறித்த கவனத்தை ஈர்ப்பதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'மாறி வரும் கண்ணோட்டங்கள்: உடல் பருமன் பற்றி பேசுதல்' என்பதாகும்.
- உடல் பருமன் என்பது ஒரு நபரின் எடை அவரது உயரத்திற்கு ஏற்றவாறு ஆரோக்கியமானதாகக் கருதப்படும் அளவை விட அதிகமாக இருக்கும் போது ஏற்படுகிறது ஒரு மோசமான நோயாகும்..

## பாலியல் சுரண்டலுக்கு எதிரான போராட்டத்திற்கான உலக தினம் - மார்ச் 04

- இந்தத் தினமானது முதன்முதலில் 2009 ஆம் ஆண்டில் ஓர் உலகளாவிய இயக்கமாக அனுசரிக்கப் பட்டது.
- இந்தத் தினமானது, பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் கடத்தல் பற்றிய குழப்பம் மிக்க நிதர்சனத்தினைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதற்கும், இந்தக் கொடூரமானக் குற்றங்களுக்கு எதிராக போராடுவதற்கு வேண்டி தனிநபர்கள் மற்றும் சமூகங்களுக்கு அதிகாரம் அளிப்பதற்காகவும் அனுசரிக்கப் படுகிறது.
- பாலியல் சுரண்டலுக்கு உள்ளானவர்களின் உரிமைகளை ஊக்குவித்தல் மற்றும் பாதுகாத்தல் போன்றவற்றை இந்தத் தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஒரு நாளின் ஒவ்வொரு வினாடியிலும் சராசரியாக எட்டு பேர் பாலியல் சுரண்டல், கடத்தல் மற்றும் அடிமைப் படுத்துதல் ஆகிய சர்வதேசக் குற்றவியல் வலை அமைப்புகளில் சிக்கியுள்ளதாக மதிப்பிடப் பட்டுள்ளது.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது, ஜூலை 30 ஆம் தேதியினை ஆள் கடத்தலுக்கு எதிரான உலக தினமாகக் குறிப்பிடுகிறது.

## சர்வதேச ஆயுதக் குறைப்பு மற்றும் ஆயுதப் பரவல் தடுப்பு விழிப்புணர்வு தினம் - மார்ச் 05




- இது பொதுமக்களிடையே குறிப்பாக இளைஞர்களிடையே ஆயுதக் குறைப்பு தொடர்பான பிரச்சினைகள் குறித்த சிறப்பான விழிப்புணர்வு மற்றும் புரிதலை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- அமைதி மற்றும் பாதுகாப்பை மேம்படுத்தச் செய்வதற்கும், ஆயுத மோதல்களைத் தடுப்பதற்கும் அதை முடிவுக்கு கொண்டு வருவதற்கும் ஆயுதங்களால் மனிதர்களுக்கு ஏற்படும் ஆபத்துகளைக் கட்டுப்படுத்துவதற்கும் ஆயுதக் குறைப்பு தொடர்பான சில முயற்சிகள் எவ்வாறு பங்களிக்கின்றன என்பதைப் புரிந்து கொள்ள இது உதவுகிறது.
- 2021 ஆம் ஆண்டில், உலகளாவிய நாடுகளின் இராணுவச் செலவினமானது 2.1 டிரில்லியன் டாலர்களை எட்டியதோடு, மேலும், 12,700 அணு ஆயுதங்கள் மனித குலத்திற்கான ஒரு நிலையான அச்சுறுத்தலாக இருக்கின்றன.

## 5வது ஜன் ஔஷதி திவாஸ் - மார்ச் 07




- 5வது ஜன் ஔஷதி திவாஸ் நிகழ்வானது இந்தியா முழுவதும் "Jan Aushadhi – Sasti bhi Acchi bhi" என்ற கருத்துருவின் கீழ் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.
- மார்ச் 01 ஆம் தேதி முதல் ஜன் ஔஷதி ஜன் சேத்னா அபியான் திட்டத்துடன் சேர்த்து நாடு முழுவதும் இது தொடங்கப் பட்டது.
- இது இந்திய மருந்துகள் மற்றும் மருத்துவச் சாதனங்கள் ஆணையம் மற்றும் மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேச அரசுகளுடன் இணைந்து மத்திய சுகாதாரத் துறை அமைச்சகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது.

## சர்வதேச மகளிர் தினம் - மார்ச் 08

- இது பெண்களின் சமூக, பொருளாதார, கலாச்சார மற்றும் அரசியல் சாதனைகளைக் கொண்டாடும் ஒரு தினமாகும்.
- இத்தினமானது முதன்முதலில் 1911 ஆம் ஆண்டில் ஆஸ்திரியா, டென்மார்க், ஜெர்மனி மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளில் கொண்டாடப் பட்டது.
- இந்த ஆண்டு 111வது சர்வதேச மகளிர் தினமாகும்.
- 1975 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபை இந்த நாளைக் கொண்டாடத் தொடங்கியது.

- 2023 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்திற்கான ஐக்கிய நாடுகள் சபையின் கருத்துரு, "DigitALL : பாலினச் சமத்துவத்திற்கான புதுமை மற்றும் தொழில்நுட்பம்" என்பதாகும்.




## தேசிய மருந்தியல் கல்வி தினம் - மார்ச் 06

- இந்திய மருந்தியல் சபையானது (PCI) இந்தத் தினத்தினை அறிவித்தது.
- இந்தத் தினமானது பேராசிரியர் மகாதேவ லால் ஷ்ராஃப் அவர்களின் பிறந்த நாளின் நினைவாகக் கொண்டாடப்படுகிறது.
- இந்தியாவில் மருந்தியல் கல்வியை நிறுவச் செய்வதில் அவரதுப் பங்களிப்பினை அங்கீகரிக்கும் விதமாக இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இவர் இந்திய மருந்தியல் கல்வியின் தந்தை என்று அழைக்கப் படுகிறார்.
- 1935 ஆம் ஆண்டில், இவர் ஐக்கிய மாகாண மருந்தியல் சங்கத்தினை நிறுவினார்.
- இந்திய மருந்தியல் சபை என்பது இந்திய அரசின் சுகாதாரத் துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் ஒரு சட்டப்பூர்வ அமைப்பாகும்.
- இது 1948 ஆம் ஆண்டு மருந்தியல் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டது.



## புகைபிடித்தல் தடை நாள் - மார்ச் 08

- இந்தத் தினமானது மார்ச் மாதத்தின் இரண்டாவது புதன்கிழமையன்று அனுசரிக்கப் படும் வருடாந்திர சுகாதார விழிப்புணர்வுத் தினமாகும்.
- புகைபிடிக்கும் பழக்கத்தினை விட்டுவிடுமாறு மக்களை ஊக்குவிப்பது மற்றும் அவர்களின் ஆரோக்கியத்தில் அந்தப் பழக்கம் ஏற்படுத்தும் தீங்கு விளைவிக்கும் விளைவுகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவது போன்றவற்றை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- புகைபிடித்தல் தடை நாள் என்ற விழிப்புணர்வு இயக்கம் ஆனது முதன்முதலில் 1984 ஆம் ஆண்டு ஐக்கியப் பேரரசில் சாம்பல் புதன் தினத்தன்று தொடங்கப்பட்டது.




## உலக சிறுநீரக தினம் - மார்ச் 09

- உலக சிறுநீரக தினமானது ஒவ்வோர் ஆண்டும் மார்ச் மாதத்தின் இரண்டாவது வியாழன் அன்று அனுசரிக்கப்படுகிறது.
- நமது ஒட்டு மொத்த ஆரோக்கியத்திற்கு நமது சிறுநீரகங்கள் ஆற்றும் முக்கியப் பணி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், உலகளவில் சிறுநீரக நோய் மற்றும் அதனுடன் தொடர்புடைய உடல்நலப் பிரச்சனைகளின் பாதிப்பு நிலை மற்றும் தாக்கத்தைக் குறைப்பதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது சர்வதேச சிறுநீரகவியல் சமூகம் (ISN) மற்றும் சர்வதேச சிறுநீரக அறக்கட்டளை கூட்டமைப்பு - உலக சிறுநீரகக் கூட்டணி (IFKF-WKA) ஆகியவற்றின் கூட்டு முயற்சி ஆகும்.



## மத்தியத் தொழில்துறைப் பாதுகாப்புப் படையின் 54வது உருவாக்கத் தினம் - மார்ச் 10

- 1969 ஆம் ஆண்டு மார்ச் 10 ஆம் தேதியன்று இந்திய நாடாளுமன்றத்தின் சட்டத்தின் மூலம் மத்தியத் தொழில்துறைப் பாதுகாப்புப் படை உருவாக்கப்பட்டது.
- மத்தியத் தொழில்துறை பாதுகாப்புப் படை (CISF) ஆனது இந்தியாவில் உள்ள ஐந்து மத்திய ஆயுதக் காவல் படைகளில் ஒன்றாகும்.
- பொதுத்துறை நிறுவனங்களுக்குப் பாதுகாப்பு வழங்கச் செய்வதே இதன் முதன்மை நோக்கமாகும்.
- தேசியத் தலைநகருக்குப் பதிலாக ஹைதராபாத் நகரில் (வேறொரு இடத்தில்) இந்த தினம் கொண்டாடப் படுவது இதுவே முதல் முறையாகும்.




## சர்வதேச பெண் நீதிபதிகள் தினம் - மார்ச் 10

- உலகெங்கிலும் உள்ள பெண் நீதிபதிகள் மற்றும் சமூகத்தில் நீதி, சமத்துவம் மற்றும் நேர்மை ஆகியவற்றில் அவர்களின் பங்களிப்புகளைக் கௌரவிப்பதை இந்தத் தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது பாலின சமத்துவம், வாய்ப்புகளில் சமத்துவம் மற்றும் பாலின அடிப்படையிலான பாகுபாடுகளுக்கு எதிரான போராட்டம் ஆகியவற்றிற்கான ஓர் அடையாளத் தினம் ஆகும்.
- 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 28 ஆம் தேதியன்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது இந்தத் தினத்திற்கான தீர்மானத்தை நிறைவேற்றியது.
- இந்தியாவில், 1937 ஆம் ஆண்டில் அன்னா சாண்டி என்பவர் முதல் பெண் நீதிபதியாக திருவிதாங்கூர் நீதிமன்றத்தில் பொறுப்பேற்றார்.
- 1989 ஆம் ஆண்டில், பாத்திமா பீவி இந்திய உச்ச நீதிமன்றத்தின் முதல் பெண் நீதிபதி என்ற பெருமையினைப் பெற்றார்.




### உலக ரோட்டராக்ட் தினம் - மார்ச் 13

- உலகம் முழுவதும் ரோட்டரி குழுவினர் வழங்கும் பல்வேறு சேவைகளை இந்தத் தினம் அங்கீகரிக்கிறது.
- ரோட்டராக்ட் என்றால் ரோட்டரி இன் ஆக்சன் (ரோட்டரி சங்கத்தின் சேவை) என்று பொருளாகும்.
- ரோட்டரி சங்கம் என்பது இளையோர்கள் மற்றும் பெண்களுக்கான சமூக சேவை அமைப்பாகும்.
- 2023 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "உலக மத்தியில் நம்பிக்கையை உருவாக்குதல்" என்பதாகும்.
- கல்கத்தா ரோட்டரி சங்கம் ஆனது 1920 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதியன்று, இந்தியாவில் சாசனமாக்கப்பட்ட முதல் ரோட்டரி சங்கம் ஆகும்.




### நதிகளுக்கான சர்வதேச நடவடிக்கை தினம் - மார்ச் 14

- இந்தத் தினமானது, நமது அன்றாட வாழ்வில் நதிகள் எவ்வளவு முக்கியமானவை என்பதைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஆண்டானது 25வது நதிகளுக்கான சர்வதேச நடவடிக்கை தினமாகும்.
- சுத்தமான தண்ணீருக்கான அணுகலில் உள்ள சமமற்ற நிலை மற்றும் ஆறுகள் போன்ற நன்னீர் வாழ்விடங்களில் அதிகரித்து வரும் மாசுபாடு பற்றிய விழிப்பு உணர்வைப் பரப்புவதையும் இந்தத் தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'நதிகளின் உரிமைகள்' என்பதாகும்.
- இந்தத் தினமானது முன்னதாக, ஆறுகள், நீர் மற்றும் வாழ்க்கை ஆகியவற்றின் பாதுகாப்பிற்காக அணைகளுக்கு எதிரான சர்வதேச தினம் என்று அறியப்பட்டது.

## சர்வதேச கணித தினம் அல்லது பை தினம் - மார்ச் 14

- சர்வதேச கணிதத் தினமானது பை (π) தினம் என்றும் அழைக்கப் படுகிறது.
- பையின் மதிப்பைக் குறிக்கும் வகையில் (3.14) மாதம் மற்றும் தேதி (MM/DD) வடிவத்தில் இத்தினத்தின் தேதியானது எழுதப்பட்டுள்ளது.
- நமது வாழ்வில் கணிதத்தின் முக்கியத்துவத்தை அங்கீகரித்து அதனை கௌரவிக்கும் வகையில் உலகெங்கிலும் உள்ள கணித ஆர்வலர்கள் மற்றும் கல்வியாளர்களால் இந்த தினமானது கொண்டாடப்படுகிறது.
- 2023 ஆம் ஆண்டிற்கான சர்வதேச கணிதத் தினத்தின் கருத்துரு, "அனைவருக்குமான கணிதம்" என்பதாகும்.
- சர்வதேச கணிதத் தினமானது, 2019 ஆம் ஆண்டில் யுனெஸ்கோ அமைப்பினால் அங்கீகரிக்கப் பட்டது.

## உலக நுகர்வோர் உரிமைகள் தினம் - மார்ச் 15

- நுகர்வோரின் உரிமைகள் மற்றும் தேவைகள் குறித்து உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்தத் தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இது நுகர்வோர் உரிமைகளை அங்கீகரித்தல் மற்றும் அவை மதிக்கப்படுவதையும் பாதுகாக்கப் படுவதையும் உறுதி செய்தல் ஆகியவற்றினை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "தூய்மையான ஆற்றல் மாற்றங்களின் மூலம் நுகர்வோருக்கு அதிகாரமளித்தல்" என்பதாகும்.
- உலக நுகர்வோர் உரிமைகள் தினமானது, 1962 ஆம் ஆண்டு மார்ச் 15 ஆம் தேதியன்று அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஜான் F. கென்னடி அவர்களால் கருத்தாக்கப் பட்டது.
- உலக நுகர்வோர் உரிமைகள் தினம் ஆனது முதன்முதலில் 1983 ஆம் ஆண்டில் அனுசரிக்கப் பட்டது.
- 1986 ஆம் ஆண்டு டிசம்பர் 09 ஆம் தேதியன்று நுகர்வோருக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் இந்திய நாடாளுமன்றத்தில் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டமானது நிறைவேற்றப் பட்டது.



## இஸ்லாமோஃபோபியாவை எதிர்த்துப் போராடுவதற்கான சர்வதேச தினம் - மார்ச் 15




- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது மார்ச் 15 ஆம் தேதியினை இஸ்லாமோஃபோபியாவை (இஸ்லாமியத்திற்கு எதிரான மனப்பாங்கினை) எதிர்த்துப் போராடச் செய்வதற்கான சர்வதேச தினமாக அறிவிப்பதற்கான ஒரு தீர்மானத்திற்கு ஒப்புதல் அளித்தது.
- இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் (OIC) சார்பில் பாகிஸ்தான் இந்தத் தீர்மானத்தை அறிமுகப்படுத்தியது.
- இஸ்லாமியத்திற்கு எதிரான மனப்பாங்கு என்பது தூண்டுதல், விரோதம் மற்றும் சகிப்பின்மைக்கு வழி வகுக்கின்ற முஸ்லிம்கள் மீதான பயம், பாரபட்சம் மற்றும் வெறுப்பு ஆகியவையாகும்.

## தேசிய நோய்த்தடுப்பு தினம் - மார்ச் 16



- இது மனித ஆரோக்கியத்தில் தடுப்பூசிகள் ஆற்றும் முக்கியப் பங்குப் பற்றிய விழிப்பு உணர்வைப் பரப்புவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்திய அரசாங்கம் ஆனது நாட்டில் போலியோவை ஒழிப்பதற்காக 1995 ஆம் ஆண்டில் பல்ஸ் போலியோ நோய்த் தடுப்புத் திட்டத்தினை அதிகாரப்பூர்வமாக அறிமுகப் படுத்திய போது இந்தத் தினமானது முதன்முதலில் அனுசரிக்கப்பட்டது.
- 1995 ஆம் ஆண்டு மார்ச் 16 ஆம் தேதியன்று இந்தியாவில் வாய்வழி போலியோ தடுப்பூசியின் முதல் தவணையானது வழங்கப்பட்டது.

## உலக தூக்க தினம் - மார்ச் 17

- இது உலக உறக்கச் சங்கத்தின் உலக தூக்க தினக் குழுவினால் ஏற்பாடு செய்யப் பட்டு உள்ளது.
- தூக்கம் சார்ந்த கோளாறுகளுக்கான சிறந்தத் தடுப்பு மற்றும் மேலாண்மை மூலம், சமூகத்தில் உள்ள தூக்கம் சார்ந்தப் பிரச்சினைகளின் சுமையைக் குறைப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உறக்கம் உங்கள் ஆரோக்கியத்திற்கு இன்றியமையாதது என்பது இந்த ஆண்டிற்கான கருத்துரு ஆகும்.




## உலக மறுசுழற்சி தினம் - மார்ச் 18

- இந்தத் தினமானது, நமது இயற்கை வளங்கள் வேகமாக குறைந்து வருவது பற்றியும், அவை குறைந்து வருவதன் வேகத்தினைத் தடுப்பதற்காக மறுசுழற்சி மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் பற்றியும் விழிப்புணர்வை பரப்பச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.



- மறுசுழற்சியின் கருத்தாக்கத்தினையும் நடைமுறையையும் இந்தத் தினம் ஊக்குவிப்பதோடு, மேலும், புவிக் கோளினைக் காப்பதற்காக இயற்கை வளங்களை அளவான முறையில் பயன்படுத்துவதனை ஊக்குவிக்கிறது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "படைப்பாற்றல் மிக்க புத்தாக்கம்" என்பதாகும்.

## இந்திய ஆயுதத் தொழிற்சாலைகள் தினம் - மார்ச் 18

- இந்தத் தினமானது, 1801 ஆம் ஆண்டில் காலனித்துவ ஆட்சியின் கீழ் இருந்த இந்தியாவில் கொல்கத்தாவிற்கு அருகில் முதலாவது ஆயுதத் தொழிற்சாலை நிறுவப் பட்டதை நினைவு கூருகிறது.
- ஆயுதத் தொழிற்சாலைகள் வாரியமானது 1775 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இப்போது இந்த வாரியமானது, 41 ஆயுதத் தொழிற்சாலைகள், ஒன்பது பயிற்சி நிறுவனங்கள், மூன்று பிராந்திய சந்தைப்படுத்தல் மையங்கள் மற்றும் ஐந்து பிராந்தியப் பாதுகாப்புக் கட்டுப்பாட்டு அமைப்புகளைக் கொண்டுள்ளது.
- கிழக்கிந்திய கம்பெனியானது, 1801 ஆம் ஆண்டில் கொல்கத்தாவில் ஒரு துப்பாக்கி முகமையினை நிறுவியது.

## சர்வதேச மகிழ்ச்சி தினம் - மார்ச் 20

- இது முதன்முதலில், 2012 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபை அனுசரிக்கப் பட்டது.
- உலகெங்கிலும் உள்ள மக்களின் வாழ்வில், பொதுவான இலக்குகள் மற்றும் இலட்சியமாகத் திகழும் மகிழ்ச்சி மற்றும் நல்வாழ்வின் முக்கியத்துவம் பற்றி விழிப்பு உணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு: 'விழிப்புடன் இருங்கள். நன்றி உணர்வுடன் இருங்கள். அன்புடன் இருங்கள்' என்பதாகும்.




## உலக சிட்டுக்குருவி தினம் - மார்ச் 20

- உலகளவில் சிட்டுக்குருவிகளின் எண்ணிக்கை குறைந்து வருவதால், சிட்டுக் குருவிகளின் பாதுகாப்பு மற்றும் வளங்காப்பு குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தச் செய்வதற்காக இத்தினமானது நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

- 2010 ஆம் ஆண்டில் முதல் உலக சிட்டுக்குருவி தினமானது அனுசரிக்கப்பட்டது.
- சுற்றுச்சூழலில் சிட்டுக்குருவிகளின் மதிப்பு, மகரந்தச் சேர்க்கையில் அவற்றின் பங்கு மற்றும் பூச்சிகளின் கட்டுப்பாட்டில் அவற்றின் முக்கியத்துவம் பற்றி மக்களுக்குக் கற்பிப்பதே இந்தத் தினத்தின் குறிக்கோளாகும்.
- 2023 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "I Love Sparrows" என்பதாகும்.

## உலக வாய்வழி சுகாதார தினம் - மார்ச் 20

- இந்தத் தினமானது, வாய்வழி ஆரோக்கியத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி விழிப்பு உணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தினசரி அடிப்படையில் ஒருவர் பின்பற்ற வேண்டிய பல்வேறு வாய்வழி சுகாதார நடைமுறைகளைப் பற்றித் தனிநபர்களுக்குக் கற்பிக்கவும் இத்தினம் முயற்சிக்கிறது.
- 2021 ஆம் ஆண்டில், "Be Proud of Your Mouth" என்ற மூன்று ஆண்டு கால கருத்துருவானது அறிமுகப் படுத்தப்பட்டது.




## வசந்தகால சம இரவு பகல் நாள் - மார்ச் 21




- இளவேனிற்கால சம இரவு பகல் நாள் என்றும் அழைக்கப்படுகிற 2023 ஆம் ஆண்டின் வசந்தகால சம இரவு பகல் நாள் ஆனது வடக்கு அரைக்கோளத்தில் வசந்த காலம் தொடங்குவதின் முதல் நாளாகும்.

- இந்த நாளில், சூரியன் பூமத்திய ரேகைக்கு மேலே காணப்படுவதோடு இந்நாளில் இரவும் பகலும் சமமான கால நேரம் கொண்டதாக இருக்கும்.
- மேலும் பாரசீகர்களின் புத்தாண்டான நவ்ரூஸ் வசந்த காலத்தின் முதல் நாளிலேயே வருகிறது.

## உலக மன நலிவு நோய் தினம் - மார்ச் 21

- மன நலிவு நோய் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தவும், மன நலிவு நோய் உள்ளவர்களின் உரிமைகள், உள்ளடக்கம் மற்றும் நல்வாழ்வு போன்றவற்றினை ஆதரிக்கச் செய்யவும் வேண்டி இந்தத் தினமானது கொண்டாடப்படுகிறது.
- 21வது குரோமோசோமின் மூன்றாவது நகல் இனம் பெறுவதால் மன நலிவு நோய் ஏற்படுவதோடு, 21/3 (மார்ச் 21) என்பது இந்த மரபணு நிலையைக் குறிக்கச் செய்கிறது என்பதால் இந்தத் தேதியானது தேர்ந்தெடுக்கப்பட்டது.
- இந்தத் தினமானது முதன் முதலில் 2006 ஆம் ஆண்டு மார்ச் 21 ஆம் தேதியன்று அனுசரிக்கப் பட்டது.
- இது 2011 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் அதிகாரப் பூர்வமாக அங்கீகரிக்கப் பட்டது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "With Us Not For Us" என்பதாகும்.




## உலக கவிதை தினம் - மார்ச் 21

- இந்தத் தினமானது, 1999 ஆம் ஆண்டில் பாரீஸ் நகரில் நடைபெற்ற 30வது பொது மாநாட்டில் யுனெஸ்கோ அமைப்பினால் முதன்முதலில் ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- இது கவிஞர்களைக் கௌரவிப்பதற்கும், வாய்வழி கவிதை வாசிப்புகளின் மரபுகளைப் புத்துயிர் பெறச் செய்வதற்கும், கவிதை வாசிப்பு, எழுதுதல் மற்றும் கற்பித்தல் ஆகியவற்றை ஊக்குவிப்பதற்குமான ஒரு வாய்ப்பாகும்.
- இது "கவிதை வெளிப்பாடு மூலம் மொழியியல் பன்முகத்தன்மையை ஆதரிப்பது மற்றும் அழிந்து வரும் மொழிகளைப் புகழ் பெறச் செய்வதற்கான ஒரு வாய்ப்பினை அதிகரிப்பது" போன்றவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## சர்வதேச காடுகள் தினம் - மார்ச் 21

- ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண் அமைப்பு (FAO) ஆனது 1971 ஆம் ஆண்டில் உலக வனவியல் தினத்தை நிறுவியது.
- மக்களுக்கும் பூமிக்கும் காடுகள் ஆற்றும் பெரும்பங்கின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை உருவாக்கவும், பரப்பிடவும் வேண்டி இந்தத் தினமானது நிறுவப் பட்டது.

- 2011 ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகள் சபையானது 2011 முதல் 2020 வரையிலான ஆண்டுகளை காடுகளின் சர்வதேச தசாப்தமாக அறிவித்தது.
- 2012 ஆம் ஆண்டில், சர்வதேச காடுகள் தினமானது நிறுவப்பட்டது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'காடுகள் மற்றும் அவற்றின் நலம்' என்பதாகும்.

## சர்வதேச இனப் பாகுபாடு ஒழிப்பு தினம் - மார்ச் 21

- 1960 ஆம் ஆண்டின் இதே தினத்தில் தென்னாப்பிரிக்காவின் ஷார்ப்வில்லி என்ற ஒரு நகரில் நிறவெறிச் சட்டங்களுக்கு எதிராக அமைதியான முறையில் நடைபெற்ற ஒரு ஆர்ப்பாட்டத்தின் மீது காவல்துறை துப்பாக்கிச் சூடு நடத்தியது.
- 1966 ஆம் ஆண்டு அக்டோபர் 26 ஆம் தேதியன்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபை இந்தத் தினத்தினை நியமித்தது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு: "உலக மனித உரிமைகள் பிரகடனத்தின் 75வது ஆண்டு விழா - இனவெறியை எதிர்த்துப் போராடுவதற்கான ஓர் ஊக்கம்" என்பதாகும்.

## உலகப் பொம்மலாட்டத் தினம் - மார்ச் 21

- இந்தத் தினமானது, 2003 ஆம் ஆண்டில் சர்வதேசப் பொம்மலாட்டச் சங்கத்தினால் நிறுவப் பட்டது.
- முதல் உலகப் பொம்மலாட்டத் தினமானது 2003 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.
- உலகம் முழுவதிலும் உள்ள பொம்மலாட்டக் காரர்களுக்கான ஒரு அங்கீகாரத்தினை வழங்குவதற்கும் கௌரவிப்பதற்கும் இந்தத் தினமானது ஒரு முன்னெடுப்பாகும்.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு: "Call of the Forest'" என்பதாகும்.
- இந்தியாவில் பொம்மலாட்டத்திற்காக என்று 4 முக்கிய வகையான பொம்மைகள் பயன்படுத்தப் படுகின்றன.
  - கையுறை பொம்மைகள் - 3 வகைகள்
  - மரக்குச்சி பொம்மைகள் - 3 வகைகள்
  - நிழற்பாவைகள்- 6 வகைகள்
  - நூற்பாவைகள்- 6 வகைகள்

## சர்வதேச நவ்ரூஸ் தினம் - மார்ச் 21

- நவ்ரூஸ் என்பது பாரசீக புத்தாண்டாகும்.
- ஈரானிய நாட்டில் சூரிய நாட்காட்டியின் முதல் மாதமானது பாரசீகப் புத்தாண்டு என்று குறிப்பிடப் படுகிறது.
- ஈரான், ஆப்கானிஸ்தான், ஈராக்கின் குர்திஷ் பகுதிகள், துருக்கி, சிரியா, இந்தியா மற்றும் மத்திய ஆசிய நாடுகளில் நவ்ரூஸ் கொண்டாடப் படுகிறது.

- இத்தினமானது, உலக நாடுகளுக்கிடையே நெருக்கமான உறவுகளை மேம்படுத்தும் ஒரு நோக்கத்துடன் 2010 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- பால்பன் இதனை இந்தியாவில் அறிமுகம் செய்தார்.

## உலகத் தண்ணீர் தினம் - மார்ச் 22

- 1993 ஆம் ஆண்டு முதல், நன்னீர் வளங்களின் முக்கியத்துவத்தினை எடுத்துரைக்கச் செய்வதற்காக இத்தினமானது கொண்டாடப்படுகிறது.
- இது தண்ணீரின் முக்கியத்துவம் பற்றியும், அதை எவ்வாறு பாதுகாப்பது என்பது பற்றியும் கவனம் செலுத்துகிறது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'மாற்றத்தைத் துரிதப்படுத்துதல்" என்பதாகும்.




## உலக வானிலை அமைப்பு நாள் - மார்ச் 23

- இந்த நாள் 1950 ஆம் ஆண்டில் உலக வானிலை அமைப்பு (WMO) முறைப்படி நிறுவப் பட்டதை நினைவு கூறுகிறது.
- சமூகத்தின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வில் 'தேசிய வானிலை மற்றும் நீரியல் சேவைகள்' (NMHS) வகிக்கும் ஒரு இன்றியமையாதப் பங்கை" இந்த நாள் சிறப்பித்துக் காட்டுகிறது.
- இந்த வருடத்தின் கருப்பொருள் 'தலைமுறை, காலநிலை மற்றும் நீரின் எதிர்காலம்' என்பதாகும்.
- உலக வானிலை அமைப்புப் பற்றிய யோசனை 1873 வியன்னா சர்வதேச வானிலை காங்கிரஸில் உருவானது.
- இந்த ஆண்டு WMO அமைப்பின் 150வது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.



## உலக காசநோய் தினம் - மார்ச் 24

- 1882 ஆம் ஆண்டு இந்த நாளில், டாக்டர் ராபர்ட் கோச், காசநோயை உண்டாக்கும் ஒரு பாக்டீரியமான மைக்கோபாக்டீரியம் டியூபர்குலோசிஸைக் கண்டறிந்தார்.
- காசநோய் (TB) பற்றிய பெரும் விழிப்புணர்வை உருவாக்கி, இந்த நோயை முற்றிலுமாக அகற்றும் பணியை இந்தத் தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- காசநோயானது மைக்கோபாக்டீரியம் டியுபர்குயுலோஸிஸ் என்ற பாக்டீரியாவால் ஏற்படுவதோடு இது முதன்மையாக நுரையீரலைப் பாதிக்கிறது.
- உலகளவில் ஏற்படும் இறப்புக்கான முதல் 10 காரணங்களில் காசநோயும் ஒன்று ஆகும்.
- ‘ஆம், நாம் காசநோயை முடிவுக்கு கொண்டு வரலாம்’ என்பது 2023 ஆம் ஆண்டிற்கான கருப்பொருளாகும்.




## அடிமைத்தனம் மற்றும் அட்லாண்டிக் நாடுகளுக்கிடையேயான அடிமை வர்த்தகத்தால் பாதிக்கப் பட்டவர்களின் சர்வதேச நினைவு தினம் - மார்ச் 25




- இது அட்லாண்டிக் கடல் கடந்த அடிமை வர்த்தகத்தின் விளைவாக பாதிக்கப்பட்ட மற்றும் இறந்தவர்களை நினைவு கூரும் நாள் ஆகும்.
- இது "வரலாற்றில் மிக மோசமான மனித உரிமை மீறல்" என்று அழைக்கப் படுகிறது.

- 400 ஆண்டுகளுக்கும் மேலாக 15 மில்லியனுக்கும் அதிகமான ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் இந்த நடைமுறையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
- இந்த ஆண்டிற்கான கருப்பொருள் "மாற்றும் கல்வி மூலம் இனவெறியின் அடிமைத் தனத்தின் பாரம்பரியத்தை எதிர்த்துப் போராடுவது" என்பதாகும்.

## கைது செய்யப்பட்ட மற்றும் காணாமல் போன பணியாளர்களுக்கான சர்வதேச ஒன்றிணைவு தினம் - மார்ச் 25

- ஐக்கிய நாடுகளின் பணி சார்பாக ஈடுபட்டிருந்த அலெக் கோலெட் என்ற ஊடகவியலாளர் கடத்தப்பட்ட நாளினை நினைவு கூறும் வகையில் இந்த தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- அலெக் கோலெட் கடத்தப்பட்டதன் ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் இந்தத் தினமானது மார்ச் 25 ஆம் தேதியன்று அனுசரிக்கப்படுகிறது.
- இவர் ஒரு முன்னாள் பத்திரிகையாளர் ஆவார் என்பதோடு, அவர் அண்மைக் கிழக்கு நாடுகளில் உள்ள பாலஸ்தீன அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் நிவாரண மற்றும் பணி முகமையில் (UNRWA) பணியாற்றினார்.
- 1985 ஆம் ஆண்டில் ஆயுதமேந்திய நபர்களால் இவர் கடத்தப்பட்டார்.
- 2009 ஆம் ஆண்டில், இவரது உடல் லெபனானின் பெக்கா என்ற பள்ளத்தாக்கில் கண்டெடுக்கப் பட்டது.
- ஐக்கிய நாடுகள் சபையின் பணியாளர்களைப் பாதுகாப்பதற்கான தீர்மானம் ஆனது முதன்முதலில் 1993 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையினால் ஏற்றுக் கொள்ளப் பட்டது.




## கருவில் உள்ள சிசுக்களுக்கான சர்வதேச தினம் - மார்ச் 25

- கருவில் உள்ள சிசுக்களின் மதிப்பு மற்றும் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், கருக்கலைப்புகளை கண்டித்து அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதை ஊக்குவிப்பதும் இந்த நாளின் நோக்கமாகும்.
- இந்தத் தினமானது மறைந்த போப் இரண்டாம் ஜான் பால் அவர்களால் 1999 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.

- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு : கருவில் உள்ள ஒவ்வொரு சிசுவின் கண்ணியமும் மதிப்பும் என்பதாகும்.

## உலக நாடக தினம் - மார்ச் 27

- சர்வதேச நாடக நிறுவனத்தில் 1962 ஆம் ஆண்டு முதல் இந்த நாள் கொண்டாடப் படுகிறது.
- முதல் சர்வதேச நாடக நிறுவனத்தின் மாநாடு ஆனது பின்லாந்தின் ஹெல்சிங்கி நகரில் நடைபெற்ற நிலையில் அடுத்த மாநாடானது வியன்னா நகரில் நடைபெற்றது.
- இந்தத் தினமானது நாடகங்களையும், நாடகக் கலைகளில் அவற்றின் முக்கியப் பங்கினையும் பாதுகாக்கிறது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Theatre and a Culture of Peace" என்பதாகும்.

## புவி நேரம் 2023 - மார்ச் 25

- புவி நேரம் என்பது உலக வனவிலங்கு நிதியத்தால் (WWF) ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு உலகளாவிய இயக்கமாகும்.
- புவி நேரம் என்பது மார்ச் மாதத்தின் கடைசி சனிக்கிழமையன்று அனுசரிக்கப்படும் ஒரு வருடாந்திர நிகழ்வாகும்.
- இது புவிக்குத் தனது உறுதிப்பாட்டினை வெளிப்படுத்தும் விதமாக தனிநபர்கள், சமூகங்கள் மற்றும் வணிக நிறுவனங்கள் இரவு 8:30 மணி முதல் 9:30 மணி வரை ஒரு மணி நேரத்திற்கு அத்தியாவசியமற்ற மின் விளக்குகளை அணைக்க ஊக்குவிக்கிறது.
- புவி நேரத்தில் உலகம் முழுவதும் உள்ள 100க்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்றன.
- இது முதன்முதலில் ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் 2007 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது.



## அசாம் ரைபிள்ஸ் படைப் பிரிவின் 188வது எழுச்சி தினம் - மார்ச் 24

- அசாம் ரைபிள்ஸ் படைப்பிரிவின் 188வது எழுச்சி தினமானது மார்ச் 24 ஆம் தேதியன்று கொண்டாடப் படுகிறது.
- இது நாட்டின் பழமையான மற்றும் மிகவும் மதிப்புமிக்க துணை இராணுவப் படைப் பிரிவாகும்.
- அசாம் ரைபிள்ஸ் படைப்பிரிவானது 1835 ஆம் ஆண்டு மார்ச் 24 ஆம் தேதியன்று நிறுவப் பட்டது.
- 1883 ஆம் ஆண்டில் அசாம் எல்லைப்புறக் காவல்துறையாகவும், 1891 ஆம் ஆண்டில் அசாம் ராணுவக் காவல்துறையாகவும், 1913 ஆம் ஆண்டில் கிழக்கு வங்காளம் மற்றும் அசாம் ராணுவக் காவல்துறையாகவும் இந்தப் படை மறுவடிவமைப்பு செய்யப் பட்டது.
- இது தனது தற்போதையப் பெயரை 1917 ஆம் ஆண்டில் பெற்றது.
- இது வடகிழக்கு இந்தியாவில் எல்லைப் பாதுகாப்பு, கிளர்ச்சி எதிர்ப்பு மற்றும் சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதற்கானப் பொறுப்பினை வகிக்கும் மத்திய துணை ராணுவப் படையாகும்.
- இந்தப் படைப் பிரிவானது இந்திய-மியான்மர் நாடுகளின் எல்லையைப் பாதுகாக்கும் பொறுப்பினையும் வகிக்கிறது.

## சர்வதேச வலிப்பு நோய் விழிப்புணர்வு தினம் அல்லது ஊதா தினம் - மார்ச் 26

- இந்தத் தினமானது வலிப்பு நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்யவும், இந்த நரம்பியல் சார்ந்த நோய் குறித்த தவறான தகவல் பரவலைக் குறைக்கவும் வேண்டி அர்ப்பணிக்கப் பட்டுள்ளது.
- வலிப்பு நோய் என்பது ஒரு நாள்பட்ட மூளைக் கோளாறு ஆகும்.
- இது மின் தூண்டுதல்களைக் கடத்தும் மூளையின் திறனைப் பாதிப்பதனால் வலிப்புத் தாக்கங்களுக்கு வழி வகுக்கின்றது.
- இந்தத் தினமானது 2008 ஆம் ஆண்டு மார்ச் 26 ஆம் தேதியன்று கனடாவைச் சேர்ந்த காசிடி மேகன் என்பவரால் முதன் முதலில் ஏற்பாடு செய்யப்பட்டது.
- 50 மில்லியன் அளவிலான மக்களைப் பாதிக்கும் இந்த நோய் உலகின் குறிப்பிடத்தக்க நோய்ப் பாதிப்புகளில் ஒன்றாக உள்ளது.
- ஒவ்வோர் ஆண்டும் 5 மில்லியன் மக்கள் வலிப்பு நோயால் பாதிக்கப் படுகின்றனர்.
- இந்தியாவில், 10 மில்லியனுக்கும் அதிகமான நபர்கள் (20%) வலிப்பு நோயால் பாதிக்கப் பட்டுள்ளனர்.

## சர்வதேச திருநர்களின் கட்புலன் நிலை தினம் - மார்ச் 31

- இது உலகளவில் திருநர்கள் எதிர்கொள்ளும் பாகுபாடுகள் பற்றி ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளதோடுச் சமூகத்திற்கு அவர்கள் ஆற்றும் பங்களிப்பினையும் இத்தினம் கொண்டாடுகிறது.
- 2009 ஆம் ஆண்டில், அமெரிக்காவின் மிச்சிகனைச் சேர்ந்த திருநர் ஆர்வலரான ரேச்சல் கிராண்ட் என்பவரால் இந்தத் தினமானது நிறுவப் பட்டது.

- இது அவர்களின் பங்களிப்புகள், வெற்றிகள் மற்றும் அநீதியை எதிர் கொண்டு நிமிர்ந்து நிற்பதில் அவர்களின் இடைவிடாத மீள்திறன் ஆகியவற்றினை அங்கீகரித்து மதிப்பளிக்கிறது.




## உலகக் காப்புப் பிரதி தினம் - மார்ச் 31

- தொழில்நுட்பத்தை நாம் அதிகம் சார்ந்து இருக்கத் தொடங்கியதால், நமது விலை மதிப்பற்ற எண்ம ஆவணங்களைப் பாதுகாப்பதனைக் குறித்து இந்தத் தினம் நமக்கு நினைவூட்டுகிறது.
- இது நம் வாழ்வில் தரவுகளின் பங்கு மற்றும் வழக்கமான காப்புப் பிரதிகளை மேற் கொள்வதன் முக்கியத்துவத்தைப் பற்றி மக்கள் அறிந்து கொள்வதற்கான நாளாகும்.
- உலக காப்புப் பிரதி தின இணையத் தளத்தின்படி, 21% பேர் தங்கள் தரவை ஒருபோதும் காப்புப் பிரதி எடுத்ததில்லை.
- 29 சதவிகித அளவிலான தரவு இழப்புகள் எதிர்பாராத விதமாக ஏற்படுகின்றன என்ற நிலையில் அனைத்துக் கணினிகளில் 30% கணினிகள் தீம்பொருளால் பாதிக்கப் பட்டு உள்ளன.

# இதரச் செய்திகள்

## ஆபத்தில் உள்ள உலகப் பாரம்பரியத் தளம்

- யுனெஸ்கோ அமைப்பானது, உக்ரைனின் கருங்கடல் கடற்கரையில் அமைந்துள்ள ஓர் உத்திசார் துறைமுக நகரமான ஒடேசாவின் வரலாற்றுச் சிறப்புமிக்க மையத்தினை ஆபத்தில் உள்ள உலகப் பாரம்பரியத் தளமாக அறிவித்துள்ளது.
- ரஷ்யாவின் படையெடுப்பின் மூலமாக அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள இதற்கு சர்வதேச நாடுகளிடமிருந்து நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை நாடுவதற்கான வாய்ப்பினையும் இது ஏற்படுத்தியுள்ளது.
- உக்ரைன் மீது ரஷ்யா தனது படையெடுப்பினைத் தொடங்கியதில் இருந்து ஒடேசா மீது பலமுறை குண்டு வீசித் தாக்கியுள்ளது.
- ஒடேசாவின் நுண்கலை அருங்காட்சியகம் ஆனது 1899 ஆம் ஆண்டில் திறக்கப்பட்டது.

- இந்த நகரம் ஆனது 18 ஆம் நூற்றாண்டின் இறுதி ஆண்டுகளில், கையகப்படுத்தப்பட்ட ஒட்டோமான் கோட்டை அமைந்துள்ள இடத்திற்கு அருகில் நிறுவப் பட்டது.




## 1,300 ஆண்டுகள் பழமையான புத்த சமய ஸ்தூபி

- ஒடிசாவின் ஜஜ்பூர் மாவட்டத்தில் 1,300 ஆண்டுகள் பழமையான ஸ்தூபியை இந்தியத் தொல்லியல் துறை கண்டறிந்துள்ளது.
- 4.5-மீட்டர் உயரம் கொண்டதாக கருதப்படுகிற இது 7 அல்லது 8 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாம் என்று ஆரம்பக் கட்ட மதிப்பீடுகள் குறிப்பிடுகின்றன.
- இது ஒடிசாவில் லலிதகிரிக்கு அருகில் உள்ள பரபாடி என்னுமிடத்தில் கண்டுபிடிக்கப் பட்டது.
- லலிதகிரி என்பது ஏராளமான ஸ்தூபிகள் மற்றும் மடாலயங்கள் அமைந்துள்ள ஒரு பெரிய பௌத்த வளாகமாகும்.



## வலுவான தொலைத்தொடர்புச் சேவை வழங்கீட்டு நிறுவனம்

- பிராண்ட் ஃபைனான்ஸ் நிறுவனமானது, நிறுவனங்களை அவற்றின் நிறுவன மதிப்பீட்டின் அடிப்படையிலான ஒரு பட்டியலைத் தொகுத்துள்ளது.

- பிராண்ட் ஃபைனான்ஸ் நிறுவனத்தின் 2023 ஆம் ஆண்டு தரவரிசையின் படி, மதிப்பு மிக்க 150 முன்னணி நிறுவனங்கள் மற்றும் வலுவான தொலைத்தொடர்புச் சேவை வழங்கீட்டு நிறுவனங்களின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.
- சிவிஸ்காம் என்ற நிறுவனமானது 92/100 மதிப்பீட்டு மற்றும் AAA+ என்ற உயரடுக்கு மதிப்பீட்டைப் பெற்ற வலுவான தொலைத்தொடர்புச் சேவை வழங்கீட்டு நிறுவனம் ஆகும்.
- அதைத் தொடர்ந்து ஜியோ மற்றும் எடிசலாட் ஆகியவை முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது வலுவான தொலைத்தொடர்புச் சேவை வழங்கீட்டு நிறுவனங்களாக உள்ளன.
- ஹுவாவே நிறுவனமானது மிகவும் மதிப்புமிக்க மற்றும் வலுவான தொலைத் தொடர்பு உள்கட்டமைப்புச் சேவை வழங்கீட்டு நிறுவனமாகத் தரவரிசைப் படுத்தப் பட்டுள்ளது.


THE LEADER BOARD

Strongest telecom brands globally

| Company | Rank in 2023 (2022) |
|---|---|
| Swisscom | 1 (2) |
| Reliance Jio | 2 (5) |
| Etisalat | 3 (1) |
| MTC | 4 (4) |
| Telcel | 5 (8) |
| Singtel | 6 (9) |
| Vodacom | 7 (NA) |

Top Indian firms in terms of brand value

| Company | Global rank in 2023 (2022) |
|---|---|
| Airtel | 21 (20) |
| Reliance Jio | 27 (32) |
| VIL | 89 (102) |
| Tata Communications | 131 (132) |
| BSNL | 148 (149) |

Source: Brand Finance

## தனிப்பட்ட ஹால்மார்க் அடையாள எண்




- ஏப்ரல் 01 ஆம் தேதி முதல், தனிப்பட்ட ஹால்மார்க் அடையாள எண் (HUID) இல்லாமல் தங்க நகைகள் விற்பனை செய்ய அனுமதிக்கப்படாது.
- தங்கத்திலான ஒவ்வொரு பொருளுக்கும் இது ஒரு தனித்துவமான அடையாளங் காட்டியாக விளங்கும்.
- இது ஹால்மார்க் செய்யப்பட்ட நகைகளின் தூய்மையை உறுதி செய்திடுவதையும், ஏதேனும் முறைகேடுகள் நிகழ்கின்றனவா எனக் கண்காணிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

- ஹால்மார்க் என்பது தங்க நகைகளின் அதன் நேர்த்தியையும் தூய்மையையும் உறுதி செய்வதற்காக இந்தியத் தரநிர்ணய ஆணையத்தினால் (BIS) அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தால் இடப்படுகிற ஓர் அடையாளமாகும்.
- இதற்கு முன்னதாக, HUID நான்கு இலக்கங்களைக் கொண்டிருந்தது.
- தற்போது இரண்டு HUID எண்களும் (4 இலக்கங்கள் மற்றும் 6 இலக்கங்கள்) சந்தையில் பயன்படுத்தப் படுகின்றன.
- இதில் மார்ச் 31 ஆம் தேதிக்குப் பிறகு 6 இலக்க எண்ணெழுத்துக் குறியீடு மட்டுமே அனுமதிக்கப் படும்.
- சோதனை & ஹால்மார்க் வழங்கீட்டு மையத்தில், தங்க நகைகள் மீது தனிப்பட்ட எண்கள் கைமுறையாக முத்திரையிடப் படுகின்றன.

## வணிக ரீதியிலான விமானங்களில் பணிபுரியும் அதிக எண்ணிக்கையிலான பெண் விமானிகள்

- ஏர் இந்தியா நிறுவனமானது, தனது நிறுவனத்தில் பணி புரியும் 1,825 விமானிகளில் 15% பெண் விமானிகள் என்று கூறியுள்ளது.
- இதன் மூலம் இந்நிறுவனம் அதிக எண்ணிக்கையிலான பெண் விமானிகளைக் கொண்ட விமான நிறுவனமாக மாறியுள்ளது.
- ஏர் இந்தியா நிறுவனமானது, உள்நாட்டு மற்றும் சர்வதேச அளவில் 40 விமானங்களை இயக்கி வருகிறது.
- விமானங்களைப் பொறுத்த வரையில், ஏர் இந்தியா நிறுவனத்தின் பணியாளர்களில் 40%க்கும் அதிகமானோர் பெண்கள் ஆவர்.
- எனவே, உலகில் வணிக ரீதியிலான விமானங்களில் அதிக எண்ணிக்கையிலான பெண் விமானிகளைக் கொண்ட நாடு இந்தியாவாகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★